


# சிவசங்கரி



சின்ன
நூல்கண்
நம்மை
சிறைப்படுத்துவ

வானதி
பதிப்பக

# சின்ன நூல்கண்டா நம்மைச் சிறைப்படுத்துவது?

(ராஜா சர் அண்ணாமலை செட்டியார் பரிசு பெற்ற நூல்)

சிவசங்கரி

வானதி பதிப்பகம்
23, தீனதயாளு தெரு,
தி.நகர், சென்னை — 17.

முதற் பதிப்பு : டிசம்பர் 1985
பதினொன்றாம் பதிப்பு : மே 1997
பதினைந்தாம் பதிப்பு : செப்டம்பர் 2001
இருபதாம் பதிப்பு : ஜனவரி 2008
இருபத்தொன்றாம் பதிப்பு : ஜூலை 2009
இருபத்திரெண்டாம் பதிப்பு : நவம்பர், 2010
இருபத்திமூன்றாம் பதிப்பு : நவம்பர், 2011

© உரிமை ஆசிரியருக்கு.

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை: ரூ. 90/-

- Title : CHINNA NOOLKANDA NAMMAI SIRAIPADUTHUVATHU ?
- Author : SIVASANKARI
- Language : Tamil
- Subject : Self-Improvement Articles
- Edition : Twenty Third Edition, November, 2011
- Pages : 340
- Published by : VANATHI PATHIPPAKAM
  23, Deenadayalu Street,
  Thyagaraya Nagar, Chennai–600017.
  Ph: 24342810 / 24310769
  E-Mail : vanathipathippakam@gmail.com
  Website: www.vanathi.in
- Price : Rs. 90-00

Laser typeset: **Azhagu Systems**, Chennai -17. Ph. 4212 7214
Printed at: **Balaji Offset Printers**, Chennai -94 Ph. 2363 3094

# பதிப்புரை

ஆசிரியர் திருமதி சிவசங்கரி அவர்களின் **'சின்ன நூல்கண்டா நம்மைச் சிறைப்படுத்துவது?'** என்னும் கட்டுரைத் தொடர் ஜூனியர் விகடனில் தொடர் கட்டுரைகளாக வந்தபொழுது வாசகர்களின் அமோக ஆதரவைப் பெற்றது. புத்தகமாக எப்பொழுது வரும் என்று வாசகர்கள் கேட்டுக் கொண்டே இருந்தார்கள். இப்பொழுது புத்தக வடிவம் பெற்று வெளிவருகிறது.

தனி மனிதனுள் தோன்றும், தவிர்க்கப்பட வேண்டிய சில சின்ன நூல் இழைகள் போன்ற உணர்வுகள் படிப்படியாகப் பெரிதாக உருமாறி, வலிமை பெற்று, அவனைப் பல பூதாகாரமான பிரச்சினைகள் என்னும் இரும்புச் சங்கிலிகளுக்குள் சிறைப்படுத்திச் சித்ரவதை செய்வதை ஆசிரியர் வெகு அழகாக, சிறந்த உதாரணங்களுடன் இந்நூல் முழுக்க வெளிக்காட்டுகிறார்.

பல வாசகர்களின் மன இயல் சார்ந்த பிரச்சினைகளை மன இயல் மருத்துவர்களிடம்

தெரிவித்து, அவற்றிற்கான தீர்வுகளைப் பெற்று, வாசகர்களுக்கு வடிகால் அமைத்துக் கொடுத்துள்ள சம்பவங்கள் இந்நூலில் நிறையக் காணப் படுவதோடு பிரச்சினைக்குரிய வாசகர்களுக்கு ஆசிரியர் பாலமாக இருந்து அரும்பெரும் தொண்டு செய்துள்ளது என்றென்றும் போற்றற்குரியது.

நம் வாழ்க்கை சிறப்படைய நம் உணர்வுகளும் நடவடிக்கைகளும் சமநிலை தத்துவத்தில் அமைய வேண்டும். அதற்கான வழியைக் காட்டும் இந்நூலை அனைவரும் வாங்கிப் படித்துப் பயன் பெறுவதோடு நண்பர்களுக்கும் திருமணத் தம்பதிகளுக்கும் பரிசாகக் கொடுக்கலாம்.

**'சின்ன நூல்கண்டா நம்மைச் சிறைப் படுத்துவது?'** என்னும் பயனுள்ள இந்நூல் வானதி பதிப்பக வெளியீடாக வருவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

ஏ. திருநாவுக்கரசு
வானதி பதிப்பகம்

# சின்ன நூல்கண்டா நம்மைச் சிறைப்படுத்துவது?

## 1

இன்றைக்கு முரளியிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. போன மாசத்தைவிட இந்த மாசம் மனசில் தெளிவும், தைரியமும் கூடியிருக்கின்றன என்றும், வேலைக்குத் தொடர்ந்து போக முடிகிறது என்றும், வாழ்க்கை முன் அத்தனை கடுமையாகத் தெரியவில்லை என்றும் தன்னம் பிக்கையுடன் எழுதியிருக்கிறார். முரளி சமீபத்தில்— சுமார் ஏழு மாசங்களுக்கு முன்— மனைவியை ஒரு விபத்தில் அகாலமாய் இழந்தவர். இவருக்கு வயசு இருபத்தி எட்டு; அவளுக்கு இருபத்தி நான்கு. அவள் இறக்கும்போது அவர்களுக்குத் திருமணமாகி பதினைந்து மாதங்கள் பூர்த்தியாகி இருந்தன; வயிற்று சிசுவுக்கு எண்பது நாட்கள்.

அதிர்ச்சியிலிருந்து மீளத் தெரியாமல், வேதனையைத் தாங்க முடியாமல், மனைவியைப் பிரிந்து வாழ்வது இயலாத காரியம் என்ற முடிவுக்கு வந்த முரளி, தன் தீர்மானத்தைச் செயலாக்கும் முன், தன்னைச் சரியாகப் புரிந்துகொள்வார் என்ற நம்பிக்கையுடன் ஏதோ ஒரு உந்துதல் காரணமாய் ஒருவருக்குக் கடிதம் எழுதினார்.

தானும், தன் மனைவியும் வாழ்ந்த அந்த இனிமையான தாம்பத்தியம், பிறக்கப்போகும் குழந்தைக்காகத் தேர்ந்தெடுத்துவிட்ட பெயர், எதிர்காலத்துக்காக யோசித்துத் தீட்டிய அற்புதமான திட்டங்கள்… இத்தனையும் விரிவாக (பதினெட்டு பக்கங்கள்) எழுதி, யாவும் க்ஷண காலத்தில் பறிக்கப்பட்டுவிட்டதால் உண்டாகிவிட்ட சூன்யத்தைத் தாங்கத் தெரியாமல் தவிப்பதையும் விவரித்து, 'சத்தியமாகச் சொல்கிறேன்—எனக்கு வாழ விருப்பம் இல்லை— 'செத்தால் என்ன? இனி யாருக்காக வாழ வேண்டும்?' என்ற கசப்பு, விரக்திதான் அணுஅணுவாய் பரவியிருக்கிறது… என் நிலை உங்களுக்குப் புரிகிறது அல்லவா?' என்றும் எழுதியிருந்தார்.

முரளி அத்தனை நம்பிக்கையுடன் கடிதம் யாருக்கு எழுதியிருந்தார் தெரியுமா?

எனக்குத்தான்…

முரளியை ஏற்கெனவே எனக்குத் தெரியுமா?

ம்ஹூம்…

அவர் மனைவியை?

ம்ஹூம்…

அவர் குடும்பத்தில் யாரையாவது?

ம்ஹூம்…

அப்புறம்?

என் எழுத்துக்களைப் படித்ததன் மூலமாக என்னை நன்றாக அறிந்த மாதிரி ஒரு பிடிப்பு ஏற்பட்டிருந்ததாம்—முரளி எழுதியிருந்தார்.

அன்றைக்கு— அந்தக் கடிதம் வந்த அன்றைக்கு— வேறு எந்த வேலையிலும் புத்தி போக முடியாதபடி முரளியின் துக்கம் என்னையும் பாதிக்க, எனக்குத் தெரிந்த விதத்தில் அவருக்கு ஆறுதல் சொல்லி நான் பதில் கடிதம் எழுத, மூன்றாம் நாள் முரளி என்னைச் சந்திக்க நேரில் வந்துவிட்டார்.



அப்புறம் நான்கைந்து லெட்டர்கள்…

ஒவ்வொன்றிலும் குட்டியாய் முன்னேற்றம்.

இன்று இந்தக் கடிதம்…

கிட்டத்தட்ட ஆறு மாசங்களாய் வேலைக்குச் செல்லாதவர் இன்று அதில் சுவாரஸ்யத்துடன் ஈடுபடுவதாகவும், குழப்பம் நீங்கி ரொம்பவும் தெளிந்துவிட்டதாகவும் எழுதியிருப்பதைப் படிக்கையில் சந்தோஷமாக இருக்கிறது.

ஆனால், கடைசி வரியாய் "இன்று எனக்குக் கிடைத்திருக்கும் நிம்மதிக்கு முழு காரணகர்த்தா நீங்கள்தான்" என்றும் நன்றியோடு முரளி குறிப்பிட்டிருப்பது வாஸ்தவமாக எனக்குள் ஒரு சின்ன முறுவலையே தோற்றுவிக்கிறது.

உண்டாக்கியதும், முயற்சித்ததும், சாதித்ததும் முழுக்க முழுக்க முரளிதானே தவிர, வேறு யார்?

வேதனையை அனுபவித்தது அவர்; அதிலிருந்து மீள வேண்டும் என்று தீர்மானித்தது அவர்; துளித்துளியாய் மீண்டுவந்தது அவர்.

வேண்டுமானால், அவரைப் புரிந்துகொண்டு ஓரிரு சரியான வார்த்தைகளைச் சரியான நேரத்தில் நான் சொல்லியிருக்கலாம். மற்றபடி புழுக்கம் தாங்காமல் தவித்ததும் அவர்; மூடியிருந்த சாளரத்தைத் தேடிக் கண்டுபிடித்துத் திறந்துவிட்டு இப்போது வெளிச்சத்தையும் காற்றோட்டத்தையும் அனுபவிப்பவரும் அவரே…

அப்புறம் மகுடம் மட்டும் எனக்கெதற்கு?

வெளிச்சம் வெளியில் இல்லை…

சத்தியமாய் அவரவர் உள்ளுக்குள்ளேயேதான் வெளிச்சமும், காற்றும், தைரியமும், தன்னம்பிக்கையும், சந்தோஷமும், நிம்மதியும் இருக்கின்றன.

இதை உணராமல், உணர முடியாமல், கோபமும், தாபமும், வேதனையும், வலியும், ஆங்காரமும், ஆற்றாமையும், அறிவீனமும், பலவீனமும் சன்னமான நூலிழைகளாய் நம்மைச் சிறைப்படுத்த அனுமதித்தால், நஷ்டம் யாருக்கு? அவஸ்தை யாருக்கு?

ம்?

முரளியின் கடிதம், புதுவிதமான சிந்தனைகளைத் தட்டிவிட, அவை தரும் புத்துணர்ச்சியுடன் எழுந்து ஜன்னலருகில் சென்று நிற்கிறேன்.

மதிய வேளை...

வெள்ளை வெயில்.

மாடி நீர்த்தொட்டியை நிறைத்துவிட்டு வழியும் ஜலம், கறிவேப்பிலைச் செடிக்கு அபிஷேகம் செய்துவிட்டு பழுப்பு மண்ணில் குளமாய் தேங்குகிறது.

எங்கிருந்தோ பத்துப் பன்னிரண்டு தவிட்டுக் குருவிகள் காற்றில் சேதி வந்த தினுசில் பறந்து வருகின்றன.

அதில் நான்கைந்து உற்சாகமாய் காச்காச்சென்று கத்தியபடி தேங்கிக் கிடக்கும் நான்கு விரக்கடை உயர ஜலத்தில் இறகுகளை விரித்து, உதறி, குளித்து பரபரக்கின்றன.

ஓரமாய் தயங்கித்தயங்கி நிற்கும் குருவி ஒன்று...

இதுநாழிகை முங்கிக் குளித்த குருவிகளில் ஒன்று தயங்கி நிற்பதிடம் வருகிறது. மூக்கோடு மூக்கு வைத்து பெரிசாய் கத்துகிறது. என்ன சொல்லுகிறது? தண்ணீர் ஜில்லென்று வெயிலுக்கு அருமையாய் இருக்கிறது, குளிக்காமல் ஏன் ஓரமாய் நிற்கிறாய்? — என்கிறதா? நான் இருக்கிறேன் பயப்படாதே, தைரியமாய் வா— என்கிறதா?

ஏதோ ஒன்று...

தயங்கி நின்ற குருவி அந்தத் தயக்கம் நீங்காமலேயே பையப்பைய நடந்து வந்து மூக்கை மட்டும் ஜலத்தில்



விட்டுவிட்டு, அம்மாடி ஆளை விடு... எனக்குக் குளிர்கிறது — என்கிற மாதிரி அவசரமாய் ஒரடி பின்னுக்கு நகர, கூட நிற்கும் குருவி இறகுகளை சடசடத்துக் 'காச்காச்' என்கிறது.

இத்தனை அமளிக்கும் தனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பது போல ஈரக்கல் மேல் சப்பட்டையாய்ப் படுத்திருக்கும் குண்டு அணில்...

சற்றுத் தள்ளி வரிசையாய் நடப்பட்டிருக்கும் மிளகாய்ச் செடிகளில் பழுத்துத் தொங்கிக்கொண்டிருக்கும் சிவப்புப் பழத்தை அலகால் கடித்துக் குதறி, ஒரு வாய் விழுங்கி, 'யார் சொன்னா மிளகாய் உரைக்கும் என்று?' என்பதாய் தலையைச் சாய்த்து ஒன்றரைக் கண் பார்வை பார்க்கும் அண்டங்காக்கை...

நீல வானம்...

அதில் வேகமாய் உருவத்தை மாற்றிக்கொள்ளும் ஒற்றை வெள்ளை மேகம்...

ஜன்னல் கம்பியில் கன்னங்களை அழுத்திக் கொள்கையில் இந்த இயற்கையும், இனிமையும், ரசனையும், விழிப்புணர்வும் மனசை ரம்யமாக்குவது புரிகிறது.

இந்த விழிப்புணர்வு எனக்குள் எப்போது பிரசவித்தது? சின்ன வயசிலேயேவா?

இல்லை... நிச்சயம் இல்லை.

அப்போதெல்லாம் சிரிப்பு, விளையாட்டு, துறுதுறுப்பு, என் வயசையும்விடச் சின்னவர்களின் தோழமை... அவ்வளவுதானே?

எழுதத் துவங்கி ஒருசில வருஷங்கள் ஆன பிறகு, கல்லூரியில் ஆசிரியையாக இருந்தவர் என்னைச் சந்தித்த போது, "நீயா எழுதுகிறாய்? மனதின் மெல்லிய உணர்வுகளும், சமுதாயப் பிரச்சினைகளும் ஒருவித பாதிப்பை உண்டாக்க எழுதுவது வாஸ்தவத்திலேயே நீதானா? உன்னிடமா இந்த மாற்றம்? இது எப்படி நிகழ்ந்தது?

எப்போது நிகழ்ந்தது?" என்று கண்ணகல நம்பமாட்டாமல் திரும்பத்திரும்ப வினவினதை இப்போது நினைத்துப் பார்க்கிறேன்.

அவர் மட்டும் அல்ல...

என்னை சிறுவயதிலிருந்து அறிந்த பலரும் கேட்ட கேள்விதான் இது.

நிஜமாக நீதானா எழுதுகிறாய்?

ஏன் கேட்டார்கள்?

அவர்களை எது அப்படிக் கேட்க வைத்தது?

அன்று நான் இருந்த விதம்... பிரதிபலித்த குணம்... அதுதானே?

விளையாட்டாகப் பேசி மகிழ்ந்து, துடிப்புள்ள வெகுளிப்பெண்ணாய் இருந்தவள், இன்று முரளி போன்றவர்கள் — என் எழுத்துக்களால் மட்டுமே என்னை அறிந்திருந்தாலும், தங்கள் பிரச்சினைகளை என்னால் புரிந்துகொள்வது சாத்தியம் என்கிற நம்பிக்கையோடு என்னை அணுகும் அளவுக்கு மாறியிருக்கிறேன் என்றால் — இந்த மாற்றத்தை என் வளர்ச்சி என்று நான் ஏன் எண்ணி சந்தோஷிக்கக் கூடாது?

ஆங்கிலத்தில் புழுவிலிருந்து பட்டுப்பூச்சியாகும் மாற்றத்தை மெடமார்ஃபோஸிஸ் என்பார்கள்.

என் மாற்றமும் ஓரளவுக்கு இப்படிப்பட்டதுதான். புழுவும், பட்டுப்பூச்சியும் இரண்டு பக்கத்தையும் மிகைப் படுத்துதல் என்று வைத்துக்கொண்டாலும்—என்னைப் பிணைத்திருந்த அறியாமை, தெரியாத்தனம், குழந்தைத்தனம் போன்ற நூலிழைகளை அறுத்துக்கொண்டு நான் சுதந்திரமாய் முன்னோக்கி வந்திருப்பது நிஜம்.

நின்று நிதானிக்கையில், இந்த வெளிச்சமும், காற்றும், சுதந்திரமும் பரவசமூட்டுபவையாக இருப்பினும், நான் வந்திருப்பது பத்தே பத்தடிகள்தாம் என்பது புரிகிறது... இன்னும் போகவேண்டிய தூரம் அதிகம்... வளர வேண்டிய உயரம் எக்கச்சக்கம். தெரிந்தது, புரிந்தது, செயலாற்ற வேண்டியதும் ஏராளம்...



இப்படி நான் எழுதுவதைப் படிப்பவர்களில் சிலராவது —ஓ! இது இவள் சுயபுராணக் கட்டுரையோ!—என எண்ணலாம். இல்லை, நிச்சயம் இல்லை... கூடவே, எந்த உபதேசத்தையும் டாம்டாம் அடிக்கும் உத்தேசமும் எனக்கு இல்லை என்பதை நீங்கள் நம்ப வேண்டும். உனக்குத் தெரிந்ததை நீ சொல், நான் அனுபவித்து அறிந்தவற்றை நான் சொல்கிறேன்— என்கிற ஆர்வத்துடன்; ஒருவர் நலனில், வளர்ச்சியில் மற்றவர் அக்கறை கொண்டு; வேண்டாத தளைகளை நூலிழைகளாக அறுத்து, கை கோர்த்து நீங்களும் நானும் நடக்க, உரக்க சிந்திக்க, ஆசைப் பட்டதன் விளைவே இந்தக் கட்டுரைத் தொடர்...

இந்தப் பயணத்தில் பங்குகொள்ள எனக்குத் தகுதி இருக்கிறதா என்பதைப் பகிரங்கமாய் அலச முனையும் போது, அடுத்து வரும் ஓரிரு அத்தியாயங்களில் மட்டும் நான் எங்கிருந்தேன், இப்போது நான் எங்கே நின்று கொண்டிருக்கிறேன், எங்கே செல்ல உத்தேசித்திருக்கிறேன் என்கிற அலசலின் தொடர்பாக என்னைப் பற்றின ஒரு சில விவரங்களை எழுதும் அவசியம் எழுகிறது. மற்றபடி, இத்தொடரில் பலரின் உதவியோடு, பலப்பல விஷயங்களை புதிய கோணத்திலிருந்து பார்க்க முயலப் போகிறேன்...

மேலே தொடருமுன்— 'வெளிச்சம் வெளியே இல்லை' என்ற கவிதை மூலம் என்னைப் பாதித்து, அதிலிருந்தே வெகு பொருத்தமாக இத்தொடருக்குத் தலைப்பு தேர்ந் தெடுக்க உதவிய கவிஞர் மேத்தாவுக்கு என் சந்தோஷம் கலந்த நன்றி...

# 2

**ரொ**ம்ப சின்ன வயசில் நடந்து, பிற்பாடு ரொம்ப வருஷங்களுக்கு என்னை உறுத்திக்கொண்டிருந்த மூன்று சம்பவங்களைப்பற்றி இப்போது சொல்லப் போகிறேன்.

இந்த மூன்றுமே என் ஏழிலிருந்து பத்து வயசுக்குள் நிகழ்ந்திருக்குமென நினைக்கிறேன்.

வித்யோதயாவில் மூன்றாவது வகுப்புப் படித்துக் கொண்டிருந்த சமயம்...

நாராயணி என் வகுப்பிலேயே படிப்பவள். அவ்வப் போது அவளும் நானும் சேர்ந்து பள்ளிக்கு வருவோம், போவோம்.

நாராயணியின் வீட்டைச் சுற்றி நான்கைந்து மாமரங்கள், தாழ்வாக ஏறுவதற்கு லகுவாகப் படர்ந்திருக்கும்.

மாங்காய் காலம் வந்துவிட்டால் தினத்துக்கு இரண்டு மூன்று காய்களை, பெற்றவர்களுக்குத் தெரியாமல் நாராயணி பள்ளிக்கு எடுத்து வருவாள். இடைவேளையின் போது சினேகிதிகள் எல்லோரும் ஒன்றாய் உட்கார்ந்து மாங்காய்களை எச்சில் கடி கடித்து, ஒவ்வொரு நாளும் ஒவ்வொருத்தி எடுத்துவரும் மிளகாய், உப்புப்பொடிக் கலவையில் தோய்த்து கண்ணிலும், மூக்கிலும் ஜலம் வழிய சாப்பிடுவோம்.

ஒருநாள் பள்ளியிலிருந்து நாராயணியும் நானும் வீடு திரும்புகையில் கணக்குப் புத்தகமோ, வேறு நோட்புக்கோ தேவைப்பட, முதலில் அவள் வீட்டுக்குப் போனோம்.

கேட்டைத் திறந்துகொண்டு உள்ளே நுழையும்போதே நாராயணி "ஏய்— அப்பா இருக்கார்— நீ பாட்டுக்கு



தோட்டத்து மரத்துல ஏறி இஷ்டத்துக்கு காய் பறிச்சுடாதே — கோச்சுப்பார்" என, சமர்த்தாய் தலையாட்டினேன்.

நீளநீளமாய் கிளிமூக்குகள்; குண்டாய் ருமானிகள்... எல்லாம் கைக்கெட்டும் தூரத்தில்... நாக்கில் நீர் ஊறியது.

நாராயணி புத்தகம் எடுக்க உள்ளே போனதும் கை துறுதுறுக்க, இரண்டே எட்டில் மரத்திடம் சென்று யாரும் பார்க்காத தைரியத்தில் உருண்டையாய் முதிர்ந்திருந்த ருமானிகளில் இரண்டைப் பறித்துப் பையில் போட்டுக் கொண்டு வாசலுக்கு வந்து சாதுவாய் நின்றேன்.

உள்ளே போன நாராயணி வராந்தாவில் நின்று கூப்பிட்டாள்.

"அம்மாகிட்ட நீ வந்திருக்கறத சொன்னேன்— உன்ன வரச்சொல்லுங்கறா... வாயேன்..."

"நாழியாச்சு நாராயணி, லேட்டா போனா எங்காத்துல கோச்சுப்பா..."

"ஒரு நிமிஷம் வந்துட்டுப் போ."

மாங்காய் இருந்த பக்கம் சுவரைப் பார்க்க பையைச் சாய்த்து வைத்துவிட்டு உள்ளே போனேன்.

மாமி கோகோவோ, ஒவல்டின்னோ கொடுத்து குடிக்கச் சொன்னார்.

இரண்டு நிமிஷம் போயிருக்கும்.

"இங்க பாத்தியாடீ?"

திரும்பினால் நாராயணியின் அப்பா... கையில் என் பை, மாங்காய்கள் துருத்திக்கொண்டு...

"பை நன்னா இருக்கேன்னு எடுத்துப் பார்த்தா மொக்கு மொக்கா உள்ள மாங்காடீ... ஏய்... யார் வேலை இது?"

கண்களை உருட்டிக்கொண்டு மாமா அதட்ட, யோசிக்காமல் நான் சொன்னேன்:

"நாராயணிதான் பறிச்சுக்கச் சொன்னா, மாமா..."

அப்புறம் என்ன நடந்தது, மறுநாளிலிருந்து நாராயணி என்னோடு பேசாமல் இருந்தது, மற்ற விவரங்கள் எல்லாம் இப்போது வேண்டாம்... அடுத்த சம்பவத்துக்குப் போகலாம்.

மழைக் காலத்தில் ஒருநாள்...

சுருக்க இருட்டிவிட்டது.

கேட்டருகில் யாரோ சைக்கிள் மணி அடிப்பதைக் கேட்டு வாச வராந்தாவில் பல்லாங்குழி ஆடிக்கொண்டிருந்தவள் எழுந்து போனேன்.

முகம் தெரியாத இருளில் ஓர் ஆள் நின்றிருந்தார்.

பையிலிருந்து எதையோ எடுத்து, கஷ்டப்பட்டு படிக்கப் பார்த்து முடியாமல், "இதுதானே கோதண்டம் ஸார் வீடு?" என, நான் இல்லை என்றேன்.

"எந்த நம்பர் வேணும் உங்களுக்கு?"

"ஆறு..."

"இது ஆறுதான்... ஆனா கோதண்டம்னு இங்க யாரும் இல்ல..."

"நேரு ஸ்ட்ரீட்தானே இது!..."

"இல்லியே... ராமச்சந்திரய்யர் தெரு."

"ஓ!" எரிச்சல் கலந்த முனகலுடன் அந்த ஆள் நகர, இரண்டு நிமிஷம் அப்படியே நின்று கேட்டைத் திறந்து வெளியில் சென்று குனிந்தேன்.

அவர் சட்டைப்பையிலிருந்து விலாசச் சீட்டை எடுத்த போது வெள்ளையாய் இன்னும் ஏதோ ஒன்று விழுந்ததைக் கவனித்திருந்ததால், என்ன அது என்ற ஆர்வத்துடன் குனிந்தேன்.



நான்காக மடிக்கப்பட்ட ஒரு ரூபாய்த் தாள்.

அட! ஒரு ரூபாய்!

சட்டென்று பணத்துடன் உள்ளே வந்து மாடிக்கு ஓடினேன்.

என் அலமாரியில் வைத்திருந்த மண்சட்டி உண்டியலில் போட்டுவிட்டு நிம்மதியாய் கீழே இறங்கி வந்தேன்.

மூன்றாவது சம்பவம் நடந்தபோது எனக்கு தாராளமாய் பத்து வயசு இருக்கும்.

எதிர் வீட்டில் கமலம் என்றொரு பெண். என் வயசுக்காரி. ஏக சினேகம்.

ஒருநாள் பேச்சுவாக்கில், இருட்டு என்றாலும், பேய் பிசாசு என்றாலும் தனக்கு ரொம்ப பயம் என்று அவள் கூற, வீட்டில் பெரியவர்கள் இல்லாத ஒரு நாளில் அவளை பயமுறுத்தத் தீர்மானித்தேன்.

இத்தனைக்கும் 'கும்' இருட்டுக்கூட இல்லை. மாலை மணி ஆறு ஆறரைதான் இருக்கும்.

மொட்டை மாடியில் விளையாடிக்கொண்டிருந்து விட்டு இரண்டு பேரும் உள்ளே வர, பாத்ரூம் போக வேண்டும் என்று கமலம் சொன்னாள். மாடியிலேயே இருந்த பாத்ரூமுக்கு அவளை அழைத்துச் சென்றேன்.

திடுமென அவளை பயமுறுத்த அதுவே சரியான சமயம் என்று குஷி தோன்றியது. பரபரவென்று பெட்ரூமுக்கு ஓடி ஒரு பெட்ஷீட்டை எடுத்து வந்தேன். வெளி அறை விளக்கை அணைத்துவிட்டு, போர்வையைத் தலையோடு காலாகப் போர்த்திக்கொண்டு, அவள் வெளியே வரும்போது இரண்டு கைகளையும் கூடாரம் போல் தலைக்குமேல் தூக்கி அடிக்குரலில் "க..ம..ல..ம்" என்றேனோ இல்லையோ— "ய...ம்ம்ம்மா.....ஆ..." என்று அலறியவள்

தொப்பென்று புளியம்பழம் மாதிரி அங்கேயே விழுந்து விட்டாள்.

இப்படியொரு பயத்தை எதிர்பார்க்காததால் அவளை விட அதிகமாக நானும் பயந்துபோனேன்.

என்னாயிற்று?

மயக்கமா?

இல்லை செத்துகித்துவிட்டாளா?

கண் விழிக்க வைத்து, அரை மணிக்குப் பிறகு அம்மாவுக்குத் தெரியாமல் அவளை வீட்டுக்குக் கொண்டு விட்டு வருவதற்குள் நான் செத்துதான் பிழைத்தேன்.

அப்புறம் நான்கு நாட்களுக்குக் கமலம் ஸ்கூலுக்கு வரவில்லை. ஜுரமான ஜுரம்.

இந்த மூன்று சம்பவங்களில் முதலிரண்டை உடனேயும், மூன்றாவதை கமலம் மீண்டும் பள்ளிக்கு வரத் துவங்கியதும் மறந்துவிட்டாலும், சில வருஷங்கள் கழித்து திடுக்திடுக்கென்று இவற்றின் ஞாபகம் நெஞ்சில் உறுத்தத் துவங்கியது நிஜம்.

எப்படி அப்படியொரு பொய்யை பச்சையாய் சொல்லி அன்று நாராயணிக்கு அடி வாங்கி வைத்தது எனக்குச் சாத்தியமாயிற்று?

எப்படி அன்று ரூபாயை நடக்கென்று உண்டியலில் போட்டுக்கொண்டேன்? அந்த ஆள் பணத்தை எதற்காக வைத்திருந்தாரோ? காய்கறி வாங்க? இரவுச் சாப்பாட்டுக்கு? உடம்பு சரியில்லாத அம்மாவுக்கு மருந்து வாங்க?

நோஞ்சான் கமலத்தை அப்படி பயமுறுத்தினேனே... ஏதாவது ஒன்று கிடக்க ஒன்று நடந்திருந்தால்? இதயம் நின்றிருந்தால்? பயத்தில் பைத்தியம் பிடித்திருந்தால்?



எத்தனை நேர்மையில்லாத, சந்தர்ப்பவாதியாக, இரண்டாங்கெட்டான்தனத்துடன் நடந்துகொண்டிருக்கிறேன்!

ச்சே... ச்சே...

நினைக்கநினைக்க கண்களில் நீர் ததும்பும். என் மேலேயே எரிச்சல் எழும். அற்பத்தனமாக நடந்துகொண்டு விட்டோமே என்ற வருத்தம் எழும்.

நாளாக ஆக, இந்தப் பிறாண்டல்கள் அதிகமாயினவே ஒழிய குறையவில்லை.

யாரிடமாவது பேசி மனபாரத்தை இறக்கிக் கொள்ளலாம் என்றால் தயக்கம்; கேட்பவர்கள் நம்மை மட்டமாக நினைத்துவிடுவார்களே என்ற பயம்...

நான் பெரியவளாகி ரொம்ப வருஷங்களுக்கு எவராவது என்னைப் பாராட்டிப் பேசினால் முழு மனசோடு ஏற்க இயலாது.

ஆமாம்— உன் லட்சணம் தெரியாதாக்கும் என்று உள்ளுக்குள் எதுவோ சிரிக்கும்.

ரொம்ப வருஷங்களுக்கு இந்த அவஸ்தையை அனுபவித்த பிறகு எங்கள் வீட்டுக்கு ஒரு பெரியவர் வர, அவர் எனக்கு உதவுவார் என்ற நம்பிக்கை ஏனோ பிறக்க, தனிமை கிடைத்தபோது இந்தப் பிறாண்டல்களைப் பற்றிச் சொல்லி "ஆனாலும் நான் ரொம்ப மோசம் இல்லியா மாமா?" என்று அழுதேன்.

கேட்டவர் சிரித்தார்.

"அட அசடே!" என்று சொல்லிவிட்டு மீண்டும் சிரித்தார்.

"வேணும்னே திட்டம் போட்டு, பிறத்தியார் மனசை நோக அடிக்கறதும், பொய் சொல்றதும், நேர்மை இல்லாம நடந்துக்கறதும்தான் தப்பான காரியங்கள். தெரியாத்

தனத்தாலயும், குழந்தைத்தனத்தாலயும், யோசிக்காமத்தான் அன்னிக்கு நீ அந்தக் காரியங்கள் செஞ்சே... எப்ப தப்பு பண்ணிட்டோம்னு வருத்தப்படறியோ, அப்பவே நீ மீண்டு வந்துட்டே... 'உறுத்தறது மாமா'ன்னு சொன்னே பாரு, அதுவே மேற்கொண்டு எந்தத் தப்பான காரியமும் பண்ண விடாம தடுத்துடும். தவிர, இப்படிப் பகிரங்கமா என்கிட்ட 'நா ஒரு காலத்துல இப்படி நடந்துண்டேன்'னு சொல்லணும்னா, மறுபடியும் அப்படியொரு அசட்டுக் காரியம் பண்ண முடியாதபடி மனசுல விழிப்புணர்வு வந்துட்டதுனு தான் அர்த்தம்... என்ன புரியறதா?"

அந்த மாமாவின் பேச்சை அப்புறம் பல முறைகள் நினைத்துப்பார்த்து சந்தோஷித்திருக்கிறேன்— அந்த வார்த்தைகள் என் மனசை வருடிக்கொடுத்து, யானை பலத்தைத் தந்துவிட்டதை உணர்ந்திருக்கிறேன்.

வேண்டாத காரியம் ஒன்றைச் செய்கிறோம் என்கிற உறுத்தல் இருக்கிறவர் எவருமே அதை ஒரு புத்தகத்தில் குறித்துவைப்பதன் மூலமும், வெகுவாக மதிக்கும் நபரிடம் மனம்விட்டு ஒப்புக்கொள்வதன் மூலமும், தொடர்ந்து மனசுக்குப் பிடிக்காத எண்ணம், செய்கையை நிறுத்துவதோடு, பிறாண்டலையும் ஒழித்துக்கட்டலாம் என்றே நினைக்கிறேன்; அனுபவம் எனக்கு அப்படித்தான் சொல்லிக்கொடுத்திருக்கிறது.

# 3

குழந்தைத்தனமான காரியங்களைப்பற்றிப் பேசுகையில் இன்னும் சில சம்பவங்கள் நினைவுக்கு வருகின்றன.

அன்றைக்கு இருந்த அசட்டுப் பழக்கங்களில், வீட்டுக்கு யார் வந்தாலும் அவர்களைப் பாட, வீணை வாசிக்கச் சொல்லிவிட்டு சிரிப்பது ஒன்று.

ஒரே வயதினர்களாக நான்கைந்து பேர்கள் கூடிவிட்டால், புதுசாய் மாட்டிக்கொள்பவள் தீர்ந்தாள்.

அதுவும் புதுசு கொஞ்சம் சாதுவான கேஸ் என்று புரிந்துவிட்டால் புகுந்து விளையாடிவிடுவோம்.

"ஏய்... இவ பாடி நீ கேக்கலியே... பிரமாதமா பாடுவா!" என்பாள் ஒருத்தி.

"போன தரம் நா மிஸ் பண்ணிட்டேன். இன்னிக்கு நிச்சயம் கேட்டுட்டுதான் மறுவேலை"— இது நான்.

செமையாய் ஐஸ் வைத்து, வந்திருக்கும் பெண்ணை அசலாய் நம்பவைத்துச் சுற்றி உட்கார்ந்துகொள்வோம்.

பாவம், வந்தது தேமேனென்று பாடத் துவங்கும்.

சுருதி ஒரு பக்கம் போக, சாரீரம் அதன்கிட்டே கூட நெருங்கமாட்டேன் என்று சண்டி பண்ண, கேட்டுக்கொண்டிருக்கும் எங்களுக்கெல்லாம் சிரிப்புத் தாங்காது.

பாடுபவளுக்குப் பின்னால் உட்கார்ந்திருக்கும் நபருக்குப் படு சௌகரியம்; வாயை மூடாமலேயே சிரிக்கலாம்! மற்றவர்கள் பாடுதான் சிரமம். பிதுங்கும் சிரிப்பை மகா கஷ்டத்துடன் அடக்க பொய்யாகத் தும்முவோம், இருமுவோம், கையால் வாயைப் பொத்திக்கொள்வோம், தாங்கமாட்டாது போனால் இரண்டு தரம் விக்கிவிட்டு 'தண்ணி குடிச்சிட்டு வரேன்' என்று உள்ளே

ஓடி கதவின் மறைவில் நின்று, சப்தமில்லாமல் பெரிசாய் சிரித்து, சிரிப்பை அடக்க முயற்சிக்கும் மற்றவர்களையும் கெடுப்போம்.

இப்படிப் பின்னால் நின்றுகொண்டு சிரிப்பது ஒரு பழக்கம் என்றால், யார் வந்துபோனாலும் உடனே அவர்களைப் போல மிமிக்ரி பண்ணிக் காட்டி தானும் சிரித்து மற்றவர்களையும் சிரிக்கவைப்பது இன்னொரு வழக்கம்.

கதாகாலட்சேபம் செய்யும் பாகவதர் மாமா துண்டு மறைவில் பால் குடிப்பது, பாடம் சொல்லித்தரும் வாத்தியார் அடிக்கடி குடுமியை அவிழத்துத் தட்டி முடிவது, குண்டு அம்மாமி சபக் சபக்கென்று சப்தத்தோடு சாப்பிடுவது, பெரியப்பா மூக்குப்பொடி போடுவது, சின்னம்மாவின் பெண் பேபி விந்திவிந்தி நடப்பது, பல் தூக்கலாய் இருந்த அம்புலு பேசுவது— என்று படித்தவர், படிக்காதவர், பெரியவர், சிறியவர் என்ற தன்ளுபடி இல்லாமல் எல்லோரையும் சீண்டி, மிமிக்ரி செய்து மகிழ்ந்த காலம் அது.

போலியோ வந்து சூம்பிப்போன காலை இழுத்து இழுத்து பேபி நடக்கிற மாதிரியும், பிறவியிலேயே நாக்கு தடித்துப்போய் சரியாகப் பேச வராத நாகு மாதிரி பேசிக் காட்டுவதும் எனக்கு அன்று கைவந்த கலை...

நான்குபேர் கூடிவிட்ட எந்த இடத்திலும் இப்படிப் பட்ட மிமிக்ரி செய்துகாட்ட எனக்கு டிமாண்ட் இருந்து கொண்டே இருக்கும் என்பதால் பிரமாதமாய் எதையோ செய்து கிழிக்கிற பெருமை எனக்குள் பளபளத்துக் கொண்டே இருக்கும்.

அந்த அசட்டுத்தனம் கண்களை மறைத்ததால்தான் பேபியின் வேதனை, நாகுவின் வருத்தத்தை என்னால் அப்போது உணர முடியாமல் போயிருக்க வேண்டும்.



நன்றாக நினைவிருக்கிறது— ஒருதரம் வீட்டில் ஏதோ விசேஷம். குழந்தைகள் அனைவரும் ஒன்றுகூடி வாசப் பந்தலில் 'ஐஸ்பை' விளையாடிக்கொண்டிருக்கிறோம்; நானும் வரேன் என்று பேபி கெஞ்ச, 'நீதானே— உன்னோட விளையாடினா விடிஞ்சாப்பலதான்' என்று யாரோ சொல்ல, அதற்கு விளக்கமாய் இன்னொருத்தி பேபி மாதிரியே இந்தப் பக்கத்திலிருந்து அந்தப் பக்கத்துக்கு காலை இழுத்தபடி நடந்து காட்ட... ஹோ என்ற சிரிப்பு!

எல்லாம் அடங்கி வயிற்றைப் பிடித்துக்கொண்டு வராந்தாவில் உட்கார்ந்தால், கண்களில் வழியும் நீரோடு மூலையில் பேபி...

சட்டென்று அந்த இடத்தை விட்டு நகர்ந்து வாசலுக்கு வந்ததும், 'ச்சே! ஆனாலும் இந்த பேபி ரொம்ப மோசம். விளையாட்டா எதையும் எடுத்துக்கத் தெரியறதில்லை. இப்படி ஒரு பக்கமா வேணும்னே நின்னுண்டு அழுது, பெரியவாகிட்ட நமக்குத் திட்டு வாங்கி வைக்க வழிபண்றா' என்று அவளை நாங்களெல்லாம் முணுமுணுவென்று கடிந்துகொண்டதும் கொஞ்சம் விவரம் புரிந்த பிறகு என்னை நிறைய சிந்திக்க வைத்திருக்கிறது.

இன்னதற்குதான் சிரிப்பது, எதைப் பார்த்து சிரிப்பது என்ற விவஸ்தை இல்லாத அந்த நாட்களில் யாராவது வழுக்கி விழுந்தாலும் புர்ரென்று சிரிப்பு சிறிக்கொண்டு எழும்.

விழுந்தவர்களுக்குக் கை கொடுப்பதும், ஒத்தாசை செய்வதும் இருந்தாலும், முதலில் சிரித்துவிட்டுதான் மற்றவை.

சாரதா வித்யாலயாவில் படித்த நாட்களில் காமாட்சி என்றொரு சிநேகிதி. ஒரு சமயம் வேகமாய் ஓடிவந்தவளின் பாவாடையில் ஓரமாய் கிடந்த கருவேல முள் குச்சி சிக்கிக் கொண்டு, தரதரவென்று அவள் கூடவே இரண்டு

ஓடி கதவின் மறைவில் நின்று, சப்தமில்லாமல் பெரிசாய் சிரித்து, சிரிப்பை அடக்க முயற்சிக்கும் மற்றவர்களையும் கெடுப்போம்.

இப்படிப் பின்னால் நின்றுகொண்டு சிரிப்பது ஒரு பழக்கம் என்றால், யார் வந்துபோனாலும் உடனே அவர் களைப் போல மிமிக்ரி பண்ணிக் காட்டி தானும் சிரித்து மற்றவர்களையும் சிரிக்கவைப்பது இன்னொரு வழக்கம்.

கதாகாலட்சேபம் செய்யும் பாகவதர் மாமா துண்டு மறைவில் பால் குடிப்பது, பாடம் சொல்லித்தரும் வாத்தியார் அடிக்கடி குடுமியை அவிழ்த்துத் தட்டி முடிவது, குண்டு அம்மாமி சபக் சபக்கென்று சப்தத்தோடு சாப்பிடுவது, பெரியப்பா மூக்குப்பொடி போடுவது, சின்னம்மாவின் பெண் பேபி விந்திவிந்தி நடப்பது, பல் தூக்கலாய் இருந்த அம்புலு பேசுவது— என்று படித்தவர், படிக்காதவர், பெரியவர், சிறியவர் என்ற தள்ளுபடி இல்லாமல் எல்லோரையும் சீண்டி, மிமிக்ரி செய்து மகிழ்ந்த காலம் அது.

போலியோ வந்து சூம்பிப்போன காலை இழுத்து இழுத்து பேபி நடக்கிற மாதிரியும், பிறவியிலேயே நாக்கு தடித்துப்போய் சரியாகப் பேச வராத நாகு மாதிரி பேசிக் காட்டுவதும் எனக்கு அன்று கைவந்த கலை...

நான்குபேர் கூடிவிட்ட எந்த இடத்திலும் இப்படிப் பட்ட மிமிக்ரி செய்துகாட்ட எனக்கு டிமாண்ட் இருந்து கொண்டே இருக்கும் என்பதால் பிரமாதமாய் எதையோ செய்து கிழிக்கிற பெருமை எனக்குள் பளபளத்துக் கொண்டே இருக்கும்.

அந்த அசட்டுத்தனம் கண்களை மறைத்ததால்தான் பேபியின் வேதனை, நாகுவின் வருத்தத்தை என்னால் அப்போது உணர முடியாமல் போயிருக்க வேண்டும்.



நன்றாக நினைவிருக்கிறது— ஒருதரம் வீட்டில் ஏதோ விசேஷம். குழந்தைகள் அனைவரும் ஒன்றுகூடி வாசப் பந்தலில் 'ஐஸ்பை' விளையாடிக்கொண்டிருக்கிறோம்; நானும் வரேன் என்று பேபி கெஞ்ச, 'நீதானே— உன்னோட விளையாடினா விடிஞ்சாப்பலதான்' என்று யாரோ சொல்ல, அதற்கு விளக்கமாய் இன்னொருத்தி பேபி மாதிரியே இந்தப் பக்கத்திலிருந்து அந்தப் பக்கத்துக்கு காலை இழுத்தபடி நடந்து காட்ட... ஹோ என்ற சிரிப்பு!

எல்லாம் அடங்கி வயிற்றைப் பிடித்துக்கொண்டு வராந்தாவில் உட்கார்ந்தால், கண்களில் வழியும் நீரோடு மூலையில் பேபி...

சட்டென்று அந்த இடத்தை விட்டு நகர்ந்து வாசலுக்கு வந்ததும், 'ச்சே! ஆனாலும் இந்த பேபி ரொம்ப மோசம். விளையாட்டா எதையும் எடுத்துக்கத் தெரியறதில்லை. இப்படி ஒரு பக்கமா வேணும்னே நின்னுண்டு அழுது, பெரியவாகிட்ட நமக்குத் திட்டு வாங்கி வைக்க வழிபண்றா' என்று அவளை நாங்களெல்லாம் முணுமுணுவென்று கடிந்துகொண்டதும் கொஞ்சம் விவரம் புரிந்த பிறகு என்னை நிறைய சிந்திக்க வைத்திருக்கிறது.

இன்னதற்குதான் சிரிப்பது, எதைப் பார்த்து சிரிப்பது என்ற விவஸ்தை இல்லாத அந்த நாட்களில் யாராவது வழுக்கி விழுந்தாலும் புர்ரென்று சிரிப்பு சிறிக்கொண்டு எழும்.

விழுந்தவர்களுக்குக் கை கொடுப்பதும், ஒத்தாசை செய்வதும் இருந்தாலும், முதலில் சிரித்துவிட்டுதான் மற்றவை.

சாரதா வித்யாலயாவில் படித்த நாட்களில் காமாட்சி என்றொரு சிநேகிதி. ஒரு சமயம் வேகமாய் ஓடிவந்தவளின் பாவாடையில் ஓரமாய் கிடந்த கருவேல முள் குச்சி சிக்கிக் கொண்டு, தரதரவென்று அவள் கூடவே இரண்டு

கால்களுக்கும் நடுவில் இழுபட்டு வர, ஆ... ஆ... என்று காமாட்சி துள்ள, பார்த்துக்கொண்டு நின்ற எங்களுக்கெல்லாம் கிச்சுக்கிச்சு மூட்டின தினுசில் சிரிப்பு.

சில நிமிஷங்கள் கழித்து காமாட்சியின் கால்களில் வரிவரியாய் கசிந்த ரத்தத்தைப் பார்த்துப் பதறிப் போனாலும், முதலில் அவள் வலி புரியாமல் சிரித்தது நிஜம்தானே?

இதுவாவது பரவாயில்லை.

என் இருபதாவது வயசில், திருமணமானபிறகு நடந்த ஒரு நிகழ்ச்சி இருக்கிறதே, அது சுத்த மோசம்.

போபாலுக்குக் குடித்தனம் போன புதுசு.

குடிப்பதற்காகக் கொதிக்க வைத்த தவலை ஜலத்தை அது ஆறும் முன்னர் துண்டால் பிடித்துப் பானையில் ஊற்ற யத்தனிக்கையில், ஆவி கைகளைப் பதம் பார்த்ததில் பிடியை நழுவவிட, ஓரடி தள்ளி நின்றுகொண்டிருந்த என் கணவரின் பாதங்களை குடம் வெந்நீரும் அபிஷேகம் செய்ய, என் கணவர் பாதத்தைத் தூக்கிப்பிடித்துக்கொண்டு எரிச்சல் தாளாமல் ஒற்றைக் காலில் குதிக்கிறார்; இது என்ன சிவதாண்டவம் என்று குழந்தைத்தனமாய் எதிரில் நின்று நான் விழுந்துவிழுந்து சிரிக்கிறேன்.

இந்தப் பித்துக்குளித்தனம் முழுசாக ஒரு நிமிஷம் தான்—

நிலைமையின் தீவிரம் புரிந்து, அவர் பாதங்களுக்கு கிரீம் தடவி, வைத்தியரை வரவழைத்து, கொப்பளித்துப் போன இடங்களைப் பார்த்துப்பார்த்து 'ஐயோ, என்னால் தானே' என்று புலம்பினாலும், முதலில் அவர் வலி புரியாமல் வாய்விட்டுச் சிரித்தது நிஜம்தானே?

என்னிடம் ஏதாவது கோளாறு உள்ளதா?

பிறர் துன்பத்தில் மகிழ்ச்சி காணும் குணமா?



ஸாடிஸம் என்பார்களே— இதுதானா?

நூறாயிரம் கேள்விகள்...

இருப்புக் கொள்ளாமல் தவித்தவள் அந்த முறை சென்னைக்கு வந்தபோது மனோதத்துவம் படித்த நண்பரைத் தேடிப் போனேன்.

சின்ன வயசில் துவங்கி கடைசி சம்பவம் வரைக்கும் சொல்லி, "இது ஸாடிஸ குணமா?" என்று வெளிப்படையாகக் கேட்டுவிட்டேன்.

நண்பர் அக்கறையுடன் நான் கூறியவற்றைக் கேட்டுக் கொண்டார்.

பின், எதிர்க் கேள்விகளைக் கேட்டார்.

"காமாட்சி கால்களில் முள் சிக்கிக்கொண்டபோது சிரித்தேன் என்கிறாயே— எது உன்னைச் சிரிக்கத் தூண்டியது என்று யோசித்துக் கூற இயலுமா? அவருடைய அவஸ்தையா? இல்லை வேறு ஏதாவது வேடிக்கையான விஷயமா?"

"ம்? நிச்சயமாய் அவஸ்தை இல்லை— பாவாடைக்குள் சிக்கிக்கொண்ட முள் புஸ்ஸென்று பலூன் மாதிரி இருந்ததோடு, நீட்டிக்கொண்டிருந்த குச்சி பின்னால் வால் மாதிரியும் தோன்றியதால்தான் சிரித்தேன்."

"சரி— உன் கணவர் காலில் வெந்நீர் கொட்டியதற்கு வரலாம். அன்று ஏன் சிரித்தாய்? அவர் துடித்ததைப் பார்த்தா?"

"ஐயோ— சத்தியமாய் இல்லை. ஒரு காலைத் தூக்கிக் கொண்டு அவர் குதித்தது தமாஷாக இருந்தது. அதான்..."

"மீண்டும் இன்னொரு தரம் அவர் காலில் வெந்நீர் கொட்டினால் எத்தனை நன்றாக இருக்கும் என்று நினைத்தாயா?"

"ஐய்யையோ... என்ன இது!"

"யாராவது வழுக்கி விழுந்தாலும் முதலில் சிரிப்பு வந்து விடுகிறது என்றாயே— அந்த சந்தோஷத்துக்காக வேண்டு மென்றே வாழைப்பழத்தோலைப் போட்டு வைக்கிறாயா?"

"அப்படிக்கூட யாராவது செய்வார்களா என்ன?"

"ஏன் செய்யாமல்? ஆனால், நீ சிரித்தது நிச்சயம் பிறர் அவஸ்தையில் சந்தோஷம் கண்டு அல்ல. ஸாடிஸம் என்றால் என்ன தெரியுமா? பிறர் அல்லது தன் வேதனை யில் இன்பம் காணும் குணமே ஸாடிஸம். 18-வது நூற்றாண்டில் கவுண்ட்டி ஸாதே என்கிற நபர் தன் நாவல் களில் இந்த வக்ர குணத்தைப்பற்றிப் பரவலாக எழுதியதன் காரணமாய் இதற்கு ஸாடிஸம் என்று பேர் வைத்தார்கள். தெரியாத்தனத்தில் செய்யும் செயல்கள் வேறு; இது இப்படித்தான் இருக்கும் என்று தெரிந்து, அதை எதிர்பார்த்து செய்யும் செயல்கள் வேறு. இந்த வித்தியாசம் புரியாமல் வீணாகக் குழப்பிக்கொள்ளாதே."

நண்பரின் பேச்சு நிம்மதியைத் தந்தாலும் அப்படியே அமர்ந்து யோசனை பண்ணிவிட்டுக் கேட்டேன்.

"சரி... இதை விட்டுவிடலாம். அர்த்தமே இல்லாமல் எதற்கெடுத்தாலும் சிரித்ததும், கண்ணில் பட்டவர்களை மிமிக்ரி செய்து கேலி பண்ணியதும் ஏன்?"

"அதெல்லாம் அசல் குழந்தைத்தனமான காரியங்கள்... childish pranks. ஒவ்வொருத்தரின் இளமைக்காலப் பருவத்தி லும் இந்த ரீதியில் சம்பவங்கள் ஏராளமாய் இருக்கும். இன்னும் சொல்லப்போனால் பெரியவர்களான பிறகும் ஓரளவுக்கு இந்த மாதிரி சிரிக்க வைக்கும் குழந்தைத்தனங் களை நாமெல்லோருமே வைத்துக்கொள்வது நல்லதுதான். நகைச்சுவை உணர்வு ஆரோக்கியமான வாழ்வின் அஸ்தி வாரம், தெரியுமல்லவா?"



அன்றைக்கும், பிற்பாடு சில சந்தர்ப்பங்களிலும் தெளிவாக நண்பர் பேசின பேச்சுக்கள்தான், போபாலில் என் பக்கத்து வீட்டுக்காரியாக இருந்த அம்ருதா சின்ன வயசில் தான் செய்த அசட்டுக் காரியங்களை— தவறான விஷமங்களைச் சொல்லி 'நான் ஏன் அப்படி இருந்தேன் என்று புரியவில்லை' என்று வருத்தப்பட்டபோது, அவளைத் தேற்ற உதவியது என்றும், அப்புறம் எப்போது இரண்டு பேரும் சந்தித்துக்கொண்டாலும் குற்ற உணர்ச்சி ஏதும் இல்லாமல் சிறு பிராய நாட்களைப்பற்றி இயல்பாகப் பேச வைத்தது என்றும், இன்றைக்கும் ஒருசிலரின் பிரச்சினை களை சரியாகப் புரிந்து, செயல்பட கைகொடுக்கிறது என்றும் நம்புகிறேன்.

# 4

இந்த அத்தியாயத்தில் பிச்சம்மாவையும், ஊர் பேர் தெரியாத அந்தக் கிழவியையும் அறிமுகப்படுத்தி, அவர்களும் இன்னும் சிலரும் என்னுள் உண்டாக்கின பாதிப்புக்களை உங்களுடன் பகிர்ந்துகொள்ளப்போகிறேன்.

விழுப்புரத்திற்கு குடிவந்த ஓரிரு வருஷங்களுக்குள் பிச்சம்மாவைச் சந்தித்ததாக ஞாபகம்.

வருஷாந்திரத்துக்கு வாங்கிப்போட்ட அரிசியைத் தாத்தி, சுத்தம் பண்ணி வைக்கவேண்டும் என்று தோட்டக்காரனிடம் கூற, அவன் இட்டுவந்தவள் இந்த பிச்சம்மா.

காலை எட்டு மணி இருக்கும்.

முறமும் கையுமாய் வந்து நின்று 'அம்மா' என்று குரல் கொடுத்தவள் பின்னால் நார்த்தங்காய், கடாரங்காய் சைஸில் இரண்டு குழந்தைகள்.

ஐந்து, மூன்று வயசு இருக்கலாம்.

பெரிசு உடம்பில் ஒரு கிழிந்துபோன நிக்கர். சின்னதுக்கு அதுகூடக் கிடையாது.

பிள்ளைகளை கொய்யாமரத்தடியில் விளையாட விட்டபின், தாழ்வாரத்தில் அரிசி மூட்டையுடன் அவள் உட்கார்ந்துகொண்டாள்.

வாய் வார்த்தையாக ஏதும் லொடலொடக்காமல், குந்தின நிலை மாறாமல் கைக்காரியத்தை அவள் கவனிக்க, குழந்தைகள் கொஞ்ச நேரத்துக்கு கொய்யாமரத்தைச் சுற்றி விளையாடின.

மூத்தது மரத்தில் ஏறி தாழ்வான கிளையில் இருந்த கடும் பிஞ்சுகளில் நான்கைந்தைப் பறித்து வர, இரண்டுமாய் அவற்றைத் தின்றன.



சற்றுப் பொறுத்து, நாம் ஒன்றும் சொல்லாமல் இருந்த தைரியத்தில் அம்மாவை நெருங்கி அவள் புடைத்துப் போட்டிருந்த அரிசிக் குவியலிலிருந்து ஆளுக்கொரு பிடி எடுத்து மென்று, பைப் தண்ணீரைக் குடித்துவிட்டு மீண்டும் விளையாடப் போய்விட்டன.

இப்படி ஒரு இரண்டு மூன்று தரம்.

அப்புறம், களைத்துப்போன தினுசில் மரத்தடியிலேயே படுத்து உறங்கிவிட்டன.

புழுதி படர்ந்த உடம்பு.

சற்றே முன்னுக்குத் தள்ளி, கட்டித்தட்டின மாதிரி வீங்கிப் போன வயிறு.

பார்பர் ஷாப்பைக் காணாமல் சடைத்துப் போயிருந்த தலைமுடி.

ஆரோக்கியமாக வளரவேண்டிய குழந்தைகளை இப்படிச் சீரழிக்கிறாளே என்கிற கோபத்துடன் "பிள்ளைங்களை வீட்டுல விட்டுட்டு வரக்கூடாதா? இப்படி அலைக்கழிக்கிறது உனக்கே நல்லாயிருக்கா?" என்று ரொம்பத் தெரிந்த மாதிரி நான் கேட்டதற்கு அவள் தயக்கத்துடன் பதில் கூறினாள்.

"என் புருஷன் என்னை விட்டு இன்னொருத்தியோட ஓடிட்டாருங்க. எனக்கு ஆயி, அப்பன் யாரும் இல்ல. புள்ளைங்க வயித்துக்காவ உழைக்க வேண்டி இங்க வந்தேன். அரிசி அரைக்கற மில்லுல ராவுக்கு படுப்போம். பகல்ல அங்க புள்ளைங்கள விட்டுட்டு வரமுடியாது. வாரி வரும், வண்டி மாடுங்க வரும்... இதுங்க குறுக்கால ஓடி வண்டில ஆப்டுகிச்சுன்னா? அதான் கூடவே இட்டுகிட்டு வர்றேன். அதோட, இப்படி வந்துபோற எடத்துல ரெண்டு பிடி அரிசி சாப்ட்டு, தண்ணி குடிச்சிடுச்சிங்கன்னா பசி பசின்னு என்னப் பிடுங்காம அதுங்க பாட்டுக்கு இருக்கும்...

த.. இப்பகூட தூங்கிடுச்சி பாருங்க... ஒண்டி பொம்பளை, போக்கத்தவ, நா வேற என்னம்மா பண்ணுவேன்!"

பிச்சம்மா பேசப்பேச அடிவயிற்றிலிருந்து என்னமோ சுழண்டு சுழண்டு மேலே வந்து இருதயத்தின் வழியாய், புத்தியைத் தட்டி, புரிந்துகொள்— தெரிந்துகொள்— என்று மணியோசையை எழுப்பியது.

அடுத்து— அந்தக் கிழவி.

பெங்களூருக்குப் போய்விட்டு காரில் திரும்பிக் கொண்டிருக்கிறோம்...

ரேடியேட்டர் சூடாகிவிட, ஒரு மரத்தடியில் நின்று என்ஜினைக் குளிர வைக்கும் நிர்ப்பந்தம்.

வண்டியிலிருந்து இறங்கி சோம்பல் முறித்து நாலடி நடந்தவள் அந்தக் கிழவியைப் பார்த்தேன்.

சரியான தள்ளாமை.

சுருத்து சுருக்கஞ்சுருக்கமாய் மண்புழு மாதிரி சுருங்கின தோல்.

எண்ணெய் என்றால் எப்படி இருக்கும் என்று கேட்கும் பிரிபிரியான, செம்பட்டை தலைமயிர்.

இன்ன நிறம் என்று சொல்ல முடியாதபடி வெளுத்து, கிழிந்துபோன புடவை...

தலைக்குமேல் பரவின புளியங்கிளைகளை எக்கிப் பிடித்து, அதிலிருந்து புளியந்துளிர்களை உருவி புடவை மடிப்பில் போட்டுக்கொண்டிருந்தவளிடம் பொழுது போகாமல் பேச்சுக்கொடுத்தேன்.

"என்ன பாட்டி... ஒண்டியா இந்த எடத்துல என்ன பண்ணறே?"

"புளியந்துளிர் பறிக்கறேன், தாயி..."

"எதுக்கு? ஆட்டுக்குப் போடவா?"



"ஆங்? எனக்கு ஏது ஆடும் மாடும்? நா துன்னத்தான்."

"புளியந்துளிர் உனக்கெதுக்கு, பாட்டி?"

"தண்ணில போட்டு கொதிக்க வெச்சா கொளம்புக்கு ஆவுமே தாயி..."

"ஏன் இதப் போடறே? புளியக் கரைச்சு வைக்க மாட்டியா?"

"புளி வாங்க காசுக்கு எங்க போவேன், தாயி? புளி காய்க்கற சமயத்துல புளியம்பழங்களப் பொறுக்கி வெச்சிகிட்டு, ஓட்டுவேன்... அப்பால, காலம் மாறினாவுட்டு இதுதான். நாலு கை எலையோட தம்மாத்துண்டு உப்பு போட்டா கொளம்பு ஆச்சு... எப்பனாச்சும் மொளகா அரைச்சிவிட்டு, காயும் போடறதுதான்..."

பதில் பேசத் தெரியாது, முடியாது நான் நிற்க, கிழவி தொடர்ந்து நீளமாய் பேசினாள்.

கண்ணில் பூ விழுந்து, அம்மைத் தழும்புகளுடன் இருந்தவளை ரொம்ப வருஷங்களுக்கு முன்னால் இரண்டாந்தாரமாகக் கட்டிவைத்தார்களாம். புருஷன் இறந்ததும் மூத்த தாரத்தின் மக்கள் விரட்டிவிட்டார்களாம். கை காலில் தெம்பு இருந்தவரைக்கும் காடு, கழனிகளில் வேலை செய்து பிழைத்தாளாம். இப்போது நான்கைந்து வருஷங்களாய் எதுவும் முடியாமல் போக, அவ்வப்போது சாணி பொறுக்கி வறட்டி தட்டி விற்பதில் எட்டணா, நான்கணா வந்தால் கஞ்சி, நொய்ச்சோறு உண்டாம். இல்லாவிட்டால் அதுவும் இல்லையாம்...

கிழவி பேசப்பேச, சுற்றியுள்ள உலகத்தாரை அவர்கள் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கக் கற்றுக்கொள்— அவர்கள் கஷ்டத்தை, இல்லாமையை, போக்கற்ற அவலத்தைப் புரிந்துகொள்ள முயற்சி செய்— என்று ஒரு குரல், விடாமல் இன்றைக்கும் என்னுள் ஒலிக்கவே செய்கிறது.

இப்படிப் பல அனுபவங்கள், காதுவழியே புகுந்து கண்ணையும் மனசையும் திறக்க முயன்ற அனுபவங்கள்...

சூரியன் மேலே எழும்ப எழும்ப, இருட்டு கரைந்து மறைவதுபோல, எனக்குள்ளே மண்டிக்கிடந்த அறியாமை, தெரியாத்தனங்களைக் குறைக்க உதவிய அனுபவங்கள்.

வெள்ளம் வந்த சமயத்தில் பத்துமாசக் குழந்தையை திண்ணையில் உட்கார வைத்துவிட்டு, கட்டிப்போட்டிருந்த இரண்டு படி அரிசியை எடுக்கப் போய், திடுமென கரை புரண்டு ஓடிய நீரில் குழந்தையைப் பறிகொடுத்த அந்தத் தாய்...

வேப்பங் கொட்டைகளைப் பொறுக்கி, சுத்தம் பண்ணி அன்றாடம் கடையில் போட்டு, தன் வயதான மாமியார், சப்பாணி மைத்துனன், இரண்டாங்கெட்டான் நாத்தியைக் காப்பாற்றும், புருஷனை இழந்த நிறை மாச கர்ப்பிணி...

தங்கைக்குக் கரும்பு பிடிக்கும் என்பதற்காக, பத்து பைசா கொடுத்து ஒரு துண்டத்தை வாங்கித் தர வழியில்லாதவனாக, கரும்பு லாரியின் பின்னால் ஓடி, ஒரு கழியை இழுக்கும்போது நழுவிக் கீழே விழுந்து சக்கரத்துக்கு தீனி ஆன அந்தச் சிறுவன்...

சோறு எடுத்து வந்த குழந்தையை கோதுமை நாகம் தீண்டிவிட, புதுசாய் அறுவடை செய்து போட்டிருந்த சோளத் தட்டைகளையே எரித்து, அதில் புகுந்து கொண்டிருந்த நாகத்தைப் பிடித்து கூழாக அடித்துப் போட்ட குடியானவத் தகப்பன்...

யாரைச் சொல்ல, யாரை விட?

கண்ணைக் கட்டிவிட்ட குதிரையாய் இருந்த தன்மை நீங்கி, சுற்றிலும் பார்க்க, கண், காது, வாய், புத்தி, இருதயம் என்று அத்தனையிலும் புது வேகம் உண்டாக, மனிதாபிமானம் என்றால் என்ன என்பதை உணர்ந்து நெகிழ்ந்து, சிலிர்த்து...



இப்படி நான் எழுதுவதைப் படித்துவிட்டு, இது என்ன தற்பெருமை! — என்று யாரேனும் முகம் சுளித்தால்... மன்னிக்கவேண்டும்— அது குறித்து எனக்கு வருத்தமில்லை.

உலகத்தைப்பற்றி, சமுதாயத்தைப்பற்றி, என்னைச் சுற்றியுள்ள ஜீவராசிகளைப்பற்றிக் கவலை கொள்வதும், அக்கறை உண்டாவதும், இன்னொரு கோணம் உள்ளது என்ற விழிப்புணர்ச்சி பெறுவதும் தற்பெருமை என்றால்— இந்தத் தற்பெருமை எனக்குள் ஜனித்ததில், வளர்ந்து வருவதில், இன்னும் ஓயாது வளர வேண்டுமே என்று ஆசைப்படுவதில் நான் பெருமிதமே கொள்கிறேன்.

மதர் தெரிஸா நடத்தும் 'ஆதரவற்றவர்களின் சாவு இல்ல'த்தைப் பார்த்துவிட்டு, என்ன மனசு இது, என்ன உன்னத சேவை இது என்று தவித்து, பறந்த அந்த நாளில் ஒரு தொழிலதிபரைச் சந்திக்க நேர்ந்ததும், "ஏன் எப்படியோ இருக்கிறாய்?" என்று அவர் கேட்டதும், யாரிடம் நம் அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ளுவோம் என்ற துடிப்பில் அந்த இல்லத்தின் உயர்வைப் பற்றியும், அது என்னைப் பாதித்தது பற்றியும் கூற, அந்தத் தொழிலதிபர் வாய்விட்டுச் சிரித்து, "என்ன அசட்டுத்தனம் இது? போய்ப் பார்ப்பானேன், இப்படி அவஸ்தைப்படுவானேன்? சாவதற்கு என்று ஒரு இடமா? அநாதைகள் எங்கு செத்தால் என்ன?" என்று மிகமிக அலட்சியமாகப் பேச— இவரும் ஒரு மனிதர்தானா? இவரிடம் இருக்கும் புத்தி, பணம், படிப்பு அத்தனைக்கும் அர்த்தம்தான் என்ன?— என்று சினந்து வருந்தியதும் இந்தக் கணம் என்னுள் எட்டிப் பார்க்க... அந்த மாதிரி மனிதாபிமானம் அறவே இல்லாமல் இருக்கும் பலரில் ஒருத்தியாக இல்லாமல், துளித்துளியாகவாவது மனசால் வளரத் தீர்மானித்துவிட்டு, அந்த பிரக்ஞையோடு இருக்கப் போராடுவது வாஸ்தவமாக மகிழ்ச்சியையே தருகிறது.

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்'— என்றார் வள்ளலார்.

நாமெல்லாம் வள்ளலார் ஆக முடியாதுதான்.

ஆனாலும், என்னால் முடியாது என்ற வேண்டாத கட்டுப்பாட்டுடன் கை கட்டி அமர்ந்திராமல் அவருடைய நிழலையாவது தொட முயற்சிக்கலாம் அல்லவா?

வெளிச்சம் வெளியே இல்லை— உள்ளுக்குள்ளேயே இருக்கிறது என்பதை உணர்ந்துவிட்டால் தூங்குவதும், விழிப்பதும், தேங்கிக் கிடப்பதும், அருவியாய் ஆர்ப்பரிப்பதும், தேய்வதும், வளர்வதும், அழுவதும், சிரிப்பதும் நம் கையில்தானே?

சத்தியமாய் எதுவும் நமக்கு சாத்தியம்தானே?

# 5

பிரச்சினைகள்!

வீட்டுக்கு வீடு வாசற்படி!

கேள்விப்பட்டிருப்பீர்களே?

இதைக் கூறாதவர் யார்?

அனுபவிக்காதவர் யார்?

—பொழுது விடிந்து, பொழுது போனால் ஏதாவது ஒரு பிரச்சினை புதிதாய் வந்துவிடுகிறது... சட்... என்ன வாழ்க்கை இது!

—போன ஜன்மத்தில் ஏகத்துக்குப் பாவம் பண்ணி இருக்கிறேன்... இல்லாவிட்டால் பூதாகாரமாய், ஒன்று மாற்றி ஒன்றாய், இவ்வளவு பிரச்சினைகள் வருமா?

—நிம்மதியாக ஒரு நாளைக் கழித்தோம் என்றில்லை. எந்தப் பக்கம் திரும்பினாலும் பிரச்சினைகள்தாம். எல்லாவற்றையும் பார்க்கும்போது எங்காவது ஓடிப்போய் விடலாமா என்று தோன்றுகிறது!

—எந்த ஒரு விஷயத்தையும் பிரச்சினையாக்கிப் பழகி விட்டதில் இன்று அவரே ஒரு பிரச்சினையாகிவிட்டார்!

இப்படி ஒருவர் பாக்கியில்லாமல் புகுந்து புறப்படும் இந்தப் 'பிரச்சினை' சமாச்சாரத்தை, இந்த அத்தியாயத்தில் ஆராயலாம்.

விவரமறிந்தவர்கள், பிரச்சினைகளை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம் என்கிறார்கள்.

1. தானாக உண்டாகும் பிரச்சினைகள்.
2. நாமாக உண்டாக்கும் பிரச்சினைகள்.
3. பிரச்சினைகளே இல்லாதபோது, இருப்பதாக நம்புவதால் உண்டாக்கப்படும் பிரச்சினைகள்.

இவற்றை விளக்கமாகப் புரிந்துகொள்ள சில உதாரணங்களைச் சொல்லலாம்.

டீக்கடைக்குள் உட்கார்ந்து, தேமேனென்று டீ குடித்துக் கொண்டிருந்த முனுசாமி, சற்றும் எதிர்பாராத விதமாய் 'டைராட்' உடைந்து தாறுமாறாக ஓட முற்பட்டு, கணப் பொழுதில் பக்கவாட்டில் சென்று, டீக்கடையில் மோதிய லாரி ஒன்றால் ஸ்தலத்திலேயே கூழானதும்,

தொழிற்சாலைக்கு இன்ஸ்பெக்ஷனுக்குச் சென்ற பகவன்தாஸ், கண்மூடித் திறப்பதற்குள் அமோனியா ஸிலிண்டர் வெடித்து, நின்ற நிலையிலேயே உருத் தெரியாமல் வெந்துபோனதும்,

அன்றாடம் எக்கச்சக்கமாய் தேகப்பயிற்சிகள் செய்து தன் ஆரோக்கியத்தைச் செம்மையாக வைத்துக்கொண்டி ருந்த ஈஸ்வரன், ஒரு செட் டென்னிஸ் விளையாடிவிட்டு இரண்டாவது தொடங்குமுன், மார்பில் என்னமோ செய்வ தாய்ச் சொல்ல, என்ன ஏது என்ற விவரம் புரிவதற்குள் மாஸிவ் ஹார்ட் அட்டாக்கில் இறந்ததும்...

தானாக, அதாவது இயற்கையாய்— உண்டாகும் பிரச்சினைகள் பிரிவில் சேரும் சம்பவங்கள்.

இவைதாம் வாஸ்தவத்திலேயே பிரச்சினைகள்.

நம்மால் தவிர்க்க இயலாமல் சில நிகழ்ச்சிகள் நடந்து, அவற்றால் உண்டாகும் 'நிஜமான' பிரச்சினைகளை எப்படி எதிர்நோக்குவது, அவற்றிலிருந்து எவ்வாறு மீண்டுவருவது என்பவற்றையும், எரிக் எரிக்ஸன் குறிப்பிட்டது போல 'இதைப் போன்ற சம்பவங்கள் எப்போதும் பிரச்சினைகளில் தான் முடியும் என்பது உண்மை அல்ல; சில சமயங்களில் திருப்புமுனையாகவும் அமையலாம்' என்பது பற்றியும் விரிவாக இன்னொரு அத்தியாயத்தில் அலசப்போகிறோம் என்பதால், இப்போதைக்கு இந்தப் பிரிவை விட்டுவிட்டு மற்றவற்றைக் கவனிக்கலாம்.



அடுத்து, நாமாக உண்டாக்குபவை...

புத்தகமும் கையுமாய் தன் போக்குக்கு உட்கார்ந்திருந்த சுந்தரிடம் அனாவசியமாய் அவன் அம்மா, தங்கை பற்றி மனைவி ராதா குற்றப்பத்திரிகை படிக்கப்போய், தர்க்கம் எழுந்து, வளர்ந்து, சுந்தர் கை நீட்டும் வரைக்கும் செல்ல, ராதா கோபித்துக்கொண்டு தன் பிறந்த வீட்டுக்குச் சென்றதும்,

எதிர்த்துப் பேசினால் மானேஜருக்குப் பிடிக்காது என்று தெரிந்தும் உப்புச்சப்பில்லாத சமாச்சாரங்களில்கூட மூக்கை விட்டு வாயாடி, வேலை போகும் அளவுக்கு ரங்கநாதன் கெட்ட பெயர் சம்பாதித்துக்கொண்டதும்,

அங்கே பேசுவதை இங்கே சொல்லி, இங்கே பேசுவதை அங்கே சொல்லி, தெரிந்தவர்கள் நடுவில் மனஸ்தாபம் மூட்டி ரசித்த ஸ்ரீகாந்த், கஷ்டமான சமயங்களில் நெருங்கிய நண்பன் என்று யாருமில்லாமல் ஒண்டியாய் தவித்ததும்...

நாமாக உண்டாக்கும் பிரச்சினை வட்டத்தில் இவை விழுந்தாலும், பழக்கவழக்கங்களை, சிந்தனைகளை, தேவையான அளவுக்கு மாற்றிக்கொள்வதோடு, நம்மைப் பற்றின விழிப்புணர்வை வளர்த்துக்கொள்வதன் மூலம், இப்படி நாமாகப் பிரச்சினைகள் உண்டாக்குவதை பெருமளவுக்குத் தவிர்க்கலாம் என்கிறார்கள் அறிஞர்கள்.

கடைசியாக— பிரச்சினை இல்லாதபோது இருப்பதாக எண்ணுவதால் உண்டாக்கப்படும் பிரச்சினைகள்.

இன்றைக்கு மதியம் வேலைக்காரி வீட்டுக்குச் செல்லும் போது முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு போன மாதிரி பட்டதே! ஒருவேளை, காப்பி சூடாக இல்லை என்ற கோபமோ? இதனால் மதியம் வேலைக்கு வராமல் இருந்துவிடுவாளோ? அவள் வரவில்லை என்றால் பம்ப்பில் தண்ணீர் அடித்து, பத்துப்பாத்திரம் தேய்த்து, துணிகளை மடித்து, வீடு பெருக்கி, பால் வாங்கி வந்து....

யார் செய்வார்கள் இத்தனை வேலைகளையும்? குனிந்து நிமிர்ந்தால் எனக்குத் தலை சுற்றுமே! வெயிலில் போய் பால் வாங்கி வராவிட்டால், காபி? அது இல்லாது போனால் தலைவலி வந்துவிடுமே...

வேலைக்காரிக்குக் கோபம் என்பதில் துவங்கி, தலைவலி வரையிலும் கற்பனை பண்ணிக்கொண்டுவிட்ட விமலாவுக்கு, நான்கு மணிக்கு வழக்கம்போல வேலைக்காரி வருவதற்குள் வருவாளா, மாட்டாளா என்ற படபடப்பில் நிஜமாகவே தலைவலி வந்துவிடுவதுதான், பிரச்சினை இல்லாமலேயே உண்டாக்கப்படும் பிரச்சினை.

இது பல சமயங்களுக்கு இதோடு நிற்காது.

நான்கு மணிக்கு வரவேண்டிய வேலைக்காரி, நான்கு ஐந்துக்கு வந்தாலும், அன்று கண்டிப்பாய் ஒரு சண்டைக்கு விதை ஊன்றப்பட்டுவிடும்.

"ஏண்டி இவ்வளவு லேட்? நாலு மணி சங்கு ஊதி அரைமணி ஆச்சு... பால் பூத்லே பால் வந்து தீர்ந்துகூட போயிருக்கும்... மனுஷி இங்க தலைவலிலே துடிச்சிட்டு இருக்கேன், நீ பொறுப்பில்லாம ஆடி, அசைஞ்சிகிட்டு வர்றியே?"

"சங்கு பிடிச்சி அரை மணி எங்கம்மா ஆச்சி! தெரு முனை திரும்பறேன்... சங்கு பிடிக்கிறான். பூத்ல இன்னும் பால் வேன் வரலை. அத்தயும் பார்த்திட்டுதான் வர்றேன்."

"ஏதாவது கேட்டா பதிலுக்குப் பதில் வாயாடு... அதுக்கு ஒண்ணும் கொறைச்சல் இல்லே... வாயாடி."

"இந்தாம்மா... வாயாடி கியாடின்ற பேச்செல்லாம் நம்மகிட்ட வாணாம்...."

"என்னடீ மொறைக்கறே? அதுக்கெல்லாம் அஞ்சறவ நா இல்ல தெரிஞ்சிக்க..."



"இன்னா நடந்திடுச்சின்னு இப்படி மேலமேல பேசிட்டே போறே? ம்? எனக்கும் பேசத்தெரியும்... ஆமா..."

"லேட்டா வந்ததுமில்லாம, மரியாதைக் குறைச்சலா பேசவா செய்யறே! மொதல்ல நீ நடையக் கட்டு..."

"ஐயே! உன்னண்ட வேலை பார்க்கலைன்னா நா செத்துப்பூடுவேனாங்காட்டியும்... பிசாத்து நாப்பது ரூபா... யாருக்கு வேணும் உன் துட்டு! கணக்கத் தீத்துடு... நா போறேன்..."

தலைப்பை உதறிக்கொண்டு அவள் வெளியேற, விமலாவின் படபடப்புடன் தலைவலியும் அதிகமாகும். கண்களில் நீர் திரளும். மாலையில் கணவன், குழந்தைகள், ஆபீஸ், பள்ளியிலிருந்து வீடு திரும்புகையில் வீடு அல்லோல கல்லோலப்பட்டுக்கொண்டிருக்கும்...

ஆக, பல சந்தர்ப்பங்களில் பிரச்சினையே இல்லாமல் இருந்தாலும், இருப்பதாக நம்புவதால் உண்டாக்கப்படும் பிரச்சினை, உயரமாய் வளர்ந்து, நீண்டு, பரவி, நாமாக உண்டாக்கும் இரண்டாவது வகையாக ப்ரமோஷன் வாங்கிக்கொள்வது இப்படித்தான்.

இங்கே, கொஞ்சம் யோசிக்கலாமா?

இடது, வலது, மேலே, கீழே என்று எங்கு திரும்பினா லும், பெரிசு பெரிசாய் பிரச்சினைகள்... ச்சே... வாழ்க்கை வெறுத்துவிட்டது! என்று புலம்பும் நண்பரே, ப்ளீஸ், ஒரு நிமிஷம்...

மனோதத்துவ மேதைகள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

"பெரிய பிரச்சினை சின்ன பிரச்சினை என்று எதுவுமே இல்லை. நம்மையும் மீறி இயற்கையாகவோ, விபத்தாகவோ வரும் பிரச்சினைகளைத் தவிர, பாக்கி அனைத்தையும் நாமே உண்டாக்குகிறோம். சின்ன பொறியை ஊதி ஊதி பெரிய தீயாக ஜொலிக்கச் செய்வது போல, கடுகத்தனை

விஷயத்தையும் பேசிப்பேசி, அங்கலாய்த்து, மாய்ந்து, உருகி, தவித்து, படபடத்து விஸ்வரூபம் எடுக்கச் செய்துவிடுகிறோம் என்பதுதான் நிஜம். கொஞ்சம் நிதானியுங்கள்; கொஞ்சம் யோசியுங்கள். நம்மால் உருவாக்கப்படுபவற்றை நாமே அடக்குவதும், மறையச் செய்வதும் சுலபம். ஏனென்றால், ஆரம்பகாலத்தில் எந்த ஒரு பிரச்சினையும், ரொம்ப ரொம்பச் சின்னதுதான் என்பதை மறக்காதீர்கள்..."

அடடா!

படிக்க எத்தனை நன்றாக இருக்கிறது!

எத்தனை சுலபமாகவும் தோன்றுகிறது!

நம்மைத் தலை தூக்க விடாமல் அழுத்தப்பார்க்கும் பிரச்சினைகளைத் தவிர்ப்பதும், மீறி முளைத்துவிட்டதைக் கிள்ளி எறிவதும் நம் கையில்தான் இருக்கிறது என்பது எத்தனை ஆறுதலான சமாச்சாரம்!

நம்மைப் பற்றின விழிப்புணர்ச்சி, நமக்கு எது தேவை, தேவையில்லை; எது சாத்தியப்படும், சாத்தியப்படாது; எது ஒத்துக்கொள்ளும், ஒத்துக்கொள்ளாது போன்ற சுய அலசலுடன், கொஞ்சம் விவேகம், நிதானம், தெளிவு இவற்றையும் கூட்டிக்கொண்டுவிட்டால் எந்தப் பிரச் சினையையும் ஊதித்தள்ளிவிடலாம் என்கிற வரிகளை எழுதுகையில் எனக்கு வரதனின் ஞாபகம் வருகிறது.

வரதன் நல்லவன். புத்திசாலி. தாய் தகப்பன் இல்லாதவன். தன்னைவிடப் பத்து வயசு பெரியவரான அண்ணனை, தாரத்தை இழந்து சன்யாசிபோல வாழ்பவரை தெய்வமாக மதிப்பவன்.

இவனுக்குக் கல்யாணம் ஆயிற்று. சந்திரிகா அழகி. கலகலப்பானவள். வெகுளி.

திருமணமான ஓரிரு மாசங்களில், வரதனுக்குள் இல்லாததை இருப்பதாக நினைக்க வைத்து பிரச்சினையை உண்டாக்கும் பிசாசு புகுந்துகொண்டது.



அண்ணனுக்கும், மனைவிக்கும் நடுவில் கசமுசா— என்கிற சந்தேகம்.

எட்டு மாசங்கள் போவதற்குள் இது அதிதமாக வளர்ந்ததில் அவன் சந்தோஷம் மட்டுமல்லாமல், மற்றவர் களின் நிம்மதியும் பறிபோயிற்று.

முணுமுணுப்பு— கத்தல்— சண்டை— அடிதடி...

அப்புறம்?

மனோதத்துவ நிபுணரிடம் போகவேண்டிய நிர்ப்பந்தம்.

"வரதனுக்கு உண்டாகியிருப்பது பாரனாய்ட் டிஸார்டர். பொறாமை எல்லையைத் தாண்டும்போது இத்தகைய கோளாறு உண்டாகிறது. இல்லாததை இருப்பதாக நம்பும் அளவுக்கு இந்தப் பொறாமை வேலை செய்திருக்கிறது..."

ஷாக் ட்ரீட்மெண்ட் கொடுத்து, பல மணி நேரங்களை வைத்தியருடன் கழித்த பின்பு வரதனின் நிலைமையில் இப்போது முன்னேற்றம் இருக்கிறது.

ஆனாலும்?

எந்த ஒரு பிரச்சினையும் பிரசவிக்கும்போதே, விழிப்புணர்வுடன் புரிந்துகொண்டு செயல்பட்டால் மீளுவது சுலபம். அதை விட்டுவிட்டு சுயபச்சாதாபம், கோழைத்தனம், குழப்பம், பொறாமை, கோபம் போன்ற உணர்ச்சிகளுக்கு அடிமையாகி, நிலைமை எல்லையைத் தாண்ட வைத்துவிட்டால் வேதனை, சிரமம் அதிகம் என்ற வார்த்தைகளை நமக்குள் நிறுத்தி வைத்துக்கொள்வதோடு அவ்வப்போது மறக்காமல் நினைத்துப்பார்க்கவும் முயல்வது நல்லது அல்லவா?

# 6

ரொம்ப நாட்களுக்குப் பிறகு இன்றைக்குக் கடைத் தெருவில் பாண்டியனைப் பார்த்தேன்.

"என்னப்பா, சௌக்கியம்தானே?" என்று ஒரு சின்னக் கேள்வியைக் கேட்டதும் வழக்கம்போல நீளமாய் பொருமித் தீர்த்தான்.

"எங்கங்க நல்லா இருக்க விட்றாங்க! நினைச்சதை செய்ய, பேச ஒரு சுதந்திரம் இல்லாத வீட்டுல பிள்ளையா பிறந்திட்ட எனக்கு சந்தோஷமா பேச, சிரிக்க யோக்கியதை ஏதுங்க? என்ஜினியரிங் படிப்பு படிக்கணும்னு விருப்பப் பட்டேன். அப்பா தடுத்திட்டாரு. சரி விவசாயத்துல புதுசா எதையாவது பண்ணுவம்னு நினைச்சேன். தாத்தா அதெல்லாம் எதுக்குப்பானிட்டாரு. மனசுக்குப் பிடிச்ச வளை கட்ட அம்மா தடை விதிச்சிட்டாங்க. நம்ம தலைவிதி இதுதான்னு அத்தனையும் பொறுத்துகிட்டேன்; இப்ப நிம்மதியா ஒரு கதை புஸ்தகம் படிக்கக்கூட நேரம் இல்லாம செக்குமாடு கணக்கா வாழ்க்கை ஓடுது. மொத்தத்துல லைஃப் ரொம்ப போருங்க... அததான் நான் சொல்வேன்."

முகத்தைத் தீவிரமாக வைத்துக்கொண்டு பாண்டியன் பேசப்பேச, இவன் ஆயுசுபர்யந்தம் இப்படியேதான் இருக்கப்போகிறானா என்கிற வருத்தம் மெல்லியதாக என்னுள் படர்ந்தது.

நாற்றுக்கிழவன் மாதிரி அங்கலாய்க்கும் பாண்டியனின் வயசு என்ன தெரியுமா? இருபத்தி மூன்று.

இந்த ஊருக்கு வந்த பன்னிரண்டு வருஷங்களாகவே எனக்கு பாண்டியன் குடும்பத்தைத் தெரியும்.



கண்ணியமான, கட்டுப்பாடான, அடக்க ஒடுக்கமான குடும்பம். வசதியில் எந்தக் குறையும் இல்லை.

என்ஜினியரிங் படிக்க விரும்பினேன், நடக்கவிட வில்லை— என்று ஆத்தாமை படும் பாண்டியன் படித்தது பத்தாவது வரையிலும்தான். காரணம்? படிப்பு ஏறவில்லை. எட்டாவது படிக்கும்போது பணக்கார நண்பன் ஒருவன் ஏற்காடு கான்வெண்ட் பள்ளிக்குப் படிக்கப் போக, தானும் அந்த மாதிரி சென்று அதே கான்வெண்டில் படிக்க வேண்டுமென்று, தான் அவ்வப்போது பாடங்களில் வாங்கும் முட்டைகளை மறந்து பாண்டியன் அடம்பிடித்தான்.

"எதுக்குடா, தம்பி? எங்களுக்கு இருக்கிறவன் நீ ஒருத்தன்தானே... இங்கே இல்லாத படிப்பா?" — என்றார் தந்தை.

"நிச்சயம் இங்க இல்லாத படிப்புதான்... அந்த கான்வெண்டுல படிச்சா என்ஜினியரிங் கல்லூரில இடம் சடக்குனு கிடைக்குமாம், ரவி சொன்னான்."

"அந்தப் படிப்பெல்லாம் உனக்கெதுக்கு, தம்பி... உன்னைப் பிரிஞ்சி உங்கம்மா இருக்கமாட்டா..."

பேச்சு அதோடு முடிந்தது.

ஆனால், அதற்குப் பிறகு அவருக்குப் பின்னால் 'ஆசைப்பட்ட படிப்புக்கு அப்பா சம்மதிக்கலை' என்று முனகத் துவங்கி, அதையே சாக்காக வைத்து பத்தாவதோடு படிப்பை நிறுத்தினான்.

விவசாயம் விஷயத்திலும் இதே கதைதான்.

நிலத்தில் இறங்கின அன்றே ட்ராக்டர், அது, இது என்று பட்டியல் போட்டவனிடம் பழங்கால மனிதரான தாத்தா "முதல்ல இந்தத் தொழிலை சரிவர புரிஞ்சிக்க, அப்புறமா பாக்கிய பேசிக்கலாம்" என்றதும், விவசாயம் பற்றின ஆர்வம் புஸ்வாணமாயிற்று.

பாண்டியன், யோசிக்காமல் தடதடவென்று திட்டம் தீட்டுவதில் மன்னன்; ஆனால், அதைக்கேட்டு யாராவது 'இது சாத்தியமா?' என்று புருவத்தைத் தூக்கினால் போயிற்று— அதோடு அந்த விஷயம் டமால். அடுத்ததற்குத் தாவிவிடுவான்.

இருக்கும் வசதிக்கும், சூழ்நிலைக்கும் என்னென்னவோ சாதித்திருக்கலாம்... எங்கே?

ஒன்றை ஆஹா ஊஹூ என்பதும், அது நடக்கவில்லை என்றால் உடனே பிறர்மேல் பழி போடுவதுமாய் இருக்கும் பாண்டியன் எப்போது தன்னை உணர்ந்து, நிதானப்படுத்திக் கொள்ளப்போகிறான்?

விதவிதமாய் சமைக்கச் சொல்லித் தின்றுவிட்டு உருப்படியாய் ஒரு காரியமும் செய்யாமல் கோவில் காளை போல மதமதர்த்து, வெட்டிப்பேச்சும், நெஞ்சுவரை குறையுமாய் வளையவரும் பாண்டியனைப் பார்க்கிற விநாடியில், சில நாட்களுக்கு முன் இளையராஜா அவர்களைச் சந்தித்ததும், அவருடைய இளமைக்கால நாட்களை விரிவாக அலசிப் பேசினதும் ஞாபகத்தில் முட்டுகின்றன.

எங்கோ ஒரு சின்ன கிராமத்தில் பிறந்து எந்தவித வசதியும் இல்லாத நிலையில் வளர்ந்திருந்தாலும் தன் திறமையினால் இன்றைக்கு சிறந்த இசையமைப்பாளராக கொடிகட்டிப் பறப்பதுடன், மேற்கத்திய இசை மேதைகளான 'பாக்', 'பீதோவன்' போன்றவர்கள் சங்கீதத்தையும் விரல் நுனியில் வைத்திருக்கும் அளவுக்குத் தன் இசை ஞானத்தை வளர்த்துக்கொள்வது இவருக்கு எப்படி சாத்தியமாயிற்று என்ற விஷயம் என்னைச் சதா ஆச்சர்யிக்க வைக்கும் என்பதால், அவரைச் சந்தித்தபோது இந்த சந்தேகத்தையே என் முதல் கேள்வியாகக் கேட்க, இளையராஜா சிரித்தார்.



"அப்படியென்றால் பட்டணத்தில் பிறந்தவர்களுக்குத் தான் மேலைநாட்டு சங்கீதத்தைப் பற்றின அறிவு இருக்கும், கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர்களுக்கு இருக்காது என்று சொல்கிறீர்களா?"

"அல்ல... வாய்ப்புக்கள் குறைவாக இருக்கும் சூழ்நிலையிலும் அயர்ந்து உட்காராமல் உழைத்து, அபாரமாய் நீங்கள் சாதித்திருப்பதைக் குறிக்கவே அப்படிக் கூறினேன்."

"பிரமாதமாய் எதையோ சாதித்துவிட்டதாக நான் நினைக்கவில்லையே..."

"இதைத்தான் அடக்கமான பேச்சு என்பார்கள்."

மீண்டும் இளையராஜா சிரித்தார்.

"குழந்தைப் பருவத்தில் நீங்கள் எப்படி இருந்தீர்கள்? child prodigy, பிறவி மேதாவி, என்பார்களே அந்த ரகமா?"

"நிச்சயமாக இல்லை."

"அப்புறம்?"

"எட்டாவதோடு படிப்பு சரி— என்று ஜாதகம் கூறியதைப் பொய்க்க, வெளியூருக்குச் சென்று சம்பளப் பணம் 25 ரூபாயை சம்பாதித்துக்கொண்டு வந்து ஒன்பதாவது வகுப்பில் சேர்ந்தேன்..."

"பள்ளிப் படிப்பை முடித்தீர்களா?"

"எங்கே? என் அண்ணன் பாவலர் வரதராசன் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரச்சாரப் பாடகராக இருந்தார். தேவைகளின் காரணமாய் பெண் பாடும் பாடல் பகுதிகளை அவர் குழுவில் நான் பாடத் துவங்கியதும் படிப்பு அவ்வளவுதான்."

"சங்கீதத்தில் உங்களுக்கு ஈடுபாடு ஜனித்தது அப்போது தானா?"

"ம்ம்? இல்லை... என் பதின்மூன்றாவது வயதில் குரல் உடைந்து கச்சேரிகளில் பாட இயலாத சூழ்நிலை...

அண்ணன் இல்லாதபோது அவருடைய ஹார்மோனியத்தை வைத்துக்கொண்டு வாசித்துப்பார்க்க முற்பட்டேன். முறையான பாடம் இல்லாததால் மனசுக்குத் தோன்றினபடி வாசிப்பேன். ஸ்ருதியை மாற்றி ஸ்வரங்களை வாசிக்க முற்படுகையில் விதவிதமாய் ஒலித்த இசையில் மயங்கி, சங்கீதத்தில் இத்தனை வகைகளா என்ற பிரமிப்பு என்னை ஆட்கொண்டது நன்றாக நினைவிருக்கிறது..."

"பிறகு?"

"அண்ணன் குழுவில் சங்கரதாஸ் என்பவர் ஹார்மோனியம் வாசிப்பார். அவரைப்போல வாசிக்க வேண்டும் என்கிற துடிப்பு உண்டாயிற்று. விடாமல் நானாகப் பயின்று தேர்ச்சி பெற்றதில் அண்ணன் குழுவில் தொடர்ந்து வாசிக்க ஆரம்பித்தேன்."

"சென்னைக்கு வந்தது அந்தச் சமயத்தில்தானா?"

"ஒருசில வருஷங்கள் கழித்து குடும்பத்தில் பணக் கஷ்டம் கூடிப்போனதும், வருமானம் போதாமல் சென்னைக்கு வந்தோம். சங்கீதத்தைப்பற்றி இன்னும் இன்னும் விரிவாக அறிந்துகொள்ள வேண்டும் என்கிற வேட்கையில், மாஸ்டர் தன்ராஜிடம் சேர்ந்தேன்."

"அப்போது வாழ்க்கை வசதியாக இருந்ததா?"

"எங்கே? சம்பளம் கொடுக்கக்கூட பணம் இருக்காது. ஆனாலும் மாஸ்டர் வீட்டிலேயே பழிகிடப்பேன். அவர் ஸீனியர் மாணவர்களுக்குப் பாடம் எடுப்பதைக் கவனித்துக் கொண்டிருந்துவிட்டு ஜூனியர்களுக்கு நானே வகுப்பு எடுப்பேன்."

"இசையமைப்பாளராகப் பிற்காலத்தில் உருவாக வேண்டும் என்கிற ஆசை தோன்றியது எப்போது?"

"நிச்சயம் எனக்கு அப்படி ஒரு ஆசை இருந்ததே இல்லை. சங்கீதத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்கிற



துடிப்பு மட்டுமே அப்போது இருந்தது. ஒருதரம் ஜி.கே. வெங்கடேஷிடம் என்னை நல்ல மியூஸிஷியன் என்று அறிமுகப்படுத்துவதற்குப் பதிலாக மாஸ்டர் 'நல்ல மியூசிக் டைரக்டர்' என்று வாய் தவறி சொன்னார். குருவின் வாக்கு பலித்துவிட்டது..."

"கர்நாடக சங்கீதத்தில் முறையாக யாரிடமாவது பயிற்சி பெற்றதுண்டா?"

"மாஸ்டர் தன்ராஜிடம் பயின்ற அதே சமயத்தில் லக்ஷ்மிநாராயண அய்யர், மதுரை கிருஷ்ண அய்யங்கார், தக்ஷிணாமூர்த்தி ஸ்வாமிகள், டி.வி. கோபாலகிருஷ்ணன் போன்றவர்களிடம் முறையாகக் கர்நாடக சங்கீதமும் கற்றேன்."

"ஏ அப்பா! இதற்கெல்லாம் நேரம், பணம்?"

"சாப்பிட சரியாக சோறு கிடைக்காத சமயங்களிலும், சங்கீதப் பயிற்சியை நான் நிறுத்தியதில்லை. இசையை முழுமையாகக் கற்றுத் தேற வேண்டும் என்கிற ஆர்வத்தில் நானாக தியரி புத்தகங்களை வைத்துப் படித்துப்பார்ப்பேன். புரியாத வரிகளைப் பத்து தரம் மீண்டும்மீண்டும் படித்துப் புரியவைத்துக்கொள்வேன்."

"சரியான அசுரப் பயிற்சிதான்!"

"அதற்குப் பிறகு திரு ஜோஸஃபிடம் 5 வருஷங்கள் பாடம் படித்தேன். சங்கீதத்தைப்பற்றி நிறையத் தெரிந்து கொண்டதும் இசைக் குழுக்களில் வாசிக்கத் துவங்கியதும் அப்போதுதான்... அந்த நாட்களில் பாடல்களை ஸ்வரப் படுத்துவதற்கு ரொம்ப திண்டாடியிருக்கிறேன்... ஆனால், அதையும் விடாமல் பழகி சிக்கிரமே நொடேஷன்களைச் சரளமாக எழுதும் திறனை அடைந்தேன்."

"அப்போதே இசையமைக்கும் பழக்கம் உண்டா?"

"மனசில் கற்பனை ஊற்றெடுத்துப் பொங்கியதில் புதுசு புதுசாய் ஆர்கெஸ்டரைசேஷன் குறிப்புகள் எழுதித் தயாரிப்பேன்; இசையில் எனக்குள்ள மோகத்தை உணர்ந்து இசைக்குழுவில் இருந்த இதர நண்பர்கள் இடைவேளையின் போது என் கற்பனைக்கு ஒலி வடிவம் கொடுத்துக்காட்டி என்னைப் பூரிக்கச் செய்வார்கள். என்றாலும், இசையமைப் பாளராக நான் உருவானது 'அன்னக்கிளி' படத்தின் மூலம்தான்."

"ஆக, இன்றைய இளையராஜாவின் வெற்றிக்குப் பின்னால் கடுமையான உழைப்பு இருந்திருக்கிறது என்று சொல்லுங்கள்!"

"சிரத்தையான, உண்மையான உழைப்பு கண்டிப்பாய் தெய்வத்திடம் கொண்டு சேர்க்கும் என்பதை நான் நம்புகிறேன். இன்று இசைதான் எனக்கு தெய்வம்; தெய்வம் தான் இசை, வேறு என்ன சொல்ல?"

வாய்ப்புகள் மிகமிகக் குறைவாக இருந்த நிலையிலும் ஆர்வம், உழைப்பை மூலதனமாகக் கொண்டு உயர்ந் திருக்கும் இளையராஜாவிடம் விடைபெறுகையில், முன்பு ஒருதரம் வேதாந்தி ஜே. கிருஷ்ணமூர்த்தியின் உரையில் கேட்டது ஞாபகத்துக்கு வந்தது.

"வாஸ்தவமாகவே ஒருவன் ஒரு காரியத்தைச் செய்ய விரும்பினால் அதை எப்படியும் நிறைவேற்றிவிடுவான். அப்படி அவன் செய்யவில்லை என்றால் அந்தக் காரியத்தைச் செய்யவேண்டும் என்கிற எண்ணம் உண்மையானதல்ல..."

இந்தக் கூற்றுக்கு இளையராஜாவும், பாண்டியனும் எத்தனை அழகான உதாரணமாகிறார்கள்!

# 7

சென்ற முறை சென்னைக்குச் சென்றிருந்தபோது, பல நாட்களாக, "ஆனாலும் நீ ரொம்பத்தான் மோசம்; பழைய சினேகிதங்களை மறந்துவிடும் அளவுக்கு பிஸியாகி விட்டாயா? வீட்டுக்கு வா என்று கூப்பிட்டு எனக்கு வாய் வலித்துவிட்டது!" என்று பார்க்கும்போதெல்லாம் குறை பட்டுக்கொள்ளும் சாருலதாவை தொலைபேசியில் அழைத்தேன்.

"யாரு சிவசங்கரியா? நீ கூட என்னை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு போன் பண்ணிவிட்டாயா? அதான் வேளை கெட்ட வேளையில் மழை கொட்டுகிறது!"

"அப்படியானால் இன்னும் மழை பெய்ய சான்ஸ் கொடுக்கப்போகிறேன். இன்று மதியம் மூன்று மணி அளவில் நீ ஃப்ரீயா? உன் வீட்டுக்கு வரலாம் என்று..."

முடிக்குமுன் குறுக்கிட்டு "இன்றைக்கா!" என்றாள் சாருலதா.

"ம்"

"மழையாக இருக்கிறதே!"

"அதனால் என்ன பரவாயில்லை..."

"இல்லை... வந்து..."

"வேறு ஏதாவது வேலை இருக்கிறதா?"

"அது ஒன்றும் இல்லை. மழை அமர்க்களத்தில் வீடு அலங்கோலமாய் இருக்கிறது... அதான்..."

"நான் உன்னைப் பார்க்க வரப்போகிறேன், வீட்டை அல்ல. தவிர உன் வீட்டை நான் ஏற்கெனவே பார்த்தவள் தான்."

"அதற்கில்லை, வந்து..."

"வழவழக்காமல் பட்டென்று சொல், சாரு..."

"நீ வரும் சமயத்தில் என் ஸ்னேகிதிகள் பத்துப் பேரை கூப்பிட நினைத்திருந்தேன்."

"கூட்டம் சேர்ப்பதை இன்னொரு சமயம் வைத்துக் கொள்ளலாம்; இன்றைக்கு நீயும் நானும் மட்டும் விஸ்ராந்தியாய் அரைமணி இருக்கலாம், என்ன?"

பிடிவாதமாக நான் பேச, சாருலதா அரைமனசோடு சம்மதித்தாள்.

சொன்னபடி மூன்று மணிக்கு அடையாறில் இருந்த அவள் வீட்டுக்குப் போனேன்.

தோட்டம் வழக்கம்போலப் புல் மண்டிக் கிடந்தது.

எப்போதும் போல வாச வராந்தாவில் குழந்தைகளின் விளையாட்டுச் சாமான்கள் கும்பலாய்... தலைக்கு மேல் லாலி லாலியாய் ஒட்டடை.. சாருலதாவின் சோம்பேறித் தனம் குறையவே குறையாதா?

"என்ன பார்க்கிறாய்? தோட்டத்தைத்தானே! இந்தத் தோட்டக்காரன் சுத்த சோம்பேறி.. சொன்ன வேலையை ஒழுங்காக செய்வதேயில்லை! முதலில் அவனை மாற்ற வேண்டும்! அவனைவிட வேலைக்காரி இன்னும் மோசம். பெருக்கியிருக்கும் லட்சணத்தைப் பார், மூலையில் குப்பை அப்படியே இருக்கிறது. ஹூம்... இந்த மாதிரி இரண்டாங் கெட்டான் ஆட்கள் போதாது என்று என் குழந்தைகள் வேறு! இரண்டும் சரியான வானரங்கள்... விளையாட்டுச் சாமான்களை வீடு முழுக்க வாரி இறைப்பதே அவர்களுக்கு வேலை... என் பேச்சை யார் கேட்கிறார்கள்? புருஷனில் துவங்கி வேலைக்காரர்கள் வரைக்கும் நான் என்றால் மட்டம்தான்..."

வீட்டுக்கு வந்தவளை 'வா' என்று வாயார அழைக்காமல் வாசலிலேயே நிற்க வைத்து நீளமாய் குற்றப் பத்திரிகை வாசித்து, தன்னை நினைத்து அவள் அனுதாபப் படவும், எனக்கு சபரிநாதன் நினைவு வந்தது.



சபரிநாதனுக்கு அரசாங்க அலுவலகத்தில் உத்தி யோகம்.

நல்ல சம்பளம்.. பாதி நேரம் ஈ ஓட்டி, காண்டீனுக்குச் சென்று அரட்டை அடித்துப் பொழுதைக் கழிப்பதோடு, எத்தனையோ வசதிகளுடன் வாழ்ந்து வந்தாலும் கழுத்து மட்டும் குறை...

"என்ன ஆபீஸ்... என்ன வேலை? ஒன்றும் பிடிக்க வில்லை... மாடு மாதிரி உழைப்பவன் நான்.. ஆனால் பேர் அத்தனையும் கோதண்டத்துக்கு! ஆபீஸருக்கு அவன் வெண்ணெய், நான் சுண்ணாம்பு... இரண்டு பேருமாய் சேர்ந்துகொண்டு தலையெடுக்க விடமாட்டேன் என் கிறார்கள்.. அப்புறம் எதற்காக நான் கஷ்டப்பட வேண்டும்? கர்மசிரத்தையாய் வேலை பண்ணவேண்டும்?"

பார்க்கும் இடத்திலெல்லாம் நமநமவென்று ஒரு பாட்டம் கொட்டித் தீர்க்காமல் மனிதர் விட்டதில்லை.

சாருலதாவுக்கு ஒரு தினுசு சுயபச்சாதாபம் என்றால் சபரிநாதனுக்கு இன்னொரு வகை. ஞானம் மாமிக்கு இன்னும் ஒரு ரகம்...

எப்போது ஞானம் மாமி வீட்டுக்குப் போனாலும் முதல் அரைமணி கட்டாயம் இவரைப் படுத்தும் நோய்களின் விவரங்களை நாம் கேட்டே ஆகவேண்டும்.

"நாலு நாளாய் முதுகில் பிடிப்பு, இப்படியப்படி திரும்ப முடியவில்லை. குளிர்காலம் வந்துவிட்டதா, சதா ஆஸ்துமா தொல்லை வேறு... பத்து நாளுக்கு முன்னால் சனி பிடித்தது பார், அம்மாடி! அந்த மாதிரி ஜலதோஷம் யாருக்கும் வந்திருக்காது. மூச்சே விடமுடியவில்லை. வெந்நீரில் விக்ஸ் போட்டு வேது பிடித்தும் ஒன்றும் பிரயோஜனமில்லை. அந்தச் சமயம் பார்த்து கதவில் கால்

இடித்து நெறி கட்டிக்கொண்டு... மொத்தத்தில் ரொம்ப அவஸ்தை போ..."

ஒன்றுமே இல்லாத சாதாரண ஜலதோஷ, இடுப்புப் பிடிப்புகளையெல்லாம் தீராத வியாதியின் பயங்கரத்தோடு மாமி விவரிப்பார். வாய் திறக்காமல் நாமும் கேட்க வேண்டும்.

தவறிப்போய் "சாதாரண விஷயத்துக்கு ஏன் மாமி அரண்டு போகிறீர்கள்? இரண்டு நாளில் சரியாகிவிடும்" என்று சொல்லிவிட்டால் போயிற்று.

"என்ன? என்ன சொல்கிறாய்? சாதாரணமா? இதுவா? நான் என்ன முட்டாளா? இல்லை விவரம் கெட்ட குழந்தையா? பொழுது விடிந்தால் புதுசாய் ஒரு வியாதியில் மனுஷி இங்கு அவஸ்தைப்படுவது பற்றி அக்கறை இல்லை, பெரிசாய் புத்தி சொல்ல வந்துவிட்டாள்! அறுபது வயசாகிற எனக்கு, எது சரி, எது தவறு என்று நீ சொல்லிக் கொடுக்கும் அளவுக்கு மரியாதை கெட்டுவிட்டது பார்..."

அப்போதைக்கு மாமி நிறுத்தமாட்டார். தன் உடம்பில் அவருக்கு அத்தனை அனுதாபம்.

இப்படி, தன்னிரக்கத்தின் ஆட்டுவிப்பாய் பலவித ஏக்கம், புலம்பல்களுடன் வாழ்பவர்களுக்கு ஏராளமாய் உதாரணங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம்...

ஏன்? இப்போது விகடன் தொடராக வெளியாகும் 'ஆடாத ஊஞ்சலின்' கதாநாயகி துளசிகூட சுயபச்சா தாபத்தால் பாதிக்கப்பட்ட ஒரு கேஸ்தானே! காளானாகப் படர்ந்து ஆளை ஆக்ரமிக்கும் சுயபச்சாதாபம்தான் அவர்கள் சுமுகமாகப் பேசுவதை, பழகுவதை, விவேகத் தோடு சிந்திப்பதைத் தடுக்கும் மூலகாரணமாக இருக்கிறது என்பதை இவர்கள் ஏனோ உணர மறுக்கிறார்கள்.

க்ளார்க்காக பாங்க்கில் சேர்ந்து இன்று அதன் டைரக்டர்களில் ஒருவராக உயர்ந்திருக்கும் அமெரிக்கப்



பெண்மணி, வாழ்க்கையில் முன்னேறுவது எப்படி என்று தான் எழுதியிருக்கும் புத்தகத்தின் முன்னுரையில் குறிப்பிடுகிறார்:

"சுயபச்சாதாபத்தோடு வாழ்பவர்களை நான் வெறுக்கிறேன். "இன்றைக்கு அம்பாரமாய் துணி தோய்த்து, சமைத்து, பத்து தேய்த்து, வீட்டை ஒழித்து வைப்பதற்குள் என் தாவு தீர்ந்துவிட்டது" என்றோ; "வேலைக்குப் போய் விட்டு வருவதற்குள் போதும் போதும் என்றாகிறது. படுக்கப் போகையில் மறுநாள் ஏன் விடிகிறது என்று இருக்கிறது" என்றோ; "வீட்டைப் பார்த்துக்கொள்ள வேண்டும், கடைக்குப் போய்வர வேண்டும், சமைக்க வேண்டும்... ஐயோ! எவ்வளவு வேலைகள். இது என்ன வாழ்க்கை. தத்..." என்றோ சதாசர்வகாலம் தான் செய்யவேண்டிய வேலை களைக் குறிப்பிட்டு தன்னையே நினைத்து அனுதாபப் படுகிறவர்களுக்கு என் இரக்கம் கடுகத்தனையும் கிடையாது. தன் வீட்டைப் பராமரித்து, சமைத்து இதர வேலைகளைச் செய்வதோடு தன் வாழ்க்கைத்தரம் உயர வெளியில் போய் வேலை பார்க்கிறார்கள். சம்பாதிக்கும் காசை பக்கத்து வீட்டுக்காரர்களுக்குத் தூக்கிக் கொடுக்கிறார்களா? இல்லை, அந்நிய குழந்தைகளுக்காகச் சமைத்து அவர்கள் துணி களைத் துவைக்கிறார்களா? இல்லை, இல்லவே இல்லை. எல்லா உழைப்பும் தனக்காக, தன்னைச் சார்ந்தவர் களுக்காகத்தான் என்றிருக்கையில் சுயபச்சாதாபம் எதற்கு? இந்த உணர்வை துளி அனுமதித்தாலும் பரபரவென்று ஓசைப்படாமல் பரவி நல்ல எண்ணம் எதையும் வளர விடாமல் அது அமுக்கிவிடும். சுயபச்சாதாபப்படக் கற்றுக் கொண்டவர்கள் தேங்கின குட்டைக்குச் சமம். ஒரு மூலையில் உட்கார்ந்து "நான் இப்படி இருக்கிறேனே, என் வாழ்க்கை இப்படி ஆகிவிட்டதே" என்று மருகும் இவர்கள், வளர்ச்சி என்பதை எந்த விதத்திலும் உணர முடியாது.

மொத்தத்தில் கான்ஸரைவிடத் தீவிரமாய் ஆளை அழிக்கும் வியாதி இந்தச் சுய பச்சாதாபம்."

இங்கே கொஞ்சம் நிதானித்து, முந்தின பாராவை இன்னும் இரண்டு தரம் படிக்கலாமா?

எத்தனை வாஸ்தவமான வார்த்தைகள், நூற்றுக்கு நூறு சத்தியமான கணிப்புகள்.

தயவு தாட்சண்யம் இல்லாமல் முளையிலேயே இந்த சுயபச்சாதாபத்தைக் கிள்ளி எறிந்தால் பிழைத்தோம்; இல்லாவிட்டால் இது வேர்விட்டு வளர்ந்து, இண்டு இடுக்கு இல்லாமல் பரவி, ஒருவித கையாலாகாத்தனத்துக்கு அடிமையாக்கி, நம்மை முடக்கிவிடுவது நிச்சயம்!

மாதவன், இப்படி முடமாக்கப்பட்டவர்களில் ஒருவர்— அவரை அடுத்த அத்தியாயத்தில் சந்திக்கலாம்.

# 8

**மா**தவனின் கதையை அறியும் முன்னர், முதலில் உளவியல் படித்த நண்பரை அணுகி, இந்தச் சுயபச்சாதாபத்தை இன்னும் கொஞ்சம் ஆழமாக அறிமுகப்படுத்திக் கொள்ளலாம்.

சுயபச்சாதாபம்! தன்னிரக்கம்— இது சாதாரணமாக எல்லா மனிதர்களிடையேயும் ஓரளவுக்கு வசிக்கும் சமாசாரம்தான். எப்போதாவது ஒரு சமயம், ரொம்பவும் எதிர்பார்த்தது நடக்காமல்போவதால் பிறந்து, சில நிமிஷங்களுக்கு, மணிகளுக்கு உயிரோடு இருந்துவிட்டு, நம்மை நாமே விவேகத்தோடு உலுக்கிக்கொண்ட பிறகு செத்துப்போவது சகஜமாக எல்லோரிடமும் காணப்படும் சுயபச்சாதாபம். போனால் போகிறது என்று இதை நியாயமான தன்னிரக்கம் என்று முத்திரைகுத்தி விட்டு விடலாம்.

ஆனால் இதுவே கொஞ்சம் கொஞ்சமாய் விஸ்வரூபம் எடுத்து, இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்கும் ஒட்டகமாக, தெளிவு, விவேகம், யோசிக்கும் திறமை என்று ஒட்டுமொத்தமாக அத்தனையும் சுவீகரம் செய்யும்போது, அது பிரச்சினையாகிறது.

சுயபச்சாதாபம்... அப்படியென்றால்?

தன்னை யாரும் சரியாகப் புரிந்துகொள்வதில்லை, தன் தகுதிக்கு ஏற்ற வாழ்க்கை அமையவில்லை, தன் புத்திசாலித்தனத்துக்கு உகந்த பாராட்டு கிடைக்கவில்லை— எக்ஸட்ரா... என்கிற ஏக்கம் ஒருவரை முழுசாக ஆக்கிரமிக்கையில் ஜனிப்பது தன்னிரக்கம்.

சரி— இது அளவுக்கு மீறிப்போகக் காரணங்கள் எவை?

பல. அவற்றுள் சில:

1. எதற்கும் அடுத்தவரோடு தன்னை ஒப்பிட்டுக் கொள்ளுதல்.
2. பொறுமையின்மை.
3. எதையும் தவறாகப் புரிந்துகொண்டு வெளிப்படுத்துதல்.
4. தெளிவில்லாத புத்தி.
5. தன்னைத்தானே புரிந்துகொள்ளாதது.
6. பிறருடன் சரிவரத் தொடர்புகொள்ளத் தெரியாதது.
7. தெரியாத்தனம்.
8. எதிலும் இரட்டைக் கண்ணோட்டம்.
9. நிஜத்தை எதிர்நோக்க பயப்படுதல்.
10. எதையும் அளவுக்கு மீறி பெரிசுபடுத்துதல்.

இந்தக் காரணங்கள் அனைத்தும் இருக்க வேண்டும் என்பதில்லை. ஒன்று மட்டுமோ, அல்லது நான்கைந்தோ கூட ஒருவரின் விவேகத்தைப் பறிக்கும் சக்தி வாய்ந்தது தான்.

சுயபச்சாதாபத்துக்கு இடம் கொடுத்து, தெரிந்தோ தெரியாமலோ அதற்குப் பூரணமாக அடிமையான பிறகு, பாதிக்கப்பட்ட நபரின் சூழ்நிலையில் மெதுவாக மாற்றங்கள் வெளிப்படையாகத் தெரியவருகின்றன.

சரியான போர், அறுவை, சிடுமூஞ்சி— என்கிற பட்டப் பெயர்களைப் பெற்றுத்தருவதுடன் மற்றவர்களோடு உள்ள உறவுகளை ஆரோக்கியமற்றதாக மாற்றுகின்றது.

கூடவே, ஒருவித கையாலாகாத்தனமும் ஊடுருவி சுயமாக எந்த முடிவும் எடுக்கத் தெரியாத குழப்பத்தில் முடமாகிப்போவதும் பலரிடையே காணப்படும் பரிதாபம்.

இப்படித் தன்னிரக்கத்தின் காரணமாய் குழம்பி, மற்றவர்களால் பரிகசிக்கப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டு, தானும் அவஸ்தைப்பட்டு வேண்டியவர்களையும் நிம்மதி இழக்கச் செய்பவர்களில் மாதவனுக்கு முதல் மார்க்.



மாதவன் அவன் தாய்க்கு ஒற்றைப் பிள்ளை. தந்தையின் முகத்தைக்கூடப் பார்த்ததில்லை. அப்படியொரு அகால மரணம்.

பிள்ளையே தன் உயிராக, உலகமாக வாழும் பாக்கியம்— அவன் தாய்.

அசல் சினிமா கேஸ்தான். மகனைப் படிக்க வைத்து ஆளாக்க அந்த அன்னை படாதபாடு இல்லை. அப்பளம், வடகம் இட்டாள். தெரிந்தவர்கள் வீட்டில் நாள் கிழமை களில் சமைத்தாள். மாடாக உழைத்து, யாரிடமும் கையேந்தி நிற்காமல் ஒண்டிப் பொம்பளையாய் மாதவனை வளர்த்தாள்.

மாதவன் பி.ஏ. முடித்தான். டைப்பிங், ஷார்ட் ஹாண்ட் படித்து தனியார் கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்தான்.

அம்மா என்றால் மாதவனுக்கு கண்ணில் ஜலம் வந்துவிடும்.

'என் தெய்வம்' என்பான் குரல் செம்ம.

இவனுக்கு நான்கு வருஷங்கள் முன்பு திருமணம் ஆயிற்று. அம்மா பார்த்து, தீர்மானித்து, முன்நின்று செய்துவைத்த பெண்தான்.

சாவித்திரி நல்லவள். கெட்டிக்காரி. பி.ஏ. பாஸ் பண்ணிவிட்டு அவளும் அரசாங்க அலுவலகத்தில் எழு நூற்று சொச்சம் சம்பாதிக்கிறாள்.

சின்ன வயசில் ஏகத்துக்குக் கஷ்டப்பட்டதாலும், கனவுகள் நிறைய இருந்ததாலும், பக்கத்து வீட் ஆளுடன் தன்னை ஒப்பிட்டு ஏங்கும் குணத்தாலும், மாதவனுக்கு ஆசைகள் ஏராளம்.

மனைவி சம்பாத்தியமும் சேர்ந்தால் ஒரு வருஷத்தில் ஃப்ரிஜ், டீவி... வாங்கலாம்; அவளுடைய எல்.டி.ஸியை

உபயோகப்படுத்திக்கொண்டு காஷ்மீர் வரை போகலாம்; நினைத்தால் பாங்கிலிருந்து யோசிக்காமல் நூறு, இருநூறு எடுத்து செலவழிக்கலாம்... அப்புறம்...

இப்படி...

முதல் ஒரு வருஷத்துக்கு தகராறு ரொம்ப இல்லை. அடுத்த வருஷம் குழந்தை பிறந்து, அவனை மாமியாரிடம் விட்டுவிட்டு சாவித்திரி வேலைக்குப் போகத் துவங்கியதும் பிரச்சினை மூண்டது.

"காலை எட்டுக்குப் போனால் நீ வீடு திரும்ப மாலை ஏழாகிவிடுகிறது. வீட்டு வேலைகளைப் பார்த்து, உன் பிள்ளைக்குப் பால் கொடுத்து, பீத்துணி கசக்கி, தூக்கி வைத்துக்கொண்டு நிற்க நான் என்ன உனக்கு வேலைக் காரியா?"— முதலில் முகத்தைத் தூக்கி, தொடர்ந்து முணுமுணுத்து, பின் பகிரங்கமாய் பாக்கியம் கத்த முற்பட, அதுவரை பொறுத்த சாவித்திரியும் பதிலுக்கு வாயாடினாள்.

"காலையில் எழுந்து அத்தனை வேலைகளையும் செய்துவிட்டுத்தானே போகிறேன்? உன் பிள்ளை என்று சுரிக்கிறீர்களே, இவன் உங்கள் பிள்ளையின் குழந்தையும் தானே?"

இதற்குப் பிறகு மாதவனிடம் சென்று நூறு வியாதி சொல்லி புலம்பி, தெரிந்தவர்களிடம், "இந்த வீட்டில் நான் சம்பளம் இல்லாத ஆயா" என்று பாக்கியம் அழ, "நான் வேலைக்குப் போவதை நிறுத்திவிடுகிறேன்" என்றாள் சாவித்திரி.

அதற்கு மாதவனுக்கு மனமில்லை.

சுளையாய் எட்டு நூறு ரூபாய்! விடுவார்களா?

"அப்படியென்றால் அம்மாவிடம் பேசுங்கள். இந்த வீட்டில் நானும் ஒருத்தி. என்னை அந்நியமாக நினைப்பது தவறு என்று சொல்லுங்கள்."



ம்ஹூம்...

இதற்கும் மாதவன் துணியவில்லை.

அம்மாவிடம் இப்படிப் பளிச்சென்று பேசுவது எப்படிச் சாத்தியம்?

எத்தனை கஷ்டப்பட்டிருக்கிறாள்?

தவிர, தன்னை மதிக்காமல் நேற்று வந்த மனைவிக்கு வால் பிடிப்பதாக நினைத்துவிட்டால்?

நாளாக ஆக நிலைமையைச் சரியாகப் புரிந்து விவேகத்தோடு செயல்பட வேண்டிய மாதவனே ஒரு பிரச்சினை ஆனான்.

அம்மாவும் மனைவியும் ஏன் ஒருவரையொருவர் சரியாகப் புரிந்துகொள்ள மறுக்கிறார்கள்? இவர்களின் சண்டையால் அவஸ்தைப்படுவது நான்தானே?

இரண்டு பேரும் அனுசரித்து, விட்டுக்கொடுத்து நடந்து கொண்டால்தானே நான் நிம்மதியோடு இருக்க முடியும்!

அம்மா பாவம்...

வாழ்க்கையில் கஷ்டப்பட்டவள்...

வேண்டிய மட்டும் உழைத்துவிட்டவளை, இன்னும் உழைக்கச் சொல்வது நியாயமில்லைதான். ஆனாலும்? பேரன் யார்? என் பிள்ளை அல்லவா? அனுசரித்துப் போனால் என்ன? சட்...

சாவித்திரி கூறியதுபோல வேலையை விட்டுவிடுவது தான் இதற்கு வழியோ?

அ, அதெப்படி?

நான்கு வருஷங்களில் ஃப்ரிஜ், டிவி., டு இன் ஒன், ஒரு ஜதை பவுன் வளையல், பாங்கில் பணம்— இத்தனையும் சேர்க்க முடிந்தது அவள் சம்பாத்தியமும் இருந்ததால்தானே?

அந்தப் பணத்தை இழப்பது அசட்டுத்தனம்...

சாவித்திரி படித்தவள்.

நாலும் புரிந்தவள்.

வெளியில் பத்துவிதமான ஜனங்களுடன் பழகுபவள்.

இவள் அம்மாவுக்குச் சொல்லுகிற விதமாய் சொல்லக் கூடாதா?

மனம் விட்டுப் பேசி, பிரச்சினையைத் தீர்க்க முன் வரக் கூடாதா?

மனம் இருந்தால் மார்க்கம்.

சாவித்திரிக்கு இல்லை, அதுதான் மூலகாரணம்.

தனக்குத்தானே வேண்டாத யோசனைகள் பண்ணி, குமையத் தொடங்கி, துளித்துளியாய் தன்னிரக்கத்துக்கு ஆளாகி, ஓட்டுக்குள் ஒடுங்கிவிட்ட பிறகு, சமீபத்தில் ஒருநாள் மாதவன் என்னைச் சந்தித்து புலம்பித்தீர்த்தான்.

அம்மா மேலும் மனைவி மேலும் ஆயிரம் புகார்களைச் சொல்லி இரண்டு பேருமாய்ச் சேர்ந்து தன்னைப் புதைகுழியில் அமுக்கிவிட்டார்கள் என்பதை அழாத குறையாய் விவரித்தான்.

"வீட்டுக்குப் போகவே பிடிக்கலை, மேடம்— வாழ்க்கை வெறுத்துப்போச்சு... மிஷின் மாதிரி வாழ்ந்துகிட்டு இருக்கேன். அம்மாகிட்ட பேசமாட்டேன்னு சாவித்திரி பிடிவாதமா இருக்கா, அம்மாவும் எதையும் புரிஞ்சிக்காம நடந்துக்கறாங்க... இடையே மாட்டிகிட்டு வேதனைப்படறது நான்தான். ஒரொரு சமயம் எங்கயாவது ஓடிப் போய்விடலாமானு இருக்கு."

பேசிக்கொண்டே போனவன் நிறுத்தினான். தயங்கினான். பார்வையைத் தரையில் வீசியபடி சின்னக் குரலில் தொடர்ந்தான்.



"அம்மா, சாவித்திரி ரெண்டு பேருமே உங்க விசிறிங்க... நீங்க எழுதறதை ஒரு வார்த்தை விடாம படிக்கிறவங்க... உங்க மேல ஏக மதிப்பு. பெரிய மனசு பண்ணி நீங்க வந்து அவங்களுக்கு புத்தி சொன்னா, பிரச்சினை தீர்ந்துடும்... உங்க வார்த்தையை அவங்க நிச்சயம் தட்ட மாட்டாங்க."

சுயபச்சாதாபம் கண்களை மறைத்ததில் குழம்பி, தன் பிரச்சினைக்குத் தானே தீர்வுகாண வழி இருந்தும் அதைச் செய்யத் துணியாமல், யார்யார் மேலோ சாய்ந்து நிற்க மாதவன் முற்படுவதைப் புரிந்துகொள்ள முடிய, எனக்கு வேதனையாய் இருந்தது.

ஆனாலும்? யார் குடும்பத்தில் யார் மூக்கைவிட்டு புத்தி சொல்வது?

விசிறிகளாக இருக்கலாம், ஆனாலும்? 'நீ யார் என் சொந்த விவகாரத்தில் தலையிட?' என்று கேட்க எத்தனை நிமிஷமாகும்?

அன்றைக்கு மாதவனை மனவியல் படித்த நண்பரிடம் அழைத்துச் சென்றேன். அவரும் அவனுடைய பிரச் சினைக்குக் காரணம் யார்; இதற்குத் தீர்வு, "உங்கள் நிலைமைக்குக் காரணம் நீங்கள்தான். அம்மா, மனைவி யிடம் மனம் விட்டுப் பேசி, அவர்கள் இருவரும் நெருங்கிவரச் செய்வது உங்கள் கையில்தான் இருக்கிறது. இருவரையும் இணைக்கும் வளையம் நீங்கள் என்பதால் பொறுப்பு உங்களுடையதுதான். அதீதமாக வேண்டாம்; தேவையான அளவு வளைந்துகொடுங்கள் போதும்..." என்றெல்லாம் விரிவாக அலசினார். அத்தனையும் வாய் திறக்காமல் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு அவன் புறப்பட்டுப் போனான்.

தெளிந்து, உணர்ந்து செயல்பட்டால் நன்மை அத்தனையும் அவனுக்குத்தான்; புரிந்திருந்தால் சந்தோஷம்.

## 9

"குழந்தைகளா இவை! சரியான எமன்கள்? சொல்ல வந்த விஷயத்தைச் சொல்ல விடாமல் கத்திக்கொண்டும், ஏறிக் குதித்துக்கொண்டும்… தத்… வால்கள்… என்ன விஷமம்; என்ன அமளி! குரங்குகள்! வானரக் கூட்டங்கள்…"

கட்டாயம் முணுமுணுத்திருப்போமே!

அப்படி முணுமுணுக்க இயலாமல் எதிரில் அந்தக் குழந்தைகளைப் பெற்றவர்களோ, அல்லது அவர்களுக்கு வேண்டியவர்களோ அமர்ந்திருக்க நேரிட்டால், மனசுக்குள்ளாவது வைத்திருப்போமே!

அடுத்த முறை பக்கத்து, எதிர், தெரிந்த வீடுகளுக்குச் செல்கையில் அங்கு அரை நிமிஷம்கூட நிம்மதியாய் இருக்கவிடாது லூட்டி அடிக்கும் குழந்தைகளைத் திட்டி, அவர்களைப் பெற்றவர்களை நினைத்துப் பரிதாபப்படும் முன்னர், ஓர் இடத்தில் உட்கார்ந்து படபடப்பு, கோபம் இவற்றைக் கழற்றி வைத்துவிட்டு சற்று யோசனை செய்யலாமா!

பிறக்கும்போது எந்தக் குழந்தையும் வேண்டாத பிடிவாதம், அசட்டு விஷமங்களுடன் பிறப்பதில்லை. பிறவியில், சிவப்பு, கறுப்பு, ஒல்லி, கொழுக் மொழுக் இத்யாதிகள் இருக்கலாம். (இதற்கு மேல் ஜெனிடிக்ஸ், பிறப்பு குணாதிசயங்களைப்பற்றி அறிய விரும்புவோர் விஞ்ஞான கேள்வி—பதில் மன்னர் சுஜாதாவைப் பிடித்துக்கொண்டு, என்னை தயவு செய்து விட்டுவிடவும்)

ஆனால் புரண்டுபுரண்டு அழுவது, கோழையாக அம்மா தலைப்புக்குள் ஒடுங்குவது, சொன்ன பேச்சைக் கேட்காமல் இருப்பது போன்ற வேண்டாத பழக்க வழக்கங்களுக்காக குற்றம்சாட்டப்பட வேண்டியவர்கள் அந்தக் குழந்தைகளைப் பெற்றவர்கள், வளர்த்தவர்கள்.



எதற்கும் இங்கொன்றும் அங்கொன்றுமாக விதிவிலக்குகள் இருப்பதுபோல இந்தச் சமாச்சாரத்திலும் இருக்கலாம். ஆனால், அவர்களை விட்டுவிட்டு மெஜாரிட்டியைப்பற்றிச் சிந்திக்கலாம்.

அடம், அழுகை, பயந்தாங்கொள்ளித்தனம், பித்துக்குளித்தனம் போன்ற குணங்கள் குழந்தைகளிடம் இடம் பிடித்துக்கொள்ள முழுக்கமுழுக்க காரணமாய் இருப்பவர்கள், அவர்கள் வளரும் சூழ்நிலையில் உள்ள பெரியவர்கள் தாம்.

விவரம் புரியாத குழந்தையிடம் 'அம்மாவும், அப்பாவும் டாட்டா போயிட்டு வரோம். நீ சமத்தா இருந்தா உனக்கு காட்பரிஸ் சாக்லெட்' என்று ஆசை காட்டிவிட்டு ஆபிஸுக்குப் போவதோடு நிற்காமல், சினிமா, எதிர்வீடு, கடை என்று எங்கு போய்வந்தாலும் சாக்லெட் கொடுக்க ஆரம்பிக்க, அந்தக் குழந்தையும் நாளடைவில் பெற்றவர் ஐந்து நிமிஷம் தனியாக விட்டுவிட்டு பாத்ரூம் போனால் கூட 'சாக்லெட்' என்று கை, காலை உதறிக்கொண்டு ஏன் அழாது?

போபாலில் இருக்கும்போது எங்கள் பக்கத்து வீட்டில் சச்சிதேவா—பூனம் என்று ஒரு பஞ்சாபி தம்பதி. காலை பதினோரு மணி அளவிலும், மாலை ஏழு மணி அளவிலும் பக்கத்து வீட்டிலிருந்து தினமும் பாட்டும், கத்தலும் பெரிசாய் கேட்கும். போன புதுசில் எனக்கு விவரம் புரியவில்லை. பிறகு தெரிந்தது— அந்த வீட்டு ஒன்றரை வயசுக் குழந்தை சாப்பிட வேண்டுமானால் யாராவது ஒருத்தர் "பாங்கரா—டான்ஸ்" சில நிமிஷங்களுக்கு ஆடிக்காட்ட வேண்டுமென்று…

பூனத்தின் தந்தை சண்டிகரில் லட்சாதிபதியாம். பூனம் ஒற்றைப் பெண்ணாம். பிரசவம் முடிந்து கிட்டத்தட்ட ஒரு வருஷம்போல புருஷன் வீட்டுக்கு வரவே இல்லையாம். அதிசயப் பேரன் என்பதால் தடபுடல் வளர்ப்பாம்! ஏதோ

விசேஷத்தின்போது சாப்பிட குழந்தை படுத்த, பாங்கரா நடனத்தைக் காட்டி சோறு ஊட்டினார்களாம். மடமட வென்று குழந்தை அன்று சாப்பிடவே 'என் பேரனுக்கு இல்லாததா?' என்று பூனத்தின் தந்தை நித்தமும் வேலைக் காரனையே சரிகை தைத்த சிவப்பு உடை அணியச் சொல்லி ஆட வைத்தாராம். போகப்போக அந்த நடனம் இல்லாவிட்டால் குழந்தை சாப்பிடமாட்டான் என்று ஆக, பூனம் குழந்தையுடன் புருஷன் வீட்டுக்கு வந்தபோது சீதனப் பொருட்களுடன் அந்த வேலைக்காரனையும் பெற்றவர் அனுப்பிவிட்டாராம்!

எப்படி கதை!

இதேமாதிரிதான் செல்வியின் மகள் அனுவும்— வெளியில் போய்விட்டு வந்து பட்டுப்பாவாடையை அவிழ்க்காமல் பால் கொடுக்க, அந்தப் பழக்கமே சிக்கென்று பிடித்துக்கொண்டு, பால் சாப்பிட வேண்டுமென்றால் அனுவுக்குப் பட்டுப்பாவாடையை உடுத்திவிட வேண்டிய நிலை...

ஷண்முகத்தின் பிள்ளை தூங்க வேண்டுமென்றால் அந்த வீட்டில் உள்ள அத்தனை ஜன்னல், கதவுகளைச் சாற்றி விடுவார்கள். இண்டு இடுக்கில் துளி வெளிச்சம் தெரிந்தாலும்... 'தூக்கம் வரலை' என்று குரலெடுத்து பிள்ளை கத்துவான் என்பதால் வீட்டுக்கு வந்த விருந்தாளிகள்கூட அந்த அரைமணியோ, ஒருமணியோ இருட்டில் கம்மென்று உட்கார்ந்துவிட வேண்டும். கடைசி யாக ஷண்முகத்தின் வீட்டுக்கு நாங்கள் சென்றபோது பிள்ளைக்கு ஆறு வயது பூர்த்தியாகிவிட்டது. இன்னும் அதே வழக்கம்தான்.

தூளியில் போட்டு ஆட்டித் தூங்கப்பண்ணிப் பழக்கி விட்ட பப்புட்டு, நன்றாக வளர்ந்துவிட்ட பிறகும் தூளியில்தான் தூங்குவான். கிட்டத்தட்ட மூன்றடிக்கு



நீளமாய்ப் படுப்பவள், அரைமணிபோல் அம்மா மாற்றி அப்பா, அப்பா மாற்றி அத்தை என்று ஆட்டி 'அப்பாடி ஒருவழியாய் தூங்கினாள்' என்று நினைத்து கைவலிக்க நிறுத்தினால், தூளித்துணியை விலக்கி 'அம்மா, வீசி ஆட்டு' என்பது மாமூல் நிகழ்ச்சி. கேட்டது நடக்கவில்லை என்றால் அழுகையில் வீடு இரண்டுபடும்.

சிலர் வீட்டுக்குப் போனால் குழந்தைகள் அப்போது தான் நாக்கு இருப்பதைத் தெரிந்துகொண்ட மாதிரி ஒன்றரை முழத்துக்கு எச்சில் வழிய அதைத் தொங்கவிடும். உடம்பைக் கோணும், ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு நம் முகத்தில் இடிக்காத தோஷமாய் ஊஞ்சல் ஆடும்.

இத்தனை சேஷ்டைகளையும் பார்க்கும் அம்மாக் காரிக்கு பிள்ளைப்பாசம் பீறிடும்.

"ஆன்ட்டிக்கு பாபா ப்ளாக்ஷீப் சொல்லிக் காட்டும்மா... ஏ,பி,ஸீ,டி, சொல்லு... ஸண்டே, மண்டே... சொல்லு..." என்று குழந்தையின் பிராணனை எடுக்க, அது இன்னும் உடம்பை அஷ்டகோணலாக்கிக்கொள்ளும்.

குழந்தை சொல்கிறதோ இல்லையோ, தப்பாமல் அம்மாவும், அப்பாவும் பாபா ப்ளாக்ஷீப்; ஒன்று, இரண்டு; ஜனவரி, ஃபிப்ரவரி சொல்லுவதை நாம் காது குளிரக் கேட்டுவிட்டே புறப்பட வேண்டும்.

சில குழந்தைகள் நமுட்டு விஷமத்தைத் தங்கள் வீட்டோடு நிறுத்திக்கொள்ளாதுகள். நம்ம வீட்டு ரேடியோ, டேப்ரிகார்டர் இவற்றைத் திருகுத்திருகு என்று திருகும்; போனை எடுத்து 'அல்லோ...' என்று கூறிவிட்டு டமால் என்று ரிஸீவரைக் கீழே போடும்; கார்ப்பெட்டில் ஜூஸைக் கொட்டும், கண்ணாடி ஆஷ்ட்ரேயை எடுத்து நாம் ஓடிச் சென்று வாங்கிக்கொள்வதற்குள் போட்டு உடைத்துவிடும். இத்தனை அமளிதுமளிக்கும் அவர்களைப் பெற்றவர்கள்

அசைந்து கொடுக்கமாட்டார்கள். முகத்தில் பெருமை கூத்தாட 'இவன் ஆனாலும் விஷமம்! நாளைக்கு நிச்சயம் என்ஜினியராதான் வரப்போறான் பாருங்க' என்று சர்ட்டிஃபிகேட் வேறு கொடுப்பார்கள்.

இதெல்லாவற்றையும் ஊதித்தள்ளிவிடுபவர்கள் என் சிநேகிதி கலாவின் பிள்ளைகள். வயசு ஒன்றும் குறைச்சல் இல்லை. மூத்ததுக்கு பத்து. சின்னதுக்கு எட்டு.

இரண்டும் சண்டைப் பிரியர்கள். கராத்தே போடு கிறேன், குங்க்ஃபூ குத்துகிறேன் என்று நம்மை முதுகிலும் வயிற்றிலும் விளாசித் தள்ளும். பற்றாக்குறைக்குக் கையில் கொம்பு அகப்பட்டால் கத்திச்சண்டை வேறு. அன்றைக்கு நாம் முழுசாய் வீடு திரும்புவது சந்தேகம்தான்.

குஷி அதிகமாகிவிட்டால் இத்தனையும் போதாது என்று இரண்டும் நாற்காலிகளைக் கவிழ்த்துவிட்டுவிடும். அசட்டுச்சிரிப்புடன் அதை சரிபண்ணிக்கொண்டு உட்கார யத்தனித்தால் நாற்காலியோடு நாமும் தொபுகடீர்!

ஒரு தரம் கலாவின் தம்பி அவர்களிடம் மாட்டிக் கொண்டு, 'அடிக்காதப்பா, கிள்ளாதப்பா, நா மாமா இல்ல? மாமாவுக்கு வலிக்குமில்ல' என்று கெஞ்சிக்கொண்டிருந்ததை நான் கேட்டிருக்கிறேன்.

குழந்தைகள் அருமையானவர்கள்தாம்; ஆனாலும்?

எதிலும் அளவுக்கு மீறிவிட்டால் அப்புறம் கஷ்டப் படப்போவது யார்? நாளைக்கு அந்தக் குழந்தைகள் தாமே?

என் பிள்ளை எனக்கு உசத்தி என்று செல்லம் கொடுத்துச் சீரழிப்பது சுலபம்... ஆனால் பிற்பாடு கெட்ட பெயர் வாங்குவது அந்தக் குழந்தைதானே ஒழிய வேறு யாரும் இல்லை.

வேண்டாத கொஞ்சலுக்கும், அடத்துக்கும் அடிமை யாகி வளர்ந்துவிட்டு, பெரியவர்கள் ஆனதும் தங்கள்



எதிர்பார்ப்புகள் நடக்காமல், பிடிவாதக்காரர்களாக சமுதாயத்துடன் முரண்டிக்கொண்டிருப்பவர்கள் இன்று எத்தனையெத்தனை பேர்கள்?

நாமெல்லாம் நிதானமாய் சிந்தித்து செயலாக்க வேண்டிய விஷயம் இது.

என் அமெரிக்கன் அண்ணி, குழந்தை பிறந்த மூன்றாம் நாளிலிருந்து அதைத் தனியே படுக்க வைத்து வளர்ப்பதைப் பார்த்துத் தவித்து, 'ஏன் இந்தப் பழக்கம்' என்று நான் கேட்க, அவர் சொன்னார்.

"குழந்தைகளுக்கு பயம் என்பதை நாம்தான் கற்றுத் தருகிறோம். அது இருட்டைக் கண்டதா, இல்லை பேய், பிசாசு, பயத்தைக் கண்டதா? முதல் நாள் என் கை சூட்டுக்காக ஏங்கி கொஞ்சம் அழும். அது நடக்காது என்று தெரிந்த பின்னர் அழுவதைத் தானாய் நிறுத்திவிடும். அதன் தேவைகளை உணர்ந்து சரியாகக் கவனிப்பது மட்டும் போதும். மற்றபடி இந்தப் பிராயத்திலிருந்து தன்னம்பிக்கையோடு குழந்தைகளை வளர்ப்பது முக்கியம்."

குழந்தை வளர்ப்பது போலவே நாய், பூனை இத்யாதி களை வளர்க்கிறேன் பேர்வழி என்று சிலர் அட்டகாசம் செய்வதை இங்கு குறிப்பிடவில்லையென்றால் நிச்சயம் இந்த அத்தியாயம் பூர்த்தி ஆகாது.

தங்களுக்கு நாய் பிடிக்கும் என்பதால் ஊர் உலகத்தில் உள்ளவர்களும் நாய் பைத்தியங்களாக இருக்கவேண்டும் என்று நினைப்பது மகா அசட்டுத்தனம் இல்லையா?

பூதமாய் வளர்ந்திருக்கும் அல்சேஷன், வீட்டுக்குள் நுழைந்தவுடன் ஓடி வந்து தோளில் கால் வைத்து நின்று, முகத்தை உண்டு, இல்லை என்று ஆக்கிவிடட்டுமா என்று கேட்கிற மாதிரி பல்லைக் காட்டினால், வந்திருக்கும் விருந்தாளிக்கு சப்தநாடியும் ஒடுங்காமல் என்ன செய்யும்?

ஆனால், நாயின் எஜமானி சிரிப்பார்.

'அது குழந்தை மாதிரி— உங்களை வாங்க என்று கூப்பிடுகிறது... பயப்படாதீங்க' என்பார் சாவகாசமாய்.

ஒரு தினுசாய் சமாளித்துக்கொண்டு உட்கார்ந்தால், அடுத்த ஒரு மணியும் வந்தவர்களுக்குப் பிடிக்கிறதா, இல்லையா என்ற கரிசனம்கூட இல்லாமல் நாய் பிரதாபத்தைச் சொல்லிக் கழுத்தை அறுப்பார்.

இதெல்லாம் அசட்டுத்தனமா, இல்லை தெரியாத் தனமா?

ஏதோ ஒன்று.

அன்பு இருக்க வேண்டியதுதான், ஆனாலும் இப்படியா?

குழந்தையோ, அல்லது வளர்ப்புப் பிராணியோ, எதுவானாலும் ஒருவிதக் கட்டுப்பாட்டோடு வளர்ப்பது தான் வளர்ப்பவர்களுக்கும் நல்லது, வளர்க்கப்படுபவை களுக்கும் நல்லது.

மேலே குறிப்பிட்டிருக்கும் விதத்தில் குழந்தையோ, நாயோ, பூனையோ வளர்ப்பவர்களில் நாமும் ஒருவராக இருந்தால், உடனுக்குடன் நம்மை நாமே திருத்திக்கொள்ள வேண்டும். ஏனென்றால்—

எந்த வேண்டாத பழக்கமும் நாளடைவில் நம் சிந்தனைகளை, விவேகத்தை, நடவடிக்கைகளைச் சிறைப் படுத்தாமல் இருக்கத் துவக்கத்திலேயே விழிப்புணர்வு பெறுவது முக்கியம் அல்லவா?

It is never too late to learn something!

# 10

சில வருஷங்களாக மேலைநாடுகளில் 'ஆரோக்கிய விழிப்புணர்வு' - Befit awareness - தடதடவென்று வளர்ந்து மக்களின் அன்றாட நடவடிக்கைகளை, பழக்கவழக்கங் களைப் பெருமளவுக்கு மாற்றியிருப்பதை நம்மில் பலர் அறிவோம்.

ஆரோக்கியமற்ற வாழ்வைத் தவிர்க்க வெளிநாட்டவர் எடுத்துக்கொள்ளும் பிரயாசைகள் ஏராளம், ஏராளம்.

சாப்பிடும் உணவுகளின் கலோரிகளைக் கண்களில் விளக்கெண்ணெய் விட்டுக்கொண்டு கண்காணிக்கிறார்கள். உடலின் எடையை அதிகரிக்கச் செய்யாமல் இருக்க, குடிக்கும் பானத்திலிருந்து எல்லா தினுசு உணவுப் பொருட் களிலும், ஏன் மென்னும் ச்சூயிங்கத்தில்கூட கலோரிகள் குறைவாக உள்ளனவா என்பதில் தீவிரமாக இருக்கிறார்கள்.

தேகப்பயிற்சி உடம்புக்கு ரொம்ப நல்லது என்று உணர்ந்து கிழவர் முதல் கால் முளைத்துவிட்ட குழந்தை வரை காலை, மாலை நேரங்களில் பார்க், தெருக்களில் ஓடுகிறார்கள்.

வசதிப்பட்டவர்கள் டென்னிஸ், கோல்ஃப் ஆடி, நீச்சலும் அடிக்கிறார்கள்; முடியாதவர்கள் 'எங்களுக்கு இதெல்லாம் கட்டுப்படி ஆகாதே'— என்று முகத்தைத் தூக்கிவைத்துக்கொண்டு சோர்ந்து உட்காராமல், ஆபீஸுக்குப் போய்வருகையிலும், இதர சமயங்களிலும் வாகனங்களைத் தவிர்த்து, விறுவிறுப்பாய் நடக்கவாவது செய்கிறார்கள்.

ஆனால் இந்த விழிப்புணர்வு பல இடங்களில் யதார்த்தத்தின் எல்லையைத் தாண்டி ஒருவித வெறியாக மாறிவிட்டதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

உடம்பு இளைக்க வேண்டி பட்டினி கிடந்து, அதன் விளைவாக ஒழுங்காக சாப்பிட முடியாத வியாதிக் குள்ளானவர்களையும், வைத்தியரைக் கலந்தாலோசிக்காமல் விளம்பரங்களை நம்பிக்கொண்டு கண்ட மாத்திரைகளைச் சாப்பிட்டு ஒருவித பாரிசவாயுவினால் தாக்கப்பட்டவர் களையும் நானே நேரில் பார்த்து வருந்தியிருக்கிறேன்.

இப்படி எல்லை தாண்டி பாதிக்கப்பட்டவர்களை ஞாபகத்தில் ஓர் ஓரமாய் வைத்துக்கொண்டு, ஆரோக்கி யத்தைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தை, நம் உடம்பைப் பற்றின பிரக்ஞையை உண்டாக்கிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தை, நிதானமாக ஆராயலாமா?

போன வருஷம் எனக்கு வேண்டிய ஒருவர் சதா முழங் காலில் வலியில் அவஸ்தைப்பட்டதால் ஆர்த்தோபிடிக் — எலும்பு சம்பந்தப்பட்ட துறை வைத்தியரிடம் அவரை அழைத்துச் சென்றேன்.

நோயாளியை நன்கு பரிசோதித்த டாக்டர் சொன்னார்:

"உங்கள் முழங்கால்களில் எந்தக் கோளாறும் இல்லை. உடலின் கனத்தைத் தாங்குவது கால்கள்தாம்— உடலின் பருமன் அதிகரிக்கஅதிகரிக்க கால்களின் மேல் ஏற்றப்படும் சுமையும் கூடுகிறது. உங்கள் வயதுக்கு தற்சமயம் நீங்கள் இருக்கும் எடை அதிகம். மிதமாக உண்டு, சுலபமான தேகப்பயிற்சிகளைச் செய்து உடம்பை இளைக்கவைத்தால் தன்னால் கால்வலி குறைந்துவிடும். கால்வலி என்று மட்டு மில்லை, உடம்பின் பல கோளாறுகளுக்கும் ஓவர் வெயிட் ஒரு முக்கியக் காரணமாகிறது. நோயற்ற வாழ்வை விரும்புகிறவர்கள் முதல் காரியமாக வாயைக் கட்டத் தெரிந்துகொள்ளவேண்டும்..."

காரணமே இல்லாமல் வைத்தியரிடம் ஓடி, தேவையற்ற பரிசோதனைகளை முழு நீளத்துக்குச்



செய்துகொண்டு, கன்னாபின்னாவென்று மருந்துகளை விழுங்கி உடம்பைக் கெடுத்துக்கொள்பவர் நம்மில் எத்தனை பேர்? யோசிக்க வேண்டும்.

உடல் பருமனைப்பற்றிப் பேசுகையில் எனக்கு வீணாவின் நினைவு வருகிறது.

வீணாவும், ஈஸ்வரும் காதலித்து மணம் செய்து கொண்டவர்கள். கல்யாணமாகி, மறுவருஷம் குழந்தை பிறக்கும்வரை தங்களைவிடச் சந்தோஷமாக யாரும் இருந்து விடமுடியாது என்ற கர்வம் வீணாவுக்கு இருந்துவந்தது.

குழந்தைக்கு ஆறு மாசமானபோது முதல்முறையாக வீணாவுக்குள் சின்னதாக ஒரு சந்தேகம்— கணவர் முன்போல் அத்தனை பிரியமாக இல்லை என்று.

ஆண்டு நிறைவு ஆகி, மேற்கொண்டு ஓரிரு மாசங்கள் போவதற்குள் ஈஸ்வர் மனைவியோடு சிரித்துப் பேசுவது மறைந்தது; வெளியில் வாசலில் அழைத்துப் போவது நின்றது— அனாவசியமாய் எதற்கெடுத்தாலும் குறை சொல்வது உண்டானது.

நல்லவேளையாக விவரம் முற்றிப்போவதற்குள், வீணாவின் அண்ணன்— இங்கிலாந்தில் இருப்பவர்— விடுமுறையில் வந்திருந்தார். நிலைமையைப் புரிந்து கொண்டு, பேசும் விதத்தில் ஈஸ்வரிடம் பேசி, மூலகாரணம் என்ன என்பதை அறிந்துகொண்டுவிட்டார்.

இத்தனைக்கும் காரணம் என்ன என்று தெரிந்தால் உங்களில் சிலராவது கட்டாயம், 'அட இதற்காகவா?' என்று சிரிப்பீர்கள்.

முதன்முதலில் ஈஸ்வரை வீணாவிடம் கவர்ந்ததே, அவளுடைய கொடி போன்ற உடல்வாகுதானாம்.

குழந்தை பிறந்த பிறகு எக்கச்சக்கத்துக்கு வீணா ஊதிப் போனதும் அல்லாமல், அதுகுறித்து எந்தவிதத்திலும்

அலட்டிக்கொள்ளாமல் இருக்க, அந்த அலட்சியமும் பருத்த உடம்பும் ஈஸ்வரின் அடி மனசில் பாதிப்பை உண்டாக்கியிருக்கின்றன.

பாதிப்பு கசப்பாகி, வெறுப்பாக மாற, ஈஸ்வர் தன்னையுமறியாமல் மனைவியை விட்டு விலகியிருக்கிறார்.

வாய் திறந்து ஈஸ்வர் வீணாவிடம் 'நீ பருத்துவிட்டது எனக்குப் பிடிக்கவில்லை. இளைக்க முயற்சி செய்' என்று வற்புறுத்தியிருக்கலாம்; ஆனால் அப்படிச் சொன்னால் 'உங்களுக்கு உடம்புதான் முக்கியம், என் மனம் அல்ல' என்று டயலாக் பேசலாம் என்று தவறாக எதையோ கற்பனை பண்ணிக்கொண்டதில், வேண்டாத விளைவுகள்.

கணவரின் நடத்தைக்குக் காரணம் என்ன என்று அண்ணன் மூலம் அறிந்த வீணா அவரோடு இது குறித்து மல்லுக்கு நிற்காமல் உடனடியாய் காரியத்தில் இறங்க, எண்ணி ஆறு மாசத்தில் கைமேல் பலன்.

"இன்னும் ஆறு மாசத்துல பாருங்க, பழைய வீணாவா நிச்சயம் ஆயிடுவேன்" என்று மிகுந்த தன்னம்பிக்கையோடு அவள் என்னிடம் கூறியதைக் கேட்டு நிஜமாகவே சந்தோஷித்தேன்.

முட்டிக்கொண்டும், முரண்டிக்கொண்டும் நிற்காமல், இதைச் செய்வதன் மூலம் நிம்மதியும், சந்தோஷமும் கிடைக்கும் என்பதை உணர்ந்து செயலில் காட்டும் வீணா புத்திசாலிதானே?

உடல் பருமன் இன்றைக்குப் பலர் வீடுகளில் ஒரு பிரச்சினையாகிவருகிறது,

— அந்தப் பெண்ணுக்கு ஏன் இன்னும் திருமணமாக வில்லை? ஓவர் பருமன்.

— அந்த இளைஞரின் உடம்புக்கு என்ன? ஹார்ட் அட்டாக். காரணம் அளவுக்கு மீறின பருமன்.



— மூச்சு இரைக்கிறது, டாக்டர். இரண்டடி எடுத்து வைக்க முடியவில்லை. ஏன் இப்படி? எடையைக் குறையுங்கள், பெரியம்மா— தன்னால் மூச்சு சீராக வரும்.

இந்த மாதிரி எத்தனை உரையாடல்களைக் கேட்டிருப்போம்!

இனியும், கேட்டுவிட்டு சும்மா இருக்காமல் ஆரோக்கியத்தைப் பற்றின விழிப்புணர்வைப் பெறுவோம் என்கிற சபதத்தைச் செய்துகொண்டால் என்ன?

முதலில், கலோரிகள் என்றால் என்ன என்று பார்க்கலாம்.

நாம் உண்ணும் உணவிலிருந்து நமது உடலுக்குக் கிடைக்கும் சக்தியைக் கணக்கிடும் யூனிட்டைத்தான் 'கலோரி' — என்கிறோம். ஒருவர் ஆணா, பெண்ணா, அவர் உடல்வாகு என்ன, ஒரு நாளில் செய்யும் வேலைகள்— இவற்றைப் பொறுத்து அவரவர் கலோரித் தேவையும் அமைகிறது. நாம் செய்யும் வேலைகளுக்கு வேண்டிய கலோரிகளுக்கு மேல் உபரியாக இருப்பவை கொழுப்பாக மாறி உடம்பில் தங்க, இதைத்தான் நாம் ஊளைச்சதை என்கிறோம்.

இதை எப்படிக் குறைக்கலாம்?

டாக்டர் கிராண்ட் க்வினப்— இயக்குனர் எண்டோக்ரைனாலஜி பிரிவு, கலிஃபோர்னியா— என்ன சொல்கிறார் என்றால்:

"உடம்பு இளைக்க வேண்டி உணவை ஏகத்துக்குக் குறைப்பதும், அடியோடு சர்க்கரை, கொழுப்புப் பொருட்களை உண்ணாமல் இருப்பதும் அவசியமில்லாத செய்கை. அன்றாடம் நாம் செய்யும் காரியங்களுக்காக எத்தனை கலோரிகளைச் செலவழிக்கிறோம் என்பதை முதலில் கணக்கெடுத்து இதற்குக் குறைவாக உட்கொள்ளும்

கலோரிகள் அமையும்படி பார்த்துக்கொண்டுவிட்டால், மிக எளிதாக வாரத்துக்கு ½ கிலோ வீதம் இளைக்கலாம். உதாரணமாக ஒருவர் அன்றாடம் செய்யும் வேலை, பயிற்சி மூலம் 1500 கலோரிகளைச் செலவிடுகிறார் என்றால், 1000 கலோரி உட்கொள்வதன் மூலம் நிச்சயமாகப் பலனைப் பெறலாம். அரைகிலோ உடம்பு எடை என்பது உத்தேசமாக 3500 கலோரிக்குச் சமம் என்பதால், ஒரு நாளைக்கு 500 கலோரிகளைக் குறைப்பதனால் வாரத்துக்கு 3500 கலோரிகள் தவிர்க்கப்படுகின்றன. உணவைக் குறைக்க விரும்பாதவர்கள் தேகப்பயிற்சிகளைக் கூட்டி, அதிக கலோரிகளைச் செலவழிப்பதனாலும் இதைச் சாதிக்கலாம்."

புரிகிறதா?

புரியாதவர்கள் தயவுசெய்து இரண்டாவது முறை படித்துப்பாருங்கள்— இந்தக் கணக்கு மனசில் பதிவது மிக மிக அவசியம்.

அடுத்து, நாம் அன்றாடம் செய்யும் வேலைகளையும் உட்கொள்ளும் உணவையும் கலோரிகளில் கணக்கிடுவது எப்படி என்கிற கேள்வி. இதற்குக் கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை உதவும்.

| வேலைகள் | | செலவாகும் கலோரிகள் (ஒரு மணி நேரத்துக்கு) |
|---|---|---|
| 1. | வீட்டு வேலைகள் (பெருக்குவது, தூசி தட்டுவது) | 350 |
| 2. | தோட்ட வேலை | 250 |
| 3. | சமையல் (அரைப்பது, கீழே உட்கார்ந்து கறிகாய் நறுக்குவது முதலியன) | 350 |
| 4. | தையல் தைப்பது, சாப்பிடுவது, டைப் அடிப்பது போன்றவை | 50 |
| 5. | துணி துவைப்பது | 100 |
| 6. | குளிப்பது | 100 |
| 7. | குனிந்து நிமிர்ந்து வேலைகள் செய்வது | 300 |
| 8. | தலைவாருதல், பல் தேய்ப்பது, இஸ்திரி போடுதல்... முதலியன | 100 |
| 9. | மாடிப்படிகளில் ஏறி இறங்குதல் | 800 |
| 10. | ஆபீஸ் வேலைகள் | 200 |
| 11. | தரை துடைப்பது | 200 |
| 12. | மெதுவாக சைக்கிள் விடுதல் | 300 |
| | வேகமாக சைக்கிள் விடுதல் | 600 |
| 13. | நாட்டியம் | 600 |
| 14. | ஷட்டில், பாட்மிண்டன் | 400 |
| 15. | உடற் பயிற்சிகள் | 500 |
| 16. | பாடுவது | 50 |
| 17. | மெதுவாக ஓடுதல் | 600 |
| | வேகமாக ஓடுதல் | 900 |
| 18. | மெதுவாக நீச்சல் அடித்தல் | 400 |
| | வேகமாக நீச்சல் அடித்தல் | 800 |
| 19. | மெதுவாக நடப்பது | 200 |
| | வேகமாக நடப்பது | 300 |



இனி, சாதாரணமாக ஒரு நாளில் நாம் உட்கொள்ளும் உணவுகளின் கலோரி அளவினைப் பார்க்கலாம் (சுமாராக)

| உணவு வகைகள் | கலோரிகள் |
|---|---|
| இட்லி (2) | 135 |
| ரொட்டித் துண்டுகள் (2) | 80 |
| பூரி (2) | 100 |
| ரவா உப்புமா (1 டீ கப்) | 100 |
| சப்பாத்தி (2) | 200 |

| | |
|---|---|
| 30 கிராம் அரிசி (சமைத்த சோறு 1 டீ கப்) | 100 |
| மட்டன் பிரியாணி (150 கிராம்) | 375 |
| மீன் வறுவல் (25 கிராம்) | 150 |
| சாம்பார் 1 கப் | 60 |
| பருப்பு ரசம் 1 கப் | 30 |
| தயிர் 1 கப் | 160 |
| மோர்— 1 டம்ளர் | 80 |
| வறுத்த கோழி — 2 துண்டுகள் | 160 |
| சுண்டல் (30 கிராம் பருப்பில் செய்தது) | 100 |
| சிப்ஸ் (20 துண்டுகள்) | 150 |
| அவியல் 1 கப் | 200 |
| மோர்க்குழம்பு — 1 கப் | 75 |
| வத்தல் குழம்பு — 1 கப் | 75 |
| பால்— 100 மி.லி. (ஏடு எடுத்தது) | 75 |
| காபி— 200 மி.லி. (சர்க்கரையுடன்) | 120 |
| போர்ன்விடா, காம்ப்ளான், ஹார்லிக்ஸ்— (200 மி.லி.— பால், சர்க்கரை சேர்ந்தது) | 150 |
| டீ— (பால், சர்க்கரை சேர்ந்தது) | 120 |
| ஆப்பிள் 1 | 85 |
| திராட்சை 1 கப் | 85 |
| வாழைப்பழம் —1 | 100 |
| ஆரஞ்சு 1 | 50 |
| வேர்க்கடலை (50 கிராம்) | 250 |
| 100 கிராம் கீரை வகைகள், புடலங்காய், வாழைத் தண்டு, காலிஃப்ளவர், தக்காளி, சுரைக்காய், எலுமிச்சை, முட்டைக்கோஸ், முள்ளங்கி, பூசணி, முருங்கை, வெள்ளரி, வெண்டை, பீர்க்கு, கத்தரி, பீன்ஸ், பாகல் | 30 |
| சுட்ட அப்பளம் 1 | 20 |
| உருளை, வாழை—(1 கப் கறி) | 150 |
| ஐஸ்க்ரீம் (100 கிராம்) | 220 |
| ஸ்வீட் (குலோப்ஜாமூன், மைசூர்பாகு, லட்டு) | 400 |
| சாக்லெட் (30 கிராம்) | 140 |
| பேரீச்சை (30 கிராம்) | 85 |
| முட்டை 1 (அவித்தது) | 90 |
| கார்ன்ஃப்ளேக்ஸ் — 1 கப் | 95 |
| சர்க்கரை — 1 டீஸ்பூன் | 25 |
| வெண்ணெய் — 1 டேபிள் ஸ்பூன் | 100 |
| லெமனேட், கோலா போன்ற பானங்கள் | 100 |



உத்தேசமாக இந்த அட்டவணையை வைத்து, நாம் சாப்பிடும் அளவைக் கணக்கிட்டு, வேலை செய்யத் தேவையானதைவிட உட்கொள்ளும் கலோரிகளைக் குறைத்துக்கொண்டுவிட்டோமென்றால், அப்புறம் 'உடல் பருமன்' என்ற ராட்சஸனின் குடுமி நம் கைக்குள்! எப்படி! நினைத்தாலே ஆனந்தமாக இல்லை?

# 11

**போ**ன அத்தியாயத்தில் கலோரிக் கணக்கைப் போட்டு மண்டையை உடைத்துக்கொண்டவர்களுக்கு அவர்களுடைய சிரத்தையைப் பாராட்டும் தினுசில் இந்த இதழில் ஒரு போனஸ். அலட்டிக்கொள்ளாமல், என்ன சாப்பிடலாம் என்று குழம்பத் தேவையில்லாமல் ஒரு குட்டியூண்டு உதவி; சில எளிய மெனுக்கள்.

சின்ன டவுன்களிலும், கிராமங்களிலும் வசித்துக் கொண்டு 'டயட்டீஷியன் என்பவர் யார்? டயட் என்பது என்ன? ஏதாவது புத்தகத்தில் இவற்றின் விவரம் சொல்லப் பட்டிருக்கிறதா? வசதிகள் அதிகமில்லாத எங்கள் ஊர்களில் இவற்றை விவரித்துச் சொல்லக்கூடியவர் யார்?' என்று தவிக்கும் 'மிடில் கிளாஸ்' ஆண், பெண்களை மனதில் வைத்துக்கொண்டு இந்த மெனுக்கள் எழுதப்பட்டிருக் கின்றன என்பதால், அதிகமாய் காசு பணம் செல வழிக்காமல் நினைப்பதை சாதிக்க இவை உதவும் என்று நம்புகிறேன்.*

மெனுக்களைக் கடைப்பிடிக்க ஆரம்பிக்கும் முன் ஒருசில வார்த்தைகள்.

டயட்டில் இருந்து எடையைக் குறைப்பது என்பது மந்திரத்தால் மாங்காயை விழ வைக்கும் சமாச்சாரமல்ல.

* இந்த இரண்டு அத்தியாயங்களில் காணப்படும் கலோரி குறிப்புகள், மெனுக்களைத் தயாரிக்க உதவிய திருமதி மாயா மோகன் (டயட்டீஷியன்) 16, ட்ரஸ்ட்பாக்கம், வடக்கு மந்தைவெளி, சென்னை—28 அவர்களுக்கு என் பிரத்தியேக நன்றி.)



தவிர, பொறுமை, மனஉறுதி, நிதானம் இவை டயட்டில் இருப்பவர்களுக்கு எத்தனை அவசியமோ, அத்தனை அனாவசியம் பிறரின் பரிதாபம், கேலிப்பேச்சு, ஆலோசனைகள்...

உடம்பில் கோளாறு ஏதேனும் உள்ளவர்கள் மருத்துவரின் ஆலோசனை இல்லாமல் உடலை இளைக்க வைக்க ஆரம்பிப்பது தவறு.

Slow and steady wins the race என்பார்கள். படிப்படியாய் வாரத்துக்கு அரைகிலோ வீதம் எடையைக் குறைப்பதுதான் சரியான வழி. Crash Programme நீடித்த பலனைத் தராது என்பதோடு, பல சமயங்களில் உடலுக்குக் கேடும் விளைவிக்கலாம்.

டயட்டில் இருக்கும் காலத்தில் விவரம் அறிந்தவர் களிடமிருந்து சில எளிதான உடற்பயிற்சிகளை (முடிந்தால் யோகா, தியானமும் கூட) கற்றுச் செய்வதும், காலையிலோ, மாலையிலோ, காலார நடப்பதும் எடை குறைப்பதற்குக் கட்டாயம் உதவும் சமாச்சாரங்கள்.

இனி— மெனுக்களைப் பார்க்கலாம்.

## • மெனு—1

| காலை | | கலோரி மொத்தம் |
|---|---|---|
| காப்பி 1 ஸ்பூன் சர்க்கரையுடன் | | |
| 50—70 மிலி பாலுடன் | 90 | |
| 2 இட்லிகள் | 130 | |
| புதினா சட்னி (புதினா, உப்பு, | | |
| 1 தக்காளி, மிளகாய் சேர்ந்தது) | 30 | |
| 1 டம்ளர் மோர் | 80 | 330 |

| | | |
|---|---|---|
| **10.30 மணிக்கு** | | |
| 2 தக்காளிப்பழம், ஒரு வெள்ளரிக்காய் | 40 | 40 |
| **மதிய உணவு** | | |
| 1 டீ கப் அளவு சமைத்த சாதம் (30 கிராம் அரிசி) | 100 | |
| 2 டீஸ்பூன் சமைத்த பருப்பு | 30 | |
| கீரை மசியல் (கீரை மட்டும்) (வேண்டிய அளவு) | 50 | |
| எலுமிச்சை ரசம் (3 கப் வரை) | 40 | |
| 1 டம்ளர் மோர் | 80 | 300 |
| **மாலை** | | |
| டீ 1 ஸ்பூன் சர்க்கரையுடன் 50 மி.லி. பாலுடன் | 90 | 90 |
| **6 மணிக்கு** | | |
| 1 டம்ளர் சோடா — எலுமிச்சை 1 சிட்டிகை உப்பு | 40 | 40 |
| **இரவு உணவு** | | |
| 2 ஃபுல்கா (எண்ணெய் இல்லாத சப்பாத்தி) | 100 | |
| வெள்ளரி, வெங்காயம், தக்காளி, முட்டைகோஸ் சேர்ந்த சாலட், 1—2 கப் | 50 | |
| பால் 100 மில்லி | 75 | 225 |
| | மொத்தம் | 1025 |



## மெனு—2

| காலை | கலோரி | மொத்தம் |
|---|---|---|
| டீ 50—70 மி.லி. பாலுடன் | 90 | |
| 2 ஸ்லைஸ் ரொட்டித் துண்டுகள் | 80 | |
| 4 வெள்ளரித் துண்டுகள், 4 தக்காளித் துண்டுகள் | 30 | |
| ½ டீஸ்பூன் வெண்ணெய் | 25 | 225 |
| **10 மணிக்கு** | | |
| வெஜிடபிள் / காய்கறி க்ளியர் சூப் 2 கப் | 60 | 60 |
| **மதிய உணவு** | | |
| 1 ஃபுல்கா (வறட்டு சப்பாத்தி) | 50 | |
| காய்கறி சாலட் 1 கப் | 40 | |
| முட்டைகோஸ் கூட்டு 2 ஸ்பூன் (1 கப் பயத்தம் பருப்புடன்) | 70 | |
| 3 டேபிள் ஸ்பூன் சாதம்— ½ கப் தயிர் | 80 | 240 |
| **மாலை** | | |
| டீ | 90 | |
| 2 உப்பு பிஸ்கட் | 40 | 130 |
| **இரவு** | | |
| 2 ஆரஞ்சுப் பழங்கள் | 80 | |
| 150 மி.லி. பால் | 120 | 200 |
| | மொத்தம் | 855 |

## மெனு–3

| காலை | | கலோரி | மொத்தம் |
|---|---|---|---|
| | காப்பி | 90 | |
| | 30 கிராம் கேழ்வரகு மாவினால் ஆன கூழ் 1 டம்ளர், மோர்—உப்பு | 160 | 250 |
| 10 மணிக்கு | | | |
| | எலுமிச்சை சாறு உப்புடன் (அ) இளநீர் | 40 | 40 |
| மதியம் | | | |
| | அரிசி (30 கிராம்) சாதம் 1 டீ கப் நிறைய | 100 | |
| | 3 டீஸ்பூன் பருப்பு சேர்ந்த வெங்காய சாம்பார் (1 கப்) | 60 | |
| | முட்டைகோஸ் பொரியல் 1 கப் | 40 | |
| | ரசம் 1 கப் | 30 | |
| | மோர் 1 டம்ளர் | 80 | 310 |
| மாலை | | | |
| | தக்காளி சூப் (3 தக்காளி சேர்த்து) (மிளகு, உப்புடன்) | 40 | |
| | 2 உப்பு பிஸ்கட் | 40 | 80 |
| இரவு | | | |
| | 2 ஃபுல்கா | 100 | |
| | காய்கறி — கீரை சப்ஜி (1 டீஸ்பூன் எண்ணெய் தாளித்தது) | 60 | |
| | பால் 100 மி.லி. | 75 | 235 |
| | மொத்தம் | | 915 |



## மெனு–4

வாரத்தில் ஒருநாள் மட்டும் திரவ ஆகாரமாக உட்கொள்வது ஆரோக்கியத்துக்கு மிகவும் நல்லது.

| காலை | | கலோரி | மொத்தம் |
|---|---|---|---|
| | காப்பி / டீ | 90 | |
| | கேழ்வரகு கஞ்சி (30 கிராம் கேழ்வரகு மாவு, 1 டம்ளர் மோர்) | 150 | 240 |
| 10 மணிக்கு | | | |
| | இளநீர் 1½ டம்ளர் | 50 | 50 |
| 11 மணிக்கு | | | |
| | 3 தக்காளி சேர்ந்த ஜூஸ், உப்பு, மிளகுடன் | 40 | 40 |
| 12 மணிக்கு | | | |
| | 1 டம்ளர் நீர்மோர் | 40 | 40 |
| 1 மணிக்கு | | | |
| | 2 ஆரஞ்சுகள், 1 வெள்ளரிக்காய் | 100 | 100 |
| 2 மணிக்கு | | | |
| | சூடான டீ | 90 | 90 |
| 4 மணிக்கு | | | |
| | அரிசிப் பொரி 1 டபரா | 80 | |
| | தர்பூசணிப்பழம் (உங்களுக்குத் தேவையான அளவு) | 40 | 120 |
| 8 மணிக்கு | | | |
| | பால் 1 டம்ளர் (150 மி.லி) | 120 | 120 |
| | மொத்தம் | | 800 |

## மெனு—5

| காலை | கலோரி | மொத்தம் |
|---|---|---|
| காப்பி | 90 | |
| அவல் (25 கிராம் — ½ கப் தயிர் | 170 | |
| தாளிக்க எண்ணெய் 1 ஸ்பூன் | 20 | 280 |
| 10 மணிக்கு | | |
| 1 டம்ளர் நீர்மோர் (அல்லது) | | |
| எலுமிச்சை ஜூஸ் | 40 | 40 |
| மதியம் | | |
| 2 ஃபுல்கா சப்பாத்தி | 100 | |
| தக்காளி வெங்காய சப்ஜி 1 கப் | | |
| (பருப்பு இல்லாமல்) தாளிப்பு | | |
| 1 ஸ்பூன் எண்ணெய் | 60 | |
| தயிர்சாதம் 1 டீ கப் (25 கிராம்) | | |
| சாதம் — ½ கப் தயிர் | 110 | |
| ஊறுகாய் 1 ஸ்பூன் | 35 | 305 |
| மாலை | | |
| ஃப்ரூட் சாட் 2 கப் (Fruit chat) | | |
| (அன்னாசி, கொய்யா, காரட், | | |
| ஆரஞ்சுப் பழத் துண்டுகள் | | |
| — உப்பு காரப்பொடி) | 50 | |
| டீ | 90 | 140 |
| இரவு | | |
| சாதம் (30 கிராம் அரிசி) 1 டீ கப் | 100 | |
| கத்தரி/வெண்டை/பாகல் / பீன்ஸ் | | |
| பொரியல் 1 கப் (டீஸ்பூன் | | |
| எண்ணெய் தாளிப்புடன்) | 80 | |
| ரசம் 1 கப் | 30 | |
| நீர் மோர் 1 டம்ளர் | 40 | |
| ஊறுகாய் 1 ஸ்பூன் | 35 | 285 |
| | மொத்தம் | 1130 |



ஐந்து நாட்களுக்குப் பிறகு இந்த மெனுக்களையே மீண்டும் கடைப்பிடிக்கலாம், அல்லது சென்ற அத்தியாயத்தில் இன்ன பதார்த்தத்துக்கு இத்தனை கலோரிகள் என்று கொடுக்கப்பட்டிருக்கும் அட்டவணையை வைத்துக் கொண்டு வேண்டிய தினுசில் நீங்களே மெனு தயாரித்துக் கொள்ளலாம்.

கூடுமானவரையில் டயட்டில் இருக்க விரும்பும் பெண்கள் ஒரு நாளைக்கு 800—1000 கலோரிகளையும், ஆண்கள் 1000—1200 கலோரிகளையும் உட்கொள்வது எந்த விதமான பின்விளைவுகளும் இல்லாமல் எடை குறைக்க உதவும்.

சர்க்கரை ருசி பிடிக்காதவர்கள் தங்கமாய் அதை விட்டுவிடலாம். முடியாதவர்கள் 'சாக்ரின்' மாத்திரைகளைப் பயன்படுத்தலாம்; தவறில்லை.

நடுவில் ஒருநாள் ஐஸ்க்ரீமோ, இனிப்போ சாப்பிட ஆசையாக இருந்தால் தாராளமாகச் சாப்பிடுங்கள்; ஆனால் அதற்குத் தகுந்த மாதிரி அந்த நாளின் இதர உணவுகளின் கலோரிகளைச் சரிசெய்துகொண்டுவிட வேண்டும்.

என் சினேகிதி டயட்டில் இருக்கும்போது முழு காட்பரிஸ் சாக்லெட்டை ரசித்து, எந்தக் குற்றவுணர்வும் இல்லாமல் சாப்பிட்டுவிட்டு, மதிய அல்லது இரவு உணவை மோர் மட்டும் அருந்தி கலோரிகளைச் சமானித்து விடுவாள்.

நொறுக்குத் தீனி எடையைக் கூட்டும் என்கிற வாதம் தவறு என்று சமீபத்திய கண்டுபிடிப்புகள் கூறுகின்றன.

பசிக்கிறதுபோல இருந்தால் அரிசிப் பொரியை கை நிறைய வைத்துக்கொண்டு கொறியுங்கள். வெள்ளரி, தக்காளி போன்ற குறைவான கலோரி பதார்த்தங்களை நினைத்த போது ஜமாயுங்கள். நீர்மோர், தண்ணீர், இளநீர், சோடா அடிக்கடி நிறைய குடித்து வயிற்றை நிரப்பிக் கொள்ளுங்கள்.

இப்படிச் செய்வதால், சாப்பாடாக சாப்பிடும் அளவு குறைந்து உடல் மெலிய வழி உண்டாகும் — என்றெல்லாம் கூட இன்றைய டாக்டர்கள் பச்சைக்கொடி காட்டுகிறார்கள்.

கடைசியாக, அழகாக இருப்பதற்காக இத்தனை பாடுபட வேண்டுமா என்று கேட்டு இரண்டு வாரமாக நாமெல்லாம் எடுத்துக்கொண்டிருக்கும் சிரமங்களை லொட்டென்று உடைத்துவிடாதீர்கள். நிச்சயம், வெறும் கவர்ச்சியை மனசில் வைத்துக்கொண்டு உடல் பருமனைக் குறைக்கவேண்டிய அவசியத்தைக் கூற வரவில்லை. முதலில் ஆரோக்கியம்... இதுதான் தலையாய குறிக்கோள். முதுமை என்பது 'இதோ வருகிறேன்' என்று சொல்லியபடி ஒவ்வொரு அடியாக எடுத்து நம்மை நோக்கி வந்துகொண்டிருக்கிறது — மனம் போன விதத்தில் வாழ்ந்து உடம்பைக் கெடுத்துக்கொண்டுவிட்டால் வயசான தருணத்தில் முதுமையோடு வியாதியும் சேர்ந்துகொள்ள நம்மைச் சார்ந்தவருக்கு மாபெரும் சுமையாக நாம் மாறுவது திண்ணம்.

முதுமையைத்தான் தவிர்க்க இயலாது. ஆனால், வாயைக் கட்டி, நம்மை அணைக்கக் காத்திருக்கும் நோய்களை விரட்டியடிப்பதன் மூலம் சாகும்வரை திடகாத்திரமாக இருந்து உற்றார், சுற்றத்தார் எவருக்கும் தொந்தரவு கொடுக்காமல் வாழ்வேன் என்ற தன்னம்பிக்கையோடு மிளிர்வது நமக்கு சாத்தியம்தானே?

# 12

குழப்பம்!

ஒரு நாளைக்குக் குறைந்தபட்சம் நாற்பது தடவையாவது 'ச்சே— என்னப்பா இது, ஒரே குழப்பமா இருக்கு' என்றோ, 'ஒண்ணும் கேக்காதே, நானே எக்கச்சக்க குழப்பத்துல இருக்கேன்!' என்றோ, 'இப்ப என்ன பண்ணறதுனே புரியாதபடி ஏன் இப்படிக் குழம்பிக் கிடக்கே?' என்றோ, சகஜமாய் நம் வாயிலிருந்து வெளிவரும் குழப்பம்' என்கிற குட்டிச்சாத்தானின் ஜாதகத்தை இந்த அத்தியாயத்தில் கொஞ்சம் பார்க்கலாம்.

குழப்பம்!

குழப்பம் என்றால் என்ன?

நானாவித எண்ணங்கள், உணர்ச்சிகள், கருத்துக்கள் இவற்றின் கசாமுசாக் கலவை ஒரு போர்வையாக மூளையைப் போர்த்தி, சிந்திக்கும், செயல்படும் திறனை பாதிக்கும்போது உண்டாவதுதான் குழப்பம் என்கிறார்கள் மனோதத்துவ அறிஞர்கள்.

சரி. இந்தக் குழப்பம் எத்தனை வகைப்பட்டது?

இரண்டு — தற்காலிகம், நிரந்தரம்.

முதலில் தற்காலிகத்தைப் புரிந்துகொள்வோம்.

அஸ்வத் — பி. ஏ. முதலாண்டு படிக்கிறான். படிப்பில் சூரன். பரிட்சையின்போது, முதல் கேள்விக்கு மிகச் சிறப்பாக, நிதானமாக பதில் எழுதிவிட்டு நிமிர்ந்தால், கடிகாரம் மணி மூன்று என்கிறது.

ஐயோ! மணி ஆகிவிட்டதே! இன்னும் ஒரு மணி நேரத்தில் பாக்கி இரண்டு கேள்விக்கு எப்படி பதில் எழுதுவேன்?

சரியாகத் திட்டமிடாமல் இருந்துவிட்டதில் நேரமின்மை புரிய, சட்டென்று அஸ்வத்தை 'என்ன செய்வேன்?' என்கிற குழப்பம் ஆக்கிரமிக்கிறது.

பதட்டப்படுவதால் ஆகப்போவது ஒன்றுமில்லை என்பதை உணர்ந்து, தன்னை அமைதிப்படுத்திக்கொண்டு அவன் மீண்டும் கேள்வித்தாளில் கவனத்தைப் பதிய வைப்பதற்குள் பத்து நிமிஷங்கள் ஓடிவிடுகின்றன.

கொஞ்சம் அழுத்தமாக உடனே சிந்தித்து, தன்னை அஸ்வத் உலுக்கிக்கொண்டிருந்தால் அந்தப் பத்து நிமிஷங் களையும் உபயோகமாகச் செலவிட்டிருக்கலாம்... ஆனால் எங்கே?

தற்காலிகக் குழப்பத்துக்கு இடம் கொடுத்ததில் அஸ்வத்துக்கு அன்றைக்குக் கிடைத்த தண்டனை, வீணான பத்து நிமிஷங்கள் என்பதோடு, அனாவசியமாய் இழக்கப் பட்ட சில மதிப்பெண்களும் கூடத்தானே?

அடுத்து—

ஆனந்தமாய் மஞ்சு உறங்கிக்கொண்டிருக்கிறாள்— கணவன் ஊரில் இல்லை. டுர்.

'தந்தி' — வாசலில் குரல்.

அடித்துப்பிடித்து எழுந்து 'தந்தியா... கடவுளே, தந்தியா' என்று பறவாய்ப் பறந்து கை உதற, பி.பி. ஏறிப்போக, கண்டிப்பாய்ப் புருஷனுக்கு ஏதோ விபத்துதான் என்ற எதிர்பார்ப்பில் ஊரிலுள்ள அத்தனை தெய்வங்களுக்கும் வேண்டிக்கொண்டு, பக்கத்து, எதிர்வீட்டுக்காரர்கள் அருகில் நின்று தைரியம் கூற, தந்தியைப் பிரித்தால்— 'உமாவுக்குக் கல்யாணம் நிச்சயம் ஆகிவிட்டது. பாக்கி விவரம் தொடரும் கடிதத்தில்' என்ற நல்ல சேதி அப்பாவிடமிருந்து!

தந்தியைக் கையெழுத்துப் போட்டு வாங்கி, பிரித்துப் படிக்குமுன் பத்து நிமிஷங்களுக்குக் குழம்பிப்போனதில்,



இரண்டு வருஷங்கள் கழித்துத் தலைதூக்கப்போகும் அல்சருக்கு மஞ்சுவின் இரைப்பையில் அன்று விதை ஊன்றப்பட்டுவிட்டது.

சம்பத் விஷயம் இன்னொரு தினுசானது...

ஒரு கல்யாணத்திற்குச் சென்றவன் பக்கத்தில் சொல்லாமல் கொள்ளாமல் திடுமென எழுத்தாளர் ஜெயகாந்தன் அமர்ந்துவிடுகிறார்.

ஆ! ஜெயகாந்தன்!

சம்பத்துக்கு ஜெயகாந்தன் எழுத்துக்கள் என்றால் உசிர்—

அந்த ஜெயகாந்தன், இதோ தொடுகிற தூரத்தில்— பக்கத்தில்— ஷர்ட்கூட இவன்மேல் உரசுகிறது...

என்னென்னவோ பேசவேண்டும், கையெழுத்து வாங்கிக்கொள்ளவேண்டும், 'நீங்கள்தான் என் ஃபேவரெட் எழுத்தாளர்' என்று கூறவேண்டும்... என்றெல்லாம் ஒரே சமயத்தில் எண்ணி, ஏகத்துக்கு சந்தோஷித்து அதன் விளைவாய் குழம்பி, பிரமை பிடித்து பத்து நிமிஷம் போல சம்பத் அமர்ந்திருக்கையில், ஜெயகாந்தன் எழுந்து போய் விடுகிறார். அப்புறம்? அப்புறம் என்ன... கைக்கெட்டிய சமாச்சாரம் வாய்க்கெட்டாமல் நழுவிப்போன கதைதான்.

உதாரணங்கள் போதும்.

அஸ்வத், மஞ்சு, சம்பத்— இவர்களின் அனுபவங்கள் விதவிதமாக இருப்பினும் மூவரிடமும் பொதுவாகக் காணப்பட்டது தற்காலிகக் குழப்பமே!

நேரத்தைத் திட்டமிடாததால் அஸ்வத்தும், எதிர் பாராத ஒன்றின் வரவினால் மஞ்சுவும், பிரமுகர் ஒருவரின் திடீர் அருகாமையால் சம்பத்தும் நிலைகுலைந்து, குழம்பி, செயலிழந்து போனாலும், சில நிமிஷ அவகாசத்தில் இவர்கள் தங்கள் நிலையிலிருந்து மீண்டுவிட்டதால்

இவற்றைத் தற்காலிகக் குழப்பங்கள் என்று கட்டம்கட்ட வேண்டி வருகிறது.

இந்த வரிசையில், குழப்பங்களை எதிர்நோக்காதவர்கள் உலகில் யாருமே இல்லை என்று கற்பூரம் அணைத்துக்கூடச் சொல்லலாம்.

ஆனால், இப்படி மீண்டு வராமல் தொடர்ந்து அந்த நிலையைப்பற்றியே எண்ணி, மாய்ந்து, உருகி, தெளிவில்லாமல் இருந்தால் அங்கு அது நிரந்தரக் குழப்பமாகி, பிரச்சினையாக உருவாகிறது.

சின்னதாக எழும் பிரச்சினை, குழப்பமாக மாறி; அந்தக் கட்டத்தில் லாடம் அடிக்கப்படாமல் நிரந்தரமாக ஆளைத் தன் கொடுக்குகளால் பற்றும்போது மீண்டும் அங்கே ஒரு பெரிய பிரச்சினை தோன்றுகிறது. ஆக, இடம் கொடுத்தால் இது ஒரு வட்டம்தான். இடம் கொடுப்பதும் கொடுக்காததும் நம் கையில்— புரிகிறதா?

தனிப்பட்ட நபருக்குத்தான் குழப்பம் வரும் என்பதில்லை; பத்துபேர்கள் சேர்ந்துவிட்டாலும், சில காரணங்களால் 'கூட்டுக் குழப்பம்' வருவது நிச்சயம்.

பேச்சாளரை மேடையில் உட்கார வைத்துவிட்டு 'மாலை எங்கே' என்று ஆளாளுக்கு விரட்டுவதையும்; கல்யாணத்துக்கு வந்தவர்களை 'வா' என்று அழைக்க ஆளில்லாமல், வந்த விருந்தாளிகள் பரிதாபமாய் திருமணங்களில் விழித்துக்கொண்டு நிற்பதையும்; ஒரு பார்ட்டியில் ஒரே சமயத்தில் எட்டு குரல்கள் பேசி, யார் என்ன சொல்கிறார்கள் என்று புரியாததையும்— அனுபவித்திருப்பீர்களே?

எனக்குத் தெரிந்து, தலைக்குத் தலை நாட்டாண்மை செய்து, அல்லோலகல்லோலப்படுத்தியதில் ரொம்ப சமர்த்தாக தாலியை வீட்டில் பத்திரமாக வைத்துவிட்டு திருத்தணிக்கு வந்த பெண் வீட்டார் உண்டு!



கூட்டுக் குழப்பம் என்பதைப்பற்றி எழுதுகையில், என் சினேகிதி பிருந்தா அடிக்கடி கேட்பது நினைவுக்கு வருகிறது. "தனியாக வீட்டில் இருந்தால் என்னால் மிகச் செம்மையாகச் செயல்பட முடிகிறது. எதையும் மறக்காமல், செய்ய வேண்டிய காரியங்களைக் குறித்துவைத்துக்கொண்டு கச்சிதமாய் திட்டமிட்டு நிறைவேற்றுவேன். ஆனால், என் பிறந்த வீட்டுக்குச் சென்றால் மட்டும் என்னுடைய இந்தத் திறமை இருக்குமிடம் தெரியாமல் போய்விடுகிறது. எதையெடுத்தாலும் குழப்பம், கத்தல்தான். இத்தனைக்கும் என் சகோதரிகள், சகோதரர்கள் எல்லோருமே புத்திசாலிகள். இருந்தும் எதையும் ஒழுங்காகச் செய்யமுடியாமல் ஒரே குழப்பம். இது ஏன்?"

பிருந்தாவின் பிறந்த வீட்டுக்கு ஒருநாள் போக நேர்ந்தபோது, இந்தக் கேள்விக்கு உண்டான பதில் எனக்குக் கிடைத்தது.

அவர் வீட்டில் நான் கேட்ட உரையாடல் ஒன்றைக் கீழே தருகிறேன்— நீங்களும் தெரிந்துகொள்ளுங்கள்.

பிருந்தா : இன்னிக்கு நாமல்லாம் எங்கயாவது வெளியில் போகலாமா?

அண்ணன்: போகலாம். எங்கே, சினிமா?

பிருந்தா : தமிழ்...

தம்பி : வேணாம், இங்கிலீஷ்.

அண்ணி : ட்ராமா போலாங்க, நாளாச்சு...

அண்ணன் குழந்தை: பீச் கூட்டிட்டுப் போறேன்னு சொன்னியே!

அண்ணன்: எல்லாரும் கிளம்புங்க. பீச் போயிட்டு ஐஸ்க்ரீம் சாப்பிடலாம்.

தங்கை 2 : நான் வரலை— பீச் காத்து எனக்கு ஒத்துக்காது.

பிருந்தா : நீ கார்லேயே உட்காரு; குழந்தைகளை தண்ணில நிக்க வெச்சிட்டு சுருக்க கூட்டிட்டு வரோம்...

அம்மா : ஏழு மணிக்கு எனக்குக் கார் வேணும்... கோவில்ல சந்தனக்காப்பு. என்கூட யார் வரீங்க?

நான்கைந்து

குரல்கள்: நான் வரலை... நான் வரேன்...

கடைசியில் ஆறேமுக்கால் மணிவரை திரும்பத்திரும்ப அத்தனைபேரும் எங்கு போகலாம் என்பதைப்பற்றிப் பேசிவிட்டு, இருட்டிவிட்டது என்று பீச் போவதைக் கைவிட, குழந்தைகள் அழ முற்பட, 'நீதான் காரணம், உன்னால்தான் தாமதம்' என்று ஒருவருக்கொருவர் குற்றம்சாட்ட...

மொத்தத்தில் பூரண களேபரக் குழப்பம்தான்!

காரணம்? தெளிவாகத் திட்டமிடாததும், ஒருவரோடு ஒருவர் ஒத்துழைக்காததும்தான்!

தற்காலிகமோ, நிரந்தரமோ, தனிப்பட்டவருக்கோ, கூட்டத்திலோ — குழப்பம் உண்டாக என்ன காரணம்? ஏராளம். சிலவற்றைப் புள்ளிகுத்தலாமா?

1. தெளிவாகத் திட்டமிடத் தெரியாமை.
2. ஒழுங்கின்மை.
3. அடுத்தவருடன் சரியாகத் தொடர்பு கொள்ளத் தெரியாமை.
4. பிறருடன் பூரணமாக ஒத்துழையாமை.
5. எதிர்காலத்தைப் பற்றின விழிப்பு இல்லாமை.
6. எதிலும் அகலக்கால் வைக்கும் குணம்.
7. மனச்சோர்வு.



8. ஒரு விஷயத்தைப் பற்றின முழு அறிவின்மை.
9. சிரத்தையின்மை.
10. எதிலும் அதீத பரபரப்பு.
11. சுயமாகச் சிந்திக்காமல் எதற்கும் பிறர் பேச்சைக் கேட்பது.
12. ஞாபகசக்தி குறைவு.
13. அளவுக்கு மீறின எதிர்பார்ப்பு.
14. சமயோசிதமின்மை.

புள்ளிகுத்திவிட்டோம்—

இனி குழப்பம் ஜனித்த பிறகு தோன்றும் விளைவுகளையும், குழப்பத்தைத் தவிர்ப்பது எப்படி என்பதையும் அடுத்து சிந்திக்கலாம்.

# 13

**நா**னாவித எண்ணங்கள், உணர்ச்சிகள், கருத்துகள் இவற்றின் கசாமுசாக் கலவை ஒரு போர்வையாக மூளையைப் போர்த்திக் குழப்பத்தைத் தலைதூக்கச் செய்யும்போது, முதல் பலி ஆடாவது சிந்திக்கும் திறன்; அடுத்து செயல் திறன்.

இதற்கு, முன் அத்தியாயத்தில் சுட்டிக்காட்டின அஸ்வத் உதாரணத்தையே மீண்டும் எடுத்துக்கொள்ளலாம்.

வெகு நிதானமாக, செம்மையாக முதல் கேள்விக்கு பதில் எழுதிவிட்டு நிமிரும் அஸ்வத், மணி மூன்றாகிவிட்டதை உணர்ந்து, அடுத்து வரும் கேள்விகளுக்கு பதிலளிக்க அவகாசம் இல்லையே என்று தவித்து, குழம்பிப் போனதில், 'இனி என்ன செய்வேன்' என்ற தேக்கம் அவன் சிந்தனையைக் கவ்வ, தொடர்ந்து பத்து நிமிஷ காலங்களுக்கு செயல்படும் திறனும் அவுட்!

இந்த இரண்டு கட்டங்களையும் தாண்டி, சுதாரித்துக்கொண்டு புத்திசாலித்தனத்துடன் அவன் மீண்டு வராதிருந்தால்?

தொடர்ந்து, 'என்ன செய்வேன்? நேரம் இல்லையே!' என்று குழம்பிக்கொண்டே இருந்திருந்தால்?

இந்த நீடிப்புதான் மீண்டும் பிரச்சினையாகி, மிகச் சுலபமாக இன்னொரு வேண்டாத உணர்வுக்குத் தாயாகிறது என்பது அறிஞர்களின் கணிப்பு.

அஸ்வத் தெளிந்திராவிடில், சிறுகச்சிறுகக் கோபம் எழுந்து அவனை ஆத்திரப்பட வைத்து, வினாத்தாளைக் கிழித்துப் போட்டுவிட்டு எழுந்துவரச் செய்யலாம்; 'நான் மோசம் போய்விட்டேன்' என்கிற துக்கமாய் மாறி மேஜை மேல் கவிழ்ந்து அழ வைக்கலாம்; அல்லது, வேறு



எத்தனையோ விதமாய் விஸ்வரூபம் எடுத்து ஆளை அலைக்கழிக்கலாம்.

குழப்பம்— சிந்தனைத் தேக்கம்— செயல் தடை— இன்னொரு உணர்ச்சியின் பிரசவம்— அதன் வெளிப்பாடு — மீண்டும் குழப்பம்...

இப்படி ஆளை விழுங்கும் வட்டமாக நம்மை அமுக்கப்பார்க்கும் குழப்பத்தைத் தவிர்க்க ஏதேனும் வழிகள் உள்ளனவா?

ஏன் இல்லாமல்?

பேப்பர் பேனாவை எடுத்துக்கொள்ளுங்கள்.

1. செய்யப்போகும் காரியத்தை முழுமையாக அலசல்.
2. செய்ய வேண்டிய முறையைத் திட்டமிடல்.
3. தெரியாத விவரங்களைத் தெரிந்துகொள்ளல்.
4. கவனத்துடனும் சிரத்தையுடனும் செயல்படல்.
5. இது இல்லையென்றால் அது—என்று மாற்றுத் தயார் செய்துகொள்ளல்.
6. எதிர்பார்ப்பது இல்லையென்று ஆனால், இடிந்து போகாமல் இருத்தல்.

1. Analysis
2. Proper Planning
3. Sharing of Knowledge
4. Observation & Concentration
5. Alternative
6. Discipline

அடக் கஷ்டகாலமே! குழப்பத்தைத் தவிர்க்கும் வழிகளை எளிமையாகக் கூறப்போகிறாள் என்று பார்த்தால், வகுப்பில் பாடம் எடுக்கிற தினுசில் என்ன பட்டியல்

இது?— என்று அவசரத்துடன் முனக உதடுகளைக் குவிப்பவர்கள்— ப்ளீஸ் ஹோல்டான்—

கலாவின் அனுபவம் இதோ பின்னோடு வருகிறது.

கலா திருமணமான பெண். கணவனுக்கு எல்ஐ.ஸி.யில் வேலை. குழந்தைகள் இரண்டு.

அன்றைக்கு, அடையாறு சித்தப்பாவுக்கு உடம்பு சரியில்லை என்கிற சேதி வருகிறது.

கலாவுக்கு உடம்பு பதறுகிறது. உடனே சித்தப்பாவைப் பார்க்க ஆவல் எழுகிறது.

ஆனாலும், பதட்டப்படாமல் சில நிமிஷங்களுக்கு யோசிக்கிறாள்.

இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?

1. சித்தப்பாவைச் சென்று பார்த்துவிட்டு, குழந்தைகள், வேலைக்காரி, கணவன் வீட்டுக்கு வரும் முன் திரும்பி விடவேண்டும். முடியுமா?
2. முடியும். மணி இப்போது ஒன்று. பாலை வாங்கி வைத்துவிட்டு இரண்டுக்குள் புறப்பட்டால், பஸ்ஸில் அடையாறு போக இருபது நிமிஷங்கள்; பிளாட் ஃபாரக் கடையில் பழங்கள் வாங்க பத்து நிமிஷங்கள்; சித்தப்பா வீட்டில் அரைமணி; மீண்டும் பஸ் பயணம்— பஸ் கிடைக்க தாமதமாகிறதென்று வைத்துக் கொண்டாலும், கண்டிப்பாய் நான்குக்குள் வந்து விடலாம்; ஐந்து நிமிஷங்கள் ஆஸ்வாசப்படுத்திக் கொண்டு வெங்காயம் அரிய உட்கார்ந்தால், நான்கரைக்கு குழந்தைகள் பள்ளியிலிருந்து திரும்பு முன் ரவா உப்புமா, காபி ரெடி; வேலைக்காரியும் அதற்குப் பின்னரே வருவாள்.
3. ஆமாம், நீளமாய் திட்டமிடும் எனக்கு சித்தப்பாவின் புதுவீட்டு விலாசம் சரியாகத் தெரியாதே! கணவருக்கு



போன் பண்ணி, போவதைச் சொல்லும்போது கேட்டுக்கொள்ளலாமா?
4. "என்னங்க? அடையாறு பஸ் டர்மினஸ்ல இறங்கி... சரி... சரி... க்ராண்ட் ஸ்வீட் ஸ்டால் பக்கத்திலேயா? சரிங்க..."
5. ஏதோ காரணத்தால் பஸ் வரவில்லை. இல்லை, சித்தப்பா வீட்டில்தான் நேரமாகிவிடுகிறது— அப்போது? எதற்கும் கையோடு ஒரு மாடர்ன் ரொட்டியை வாங்கி வந்துவிடலாம். உப்புமா செய்ய நேரம் இல்லாவிட்டால் குழந்தைகளைப் பசியுடன் காக்கவைக்காமல் உடனே டோஸ்ட் செய்து கொடுத்து விட்டு, ராத்திரி நல்ல சமையலாய்ச் செய்துவிடலாம். ஐந்தாவது படிக்கட்டுவரை இத்தனை சவரணையாய் கலாவால் வரமுடியும் என்றால் சந்தோஷம். இல்லா விட்டால்?
6. இப்போதே மணி ஒன்று. பால் வாங்கி வைத்துவிட்டு இரண்டுக்குள் கிளம்புவது கஷ்டம். அவதி அவதி என்று ஓடி, குழந்தைகள், வேலைக்காரி வரும்முன் திரும்ப முடியுமா? ம்ஹூம்... முடியாது. இன்று வேண்டாம். நாளைக்கு முன்கூட்டியே ஏற்பாடு செய்துவிட்டுப் போகலாம்...

திட்டமிடாத காரியத்தால் தாமதமாகத் திரும்பி, குழந்தைகள் பசியுடன் வாட, வேலைக்காரி பூட்டியிருக்கும் வீட்டைப் பார்த்து திரும்பிப் போக, அத்தனை வேலை களையும் செய்ய நேர்ந்த களைப்பில் புருஷனிடம் சிடுசிடுக்க, அவன் பதிலுக்குக் கத்த, எதுவும் புரியாத குழப்பத்தில் கணவன், மனைவி நடுவில் சண்டை மூள...

எதற்கு வம்பு?

சின்ன காரியமோ, பெரிசோ— புத்திசாலித்தனத்துடன் செயல்பட்டுவிட்டால் எத்தனை கச்சிதம்! எத்தனை நிம்மதி!

பிரச்சினையில் துவங்கி, குழப்பமாக வளர்ந்து, மீண்டும் பெரிய பிரச்சினையாக உருமாறுவதைப்பற்றிப் பேசுகையில், ஐந்தாவது அத்தியாயத்தில் குறிப்பிட்ட விவரம் ஒன்று ஞாபகத்துக்கு வருகிறது.

'இயற்கையிலேயே உண்டாகும் பிரச்சினை, எப்போதும் பிரச்சினையாக இருக்காமல் சிலர் வாழ்க்கையில் ஒரு முக்கிய திருப்பமாக அமைந்துவிடுகிறது' என்று எரிக் எரிக்ஸன் கூறியதை எழுதிவிட்டு, இதை பின்னொரு சமயம் விரிவாகப் பார்க்கலாம் என்று சொல்லியிருந்தேன் அல்லவா; இப்போது அதை எடுத்துக்கொள்ளலாம்.

தலையில் இடி விழுந்துவிட்டது என்று சொல்கிற மாதிரி நிஜமாகவே ஒரு சம்பவம் நிகழ்ந்தும், அதனால் நிலைகுலைந்துபோகாமல் அதை ஒரு திருப்புமுனையாக மாற்றின பாலுவை உங்களுக்கு அறிமுகம் செய்யப் போகிறேன்.

பாலுவின் அப்பா, நாகராஜன், தனியார் கம்பெனி ஒன்றில் ஜெனரல் மானேஜராக இருந்தார். கார், ஆள் என்று மகா தடபுடல் வாழ்க்கை. மனைவி சொந்த வீடு வேண்டும் என்று ஆசைப்பட, நான்கு கிரவுண்டில் மாளிகையாக வீடு. சலவைக்கல் பாத்ரூம்; வெள்ளை மொஸைக் தரை என்று பார்த்துப்பார்த்து இழைத்த கட்டடம். நாகராஜன் தம்பதிக்கு இரண்டு பிள்ளைகள் மட்டுமே— பாலு, சேகர்.

பாலு எம்.ஏ. முதல் ஆண்டும், சேகர் பி.காம். இரண்டாவது வருஷமும் படிக்கையில், காலையில் கல்லு குண்டு மாதிரி ஆபீஸுக்குப் போன நாகராஜன் நான்கு மணி சுமாருக்குப் பிணமாக வீட்டுக்குக் கொண்டு வரப்பட்டார். மாஸிவ் ஹார்ட் அட்டாக்.

என்ன ஏது என்று புரிந்துகொள்வதற்குள், பதினைந்தாம் நாள் கம்பெனியிலிருந்து ஆள் வந்துவிட்டது, காரை ஓட்டிச்செல்ல.



— ரொம்ப ஸாரி மிஸஸ் நாகராஜன்—வருகிற ஒன்றாம் தேதியிலிருந்து கூர்க்கா, பியூன் எல்லோரும் வர மாட்டார்கள்.

பணிவோடு உத்தரவு வந்துவிட்டது.

இங்கேதான் இத்தனை நாள் வரை பொறுப்பின்றி திரிந்துகொண்டிருந்த பாலு கதாநாயகனாக மாறினான்.

ஐயோ— என்று தலையில் கை வைத்து உட்கார்ந்து விடாமல், உசுப்பிக்கொண்டு சிந்தித்தான்.

"வீடு கட்ட கம்பெனியில் கடன் வாங்கியது போக, கைக்குக் கிடைத்திருப்பது ஒரு சில ஆயிரங்கள்தான். இந்தப் பணத்தைப் பாங்க்கில் அம்மா பேரில் போடப்போகிறேன். எனக்கு இனி படிப்பு வேண்டாம். அப்பா கம்பெனியில் உதவி மானேஜர் பதவி தர முன்வந்திருப்பதை ஒப்புக் கொள்ளப்போகிறேன். எங்கள் மூவருக்கும் மாடி மட்டும் எதேஷ்டம்— கீழ்ப்போர்ஷனை ஆயிரத்து இருநூறுக்கு வாடகைக்கு விட்டுவிடலாம். என்ன மாமா?"

ரொம்ப சமர்த்தாய், ரொம்ப விவேகத்துடன் யோசித்துத் திட்டமிட்டு அன்று பாலு என் தந்தையிடம் பேசியது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது.

இன்று பாலு அந்தக் கம்பெனியின் பர்சேஸ் மானேஜர். மூவாயிரத்துச் சில்லறை சம்பளம். பழையபடி வசதியான வாழ்க்கை. தம்பி எம்.பி.ஏ. அம்மாவைக் கண்ணுக்குள் வைத்துத் தாங்குகிறார்கள். அப்புறம் என்ன?

அடுத்து, குறிப்பிடப்போகும் சம்பவம், மேற்சொன்னதி லிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருந்தாலும் இதுவும் ஒரு திருப்புமுனை சமாச்சாரம்தான்.

எனக்கு ரொம்ப வேண்டியவள் ஒருத்தி, கார் ஓட்டக் கற்று லைசென்ஸ் எடுத்த அன்று சைக்கிள்காரர் ஒருவர் மேல் லேசாக மோதிவிட்டாள். அதிலிருந்து காளானாக மனசில் ஒரு தயக்கம், பயம், நுனி விரலால் ஸ்டீரிங்வீலைத் தொடமாட்டேன் என்று முரண்டு.

இவளுக்குத் திருமணமாயிற்று. புருஷனுக்கு வடக்கே ஒரு மூலையில் உத்தியோகம்.

இரண்டாம் வருஷம் குழந்தை பிறந்தது. ஐந்தாம் மாசம் இதற்கு வயிற்றுப்போக்குக் கண்டது. நிலைமை மோசமாக, ஆஸ்பத்திரியில் குழந்தையை அட்மிட் செய்யும் நிர்ப்பந்தம்.

சோதனை மாதிரி கணவன் ஊரில் இல்லாத சங்கடம்.

பக்கத்து வீட்டுக்காரர் தயவுதாட்சண்யம் பார்த்து முதல் நாள் கூட வந்தார். அப்புறம் 'மன்னிக்கணும், ஃபாக்டரியில் நான் எட்டு மணிக்கு இருந்தாக வேண்டும். புரிந்துகொள்ளுங்கள்' என்று கூறி நகர்ந்துவிட, இவள் வெலவெலத்துக் குழம்பிப்போனாள்.

வீட்டுக்கும், ஆஸ்பத்திரிக்கும் எட்டு கிலோ மீட்டர் இடைவெளி. வழி நெடுகக் கடைத்தெரு. ஆஸ்பத்திரி இருப்பதோ, ஒரு சின்ன குன்றின் மேல்... தனியாக வண்டியை ஓட்டிச் சென்றுவர இயலுமா?

ஒரே நாள்தான்...

தெளிந்துவிட்டாள்.

இப்படிச் செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதை உணர்ந்த மாதிரி மனசில் உறுதி பூண்டாள். மறுநாள் துணிந்து வண்டியை எடுத்துவிட்டாள்.

இன்றைக்கு — ரேஸில் ஓட்டக்கூடிய அளவுக்கு அவள் வண்டி ஓட்டுவதில் கெட்டிக்காரி!

எப்படி!

தானும் குழம்பி, சுற்றி இருக்கிறவர்களையும் குழப்பி, வாழ்க்கையை நரகமாக்கிக்கொள்ளாமல் யதார்த்தமாக சிந்தித்து செயல்பட்டு, வெற்றி கண்ட இவர்களின் அனுபவங்களைப் பார்க்கையில், எரிக் எரிக்ஸனின் வாயில் நாலுபிடி சர்க்கரை போடவேண்டும் என்றே எனக்குத் தோன்றுகிறது. உங்களுக்கு?

# 14

"அடுத்தவருடன் முழுமையாகத் தொடர்பு கொள்ளாமை — என்று குறிப்பிட்டிருக்கிறீர்களே, இதை இன்னும் விளக்கிச் சொல்வது சாத்தியமா!" — என்று கேட்டிருக்கிறார் வாசக நண்பர் ரவீந்திரன்.

முயற்சிக்கலாம்.

வேதாந்தி ஜே. கிருஷ்ணமூர்த்தியின் வழியில் சிந்தித்து, நம்மை நாமே சில கேள்விகளைக் கேட்டுக்கொள்ளலாம்.

வாழ்க்கையின் அர்த்தம் என்ன?

உயிர் வாழ்தல்.

எப்படி உயிர் வாழ்தல் அவசியம்?

நிம்மதியோடு.

சரி, இந்த நிம்மதியை அடைவது எப்படி?

நம்மைச் சுற்றி இருக்கும் எல்லா ஜீவராசிகளுடன் சரியான உறவை உண்டாக்கிக்கொள்வதன் மூலம்...

இது எப்படி சாத்தியம்?

அது நாயோ, பூனையோ, மனிதரோ, யாராக இருப்பினும் முழுமையாகத் தொடர்பு கொள்வதன் மூலம் சரியான உறவை ஸ்தாபித்து; எரிச்சல், சண்டை, கோபதாபங்கள், பொறாமை ஆகியவற்றைத் தவிர்த்து விட்டால் நிம்மதியாக வாழ்வது சாத்தியம்தானே?

புரிகிறதா, ரவீந்திரன்?

நிம்மதியுடன் வாழ்வதுதான் வாழ்வின் தலையாய குறிக்கோள் என்பதைப் புரிந்துகொண்டுவிட்டால், அதை அடைவது எப்படி என்று சிந்தித்து செயல்படுவதுதானே புத்திசாலித்தனம்?

நிம்மதி நிம்மதி என்கிறீர்களே, சந்தோஷமாக வாழ வேண்டாமா என்று குறுக்குக் கேள்வி எழலாம்— நியாய மான கேள்வி. பத்துலட்சம் லாட்டரியில் பரிசு விழுந்தவர் சந்தோஷமாக இருப்பார்; ஆனால் அவர் நிம்மதியாகவும் இருக்கிறார் என்று கூற இயலுமா? சந்தோஷத்துக்குள் நிம்மதி அடங்குவதில்லை. இது உறுதி. ஆனால் எப்போது நிம்மதி ஒருவரை வியாபிக்கிறதோ, கண்டிப்பாய் அவருள் திருப்தி, சந்தோஷம் ஆகிய உணர்வுகளும் நிறைந்தே இருக்கும். கேள்வி கேட்டவர் தயவுசெய்து தனித்து உட்கார்ந்து யோசிக்க வேண்டும்.

இந்த குணம் சுலபமாய் கடையில் கிடைக்கும் சமாச் சாரமில்லை; துளித்துளியாய் நமக்குள் நாமே உண்டாக்கிக் கொள்ள வேண்டிய விழிப்புணர்வுகளில் ஒன்று.

மாடிப்படியின் மேல்படியாக நிம்மதி இருக்கிறதாக வைத்துக்கொண்டால், அதை நோக்கிச் செல்ல காலெடுத்து வைக்கவேண்டிய படி— நிச்சயம் அடுத்தவருடன் சரியாகத் தொடர்புகொள்ளுவதுதான்.

அன்றாட வாழ்க்கையில், நம்மைச் சுற்றி இருப்பவர் களுடன் பக்குவமாக உறவுகளை அமைத்துக்கொள்ள முயற்சிக்காததே, நம்முடைய பல பிரச்சினைகளுக்கும் அஸ்திவாரமாகிறது என்கிற உண்மையை நம்மில் எத்தனைபேர் உணர்ந்திருக்கிறோம்?

எளிமையான ஓர் உதாரணத்தின் மூலம் இந்தக் கூற்றை நிரூபிக்கலாம்...

நண்பர் கார்த்திகேயனுக்குச் சென்ற வெள்ளி அன்று பங்களூரில் ஒரு அவசர வேலை. காலையில் சென்று வேலையைக் கவனித்துவிட்டு, மாலையே சென்னை திரும்பும் நிர்ப்பந்தம்.

விமானத்தில் இடம் கிடைக்கவில்லை என்பதால் விடிகாலை நான்கு மணி அளவில் டாக்ஸியில் கிளம்பி ஒன்பதுக்குள் பங்களூரை அடைந்து, வேலையைக் கவனித்துவிட்டு, மாலை விமானத்தில் ஊர் திரும்பத் திட்டம் போட்டவர்; வேலையோடு வேலையாய் பங்களூரில் நண்பர் பாஸ்கரனையும் சந்திக்க விரும்பி அவரிடம் தன் வருகையைத் தெரிவிப்பதோடு, 'ஏர்ப் போர்ட்டுக்கு முன்னதாக வந்துவிடுகிறேன். நீங்கள் அங்கு வந்தால் பேசிக்கொண்டிருக்கலாம்' என்றும் கூறவேண்டி, முதல்நாள் போனில் தொடர்புகொள்ள முயன்றார். ம்ஹூம். லைன் கிடைக்கவில்லை.

"நீங்கள் புறப்படுங்கள். ட்ரங்கால் போட்டு நான் விவரத்தைச் சொல்லிவிடுகிறேன்" என்று மனைவி பத்மா கூற, கார்த்திகேயன் புறப்பட்டுச் சென்றார்.

கணவரை அனுப்பின கையோடு, ரொம்ப சமர்த்தாய் பத்மா பங்களூருக்கு ட்ரங்கால் பதிவு செய்தார்.

ஏழு மணி ஆகியும் லைன் கிடைக்காமல் இருக்க, மகனை அழைத்து, 'நான் குளிக்கப் போகிறேன். பங்களூர் கால் வந்தால் பாஸ்கரனிடம் அப்பா அங்கு வரும் விவரத்தைச் சொல்லி, விமானக்கூடத்தில் சந்திக்கச் சொல்' என்று கூறினார். அத்துடன் தன் பொறுப்பு முடிந்துவிட்ட மாதிரி அக்கடா என்று குளிக்கப் போய்விட்டார்.

இங்குதான் முதல் தவறு ஜனித்தது.

'எப்போது சந்திக்க வேண்டும்' என்கிற விவரத்தை ஞாபகமின்மையாலோ, அவசரத்தாலோ பத்மா மறந்துவிட, முழுமையான தொடர்பு இல்லாத சமாச்சாரத்துக்கு அந்த நிமிஷம் கொடியேற்றம் ஆகிவிட்டது.

கால் மணியில் பங்களூர் லைன் கிடைத்துவிட்டது. பிள்ளை, அம்மா கூறியதை அப்படியே திருப்பிச் சொல்ல, புத்திசாலியான பாஸ்கரன் விவரம் அரைகுறையாக இருப்பதை உணர்ந்து, 'எப்போது?' என்று பதில் கேள்வி கேட்டார்.

பிள்ளைக்கு, அப்பா காலையில் பங்களூருக்குப் போய் விட்டு மாலையில் திரும்பும் சேதி மட்டுமே தெரியும். காலை விமானத்தில் இடம் கிடைக்காததோ, கடைசி நிமிஷத்தில் டாக்ஸியில் புறப்பட்டுப் போனதோ தெரியாது.

சும்மா இருந்திருக்கலாம். அல்லது ஒரு நிமிஷம் உள்ளே வந்து அம்மாவிடம் கேட்டு முழுமையாக விஷயத்தைத் தெரிந்து கூறியிருக்கலாம்.

ஆனால் அவன் இரண்டையும் செய்யவில்லை.

இயல்பாகத் தலைதூக்கும் முந்திரிக்கொட்டைத் தனத்துடன், இத்தனை அவசரமாக அப்பா நண்பரைச் சந்திக்க விரும்பினால் அது பங்களூரில் செய்யவேண்டிய ஒரு வேலையின் பொருட்டுதான்; ஆக, நிச்சயம் காலையில்தான்— என்கிற முடிவுக்கு வந்து அதையே பாஸ்கரிடம் தெரிவித்தான்.

முதலில் பத்மா செய்தது Short Communication என்றால், மகன் செய்தது, Excess Communication.

இந்த இரண்டு தவறுகளின் காரணமாய் சரியில்லாத ஒரு விவரம் பாஸ்கரனிடம் வந்துவிட, பாவம் அவர், அவசரம் அவசரமாய் ஏர்ப்போட்டுக்கு ஓடினார். காலை விமானம் வந்துவிட்டது. காத்திருந்த பயணிகளில் கார்த்திகேயன் இல்லை.

ஒருவேளை என்னைக் காணாததால், டாக்ஸியில் ஹோட்டலுக்குச் சென்றுவிட்டாரோ?

வழக்கமாகக் கார்த்திகேயன் தங்கும் ஹோட்டலுக்குச் சென்றால், 'வரவில்லையே, சார்!'

முக்கியமான வேலை இல்லாவிட்டால் கார்த்திகேயன் சந்திக்கச் சொல்லமாட்டார் என்பதால், அன்றைக்குக் கோர்ட்டில் இருந்த கேஸை யார்யாரையோ பிடித்துக் கெஞ்சி, வாய்தா வாங்க வைத்துவிட்டு, ஹோட்டலிலேயே



பழிகிடந்த பாஸ்கரன், இரண்டு மணிக்குமேல் தாள மாட்டாமல் சென்னைக்கு போன் செய்து, 'கார்த்திகேயன் இன்னும் வரவில்லையே! ஏன்?' என்று கேட்க நினைத்தால், அவர் அதிர்ஷ்டம், பத்மாவும் மகனும் வெளியில் போயிருந்தார்கள்.

காலையில் காரில் கிளம்பிய மகனுக்கு ஏதோ விபத்து ஆகியிருக்க வேண்டும் என கார்த்திகேயனின் வயதான தாயார் பதற, வெளியில் போயிருந்த பத்மா திரும்பி வந்து 'மாலையில்தான் ஏர்ப்போர்ட்டில் சந்திக்க வேண்டும்' என்று நிலைமையைப் புரியவைப்பதற்குள் — எம அல்லோலகல்லோலம்தான்!

இது தவிர, சரியானபடி தொடர்புகொள்ளாததால், அன்றைக்கு பாஸ்கரனுக்கு நாள் முழுவதும் அலைச்சல் என்பதோடு, முக்கியமான கோர்ட் வேலையும் கோவிந்தா!

ஒரு வார்த்தைதான்— ஆனால் மாறிப் போவதனால் எத்தனை அவஸ்தைகள்!

இதை எனக்குத் தெரிந்த ஆடிட்டர் ரொம்ப அழகாகச் சொல்லுவார்!

"கணக்கைக் கூட்டும் சமயத்தில் தவறுதலாய் பத்துரூபாய் உபரியாகிவிட்ட அதே சமயத்தில், செலவிலும் இசகுபிசகாய் பத்துரூபாய் அதிகமானால், இருப்புத் தொகையின் கணக்கு சரியாக வந்துவிடும். ஆனால் இது தவறான கணக்கு. இரண்டு பக்கமும் உள்ள தவறை நிவர்த்தி செய்து ஒழுங்காகக் கணக்கை வைத்திருப்பது எவ்வளவு அவசியமோ, அத்தனை முக்கியம், குறைவான அல்லது அதிகமான தொடர்புகள் இல்லாமல் (Without Short or Excess Communication) தெளிவாக செய்திகளைக் கொடுக்கவேண்டியதும்..."

சரியான தொடர்பு என்பதைப்பற்றிப் பேசுகையில் பிரபலமான ஒரு விளையாட்டு என் நினைவுக்கு வருகிறது.

பதினைந்து அல்லது இருபது பேர்கள் வட்டமாய் உட்கார்ந்துகொள்ள வேண்டும். முதல் நபர் ஒரு காகிதத்தில் நான்கு வரியில் ஒரு சேதியை எழுதி வைத்துவிட்டு, பிறகு அதையே அடுத்த நபரின் காதில் சொல்லவேண்டும். கேட்டுக்கொண்ட விஷயத்தை இரண்டாமவர், மூன்றாமவரின் காதில் சொல்ல, இப்படி விவரம் கடைசி ஆளிடம் வரவேண்டும். அதை அவர் உரக்கச் சொன்னால்— நம்ப மாட்டீர்கள்— சத்தியமாய் முதல் நபர் எழுதி வைத்திருக்கும் சமாச்சாரத்துக்கும் இதற்கும் ஸ்நானப்ராப்தி கூட இருக்காது!

எதற்குமே கண், காது, மூக்கு வைத்துப் பேசுவதும், நமக்குப் பிடிக்காததைத் தவிர்ப்பதும் பலரிடம் இயல்பாக இருப்பதால், முருகன்—குமரன் ஆகியிருப்பான்; பிள்ளை, செக்ஸ் மாறி பெண்ணாகியிருப்பாள்; பணக்காரன் ஏழையாகி நடுத்தெருவில் நின்றுகொண்டிருப்பான்!

ஒரு தரம், 'ராமேஸ்வரத்தில் குருவி தங்காது' என்கிற பழமொழியைக் கேட்டுவிட்டு, அர்த்தமில்லாமல் இருக்கும் இது கண்டிப்பாய் மாறாட்டக் கேஸ்தான் என்பதை உணர முடிய, விடாமல் அதன் வேரைத் தேடினேன். எத்தனையோ பேர்களிடம் கேட்ட பிறகு ஒரு பெரியவர், 'ராம சரம் குறி தப்பாது'— என்று அதன் தாயைக் காட்டிக்கொடுத்தார்!

இப்படி, விளையாட்டாக பல சமயங்களில் சிரித்துத் தள்ளிவிட்டாலும், விழிப்புணர்வு இல்லாமல் காரியங்களில் ஈடுபட்டு, அடுத்தவருடன் அரைகுறையாகத் தொடர்பு கொண்டு, நாமும் கஷ்டப்பட்டு, அவர்களையும் தொந்தரவு பண்ணிக்கொண்டே இருக்கிறோமே — இதற்கெல்லாம் ஒரு முடிவு கட்ட வேண்டாமா?

# 15

சுசித்ரா என்னைச் சந்திக்க வந்தபோது அவள் கண் ஓரங்களில் நீர் கட்டியிருந்தது.

அடி உதட்டைக் கடித்தபடி உட்கார்ந்தது, சில நிமிஷங்களில் தன்னை ஆஸ்வாசப்படுத்திக்கொண்டு அவள் பேசியபோது குரல் செம்மிப் போயிருந்தது.

தெரிந்தவர்கள் வீட்டில் விசேஷம் என்று போயிருக்கிறாள். பத்து பேர் நடுவில் அமர்ந்திருக்கையில், முன்பின் அறிமுகம் ஆகாத பெண்மணி ஒருவர் இவளிடம் பேச்சுக் கொடுத்திருக்கிறார்.

"நீ யாரு? இதுக்கு முன்னால நான் பார்த்ததில்லையே!"

"நாங்க இந்த ஊருக்குப் புதுசு. இத்தனை வருஷமா பம்பாய்ல இருந்தோம்..."

"அப்படியா? புருஷன் என்ன பண்றாரு?"

"வியாபாரம்."

"குழந்தைங்க எத்தனை?"

"இ... இன்னும் பிறக்கலை..."

"அ? கல்யாணம் கட்டி எத்தனை வருஷமாச்சு?"

"நாலு."

"முருகா! நாலு வருஷம் ஆகியுமா இன்னும் ஒண்ணும் இல்லே? வேணாம்னு இருக்கிங்களா?"

"வந்து... வந்து... அதெல்லாம்... இ... இல்லே..."

"அப்புறம்? நல்ல டாக்டர் யாரையாச்சும் பாத்திங்களா?"

# 13

**நா**னாவித எண்ணங்கள், உணர்ச்சிகள், கருத்துகள் இவற்றின் கசாமுசாக் கலவை ஒரு போர்வையாக மூளையைப் போர்த்திக் குழப்பத்தைத் தலைதூக்கச் செய்யும் போது, முதல் பலி ஆடாவது சிந்திக்கும் திறன்; அடுத்து செயல் திறன்.

இதற்கு, முன் அத்தியாயத்தில் சுட்டிக்காட்டின அஸ்வத் உதாரணத்தையே மீண்டும் எடுத்துக்கொள்ளலாம்.

வெகு நிதானமாக, செம்மையாக முதல் கேள்விக்கு பதில் எழுதிவிட்டு நிமிரும் அஸ்வத், மணி மூன்றாகி விட்டதை உணர்ந்து, அடுத்து வரும் கேள்விகளுக்கு பதிலளிக்க அவகாசம் இல்லையே என்று தவித்து, குழம்பிப் போனதில், 'இனி என்ன செய்வேன்' என்ற தேக்கம் அவன் சிந்தனையைக் கவ்வ, தொடர்ந்து பத்து நிமிஷ காலங்களுக்கு செயல்படும் திறனும் அவுட்!

இந்த இரண்டு கட்டங்களையும் தாண்டி, சுதாரித்துக் கொண்டு புத்திசாலித்தனத்துடன் அவன் மீண்டு வராதிருந்தால்?

தொடர்ந்து, 'என்ன செய்வேன்? நேரம் இல்லையே!' என்று குழம்பிக்கொண்டே இருந்திருந்தால்?

இந்த நீடிப்புதான் மீண்டும் பிரச்சினையாகி, மிகச் சுலபமாக இன்னொரு வேண்டாத உணர்வுக்குத் தாயாகிறது என்பது அறிஞர்களின் கணிப்பு.

அஸ்வத் தெளிந்திராவிடில், சிறுகச்சிறுகக் கோபம் எழுந்து அவனை ஆத்திரப்பட வைத்து, வினாத்தாளைக் கிழித்துப் போட்டுவிட்டு எழுந்துவரச் செய்யலாம்; 'நான் மோசம் போய்விட்டேன்' என்கிற துக்கமாய் மாறி மேஜை மேல் கவிழ்ந்து அழ வைக்கலாம்; அல்லது, வேறு



எத்தனையோ விதமாய் விஸ்வரூபம் எடுத்து ஆளை அலைக்கழிக்கலாம்.

குழப்பம்— சிந்தனைத் தேக்கம்— செயல் தடை— இன்னொரு உணர்ச்சியின் பிரசவம்— அதன் வெளிப்பாடு — மீண்டும் குழப்பம்...

இப்படி ஆளை விழுங்கும் வட்டமாக நம்மை அமுக்கப்பார்க்கும் குழப்பத்தைத் தவிர்க்க ஏதேனும் வழிகள் உள்ளனவா?

ஏன் இல்லாமல்?

பேப்பர் பேனாவை எடுத்துக்கொள்ளுங்கள்.

1. செய்யப்போகும் காரியத்தை முழுமையாக அலசல்.
2. செய்ய வேண்டிய முறையைத் திட்டமிடல்.
3. தெரியாத விவரங்களைத் தெரிந்துகொள்ளல்.
4. கவனத்துடனும் சிரத்தையுடனும் செயல்படல்.
5. இது இல்லையென்றால் அது—என்று மாற்றுத் தயார் செய்துகொள்ளல்.
6. எதிர்பார்ப்பது இல்லையென்று ஆனால், இடிந்து போகாமல் இருத்தல்.

1. Analysis
2. Proper Planning
3. Sharing of Knowledge
4. Observation & Concentration
5. Alternative
6. Discipline

அடக் கஷ்டகாலமே! குழப்பத்தைத் தவிர்க்கும் வழிகளை எளிமையாகக் கூறப்போகிறாள் என்று பார்த்தால், வகுப்பில் பாடம் எடுக்கிற தினுசில் என்ன பட்டியல்

இது?— என்று அவசரத்துடன் முனக உதடுகளைக் குவிப்பவர்கள்— ப்ளீஸ் ஹோல்டான்—

கலாவின் அனுபவம் இதோ பின்னோடு வருகிறது.

கலா திருமணமான பெண். கணவனுக்கு எல்.ஐ.ஸி.யில் வேலை. குழந்தைகள் இரண்டு.

அன்றைக்கு, அடையாறு சித்தப்பாவுக்கு உடம்பு சரியில்லை என்கிற சேதி வருகிறது.

கலாவுக்கு உடம்பு பதறுகிறது. உடனே சித்தப்பாவைப் பார்க்க ஆவல் எழுகிறது.

ஆனாலும், பதட்டப்படாமல் சில நிமிஷங்களுக்கு யோசிக்கிறாள்.

இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?

1. சித்தப்பாவைச் சென்று பார்த்துவிட்டு, குழந்தைகள், வேலைக்காரி, கணவன் வீட்டுக்கு வரும் முன் திரும்பி விடவேண்டும். முடியுமா?
2. முடியும். மணி இப்போது ஒன்று. பாலை வாங்கி வைத்துவிட்டு இரண்டுக்குள் புறப்பட்டால், பஸ்ஸில் அடையாறு போக இருபது நிமிஷங்கள்; பிளாட்ஃபாரக் கடையில் பழங்கள் வாங்க பத்து நிமிஷங்கள்; சித்தப்பா வீட்டில் அரைமணி; மீண்டும் பஸ் பயணம்— பஸ் கிடைக்க தாமதமாகிறதென்று வைத்துக் கொண்டாலும், கண்டிப்பாய் நான்குக்குள் வந்து விடலாம்; ஐந்து நிமிஷங்கள் ஆஸ்வாசப்படுத்திக் கொண்டு வெங்காயம் அரிய உட்கார்ந்தால், நான்கரைக்கு குழந்தைகள் பள்ளியிலிருந்து திரும்பு முன் ரவா உப்புமா, காபி ரெடி; வேலைக்காரியும் அதற்குப் பின்னரே வருவாள்.
3. ஆமாம், நீளமாய் திட்டமிடும் எனக்கு சித்தப்பாவின் புதுவீட்டு விலாசம் சரியாகத் தெரியாதே! கணவருக்கு போன் பண்ணி, போவதைச் சொல்லும்போது கேட்டுக்கொள்ளலாமா?



4. "என்னங்க? அடையாறு பஸ் டர்மினஸ்ல இறங்கி... சரி... சரி... க்ராண்ட் ஸ்வீட் ஸ்டால் பக்கத்திலேயா? சரிங்க..."
5. ஏதோ காரணத்தால் பஸ் வரவில்லை. இல்லை, சித்தப்பா வீட்டில்தான் நேரமாகிவிடுகிறது— அப்போது? எதற்கும் கையோடு ஒரு மாடர்ன் ரொட்டியை வாங்கி வந்துவிடலாம். உப்புமா செய்ய நேரம் இல்லாவிட்டால் குழந்தைகளைப் பசியுடன் காக்கவைக்காமல் உடனே டோஸ்ட் செய்து கொடுத்து விட்டு, ராத்திரி நல்ல சமையலாய்ச் செய்துவிடலாம். ஐந்தாவது படிக்கட்டுவரை இத்தனை சவரணையாய் கலாவால் வரமுடியும் என்றால் சந்தோஷம். இல்லா விட்டால்?
6. இப்போதே மணி ஒன்று. பால் வாங்கி வைத்துவிட்டு இரண்டுக்குள் கிளம்புவது கஷ்டம். அவதி அவதி என்று ஓடி, குழந்தைகள், வேலைக்காரி வரும்முன் திரும்ப முடியுமா? ம்ஹூம்... முடியாது. இன்று வேண்டாம். நாளைக்கு முன்கூட்டியே ஏற்பாடு செய்துவிட்டுப் போகலாம்...

திட்டமிடாத காரியத்தால் தாமதமாகத் திரும்பி, குழந்தைகள் பசியுடன் வாட, வேலைக்காரி பூட்டியிருக்கும் வீட்டைப் பார்த்து திரும்பிப் போக, அத்தனை வேலை களையும் செய்ய நேர்ந்த களைப்பில் புருஷனிடம் சிடுசிடுக்க, அவன் பதிலுக்குக் கத்த, எதுவும் புரியாத குழப்பத்தில் கணவன், மனைவி நடுவில் சண்டை மூள...

எதற்கு வம்பு?

சின்ன காரியமோ, பெரிசோ— புத்திசாலித்தனத்துடன் செயல்பட்டுவிட்டால் எத்தனை கச்சிதம்! எத்தனை நிம்மதி!

பிரச்சினையில் துவங்கி, குழப்பமாக வளர்ந்து, மீண்டும் பெரிய பிரச்சினையாக உருமாறுவதைப்பற்றிப் பேசுகையில், ஐந்தாவது அத்தியாயத்தில் குறிப்பிட்ட விவரம் ஒன்று ஞாபகத்துக்கு வருகிறது.

'இயற்கையிலேயே உண்டாகும் பிரச்சினை, எப்போதும் பிரச்சினையாக இருக்காமல் சிலர் வாழ்க்கையில் ஒரு முக்கிய திருப்பமாக அமைந்துவிடுகிறது' என்று எரிக் எரிக்ஸன் கூறியதை எழுதிவிட்டு, இதை பின்னொரு சமயம் விரிவாகப் பார்க்கலாம் என்று சொல்லியிருந்தேன் அல்லவா; இப்போது அதை எடுத்துக்கொள்ளலாம்.

தலையில் இடி விழுந்துவிட்டது என்று சொல்கிற மாதிரி நிஜமாகவே ஒரு சம்பவம் நிகழ்ந்தும், அதனால் நிலைகுலைந்துபோகாமல் அதை ஒரு திருப்புமுனையாக மாற்றின பாலுவை உங்களுக்கு அறிமுகம் செய்யப் போகிறேன்.

பாலுவின் அப்பா, நாகராஜன், தனியார் கம்பெனி ஒன்றில் ஜெனரல் மானேஜராக இருந்தார். கார், ஆள் என்று மகா தடபுடல் வாழ்க்கை. மனைவி சொந்த வீடு வேண்டும் என்று ஆசைப்பட, நான்கு கிரவுண்டில் மாளிகையாக வீடு. சலவைக்கல் பாத்ரூம்; வெள்ளை மொஸைக் தரை என்று பார்த்துப்பார்த்து இழைத்த கட்டடம். நாகராஜன் தம்பதிக்கு இரண்டு பிள்ளைகள் மட்டுமே— பாலு, சேகர்.

பாலு எம்.ஏ. முதல் ஆண்டும், சேகர் பி.காம். இரண்டாவது வருஷமும் படிக்கையில், காலையில் கல்லு குண்டு மாதிரி ஆபீஸுக்குப் போன நாகராஜன் நான்கு மணி சுமாருக்குப் பிணமாக வீட்டுக்குக் கொண்டு வரப்பட்டார். மாஸிவ் ஹார்ட் அட்டாக்.

என்ன ஏது என்று புரிந்துகொள்வதற்குள், பதினைந்தாம் நாள் கம்பெனியிலிருந்து ஆள் வந்துவிட்டது, காரை ஓட்டிச்செல்ல.



— ரொம்ப ஸாரி மிஸஸ் நாகராஜன்—வருகிற ஒன்றாம் தேதியிலிருந்து கூர்க்கா, பியூன் எல்லோரும் வர மாட்டார்கள்.

பணிவோடு உத்தரவு வந்துவிட்டது.

இங்கேதான் இத்தனை நாள் வரை பொறுப்பின்றி திரிந்துகொண்டிருந்த பாலு கதாநாயகனாக மாறினான்.

ஐயோ— என்று தலையில் கை வைத்து உட்கார்ந்து விடாமல், உசுப்பிக்கொண்டு சிந்தித்தான்.

"வீடு கட்ட கம்பெனியில் கடன் வாங்கியது போக, கைக்குக் கிடைத்திருப்பது ஒரு சில ஆயிரங்கள்தான். இந்தப் பணத்தைப் பாங்கில் அம்மா பேரில் போடப்போகிறேன். எனக்கு இனி படிப்பு வேண்டாம். அப்பா கம்பெனியில் உதவி மானேஜர் பதவி தர முன்வந்திருப்பதை ஒப்புக் கொள்ளப்போகிறேன். எங்கள் மூவருக்கும் மாடி மட்டும் எதேஷ்டம்— கீழ்ப்போர்ஷனை ஆயிரத்து இருநூறுக்கு வாடகைக்கு விட்டுவிடலாம். என்ன மாமா?"

ரொம்ப சமர்த்தாய், ரொம்ப விவேகத்துடன் யோசித்துத் திட்டமிட்டு அன்று பாலு என் தந்தையிடம் பேசியது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது.

இன்று பாலு அந்தக் கம்பெனியின் பர்சேஸ் மானேஜர். மூவாயிரத்துச் சில்லறை சம்பளம். பழையபடி வசதியான வாழ்க்கை. தம்பி எம்.பி.ஏ. அம்மாவைக் கண்ணுக்குள் வைத்துத் தாங்குகிறார்கள். அப்புறம் என்ன?

அடுத்து, குறிப்பிடப்போகும் சம்பவம், மேற்சொன்னதி லிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருந்தாலும் இதுவும் ஒரு திருப்புமுனை சமாச்சாரம்தான்.

எனக்கு ரொம்ப வேண்டியவள் ஒருத்தி, கார் ஓட்டக் கற்று லைசென்ஸ் எடுத்த அன்று சைக்கிள்காரர் ஒருவர் மேல் லேசாக மோதிவிட்டாள். அதிலிருந்து காளானாக மனசில் ஒரு தயக்கம், பயம், நுனி விரலால் ஸ்டீரிங்வீலைத் தொடமாட்டேன் என்று முரண்டு.

இவளுக்குத் திருமணமாயிற்று. புருஷனுக்கு வடக்கே ஒரு மூலையில் உத்தியோகம்.

இரண்டாம் வருஷம் குழந்தை பிறந்தது. ஐந்தாம் மாசம் இதற்கு வயிற்றுப்போக்குக் கண்டது. நிலைமை மோசமாக, ஆஸ்பத்திரியில் குழந்தையை அட்மிட் செய்யும் நிர்ப்பந்தம்.

சோதனை மாதிரி கணவன் ஊரில் இல்லாத சங்கடம்.

பக்கத்து வீட்டுக்காரர் தயவுதாட்சண்யம் பார்த்து முதல் நாள் கூட வந்தார். அப்புறம் 'மன்னிக்கணும், ஃபாக்டரியில் நான் எட்டு மணிக்கு இருந்தாக வேண்டும். புரிந்துகொள்ளுங்கள்' என்று கூறி நகர்ந்துவிட, இவள் வெலவெலத்துக் குழம்பிப்போனாள்.

வீட்டுக்கும், ஆஸ்பத்திரிக்கும் எட்டு கிலோ மீட்டர் இடைவெளி. வழி நெடுகக் கடைத்தெரு. ஆஸ்பத்திரி இருப்பதோ, ஒரு சின்ன குன்றின் மேல்... தனியாக வண்டியை ஓட்டிச் சென்றுவர இயலுமா?

ஒரே நாள்தான்...

தெளிந்துவிட்டாள்.

இப்படிச் செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதை உணர்ந்த மாதிரி மனசில் உறுதி பூண்டாள். மறுநாள் துணிந்து வண்டியை எடுத்துவிட்டாள்.

இன்றைக்கு — ரேஸில் ஓட்டக்கூடிய அளவுக்கு அவள் வண்டி ஓட்டுவதில் கெட்டிக்காரி!

எப்படி!

தானும் குழம்பி, சுற்றி இருக்கிறவர்களையும் குழப்பி, வாழ்க்கையை நரகமாக்கிக்கொள்ளாமல் யதார்த்தமாக சிந்தித்து செயல்பட்டு, வெற்றி கண்ட இவர்களின் அனுபவங்களைப் பார்க்கையில், எரிக் எரிக்ஸனின் வாயில் நாலுபிடி சர்க்கரை போடவேண்டும் என்றே எனக்குத் தோன்றுகிறது. உங்களுக்கு?

# 14

"அடுத்தவருடன் முழுமையாகத் தொடர்பு கொள்ளாமை — என்று குறிப்பிட்டிருக்கிறீர்களே, இதை இன்னும் விளக்கிச் சொல்வது சாத்தியமா!" — என்று கேட்டிருக்கிறார் வாசக நண்பர் ரவீந்திரன்.

முயற்சிக்கலாம்.

வேதாந்தி ஜே. கிருஷ்ணமூர்த்தியின் வழியில் சிந்தித்து, நம்மை நாமே சில கேள்விகளைக் கேட்டுக்கொள்ளலாம்.

வாழ்க்கையின் அர்த்தம் என்ன?

உயிர் வாழ்தல்.

எப்படி உயிர் வாழ்தல் அவசியம்?

நிம்மதியோடு.

சரி, இந்த நிம்மதியை அடைவது எப்படி?

நம்மைச் சுற்றி இருக்கும் எல்லா ஜீவராசிகளுடன் சரியான உறவை உண்டாக்கிக்கொள்வதன் மூலம்...

இது எப்படி சாத்தியம்?

அது நாயோ, பூனையோ, மனிதரோ, யாராக இருப்பினும் முழுமையாகத் தொடர்பு கொள்வதன் மூலம் சரியான உறவை ஸ்தாபித்து; எரிச்சல், சண்டை, கோபதாபங்கள், பொறாமை ஆகியவற்றைத் தவிர்த்து விட்டால் நிம்மதியாக வாழ்வது சாத்தியம்தானே?

புரிகிறதா, ரவீந்திரன்?

நிம்மதியுடன் வாழ்வதுதான் வாழ்வின் தலையாய குறிக்கோள் என்பதைப் புரிந்துகொண்டுவிட்டால், அதை அடைவது எப்படி என்று சிந்தித்து செயல்படுவதுதானே புத்திசாலித்தனம்?

நிம்மதி நிம்மதி என்கிறீர்களே, சந்தோஷமாக வாழ வேண்டாமா என்று குறுக்குக் கேள்வி எழலாம்— நியாய மான கேள்வி. பத்துலட்சம் லாட்டரியில் பரிசு விழுந்தவர் சந்தோஷமாக இருப்பார்; ஆனால் அவர் நிம்மதியாகவும் இருக்கிறார் என்று கூற இயலுமா? சந்தோஷத்துக்குள் நிம்மதி அடங்குவதில்லை. இது உறுதி. ஆனால் எப்போது நிம்மதி ஒருவரை வியாபிக்கிறதோ, கண்டிப்பாய் அவருள் திருப்தி, சந்தோஷம் ஆகிய உணர்வுகளும் நிறைந்தே இருக்கும். கேள்வி கேட்டவர் தயவுசெய்து தனித்து உட்கார்ந்து யோசிக்க வேண்டும்.

இந்த குணம் சுலபமாய் கடையில் கிடைக்கும் சமாச் சாரமில்லை; துளித்துளியாய் நமக்குள் நாமே உண்டாக்கிக் கொள்ள வேண்டிய விழிப்புணர்வுகளில் ஒன்று.

மாடிப்படியின் மேல்படியாக நிம்மதி இருக்கிறதாக வைத்துக்கொண்டால், அதை நோக்கிச் செல்ல காலெடுத்து வைக்கவேண்டிய படி— நிச்சயம் அடுத்தவருடன் சரியாகத் தொடர்புகொள்ளுவதுதான்.

அன்றாட வாழ்க்கையில், நம்மைச் சுற்றி இருப்பவர் களுடன் பக்குவமாக உறவுகளை அமைத்துக்கொள்ள முயற்சிக்காததே, நம்முடைய பல பிரச்சினைகளுக்கும் அஸ்திவாரமாகிறது என்கிற உண்மையை நம்மில் எத்தனைபேர் உணர்ந்திருக்கிறோம்?

எளிமையான ஓர் உதாரணத்தின் மூலம் இந்தக் கூற்றை நிரூபிக்கலாம்...

நண்பர் கார்த்திகேயனுக்குச் சென்ற வெள்ளி அன்று பங்களூரில் ஒரு அவசர வேலை. காலையில் சென்று வேலையைக் கவனித்துவிட்டு, மாலையே சென்னை திரும்பும் நிர்ப்பந்தம்.

விமானத்தில் இடம் கிடைக்கவில்லை என்பதால் விடிகாலை நான்கு மணி அளவில் டாக்ஸியில் கிளம்பி



ஒன்பதுக்குள் பங்களூரை அடைந்து, வேலையைக் கவனித்துவிட்டு, மாலை விமானத்தில் ஊர் திரும்பத் திட்டம் போட்டவர்; வேலையோடு வேலையாய் பங்களூரில் நண்பர் பாஸ்கரனையும் சந்திக்க விரும்பி அவரிடம் தன் வருகையைத் தெரிவிப்பதோடு, 'ஏர்ப் போர்ட்டுக்கு முன்னதாக வந்துவிடுகிறேன். நீங்கள் அங்கு வந்தால் பேசிக்கொண்டிருக்கலாம்' என்றும் கூறவேண்டி, முதல்நாள் போனில் தொடர்புகொள்ள முயன்றார். ம்ஹூம். லைன் கிடைக்கவில்லை.

"நீங்கள் புறப்படுங்கள். ட்ரங்கால் போட்டு நான் விவரத்தைச் சொல்லிவிடுகிறேன்" என்று மனைவி பத்மா கூற, கார்த்திகேயன் புறப்பட்டுச் சென்றார்.

கணவரை அனுப்பின கையோடு, ரொம்ப சமர்த்தாய் பத்மா பங்களூருக்கு ட்ரங்கால் பதிவு செய்தார்.

ஏழு மணி ஆகியும் லைன் கிடைக்காமல் இருக்க, மகனை அழைத்து, 'நான் குளிக்கப் போகிறேன். பங்களூர் கால் வந்தால் பாஸ்கரனிடம் அப்பா அங்கு வரும் விவரத்தைச் சொல்லி, விமானக்கூடத்தில் சந்திக்கச் சொல்' என்று கூறினார். அத்துடன் தன் பொறுப்பு முடிந்துவிட்ட மாதிரி அக்கடா என்று குளிக்கப் போய்விட்டார்.

இங்குதான் முதல் தவறு ஜனித்தது.

'எப்போது சந்திக்க வேண்டும்' என்கிற விவரத்தை ஞாபகமின்மையாலோ, அவசரத்தாலோ பத்மா மறந்துவிட, முழுமையான தொடர்பு இல்லாத சமாச்சாரத்துக்கு அந்த நிமிஷம் கொடியேற்றம் ஆகிவிட்டது.

கால் மணியில் பங்களூர் லைன் கிடைத்துவிட்டது. பிள்ளை, அம்மா கூறியதை அப்படியே திருப்பிச் சொல்ல, புத்திசாலியான பாஸ்கரன் விவரம் அரைகுறையாக இருப்பதை உணர்ந்து, 'எப்போது?' என்று பதில் கேள்வி கேட்டார்.

பிள்ளைக்கு, அப்பா காலையில் பங்களூருக்குப் போய் விட்டு மாலையில் திரும்பும் சேதி மட்டுமே தெரியும். காலை விமானத்தில் இடம் கிடைக்காததோ, கடைசி நிமிஷத்தில் டாக்ஸியில் புறப்பட்டுப் போனதோ தெரியாது.

சும்மா இருந்திருக்கலாம். அல்லது ஒரு நிமிஷம் உள்ளே வந்து அம்மாவிடம் கேட்டு முழுமையாக விஷயத்தைத் தெரிந்து கூறியிருக்கலாம்.

ஆனால் அவன் இரண்டையும் செய்யவில்லை.

இயல்பாகத் தலைதூக்கும் முந்திரிக்கொட்டைத் தனத்துடன், இத்தனை அவசரமாக அப்பா நண்பரைச் சந்திக்க விரும்பினால் அது பங்களூரில் செய்யவேண்டிய ஒரு வேலையின் பொருட்டுதான்; ஆக, நிச்சயம் காலையில்தான்— என்கிற முடிவுக்கு வந்து அதையே பாஸ்கரிடம் தெரிவித்தான்.

முதலில் பத்மா செய்தது Short Communication என்றால், மகன் செய்தது, Excess Communication.

இந்த இரண்டு தவறுகளின் காரணமாய் சரியில்லாத ஒரு விவரம் பாஸ்கரனிடம் வந்துவிட, பாவம் அவர், அவசரம் அவசரமாய் ஏர்ப்போர்ட்டுக்கு ஓடினார். காலை விமானம் வந்துவிட்டது. காத்திருந்த பயணிகளில் கார்த்திகேயன் இல்லை.

ஒருவேளை என்னைக் காணாததால், டாக்ஸியில் ஹோட்டலுக்குச் சென்றுவிட்டாரோ?

வழக்கமாகக் கார்த்திகேயன் தங்கும் ஹோட்டலுக்குச் சென்றால், 'வரவில்லையே, சார்!'

முக்கியமான வேலை இல்லாவிட்டால் கார்த்திகேயன் சந்திக்கச் சொல்லமாட்டார் என்பதால், அன்றைக்குக் கோர்ட்டில் இருந்த கேஸை யார்யாரையோ பிடித்துக் கெஞ்சி, வாய்தா வாங்க வைத்துவிட்டு, ஹோட்டலிலேயே



பழிகிடந்த பாஸ்கரன், இரண்டு மணிக்குமேல் தாள மாட்டாமல் சென்னைக்கு போன் செய்து, 'கார்த்திகேயன் இன்னும் வரவில்லையே! ஏன்?' என்று கேட்க நினைத்தால், அவர் அதிர்ஷ்டம், பத்மாவும் மகனும் வெளியில் போயிருந்தார்கள்.

காலையில் காரில் கிளம்பிய மகனுக்கு ஏதோ விபத்து ஆகியிருக்க வேண்டும் என கார்த்திகேயனின் வயதான தாயார் பதற, வெளியில் போயிருந்த பத்மா திரும்பி வந்து 'மாலையில்தான் ஏர்ப்போர்ட்டில் சந்திக்க வேண்டும்' என்று நிலைமையைப் புரியவைப்பதற்குள் — எம அல்லோலகல்லோலம்தான்!

இது தவிர, சரியானபடி தொடர்புகொள்ளாததால், அன்றைக்கு பாஸ்கரனுக்கு நாள் முழுவதும் அலைச்சல் என்பதோடு, முக்கியமான கோர்ட் வேலையும் கோவிந்தா!

ஒரு வார்த்தைதான்— ஆனால் மாறிப் போவதனால் எத்தனை அவஸ்தைகள்!

இதை எனக்குத் தெரிந்த ஆடிட்டர் ரொம்ப அழகாகச் சொல்லுவார்!

"கணக்கைக் கூட்டும் சமயத்தில் தவறுதலாய் பத்துரூபாய் உபரியாகிவிட்ட அதே சமயத்தில், செலவிலும் இசகுபிசகாய் பத்துரூபாய் அதிகமானால், இருப்புத் தொகையின் கணக்கு சரியாக வந்துவிடும். ஆனால் இது தவறான கணக்கு. இரண்டு பக்கமும் உள்ள தவறை நிவர்த்தி செய்து ஒழுங்காகக் கணக்கை வைத்திருப்பது எவ்வளவு அவசியமோ, அத்தனை முக்கியம், குறைவான அல்லது அதிகமான தொடர்புகள் இல்லாமல் (Without Short or Excess Communication) தெளிவாக செய்திகளைக் கொடுக்கவேண்டியதும்..."

சரியான தொடர்பு என்பதைப்பற்றிப் பேசுகையில் பிரபலமான ஒரு விளையாட்டு என் நினைவுக்கு வருகிறது.

"அ... அது வந்து..."

சுற்றி இருந்த அத்தனை பேரின் கவனமும் தன் மேல் படர்ந்துவிட்டதைப் புரிந்துகொள்ள முடிய, காது மடல்கள் சிவக்க, உதடுகள் துடிக்க, அவமானத்தால் குன்றிப் போனவள், "நாழியாச்சு... நாங்க கிளம்பணும்" என்று முனகி விட்டு அவசரமாய் எழுந்து வந்திருக்கிறாள்.

விஷயத்தை என்னிடம் கூறி முடிப்பதற்குள் கன்னங்களில் கோடாய் கண்ணீர்.

"ஏன் இப்படிப் பண்பில்லாம நடந்துக்கறாங்க? நான் எட்டு பெத்திருந்தா இவங்களுக்கு என்ன, ஒண்ணுமே இல்லாம இருந்தாத்தான் என்ன? பணம் இருந்தா ஆச்சா? மனுஷங்களுக்கு நாகரிகம் வேணாம்?"

சுசித்ராவின் நியாயமான குமுறலை ஒரு பக்கமாய் வைத்துவிட்டு, பிரதாப் என்ன சொல்கிறார் என்பதைக் காது கொடுத்துக் கேட்கலாம்.

"சந்திரன் வீட்டுக்குப் போயிருந்தேன். அவன் பிரதர்— இத்தனைக்கும் குழந்தை இல்லே, நாற்பது வயசுக்காரர்— கன்னாபின்னானு நூறு கேள்வி கேட்டுட்டார். எந்த ஆபீஸ்ல உத்தியோகம், என்ன சம்பளம், உன் மனைவிக்கு என்ன சம்பளம், வாடகை எத்தனை கொடுக்கறே— இப்படி! மை காட்! எதைப்பத்தி பேசலாம், கூடாதுன்ற லிமிட்கூட பல பேருக்குப் புரியறதில்லே. இதெல்லாம் பண்பு இல்லேனு சொல்லியா தரணும்?"

சுசித்ரா, பிரதாப் இருவரின் அனுபவங்களும் வித்தியாசமாக இருக்கலாம். ஆனால் அவர்களின் விரல்கள் சுட்டிக்காட்டும் குற்றச்சாட்டு ஒன்றுதான்.

பண்பு இல்லாமை...

நாகரிகம் தெரியாமை...



பண்பாடு— தமிழ்ப் பண்பாடு— என்று கதையில் படித்து, சினிமாவில் பார்த்து, மேடைகளில் கேட்டு அலுத்துப் போயிருக்கும் நமக்கு, அதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதோ, செயலில் காட்ட வேண்டும் என்பதோ சுத்தமாய் தெரியாமல், நினைவில்லாமல் போனது ஆச்சரியம்தான்!

நிஜமாய்த்தான் கேட்கிறேன்— இப்படிப் பல சமயங்கள் பண்பில்லாமல் நடந்துகொள்வதற்குக் காரணம் தெரியாத் தனமா, அசட்டுத்தனமா, இல்லை அலட்சியமா?

எதுவாக இருப்பினும், நம்மிடம் வளர்த்துக்கொள்ள வேண்டிய பண்பாடு பற்றிச் சிந்தித்து செயல்பட வேண்டியது மிக, மிக அவசியம்.

அன்றாட வாழ்க்கையில் ஒருத்தர் கடைப்பிடிக்க வேண்டிய பண்பு— அவரவர் தனித்தன்மை, விருப்பு வெறுப்பு— இவற்றைப் பொறுத்ததுதான் என்றாலும், பொதுவாக சார்ந்திருக்கும் சூழ்நிலை, சமுதாயத்தின் விதிமுறைகள் இவற்றுக்கேற்ப ஒருவர் நடந்துகொள்வது தான் நாகரிகமான செயல்.

மேல்நாடுகளில், ஒரு பெண். அல்லது ஆண் பொது இடங்களில், அலுவலகங்களில், நண்பர்களின் இல்லங்களில், (இன்னும் பல சந்தர்ப்பங்களிலும்கூட) எப்படி நடந்து கொள்வது நல்லபண்பு என்பதைப்பற்றி எக்கச்சக்கமான புத்தகங்கள் வெளிவந்துள்ளன.

தமிழிலும், தமிழர் பண்பாடு என்று ஓரிருவர் எழுதி இருக்கிறார்கள்தாம்.

எனவே, யாருக்கும் தெரியாத எதையோ ஆகாசத்தி லிருந்து பறித்து வந்துவிட்ட மாதிரி அல்லாமல், ஏற்கெனவே எல்லாருக்கும் தெரிந்த, ஆனால், பல சந்தர்ப்பங்களில் நடைமுறையில் காட்ட மறந்திருக்கும் சில பண்பு நிறைந்த பழக்கவழக்கங்களை இப்போது பார்க்கலாம்.

முதலில் வீடு.

வீட்டுக்கு யார் வந்தாலும் அவரை வரவேற்று உட்காரச் சொல்லுவது, பெரியோர்களின் அறிமுகத்துக்கு முன்னால் எழுந்து நிற்பது, போன்ற விவரங்கள் குழந்தைக்குக்கூடத் தெரியும்; அதனால், அடுத்த வீட்டுக்கு நாம் செல்ல நேர்ந்தால் கடைப்பிடிக்க வேண்டிய சில பண்பாடுகளைக் கவனிக்கலாம்.

எவருடைய இல்லத்துக்காவது போக விரும்புபவர்கள், முன்கூட்டியே தகவல் தெரிவிக்காமல் 'லொடக்' என்று போய் நிற்பது நிச்சயம் நாகரிகக் குறைவுதான். அன்றைக்குப் பார்த்து அந்த வீட்டுப் புருஷனும், மனைவியும் சண்டை போட்டுக்கொண்டிருக்கலாம். குழந்தையுடன் பீச்சுக்குக் கிளம்பிக்கொண்டிருக்கலாம். உச்சந்தலை முதல், உள்ளங்கால் வரை எண்ணெய் தேய்த்துக்கொண்டு, தைலக் காப்பிட்ட சிலையாய் நிற்கலாம்— எதற்கு வம்பு?

நம்மை ஒருவர் விருந்துக்கு அழைக்கிறார் என்றால், கூடுமானவரையில் குறிப்பிட்ட நேரத்தில் அங்கு செல்வது தான் மரியாதை.

'ஏழு மணி சுமாருக்கு வாங்க' என்று அவர் குறிப்பிட்டிருந்தால் சற்று முன்பின் போகலாம்— மற்றபடி குறித்த நேரத்தில் போகும் பங்க்சுவாலிட்டி கட்டாயம் வளர்த்துக் கொள்ளவேண்டிய குணம். இதற்காக 'ஊருக்கு முன்னால் உலக்கைக்குத் தாலி கட்டுகிறேன்' என்று சீக்கிரமே போவதும் தவறு. அந்த நிமிஷங்களில் குடும்பத்தலைவி அலங்கோலமாய் இன்னும் சமையல்கட்டிலேயே நின்று கொண்டிருக்கலாம். கணவன் வெற்றிலை, பழம் வாங்க வெளியில் போயிருக்கலாம். அவர்கள் பிஸியாக இருக்கையில் அசடு வழிந்துகொண்டு இடைஞ்சலாக அங்கு உட்கார்ந்திருப்பது எதற்கு?



நீங்கள் நவநாகரிகப் பெண்ணாக இருக்கலாம். ஆயினும் இன்னும் பல குடும்பங்களில் ஆண்களுக்கு ஒரு பந்தி, பெண்களுக்குத் தனி என்னும் பழக்கம் உள்ளதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, சாப்பிட வாருங்கள் என்று அழைத்ததும் பந்திக்கு முந்திக்கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

பரிமாறுவதில், இதர வேலைகளில் உதவட்டுமா என்று குடும்பத்தலைவியிடம் அவசியம் கேட்க வேண்டும்தான். ஆனால் 'வேண்டாம்' என்று அவர் கூறிவிட்டால் அதன் பிறகும் தொணதொணவென்று அவர் கையிலிருப்பதைப் பறித்துக்கொண்டு நாட்டாண்மை செய்யப்பார்ப்பது அநாகரிகம்.

தெரிந்தவர்களோ, தெரியாதவர்களோ யாராக இருந்தாலும் அந்தரங்க சமாச்சாரங்களைப்பற்றி மட்டும் கண்டிப்பாய் பேசவே கூடாது. சம்பளம் எவ்வளவு, புடவை விலை எத்தனை, அது என்ன, இது என்ன போன்ற கேள்விகள் விலக்கப்பட வேண்டியவை. தங்களைப் பற்றின விவரங்களை அவர்களாகவே சொன்னால் கேட்டுக் கொள்ளலாம். மற்றபடி மூன்றாம் மனிதர் எதிரில் ஒருவரின் பர்ஸனல் சேதிகளை அலசுவது பண்பே இல்லாத செயல்.

உடை உடுத்துவதிலும் கடைப்பிடிக்க வேண்டிய நல்ல பழக்கங்கள் உள்ளன.

சாதாரண மாதர் சங்கக் கூட்டத்துக்கு சரிகை போட்ட பட்டுப் புடவையும், கோட் ஸ்டாண்ட் மாதிரி நகையும் அணிந்து வரும் பெண்மணி மிகமிக நல்லவராக இருந்தாலும், 'இது என்ன வேஷம்! தனக்கு இருப்பதை இப்படி டாம்டாம் அடிக்க வேண்டுமா? இது என்ன பண்பில்லாத செயல்' என்று தவறாக மற்றவர்கள் பேசியதை நான் கேட்டிருக்கிறேன்.

இதேபோல, வெள்ளை உள்ளம் கொண்ட மல்லிகா அலுவலகத்துக்கு எப்போது ஷிஃபான்களையும், ஸீத்ரு

நைலான்களையும் உடுத்தி வந்தாளோ அப்போதிலிருந்து அவளுக்கு மற்றவர்களிடம் கிடைத்த பெயர் 'மேனா மினுக்கி!'

அறியாமையின் காரணமாக, பொது இடங்களுக்கு எப்படி உடை அணிந்து வரவேண்டும் என்கிற பண்பை மேற்கொள்ள இருவரும் தவறியதால், வீணான அவப் பெயர்!

துக்க வீட்டுக்கு சர்வாலங்கார பூஷிதையாகச் செல்வதும், சுபகாரியங்கள் நடக்கும் இடத்துக்கு அழுத கண்ணும் விரித்த தலையுமாய் போவதும்., நிச்சயம் பண்பு குறைவான செயல்தானே?

தொலைபேசியில் பேசுகையில் நாம் சுழற்றின நமபரா என்று கேட்டுவிட்டு, அடுத்து நமக்கு வேண்டிய நபரின் பெயரைச் சொல்லி விசாரிப்பது முறையான செயல். அதை விட்டுவிட்டு, மணி அடித்து அந்தப் பக்கம் யாராவது ரிஸீவரை எடுத்த உடனே "யார் பேசறது?" என்று வினவுவது அசல் அடாவடி!

ஓர் ஆணையும், பெண்ணையும் அறிமுகப்படுத்த வேண்டி வந்ததென்றால், முதலில் ஆணை பெண்ணுக்கும், பிறகு பெண்ணை ஆணுக்கும் அறிமுகப்படுத்துவது பண்பு என்று கருதப்படுகிறது.

அலுவலகத்தில் வேலைபார்க்கும் பலரிடம் ஒருவர் பெயரை ஒருவர் சொல்லிக் கூப்பிடும் பழக்கம் உள்ளது. இதனால் சில சங்கடங்கள் வருவதுண்டு— உஷாவுக்கு வந்த மாதிரி!

உஷாவும், பாலகோபாலும் நல்ல நண்பர்கள். உஷா, பாலா என்று கூப்பிட்டுக்கொள்ளும் அன்யோன்யம் உண்டு. ஒரு தரம், அலுவலகக் கூட்டம் ஒன்றில் உஷா நண்பனை 'பாலா' என்று கூப்பிட, "அது எப்படி நீ என்னை எல்லார்



முன்னாலும் கூப்பிடலாம்? அலுவலகத்தில் உனக்கு நான் மானேஜர். 'மிஸ்டர் பாலகோபால்' என்பதுதான் முறை" என்று அவன் சண்டைக்கு வந்துவிட்டான். இந்த மாதிரி தவறுகளைத் தவிர்க்க, எத்தனைதான் நெருக்கமாக இருந்தாலும் முன்கூட்டியே ஒருவரது விருப்பு வெறுப்பு களைத் தெரிந்துகொள்வது பண்பு.

ஒருவர் பேசும்போது குறுக்கே பேசுவதும்; கேள்வி கேட்டு அவர் பதில் கூறுமுன் எழுந்து போவதும்; வந்திருப்பவர்களுக்குத் தொந்தரவா இல்லையா என்பதை அறியாமல் சிகரெட் பிடிப்பதும்; பெரியோர்கள் எதிரில் அமர்ந்து காலாட்டுவதும்; சப்தமாக ஏப்பம் விடுவதும்; அசிங்க ஓசைகளுடன் சாப்பிடுவதும்; காரணமில்லாமல் சிரிப்பதும்; தன்னை, தன்னைச் சார்ந்தவற்றைப்பற்றி பீற்றுவதும் இருபாலாருக்கும் பொதுவான பல பண் பில்லாத செயல்களில் சில...

பொது இடங்களில், நான்கு பேர்களுக்கு முன்னால் தான் பண்போடு நடந்துகொள்ள வேண்டும் என்பதில்லை.

வீட்டில், கணவனும் மனைவியும்கூட ஒருவரிடம் ஒருவர் நாகரிகத்தோடு பழக வேண்டியது அவசியம்.

மனைவிக்குக் கார் கதவைத் திறந்துவிடுவது, அவள் பெட்டியைத் தூக்கி வருவது, வீட்டுக் காரியங்களில் அவளுக்கு உதவி செய்வது எல்லாம்கூட பண்புமிக்க செயல்கள்தாம்! 'அய்! பெண்டாட்டிதாசன் டோய்!' என்று யாராவது கேலி பண்ணினால், தயவுசெய்து இந்தக் காதால் வாங்கி அந்தக் காதால் விட்டுவிடுங்கள்!

எனக்குத் தெரிந்த ஒரு தம்பதி நடுவில் ரொம்ப அன்யோன்யம்— புருஷனை 'என்னடா' என்று கேட்கும் அளவுக்கு!

அவர்களிடையே உள்ள உறவுமுறை எப்படி இருந்தாலும் அதைப்பற்றி மூன்றாம் நபர் கவலைப்படுவது

அநாகரிகம் என்று நான் நினைத்தாலும், அவர்களைப் பின்னால் மற்றவர்கள் கேலி பண்ணுவதைத் தடுக்க ஒரு தரம், "இந்த 'டா'வை எல்லாம் தனியாக இருக்கும்போது வைத்துக்கொள்ளேன்" என்றேன்.

அவர்களுக்குக் கோபமான கோபம்!

"வேஷதாரிகள் நிறைந்த இந்தச் சமுதாயத்தைக் கண்டு நாங்கள் பயப்படமாட்டோம்.. இதெல்லாம் எங்கள் சொந்த விருப்பம்! தலையிட யாருக்கும் உரிமை இல்லை"— குட்டியாய் ஒரு லெக்சர் கொடுத்துவிட்டுப் போனார்கள்.

நிஜம்தான்...

அவர்கள் சொன்னதில் தவறில்லைதான்...

"எங்கம்மாவுக்கு பாப்பா பொறந்திருக்கு" என்று சொன்ன குழந்தையிடம், "என்ன குழந்தைடா?" என, அது, "தெரியாது, அதுக்கு இன்னும் ட்ரெஸ்ஸும் போடலை, பேரும் வைக்கலை"— என்று சொன்ன நிகழ்ச்சிதான் என் ஞாபகத்துக்கு வருகிறது.

இயற்கையாக அமைந்த பல நல்ல விஷயங்கள் மாற செயற்கை காரணமாயிருக்கிறது— நான் மறுக்கவில்லை.

என்றாலும்?

ஆரோக்கியமான சமுதாயத்தையும், அது சரிவர இயங்க சில விதிமுறைகள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன— அவைதான் நமது பண்பாடுகள் என்பதையும், நாம் மறந்துவிடுவது நியாயமா என்ன?

# 16

'சின்ன வயசு முதற்கொண்டே, பிரபலமான எழுத்தாளராக வேண்டும் என்கிற ஆர்வம் எனக்குள் தகதகக்கிறது. இதன் காரணமாய் இதுவரைக்கும் எத்தனையோ சிறுகதைகளை எழுதி பல பத்திரிகைகளுக்கு அனுப்பி, அத்தனையும் 'போன மச்சான் திரும்பி வந்தான்' — என்று திரும்பி வந்ததுதான் மிச்சம். இந்த ஏமாற்றத்தைத் தாங்க இயலாமல் நான் நொந்துபோயிருக்கிறேன். ச்சே என்ன வாழ்க்கை இது— என்கிற கசப்புதான் இப்போது என்னுள் நிறைந்திருக்கிறது. எப்படியாவது என் எழுத்துக்களை அச்சில் பார்க்கவேண்டும் என்கிற ஆசையில் கடைசி முயற்சியாக உங்களுக்கு எழுதுகிறேன்— எனக்கு உதவ இயலுமா? ப்ளீஸ்?'—

இந்த மாதிரி வேண்டுகோள்கள் எனக்கு மட்டுமல்ல, சக எழுத்தாளர்களுக்கும், கலையுலகில் புகழ்பெற்று இருப்பவர்களுக்கும் கண்டிப்பாய் அடிக்கடி வரும் விஷயம்.

இப்படி வேண்டும் நண்பர்கள், இரண்டு விஷயங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்வது நல்லது. ஒன்று, உதவ விருப்பம் இருந்தாலும், அது எங்கள் கையை மீறின விஷயம் என்பது; இரண்டு, இன்றைக்குப் பிரபலமாக இருப்பவர்களில் பலர் திறமையால் மட்டுமே முன்னுக்கு வந்தவர்தாம் என்பது. ஒருசிலருக்கு அதிர்ஷ்டத்தின் ஒத்துழைப்பு இருக்கலாம்; ஆனால் அவர்களும்கூட சிபாரிசு அடிப்படையில் நிச்சயமாய் வளர்ந்தவர்கள் இல்லை.

எழுத்துலகில் அடியெடுத்துவைக்க விரும்பும் அனைவரும் புது கண்ணோட்டத்தில் பார்க்க, சிந்திக்க, கற்பனை பண்ணத் துணிய வேண்டும். நிறைய படித்து,

பார்த்து, கேட்டு, உணர்ந்து, அனுபவித்து விஷயஞானங்களைத் தொடர்ந்து பெற்றுக்கொண்டே இருக்கவேண்டும். இந்த குணம் தவிர, செய்யும் காரியத்தில் கவனமும், சிரத்தையும், நம்பிக்கையும், கடைசியாக பொறுமையையும் கூட ரொம்ப அத்யாவசியமான அடிப்படைகளாகக் கொண்டால், பலன் மடியில் ஏறித் தானாக உட்கார்ந்து கொள்ளும்.

இதையெல்லாம் 'சீச்சி இந்தப் பழம் புளிக்கும்' என்று சோர்ந்து உட்கார்ந்துவிட்டவர்களுக்கு உல்லுல்லாக்காட்டிக்காக நான் கூறவில்லை என்பதை நிரூபிக்க கீழே சில உதாரணங்கள்—

ரிச்சர்ட் பாக் என்ற எழுத்தாளர் எழுதிய 'ஜோனாதன் லிவிங்ஸ்டன் ஸீகல்' என்கிற புத்தகம் முதலில் பதினெட்டு பிரசுரகர்த்தாக்களால் நிராகரிக்கப்பட்டு (அசல் கஜினி முகம்மது கேஸ்தான்!) பிறகு, வேண்டா வெறுப்பாக மாக்மில்லன் நிறுவனத்தாரால் 7500 பிரதிகள் மட்டுமே வெளியிடப்பட்டது. ஆனால், வெளியிட்ட சில மாதங்களிலேயே, மூர்ச்சை போடாதீர்கள், 70 லட்சம் பிரதிகள் மீண்டும் அச்சிடப்பட்டு சிறந்த புத்தகமாக பாராட்டப்பட்டதோடு, படமாகவும் வெளியானது.

இர்விங்ஸ்டோனைத் தெரியுமல்லவா? இவர் எழுதின 'தி லஸ்ட் ஃபார் லைஃப்' கஜினிக்குத் தம்பியாய் 17 முறைகள் ஒதுக்கித் தள்ளப்பட்டு, போனால் போகிறது என்று புத்தகமாகக் கொண்டுவந்தால்— யம்மாடியோவ்— கிட்டத்தட்ட இரண்டு கோடியே நாற்பது லட்சம் பிரதிகள் விற்பனையாயின! எப்படி! நம்ப முடிகிறதா?

எழுத்தாளர்களில்தான் இப்படி என்றில்லை. எல்லாத் தொழில்களிலுமே, நம்பிக்கை இழக்காமல், உடும்புப்பிடி பிடித்து எதை எதையோ சாதித்தவர்கள் உண்டு.



பிரபல ஹாலிவுட் நடிகராகத் திகழ்ந்த காரி கூப்பர், டஜன் கணக்கில் இருந்த ஸ்டண்ட் ஆட்களில் ஒருவராகப் பல வருஷங்களுக்குப் பணிபுரிந்தவர்.

ராக் ஹட்ஸன் லாரி டிரைவராகவும், ஜான் வெய்ன் ஸ்டுடியோவில் எடுபிடியாகவும் ஆரம்ப நாட்களில் வேலை செய்துவந்தவர்கள்தாம்.

அவ்வளவு தூரம் போவானேன்—

மிகமிக வறுமையான நிலையில், பாய்ஸ் கம்பெனியில் சின்ன வயசில் தொழிலை ஆரம்பித்த நமது முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர், சிவாஜிகணேசன் ஆகியோரில் தொடங்கி, மதுரை ஹோட்டலில் சர்வராகப் பணிபுரிந்து, பட்டினியில் வாடி, இன்று 'ஓஹோ' என்று விஸ்வரூபம் எடுத்திருக்கும் பாக்யராஜ் வரை நம் தமிழ்நாட்டிலேயே எத்தனை பேர்களை அருமையான உதாரணங்களாக்கலாம்!

இத்தனையும் கூறியும் தூக்கிவைத்துக்கொண்ட முகம் தூக்கியபடி இருக்க, மனசில் சிரிப்பு என்கிற நாமதேயமே இல்லாமல், 'என்ன இருந்தாலும் இதற்கெல்லாம் கொடுத்து வைத்திருக்க வேண்டும் சார்! இன்றைக்குப் பிரகாசிப்பவர்கள் கண்டிப்பாய் பிறந்தபோது அதிபுத்திசாலிகளாகப் பிறந்தவர்கள்தாம்— சின்ன வயசில் அதிர்ஷ்டம் இல்லையே தவிர, அன்றைக்கும்கூட இவர்களின் புத்திகூர்மை நிச்சயம் அலாதியாய்த்தான் இருந்திருக்கும்!'— என்று அங்கலாய்ப்பவர்கள் கொஞ்சம் நிதானிக்கவேண்டும்.

வின்ஸ்டன் சர்ச்சிலைத் தெரியும் அல்லவா? இங்கிலாந்தின் பிரதமராக இருந்து உலகப்புகழ்பெற்ற இவர் லண்டன் ஹாரோ பள்ளியில் ஒவ்வொரு வகுப்பிலும் மூன்று வருஷங்கள் தங்கிப் படித்து 'உருப்படாத கேஸ்' என்று முத்திரை குத்தப்பட்டவர்.

ஜி.கே. செஸ்டர்டன் — பிரபல ஆங்கில எழுத்தாளர் — எட்டு வயது வரை மிகமிக மந்தமான பையனாக

இருந்தார். பள்ளித் தலைமை ஆசிரியர் 'இவன் தலையைத் திறந்து பார்த்தால் மூளை என்கிற சமாச்சாரம் பகவான் சாட்சியாய் இருக்காது'— என்று அடிக்கடி கிண்டல் செய்வதுண்டாம்!

தியரி ஆஃப் ரிலேடிவிடியைக் கண்டுபிடித்த உலக மேதையான ஐன்ஸ்டீன் 'அதிமக்கு' என்று சின்ன வயசில் உற்றாரிடமும், சுற்றத்தாரிடமும் சர்ட்டிஃபிகேட் வாங்கினவர்.

'குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன்' என்கிற தத்துவத்தை உலகுக்கு வெளிப்படுத்தின டார்வின், பள்ளியில் அனைவராலும் 'எதற்கும் லாயக்கில்லாதவன்' என்று ஒதுக்கப்பட்டதோடு, 'அறிவாளிகள் நிறைந்த குடும்பத்தில் இப்படி ஒரு மக்கா!'— என்று குடும்பத்தாரின் புலம்பல்களை நிறைய வாங்கிக்கட்டிக்கொண்டவர்.

மின்சாரத்தைக் கண்டுபிடித்த தாமஸ் ஆல்வா எடிஸனுக்கு அனைவரிடமிருந்தும் சின்ன வயசில் கிடைத்த செல்லப் பெயர், 'ஞானசூன்யம்'!

எகிப்தின் தலைவராக இருந்த உலகப்புகழ்பெற்ற நாஸர், பதினான்கே பதினான்கு வயசில் ரொம்ப பகீரதப் பிரயத்தனப்பட்டு நா...ன்கு (அம்மாடி, மூச்சு வாங்குகிறது) வகுப்புகளைப் பாஸ் பண்ணியவர்!

போதுமா, இல்லை இன்னும் கொஞ்சம் வேண்டுமா?

இத்தனையும் கேட்டுவிட்டு, 'நீ என்ன சொன்னாலும் நான் சமாதானமாகமாட்டேன்— என் மாதிரி ஏழ்மை நிலை இருந்தால் அப்போது தெரியும்...' என்றோ, அல்லது 'என்னைப்போல ஊனம் உள்ளவர்களாக இருப்பவர்களின் கஷ்டம் உனக்கு எப்படி விளங்கும்?' என்றோ அசிரத்தையுடன் கேட்டு, சோர்வை விடாமல் இருப்பவர்களுக்காக இன்னும் சில உதாரணங்கள்.

முதலில், இல்லாமை—



சாதாரணக் குடும்பத்தில் பிறந்தும், படிப்பில் எக்கச்சக்க ஆர்வம் இருக்க, கங்கையைக் கடக்க தோணிக்காரனுக்கு ஒருசில பைசாக்கள் கொடுக்கக்கூட வழி இன்றி, புத்தகங்களை ஒரு பையில் போட்டுக்கட்டி தலைமேல் வைத்து, அன்றாடம் ஆற்றில் நீந்திப்போய் பள்ளியில் படித்தார்— நமது லால்பகதூர் சாஸ்திரி.

பிறப்பால் ஹரிஜன். மேல் சாதிக்காரர்களால் இப்படி அப்படி என்று இல்லாது துன்பப்படுத்தப்பட்டவர். ஜாதி ஹிந்துக்கள் கூடிநின்று தாக்கின சமயத்தில், சுவர் ஏறிக் குதித்து வெளியேறி, தாழ்வு மனப்பான்மை ரவைகூட இன்றி, தன்னை மேம்படுத்திக்கொள்வதிலேயே விழிப்போடு இருந்து, துளித்துளியாய் முன்னேறி, லண்டனுக்குச் சென்று பாரிஸ்டர் ஆனவர்— அம்பேத்கார்.

அநாதை இல்லத்தில் படித்து நீதிபதியாக உயர்ந்த கிருஷ்ணசாமி ரெட்டியார்.

பள்ளிக்கே செல்ல வழியில்லாத காமராஜர், மிகவும் சாதாரண சூழ்நிலையில் வளர்ந்த அண்ணாதுரை— இவர்கள் நமது முதலமைச்சர்களாக உலகம் போற்றும் வண்ணம் வளரவில்லையா?

இப்படி இன்னும் எத்தனையெத்தனை பேர்கள்?

அடுத்து ஊனத்துக்கு வருவோம்.

நீராவி என்ஜினைக் கண்டுபிடித்த ஜேம்ஸ் வாட், தீராத ஒற்றைத் தலைவலியால் சதா அவதிப்பட்டவர்.

சொறி நாய்க்கடிக்கு அருமருந்தை உலகுக்குத் தந்த லூயிபாஸ்சர் ஒரு கடுமையான இருதய நோயாளி. இது போதாதென்று பக்கவாதத்தால் பீடிக்கப்பட்டு அவதியுற்ற போதும், தன்னம்பிக்கையை இழக்காமல் ஆராய்ச்சி செய்து வேக்ஸினைக் கண்டுபிடித்தார்.

நமது ஊர்க்காரர்களைப்பற்றிக் குறிப்பிட வேண்டுமென்றால்—

கிரிக்கெட் ஆட்டத்தில் சிறந்த பட்டோடி— ஒற்றைக் கண்ணோடு சாதனைகளைப் புரிந்தவர்.

இன்னொரு கிரிக்கெட் வீரரான சந்திரசேகர், ஒரு கை போலியோ வியாதியால் பாதிக்கப்பட்டும்கூட தலைசிறந்த சுழல்பந்து வீச்சாளராகத் திகழ்ந்தவர்.

வயலின் வாசிப்பதில் வல்லுனரான சந்திரசேகரன், பார்வையற்றவர் என்பதை ஞாபகப்படுத்தட்டுமா?

அரசியலில் தனித்தன்மையோடு விளங்கும் நம்பூதிரி பாட், இரா. செழியன் இருவரும் திக்குவாய்க்காரர்கள். இந்தக் குறையை மீறிக்கொண்டு இவர்கள் சிறந்த பேச்சாளர்களாக ஆனதற்கு, விடாமுயற்சியும், தன்னம்பிக்கையும் தவிர வேறு என்ன காரணமாய் இருக்கக்கூடும்?

பட்டியல் போதும்.

ஐயோ நான் முன்னேறவில்லையே— ஹா இப்படி ஏழ்மையில் பிறந்துவிட்டேனே— கடவுளே— வாழ்க்கையில் உயரவிடாமல் இந்த ஊனத்தைத் தந்துவிட்டாயே என்று மூலையில் முக்காடிட்டுக்கொண்டு புலம்பும் நண்பர்களெல்லாம் மேலே குறிப்பிட்டுள்ள நபர்களின் வாழ்க்கைச் சரித்திரங்களை மீண்டும் மீண்டும் படித்து, தங்களை மூடிக்கொண்டிருக்கும் தாழ்வு மனப்பான்மை என்கிற ஓட்டடைகளை உடனே அகற்றிக்கொள்ள முயல வேண்டும்—

நம்மால் மாற்றக்கூடிய சூழ்நிலையையும், அங்க ஹீனத்தையும் தயவுபண்ணி பெரிசுபண்ணாதீர்கள்; உடல் ஊனம் இருக்கலாம், தப்பில்லை— ஆனால், மனம் ஊனமானால் மட்டும் நமக்கு விடிவே இல்லை. இது எப்போதும் நினைவில் இருக்கட்டும்.

# 17

சுமார் இரண்டு வருஷங்களுக்கு முன் சுந்தர்ராஜ் என்பவரிடமிருந்து எனக்கொரு கடிதம் வந்தது.

"... இலக்கிய வட்டத்தில் உங்களைச் சந்தித்தேன். ஏனோ, நீங்கள் என்னிடம் முகம்கொடுத்துப் பேசவில்லை. நிமிர்ந்து ஒரு பார்வை பார்த்தவர் உடனே குனிந்து கையெழுத்துப் போட்டுத் தந்துவிட்டு அடுத்த நபரிடம் கவனத்தைச் செலுத்திவிட்டீர்கள். நீங்கள் இப்படி விட்டேத்தியாக நடந்துகொண்டதன் காரணம் என் அவலட்சணமான தோற்றம்தானே? பங்களூர் குடமிளகாயாக, முகத்துக்குச் சற்றும் பொருந்தாத என் பெரிய மூக்கைப் பார்த்து அருவருத்துத்தானே உடனே தலையைக் குனிந்துகொண்டீர்கள்? உங்களைச் சொல்லிக் குற்றம் இல்லை. ஏனென்றால், எனக்கே என்னைக் கண்டால் பிடிக்காதுதான். அத்தனை பேரின் கிண்டல்களையும் பொறுத்துக்கொண்டு கல்லூரிப் படிப்பை எப்படியோ முடித்துவிட்டாலும், வேலைக்குப் போகவேண்டும்— நாலு பேருடன் பழகவேண்டும் என்கிற நினைப்பே எனக்கு பயத்தைத் தருகிறது. என்னைப் போன்ற கோர சொரூபிகள் எத்தனை சீக்கிரம் மடிந்து போகிறோமோ, அத்தனை நல்லது..."

கடிதத்தை இரண்டு மூன்று முறைகள் படித்தேன்.

நூற்றுக்கணக்கானவர் கூடும் ஓர் இடத்தில் கையெழுத்து வாங்க வரும் பலரிடையே, முன்பின் தெரியாத ஒருவருடன் நீண்ட நேரம் பேசுவது எவருக்கும் அசாத்தியமானது என்பதை சுந்தர்ராஜ் புரிந்து கொள்ளாதது எனக்கு வருத்தத்தைத் தரவில்லை; ஆனால், உப்புசப்பில்லாத விஷயத்துக்காக, மூக்கு கொஞ்சம்

பெரிதாக அமைந்துவிட்டதற்காக உலகத்தையே வெறுக்க முற்படும் அவருடைய தாழ்வு மனப்பான்மையைக் குறித்து அதிக வேதனை எழுந்தது.

குறை இல்லாதவர் யார்?

ஊனம் என்று சொல்ல முடியாவிட்டாலும் கறுப்பாக, குள்ளமாக, உதடுகள் தடிமனாக, மிகவும் பருமனாக— என்று எத்தனையோ குறைகளுடன் பிறப்பவர்களுக்குப் பஞ்சமா என்ன?

கண்ணாடி அணிந்துகொள்வது ஒரு நாகரிகமாகிவிட்ட இந்த நாளில், பார்வை மந்தப்பட்டு, அதற்காகக் கண்ணாடி அணிவதைப் பெரிசுபடுத்துவதில்லை, இந்தச் சமூகம்.

ஆனால், காது கேளாமல், செவிக் கருவியைப் பொருத்திக்கொண்டிருந்தால்?

'தெரியுமா சேதி? அவ செவிடு.. காதுல ஹியரிங் எய்ட் வெச்சிருக்கா, பார்த்தேன்!'

ரொம்பக் காரமாக குற்றம்படிக்கும் பெண்மணியின் கண்களில் மைனஸ் நாலுக்கான கண்ணாடி ஜம்மென்று உட்கார்ந்திருக்கும்.

ஒரு விஷயம் சகஜமாகிப்போவதனாலேயே அது எல்லோராலும் முணுமுணுப்பில்லாமல் ஏற்றுக்கொள்ளப் படுவது நிஜம்.

நம்மிடம் இருக்கும் குறை இப்படி சமுதாயத்தினரால் ஏற்றுக்கொள்ளப் பழகிவிட்ட ஒரு சங்கதி என்றால் கவலையில்லை. அப்படியின்றி, புருவத்தை இன்னமும் தூக்கவைக்கும் சமாச்சாரம் என்றால், நிலைமையை எதிர்நோக்குவதைத் தவிர வேறு வழி இல்லை.

மீண்டும் சுந்தர்ராஜ் விஷயத்துக்கே வருவோம்.



அன்றைக்கே அவருக்கு பதில் கடிதம் எழுதினேன்— இத்தனைச் சின்ன குறைக்காக இடிந்துபோகலாமா என்று.

தொடர்ந்து நான்கைந்து கடிதங்கள்.

அத்தனையிலும், 'என் மூக்கு ரொம்பப் பெரியது! என்னைப் பார்ப்பவர்கள் முகத்தைத் திருப்பிக்கொள் கிறார்கள்— நான் வாழ்வதினால் என்ன பிரயோஜனம்?' — என்கிற பாட்டுத்தான்.

எனது அடுத்த கடிதத்தில், 'பிளாஸ்டிக் சர்ஜரி பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? விகாரமாகப் பெரிசாக இருக்கும் எந்த உறுப்பையும் சின்னது செய்து, அழகூட்டும் சக்தி அதற்கு உள்ளது. ஆனால், செலவு எக்கச்சக்கமாக ஆகும்— உங்கள் வசதி இடம் கொடுத்தால், இதைப்பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்' என்று எழுத, கிட்டத்தட்ட எட்டு மாசங்களுக்குக் கிணற்றில் போட்ட கல்.

போன வருஷம் திடுமென பம்பாயிலிருந்து ஒரு எஸ்.டி.டி. வேறு யாரும் இல்லை. நம் சுந்தர்ராஜ்தான்!

பிளாஸ்டிக் சர்ஜன் ஒருவரைச் சந்தித்து, மூக்கைச் சின்னதாக்கிக்கொண்டுவிட்டாராம். தழும்பு துளி தெரியாமல் முகம் இப்போது லட்சணமாய் இருக்கிறதாம். அப்பாவின் கம்பெனியிலேயே சேர்ந்து ஒரு மாசமாய் வேலை பார்க்கிறாராம். வாழ்க்கை ரசிக்கக்கூடியதாக இருக்கிறதாம்...

பதினைந்து நிமிஷங்களுக்கு நிறுத்தாமல் பேசியவர் குரலில் ஏக சந்தோஷம்.

சுந்தர்ராஜுக்கு வசதி இருந்தது. பிளாஸ்டிக் சர்ஜரி செய்துகொள்ள முடிந்தது.

முடியாதவர்கள்?

கண்ணாடிக்கு முன் நின்றுகொண்டு, தன் பிம்பத்தை உற்றுப்பார்த்து, 'அ! இது என்ன பெரிய குறை! அவனவன் கை, கால், விழி போன்ற முக்கியமான அங்கங்களில் ஊனத்தோடு வாழ்கிறதை நினைத்துப்பார்த்தால், இது ஒரு குறையே அல்ல... சத்தியமாய் இது சின்ன குறை தான்— என்னால் ஒதுக்கித்தள்ளக்கூடியதுதான்' என்று முணுமுணுத்துக்கொள்ளவேண்டும்.

காலையில் கண் விழித்ததும் மறக்காமல், 'என் குறை மிகமிகச் சிறியது. இது என்னை வேதனைக்குள்ளாக்க நிச்சயமாய் இடம் தரமாட்டேன்' என்று பத்து தரம் நம்பிக்கையுடன் சங்கல்பம் செய்துகொண்ட பிறகு, இதர வேலைகளில் கவனத்தைச் செலுத்த வேண்டும்.

இதற்குப் பெயர்தான் 'ஆட்டோ ஸஜஷன்'— அல்லது, 'செல்ஃப் தெரபி'.

கையாண்டு கைமேல் பலன் கண்டவர்கள் ஏராளம்... ஏராளம்.

அதோடு, எங்கேயாவது யாராவது நம்மைப் பார்த்து கேலியாகச் சிரித்தாலோ, எரிச்சலுடன் முகத்தைத் திருப்பிக்கொண்டாலோ, நிலைகுலைந்து போகக்கூடாது. 'சரிதான் போடா... உன் பாராட்டு இல்லாமல் நான் ஒன்றும் தேய்ந்துவிடமாட்டேன்' என்கிற பலத்தையும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

சொல்வதற்கென்ன—அது சுலபமாயிற்றே! எதையும் நடைமுறையில் செய்துகாட்டினால் அல்லவா கஷ்டநஷ்டம் தெரியும்?— கழுத்து வரையில் தாழ்வு மனப்பான்மையில் அமுங்கிக்கொண்டு, அவநம்பிக்கையுடன் சிடுசிடுப்பவர்களுக்கு— இப்போது கணேசனை அறிமுகப்படுத்த விரும்புகிறேன்.



மயிலாப்பூர் லஸ் கார்னர் பிளாட்பாரத்தில் கடை விரித்திருப்போரில் ஒருவர் கணேசன். கர்ச்சீப் விற்பனை செய்கிறார். கடை விரித்திருக்கும் தோரணை, அமைதியாக விற்பனை செய்யும் முறை இவற்றைப் பார்த்தால், இவரா குறை உள்ளவர் என்று கண்களை விரிப்போம்.

ஒருவர் கர்ச்சீப் ஒன்றை வாங்கி 10 ரூபாய் நீட்டுகிறார். கணேசனிடம் சில்லறை இல்லை. "ஒரு கர்ச்சீப்புக்கு 10 ரூபாய் தர்றீங்களே— சில்லறை இல்லையா?" என்று எரிச்சலுடன் கேட்காமல், கடையை விட்டு எழுந்து, சாத்துக்குடி விற்பவரிடம் சில்லறை வாங்கப் போகிற போதுதான், நாம் அதிர்ந்து போகிறோம்.

— கணேசன் எத்தனை குள்ளமாக இருக்கிறார்! கைகளும், கால்களும் சரியாக வளராத கணேசனின் உயரம் இரண்டு அடி இருக்குமா?

"என் கையாலேயும் என் உடம்பு என் சாண்தான்— இதைக் குறையாக் கருதி அழுதுகிட்டு உட்காரவும், இதைக் காட்டி பிச்சை எடுத்து வாழவும் என் மனசு எப்பவுமே அனுமதிச்சதில்லை. என்னைப் பெத்தவங்க செய்த பாவமோ இல்லே, நானே போன ஜன்மத்தில என்ன பாவம் செய்தேனோ— இப்படி உடல் குறையோட பிறந்துட்டேன். இந்த ஜன்மத்திலயாவது நல்லது பண்ணி, அடுத்த பிறவில முழுமையான வாழ்க்கை பெறணும்னு பிரார்த்தனை பண்ணிட்டிருக்கேன்."

— கணேசன் பேசுகையில் துக்கம் அவருக்கு நெஞ்சை அடைக்கவில்லை. கண்களில் நீர் ததும்பவில்லை.

உடல் ஊனத்தை எந்த வகையிலும் வெளிக்காட்டி பிறர் அனுதாபத்தைப் பெறும் எண்ணம் அவருக்கு இல்லை என்பது தெளிவாகிறது. மற்ற சாதாரண மனிதர்களைப் போலவே இருக்க வேண்டும் என்ற துடிப்பும், நம்பிக்கையும்

அவரது முகத்துக்கு ஒரு முதிர்ச்சியையும் தெளிவையும் கொடுத்திருக்கின்றன.

செஞ்சி அருகே ஒரு கிராமம் அவருடையது. விவசாயக் குடும்பம். அவர்தான் மூத்த மகன். அவருக்கு இரண்டு தம்பிகள். "நல்லவேளையா அவங்க எந்தக் குறையுமில்லாம பிறந்துட்டாங்க..." என்கிறார் சந்தோஷம் பொங்க. எட்டாம் வகுப்பு வரை படித்தவர் கணேசன். எட்டாம் வகுப்பில் எதிர்பாராத விதமாக... ஃபெயில்!

"பழசெல்லாம் இப்ப எதுக்குங்க? மனசுக்கு கஷ்டப் படும்படியா நடுவிலே எவ்வளவோ நடந்துச்சு. இந்த உடம்பையும் வெச்சிக்கிட்டு உழைச்சு முன்னுக்கு வந்து காட்டணும்னுதான் மெட்ராஸ் வந்தேன்."

மெட்ராஸ் வந்து, வேலை செய்த இடத்தில் கசப்பாக என்னென்னவோ நடந்தும், சுற்றி இருந்தவர்கள் 'டீஸ்' பண்ணியும்— மனம் துவளவில்லை. *1970* முதல் லஸ் கார்னரில் கர்ச்சிப் விற்கிறார்.

கணேசன் ஒரு அலாதி கேரக்டர்.. இடையே ஏற்பட்ட இடையூறுகளைப் பெரிதுபடுத்திச் சொல்ல விரும்பாதவர்... "அதெல்லாம் மறந்துடணும்... மறந்தாச்சு..."

"ஒரு நாளைக்கு *50* கர்ச்சிப் விற்றால் *5* ரூபாய் கிடைக்கும்... *100* விற்றால் *10* ரூபாய் கிடைக்கும்... என் ஒண்டிக்கு இது போதாதா?"

திருமணம்...?

"என்னை யார் கல்யாணம் செஞ்சிக்குவாங்க?" என்று கணேசன் டயலாக் பேசவில்லை.

மாறாக— "அது நமக்கு வேணாங்க... சந்தோஷமாக இருக்கிறதுக்கு மனைவின்னு ஒருத்தி வேணும்தான்... ஆனா, அதெல்லாம் நினைச்சுப் பார்க்கறதில்லை... 'நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கட்டுமா'னு சில பொம்பளைங்க கேலியா கேட்டிருக்காங்க! பதில் சொல்லாம கம்முனு வேலையப் பார்ப்பேன்... சந்தோசப்படறதுக்கு வாழ்க்கை யிலே நிறைய இருக்கும்போது, இல்லாத சில விஷயங்களை நினைச்சு ஏன் குழம்பிக்கணும்? எனக்குக் கடவுள் நம்பிக்கை உண்டுங்க... எல்லா கதவையும் சாத்தினாலுங்கூட, எங்கயாவது ஒரு ஜன்னலையாவது திறந்து வைப்பார்னு சொல்லுவாங்க.. என்னைப் பொறுத்தவரை உண்மைதாங்க அது..."



பேசப்பேச, அந்த வாமன உருவம் நம்முன் விசுவரூபம் எடுக்கிறது.

கணேசனை எந்த சக வியாபாரியும் அனுதாபத்துடன் அணுகுவதில்லை; மரியாதையுடன், அன்புடன், மதிப்புடன் தான் நடத்துகிறார்கள் என்றால், அதற்குக் காரணம் அவர் தன்மேலேயே அழுத்தமாக நம்பிக்கை கொண்டு, தன்னைத்தானே கம்பீரமாக நடத்திக்கொள்வதுதான்.

# 18

'சிந்திக்கும் திறன்மேல் காளானாகப் படர்ந்து, மனிதனை செயலிழக்கச் செய்து, எதற்கும் லாயக்கில்லாத, தன்னம்பிக்கை இழந்த, கோழையாக மாற்றும் வல்லமை படைத்தது,' என்று டாக்டர் டயர் வர்ணிக்கும் தாழ்வு மனப்பான்மை குணத்தை இந்த அத்தியாயத்தில் சுத்தமாய் தோலுரித்துப் பார்க்கலாம்.

தாழ்வு மனப்பான்மை— இதனை அடையாளம் காட்டும் குணாதிசயங்கள் என்னென்ன தெரியுமா?

எனக்கு இது இல்லை, அது இல்லை— என்று இல்லாத எதையாவது நினைத்து சதா குறைப்பட்டுக்கொள்ளல்.

துசுக்கென்றால் கண்ணீர்விடத் தயாராக இருத்தல்.

எதற்கும் என்னையே பலிஆடாக்குகிறார்கள் என்றோ, எப்போதும் நான்தான் சுமைதாங்கியாக வேண்டுமா என்றோ பொருமுதல்.

நடப்பது எதுவும் நம் கையில் இல்லை... அத்தனைக்கும் விதிதான் காரணம் என்று பொறுப்பை கை கழுவிவிட்டு சும்மா உட்காருதல்.

யாரோடும் அன்யோன்யமாகப் பழக விரும்பாமல் சதா கூட்டுக்குள் ஒடுங்கும் ஜன்மமாகத் தனிமையை விரும்புதல்.

இப்படிச் சில...

இவற்றில் ஒன்றிற்கு இடம் கொடுத்தாலும், அது பரபரவென்று வேகமாய் வளர்ந்து வேர்விட்டுக்கொள்வதில் தினுசு வாரியான தாழ்வு மனப்பான்மைப் பிரச்சினைகள் ரொம்ப சுலபமாக ஜனிக்கின்றன.



இவற்றுக்கு உதாரணங்களாக அகிலா, பார்வதி, சியாமளா இவர்களின் வாழ்க்கையை எடுத்துக் கொள்ளலாம்.

திருச்சியில் வாழும் அகிலாவுக்கு, புருஷன் சாதாரண குமாஸ்தா என்பதில் வருத்தமான வருத்தம்.

நான்கு அக்கா தங்கைகளுடன் பிறந்தவளுக்கு ஆதி நாளிலிருந்தே அடுத்தவருடன் தன்னை ஒப்பிட்டுக் கொள்ளும் குணம் உண்டு. இரண்டு அக்காக்களின் கணவன்மார்களுக்கும் சொல்லிவைத்த மாதிரி ரயில்வேயில் உத்தியோகம். பாஸ், இலவச குவார்ட்டர்ஸ் என்று அவர்களைப் பார்த்துப் பழகிவிட்டவளுக்கு, தனியார் நிறுவனத்தில் க்ளார்க்காக கணவன் இருப்பதில் ஏக சலிப்பு.

"ஆமா— பெரிசா வேலை பார்த்துக் கிழிச்சாருங்க! அடிச்சிக்க ரெண்டு கை பத்தாது. வீட்டு வாடகை அழுது, உப்பு புளி வாங்கி ஒப்பேத்தறதுக்குள்ளேயே முழி பிதுங்கிப் போவுது... இந்த அழகுல விடுமுறையாவது, ஊருக்குப் போறதாவது! ஹ்ும்— அதுக்கெல்லாம் கொடுத்து வெச்சிருக்கணும்..."

நீங்கள் தப்பித்தவறி அகிலாவின் வீட்டுக்குப் போக நேர்ந்தால் இந்த புலம்பலைக் காது கொடுத்துக் கேட்காமல் நிச்சயம் வரமுடியாது.

அடுத்து பார்வதி.

பெரிய குடும்பம் ஒன்றின் மூத்த மருமகள். இவளுக்குக் கீழே இன்னும் இரண்டு நாட்டுப் பெண்கள். இருவருமே வேலைபார்ப்பவர்கள். அனைவரும் கூட்டுக்குடும்பமாக வாழ்கின்றார்கள்.

திருமணமாகி வந்த புதுசில் பார்வதி சாதாரணமாகத் தான் இருந்தாள். இரண்டாமவள் வந்து, சரியாக ஒன்பதுக் கெல்லாம் கிளம்பி அலுவலகத்திற்குச் சென்று மாலை ஆறுக்குத் திரும்பி 'ஸ்ஸ்—அப்பாடா' என்று அலுப்புடன்

ஆண்களுக்குச் சரியாக அவள் உட்கார்ந்துகொள்ளத் துவங்க, முதல் முறையாக தாழ்வு மனப்பான்மை என்கிற ஒட்டகம் பார்வதி நெஞ்சில் தலையை விட்டுக்கொண்டது.

மறு வருஷம் மூன்றாவது மருமகள் வந்து சேர, அவளும் வேலைபார்ப்பவளாக அமைந்துவிட, சரசர வென்று நாளுக்கு நாள் ஏக்கம் பார்வதியினுள் ஆக்கிரமிக்க அப்புறம் என்ன? ஒட்டகம் முழுமையாக நுழைந்து கூடாரத்தைச் சரித்துவிட்ட கதைதான்.

“ஆயிரம் சொல்லுங்க, நான்னா இந்த வீட்டுல எல்லாருக்கும் மட்டம்தான். நா என்ன வேலைக்குப் போறேனா, சம்பாதிக்கிறேனா? ஒரு எழவும் இல்லே... எனக்கு என்ன தெரியும்? இங்கிலீஷ்ல பேசத் தெரியுமா? இல்லே, தளுக்கா ட்ரெஸ் பண்ணிக்கிட்டு, ஆம்பிள்ளைங் களுக்குச் சரியாக டாக்கு டாக்குனு நடந்துபோகத் தெரியுமா? நா எதுக்கு லாயக்கு? ஆட்டுக்கல்லையும் குழவியையும் கட்டிகிட்டு மாரடிக்கறதைத் தவிர வேற என்ன எனக்குத் தெரியும்?”

பொழுதுபோய், பொழுது விடிந்தால் இதே பேச்சுத்தான்.

தெளிவாக சிந்திக்க மறந்துபோனதில், புருஷன், குழந்தைகள், இதர நண்பர்களிடம் அவள் வாங்கிக் கொண்ட பட்டப்பெயர்கள்— விடியாமூஞ்சி, அழுமூஞ்சி, எக்ஸட்ரா, எக்ஸட்ரா...

பார்வதிக்கு நேர் எதிரிடை சியாமளா...

ஓரளவு வசதியான குடும்பத்தில் வாழ்க்கைப் பட்டாலும், ஆயிரம் ரூபாய் சம்பளத்தை விட மனமில்லாமல் திருமணத்துக்குப் பிறகும் வேலையைத் தொடர்ந்தவள்.

முதலில் எல்லாம் ஜோராகத்தான் இருந்திருக்கிறது. சம்பாதிக்கும் மருமகள் என்று எல்லோரும் தலையில் தூக்கி



வைத்துக்கொண்டது பெருமையாகத்தான் தோன்றி யிருக்கிறது.

ஆனால் போகப் போக?

வீட்டின் எந்தப் பொறுப்புக்கும், நடக்கும் எந்தக் காரியத்துக்கும் வீட்டோடு இருக்கும் மருமகளைத்தான் கலந்தாலோசிக்கிறார்கள், தன்னை பணம் சம்பாதிக்க மட்டும் உபயோகித்துக்கொள்கிறார்கள் என்ற எண்ணம் தோன்றிய பிறகு...?

“போங்க... ஏன்தான் பிறந்தோம்—னு இருக்கு... ஒரோரு நாள் வர்ற ஆத்திரத்துல அத்தனையும் உதறித் தள்ளிட்டு கண் காணாம ஓடிட்டா தேவலை போல இருக்கு. எல்லாம் சரியான அட்டை ஜன்மங்கள்... ஒட்ட உறிஞ்சிட்டு தான் நகரும்! அந்த வீட்டில என்னை மனுஷியா யார் நினைக்கறாங்க? இல்லே, மதிக்கறாங்க? இவங்களைப் பொறுத்தவரையில் நான் ஒரு மெஷின்— சம்பாரிச்சுக் கொட்ற மெஷின்... அவ்வளவுதான்! மத்தபடி நா இருந்தா என்ன, செத்தா என்ன? எந்த விஷயத்தைப் பத்தியாவது பேசுவாங்களா— ஏம்மா, உன் கருத்து என்னன்னு கேப்பாங் களா? ஒரு மண்ணாங்கட்டியும் இல்லே... எல்லாம் அவங்க நாட்டாண்மைதான். என் அளவுக்கு சம்பாதிக்கிறவ எல்லாம் அவஅவ நினைச்சா புடவை, நகைனு வாங்கித் தள்ளறா... ஆனா, நா? இந்தக் குடும்பத்துக்காக உழைக்கற தோட, மதிப்பில்லாம, புழுவா வேற வாழ்ந்திட்டிருக்கேன்... தத்...”

மேலே கூறின அகிலா, பார்வதி, சியாமளா இவர் களின் தாழ்வு மனப்பான்மை நோய் ஒரு தினுசு என்றால், ரொம்பச் சின்ன வயசிலேயே வழுக்கை விழுந்துவிட்ட காரணத்தால் திருமணமே வேண்டாம் என்று பிரம்மச்சாரி யாக நின்று குமையும் சதாசிவமும், முகத்தில் எக்கச்சக்க

மாய் பரு இருந்து, பெண் பார்க்க வந்த ஓரிரு பிள்ளைகளும் 'பெண் முகத்துல பரு அசிங்கமாக இருக்குங்க' என்று முகத்தைச் சுளுக்கி மறுத்ததால், 'இனி வாழ்ந்து என்ன பயன்' என்று ஓவர்டோஸ் தூக்க மாத்திரைகளை உட்கொண்டு, உன் பாடு என் பாடு என்று பிழைத்த பிரமீளாவும் இன்னொரு ரகம்.

போன அத்தியாயத்தில் குறிப்பிட்ட சுந்தர்ராஜ் சமாச்சாரமும் இதே பிரிவில் விழுவதுதான் என்றாலும் பிரச்சினையின் மூலகாரணத்தைத் தேடிப்பிடித்து, சரி பண்ணிக்கொள்வது தன் கையில்தான் இருக்கிறது என்கிற விழிப்புணர்வைப் பெற்று, தாழ்வு மனப்பான்மை நிச்சயம் ஒரு சின்ன நூல்கண்டுதான் என்று நிரூபித்துவிட்டார். அதற்காக அவருக்கு நம் விசேஷ பாராட்டுக்கள்.

தன்னம்பிக்கை, வாழ்க்கையில் உற்சாகம், மனிதாபிமானம் இவற்றை வளர்த்துக்கொள்வதன் மூலம் தாழ்வு மனப்பான்மையின் பிடியிலிருந்து விடுபடுவது எவருக்குமே சாத்தியமான ஒரு விஷயம்தான்.

'இது என் வாழ்க்கை, இதை சந்தோஷமாகவோ, துக்கமாகவோ வைத்துக்கொள்வது என் கையில்தான்— என் கையில் மட்டும்தான் இருக்கிறது. கோபம், ஆத்திரம், பொறாமை, தாழ்வு மனப்பான்மை, சுயபச்சாதாபம் போன்ற தேவையில்லாத உணர்ச்சிகளுக்கு அடிமையாகி கண்டிப்பாய் என்னை நானே வேதனைக்குள்ளாக்க மாட்டேன், இது சத்தியம்' என்று உறுதி பூணுவதோடு, உறங்கும் முன்னரும், விழித்த பின்னரும் இந்த சங்கல்பத்தை மறக்காமல் செயல்பட்டால், அமைதியும் சந்தோஷமும் நம் காலடியில் கிடக்காமல் வேறு என்ன செய்யும்?

# 19

சென்ற இரு அத்தியாயங்களில் பார்த்த 'தாழ்வுமனப் பான்மை'யின் அண்ணனை உங்களுக்குத் தெரியுமா?

Superiority Complex என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே!

அவரேதான்—

உயர்வு மனப்பான்மை!

தம்பிக்கு நேர்மாறான குணம்தான் இவருக்கு. என்றாலும் ஒருவரது மூளையை மழுங்கச் செய்து வாழ்க்கையில் உயரவிடாமல் தலையில் குட்டிக்கொண்டேயிருக்கும் விஷயத்தில், அண்ணன் தம்பி இருவருமே பலே ஆட்கள்!

நான்—நான்—நான்!

இந்த 'நானுக்'கு அஸ்திவாரமாக, பக்கபலமாக— அகம்பாவம், கர்வம், திமிர் என்ற குட்டிச்சாத்தான்கள் இருப்பதுதான் அளவுக்கு மீறின உயர்வு மனப்பான்மை ஒருவரை பீடிக்கக் காரணம்.

பழைய பெருமைகள், ஜாதி, படிப்பு, பணம், பதவி, அழகு, புத்தி போன்ற விஷயங்களை அடிப்படையாகக் கொண்டு, உயர்வு மனப்பான்மை சாதாரணமாக வேர் விடுகிறது.

சில உதாரணங்களைப் பார்க்கலாம்—

தாயம்மாவுக்கு இரண்டு பிள்ளைகள். மூன்று பெண்கள்.

பழக்கடை ஒன்று சொந்தத்தில். சுமாரான வருமானமுள்ள ஆசையான புருஷன். பள்ளிக்குப் போகிறேன் என்று பெயர் பண்ணும் பிள்ளைகள். முதலிரண்டு பெண்களைத் திருமணம் செய்துகொடுத்தாகிவிட்டது.

பிரச்சினை ஒன்றுமில்லை, கணவன் உயிரோடு இருந்தவரை.

மூத்த மகன் லோகு பள்ளி இறுதி படித்து முடித்த சமயம்— சரக்கு பிடிக்கப்போன கணவன் லாரி விபத்துக்குப் பலியானான்.

அழுது முடித்த பின்னாலும், தாயம்மாவிடம் தெம்பு பாக்கி இருந்தது— பழக்கடையும், தலைச்சன் பிள்ளையும் இருந்த தைரியத்தில்.

ஆனால், எஸ்.எஸ்.எல்.ஸி. படித்த லோகுவோ, வெள்ளைக் காலர் உத்தியோகம் கிடைக்கும் என்ற நினைப்பில் பழக்கடைப் பக்கம் தலைவைத்தும் படுக்க வில்லை.

"பழக்கடைப் பொறுப்பை நா எடுத்துக்கறதா? அய்...! அப்பாரு உக்காந்தாருன்னா, அவரு படிக்கல— அதான்! நம்மால முடியாதுப்பா! அதுக்கு வேற ஆளப்பாரு."

பையனைக் கெஞ்சிப்பார்த்து பலனில்லாமல் போனதும், அதிகம் வெளியே வந்து பழக்கமில்லாத தாயம்மா, தானும் கடையில் உட்கார இயலாத நிலையில், மூத்த மருமகனிடம் அதை விற்றாள்.

கடையில் இருந்த அலமாரி வகையறாக்களுக்கும், பழங்களுக்கும் மட்டும் விலைபேசி பணத்தை வாங்கினவள் மகனின் ஆபீஸ் உத்தியோகத்தை எதிர்பார்த்து— எதிர் பார்த்து— எதிர்பார்த்து...

வறுமை பொறுக்கமுடியாமல்போக, கடைசியில் எனக்குத் தெரிந்தவர் வீட்டில் வேலை செய்ய வந்தாள்.

அவளின் பரிதாப நிலை புரிந்து, ட்ரைவிங் ஸ்கூல் ஒன்றில் பணம் கட்டி லோகுவை ட்ரைவிங் கற்றுக்கொள்ள வைத்தார், நல்ல மனசு படைத்த அந்த வீட்டு எஜமானி அம்மாள்.



'கார் சவாரி' என்ற பெருமிதத்தில் பையன் சமர்த்தாய் ட்ரைவிங் கற்றுக்கொள்ள, சிபாரிசில் அவனுக்கு ஒரு வேலையும் லட்டு மாதிரி சீக்கிரமே கிடைத்தது.

நூற்றைம்பது ரூபாய் சம்பளம்— சாப்பாடு, ஓவர்டைம் எல்லாம் உண்டு.

ஆனால், இரண்டாம் நாளே லோகு திரும்பி வந்துவிட்டான்!

ஏனாம்—?

டெக்ஸ்டைல் மில் ஒன்றின் ஏஜன்ஸியான அந்த நிறுவனத்தில், பருத்தி நூல் பேல்களை காரிலிருந்து இறக்கி உள்ளே வைக்கச் சொன்னார்களாம்!

"நா என்ன வேலைக்காரனா? ட்ரைவர்னா ஒரு மதிப்பு வேணாம்? இன்னிக்கு இதச் செய்—னு சொல்ற வங்க, நாளக்கி செருப்பைக் கொண்டாறச் சொல்ல மாட்டாங்கன்னு என்ன நிச்சயம்? நா எதுக்கு இதெல்லாம் செய்யணும்? தலையெழுத்தா?"

அடுத்தடுத்து வேலைக்குப் போன அத்தனை இடங் களிலும் இப்படி ஏதோவொரு காரணத்தைச் சொல்லிக் கொண்டு, போன மச்சான் திரும்பி வந்தான் என்று வந்துவிடுவான்.

இன்று—முப்பத்தைந்து வயதிலும் வேலையில்லாமல் (வேலைபார்க்க விருப்பமில்லாமல்!) தன்னைப் பெற்றவள் வீட்டுவேலை செய்து சோறு போடுவதைப்பற்றிக் கவலைப் படாமல், 'என்னை யாரு—னு நினைச்சிங்க!' என்று சொல்லி வெட்கம் இல்லாமல் திரிந்துகொண்டிருக்கிறான்.

கிட்டத்தட்ட இதே கதைதான் கண்ணனுடையதும்.

கிராமத்தில் மிராசு குடும்பத்தைச் சேர்ந்தவன் என்ப தில் கர்வம் அதிகம். பரம்பரைப் பெருமையிலும், குடி கூத்தி என்றும் தாத்தாக்கள் அழித்தது போக இப்போது அப்பாவிடம் இருப்பது அசல் பெருங்காய டப்பாதான்.

காரைக்குடி டப்பாசெட் மாதிரி நிற்கும் பெண்களின் கல்யாணம் காட்சி அத்தனைக்கும் அம்மா இவனையே மலையென நம்பியிருந்தாள்.

இவனுக்கோ காலேஜ் படிக்கையிலேயே, சக மாணவர்கள் மாலையில் டைப் கற்றுக்கொள்ளப் போகும் போது கேலிப்புன்னகை ஒன்று, எப்போதும் முகத்தில் கூத்தாடும்.

"நா மிராசு பரம்பரைடா... எங்க தாத்தா ராவ்பகதூரா இருந்தவர், தெரியுமா? வாசல்ல நாலு 'பீட்டன் கோச்' வண்டி நிற்கும்... வெள்ளைக்காரன் பார்ட்டி கொடுத்தா முதல் அழைப்பு எங்க வீட்டுக்குத்தான் தெரியுமா? அப்படிப்பட்ட நானாவது டைப் கத்துகிட்டு, டைப்பிஸ்டா வேலை பாக்கறதாவது?"

வாய் கிழிய பேசும் கண்ணனுக்கு, தான் பாங்க் ஆபீஸராகத்தான் ஆகவேண்டும் என்ற கனவு அடிமனசில் எப்போதும் உண்டு என்றாலும், படிப்பு என்னவோ சராசரிக்கும் கீழ்தான்!

படிப்பு முடிந்த இருபதாவது வயசிலிருந்து, ஊரிலுள்ள அத்தனை பாங்க்குகளுக்கும் விண்ணப்பங்கள் எழுதிப் போட்டு, போஸ்ட்மேன் வரவுக்காகக் காத்திருந்து—

நான்கு வருஷங்கள் போலக் காத்திருந்துவிட்டு, அம்மாவின் 'தண்டச்சோறு' முணுமுணுப்பு தாளாமல், ஒரு வழியாய் தனியார் கம்பெனி ஒன்றில் காஷியர் என்ற பெயரில் வேலைக்குச் சேர்ந்தான். ஐநூறு ரூபாய் சம்பளம்.

ஒரு தரம், பணத்தைக் கையாளுவதில் அசிரத்தையாக இருந்ததில், மூவாயிரம் ரூபாய் போலக் கணக்கில் உதைக்க—

வந்தது வேட்டு, வேலைக்கு!



இந்த வேலை போனபிறகு, எட்டு வருஷங்களாகியும் இன்னமும் வேலையில்லாமல்தான் இருக்கிறான் கண்ணன்.

ஏன்? வேலை கிடைக்கவில்லையா?

கிடைத்ததே—

பின்னே?

"முன்னூறு குடுக்கறேங்கறான், நானூறு குடுக்கறேங் கறான்! அந்த எடத்துல ஐநூறு வாங்கிட்டு, இங்க வந்து கொறச்சு வாங்கவாவது? ரெண்டு வருஷ எக்ஸ்பீரியன்ஸ் வேற இருக்கு! கூடப்போட்டுன்னா குடுக்கணும்! போடா னுட்டேன்—"

தனது உத்தியோக அனுபவத்தில், 'பணம் குறைந்த' ஒரு கருப்புப் புள்ளி விழுந்திருக்கிறது என்பதையே மறந்து விட்டுப் பேசும் கண்ணனிடம், லோகுவிடம் காணப்பட்ட அதே அகங்காரம்தான் ஒட்டிக்கொண்டு ஆட்டிப்படைக் கிறது.

வேண்டாத உயர்வு மனப்பான்மை தங்கள் கண்களை மறைத்து, தன் நிலை புரியாமல் செயல்படக் காரணமாகிறது என்பது இவர்களுக்கு ஏனோ புரியமாட்டேன் என்கிறது.

சந்தர்ப்பம், சூழ்நிலை இவைகளுக்கேற்றார்போல் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள விடாமல், எந்த இடத்திலும் தன்னைப் பொருத்திக்கொள்ள முடியாமல் தடுப்பது இந்த 'நானா?' என்கிற கர்வம்தானே!

அருமையான வியாபாரம் கொண்ட, நகரின் மையத்தில் இருந்த அந்தப் பழக்கடையை மட்டும் லோகு சந்தோஷமாக ஏற்றுக்கொண்டிருந்தால்—? இன்றைக்கு அவனது வாழ்க்கைத் தரம் நிச்சயம் உயர்ந்திருக்காதா?

ஃபோனும், காருமாய் வாழும் அத்தானைப் பார்த்து இப்போது எரிச்சல்பட வேண்டியிருக்காதே!

கண்ணனும்தான் என்ன? அன்று அவன் உதறித் தள்ளிய வேலைகளில், அவனுக்குப் பதிலாய்ச் சேர்ந்தவர் இந்த எட்டு வருஷங்களில் சுமாராய் ஆயிரம் ரூபாய்க்கு மேல் சம்பாதிக்கையில், இவன் மட்டும் இன்னமும் 'வேலை' தேடிக்கொண்டிருக்கிறான் அல்லவா?

அன்று இவனை நம்பிய தங்கைகள் எல்லாரும், இன்று சின்னச்சின்ன வேலைகளில், ஐம்பதுக்கும் நூறுக்கும் ஆலாய்ப் பறந்து, திருமணம் என்பதையே மறந்து தூண் தூணாக நிற்பதுகூட உரைக்காமல் மானம், ரோஷம் கெட்டு வாழ்கிறான் அல்லவா?

எது காரணம் இந்த அவலத்துக்கு?

நான்— என்கிற உயர்வு மனப்பான்மைதானே!

லட்சியம் ஒன்றை வைத்துக்கொண்டு அதை அடைய முயற்சிப்பதுதான் வாழ்க்கையில் உயரும் வழி என்றாலும், தன் நிலை அறிந்து அதற்கேற்ப லட்சியங்களை மாற்றிக் கொள்வதுதானே புத்திசாலித்தனம்!

ஆண்களை இப்படிப் பல விஷயங்களில் பாதிக்கும் உயர்வு மனப்பான்மை பெண்களையும் விட்டு வைப்பதில்லை...

அருணாவை எடுத்துக்கொள்ளுங்கள்—

கல்யாணம் ஆன இரண்டாம் நாளே அருணாவிற்கு வாழ்க்கை வெறுத்துப்போய்விட்டது.

— எங்க வீட்டுல டைனிங் டேபிள்லதான் சாப்பிடுவோம். இங்க தரைலதான் உக்காரணுமா? துணியெல்லாம் அழுக்காவுது!

— ஐஸ்வாட்டர் குடிக்காம தாகமே அடங்கமாட்டேங்குது. சின்னதா ஒரு ஃப்ரிஜ் வாங்கி வெச்சிருக்கக் கூடாது?



— ஐய! சினிமாவுக்கு நடந்தா போவாங்க? நான் வரலைப்பா! எங்கண்ணன் என்னைய நடக்கவே விடாது. ஸ்கூட்டர்லியேதான் கூட்டிட்டுப் போவும்.

— ஆட்டுக் கல்லுலியா மாவு ருப்பறீங்க? ஒரே பழங்காலமா இருக்கிங்களே!

ஒவ்வொன்றையும் கேட்டுவிட்டு அவள் கணவன் ரமேஷ் கூசித்தான் போனான்.

கல்யாணத்துக்கென்று இரண்டு தங்கைகள் இருக்கையில், எத்தனை சம்பாதித்தாலும், அவர்களுக்குச் செய்ய வேண்டிய சீர்வரிசைகள் நினைவுக்கு வந்து பயமுறுத்தித் தன் வாழ்க்கை வசதிகளைப்பற்றி நினைத்தே பார்த்திராதவன், அருணாவின் சுகபோகங்களுக்காக, மனைவியைத் திருப்தி செய்வதற்காக— அங்கே இங்கே கைமாத்து வாங்கி சாமான்களால் வீட்டை நிரப்பி, வெளியில் வாசலில் போய்வந்து, எக்கச்சக்கத்துக்கு அகலக்கால் வைக்க—

இன்று கழுத்து வரைக்கும் கடன்!

தங்கைகளை நல்லவிதமாய் கரையேற்றும் பொறுப்பை முழுமையாகச் செய்ய முடியாததோடு, தன் குழந்தைகளுக்கு நல்ல படிப்பு, அடிப்படை வசதிகள் என்றுகூட எதையும் நினைக்க முடியாமல் கடனில் மூழ்கிப்போயிருக்கிறான்.

என்றைக்கு ரமேஷ் மீளப்போகிறான்?

இத்தனைக்கும் அருணா பணக்கார வீட்டுப் பெண் என்கிறீர்களா?

இல்லை!

அவளும் நடுத்தரக் குடும்பம்தான்.

ஆடம்பரத்திற்காக அதிகம் செலவழித்து, 'எங்களைப் போல் உண்டா?' என்று பெற்றவர்களால் வளர்க்கப் பட்டதுதான் கோளாறுக்கு ஆணிவேர்.

இந்த உயர்வு மனப்பான்மை, இவளைச்சுற்றி இருப்பவர்களது தாழ்வு மனப்பான்மையைத் தூண்டிவிட்டு, பிரிக்க இயலாத சிக்கல்களைக் கொண்டதாக வாழ்க்கையை மாற்றிவிடுகிறது என்கிற உண்மையை அருணா என்று உணரப் போகிறாள்?

லோகு, கண்ணன், அருணா, போன்றவர்கள் உடனடியாக விழிப்புணர்வை வளர்த்துக்கொண்டு, தங்களை சரிபண்ணிக்கொள்ள யத்தனிக்க வேண்டும்; இல்லாவிட்டால் உயர்வு மனப்பான்மை என்கிற புதைசேற்றில் தானும் மூழ்கி, மற்றவர்களையும் ஆயுசுபர்யந்தம் மூச்சு முட்ட வைக்கப்போவது திண்ணம்.

# 20

இது ஒரு வித்தியாசமான அத்தியாயம்.

பிரச்சினைகளைத் தாங்கி வாசகர்களிடமிருந்து இந்தக் கட்டுரை தொடங்கிய நாளாய் பல கடிதங்கள் எனக்கு வந்துகொண்டிருக்கின்றன. என்னால் இயன்ற விதத்தில் அவர்களுக்கு நானும் தனிப்பட்ட முறையில் பதில் எழுதி வந்திருக்கிறேன். என்றாலும், பலர் தெரிந்துகொள்ள வேண்டிய பிரச்சினைகள் அடங்கிய இந்த மூன்று கடிதங்களை ஜூ.வி.யில் போட்டு பதில் சொல்ல ஆசைப்படுகிறேன்.

உண்மைப் பெயர்களைக் குறிப்பிடுவதில் பல சங்கடங்கள் ஏற்படலாம் என்று பெயர்களைக் குறிப்பிடாமல் வெளியிடுகிறேன்!

*1.* 'நீங்கள் ஜூனியர் விகடனில் எழுதிவரும் கருத்துக்கள் உபயோகமாயிருக்கின்றன. குறிப்பாக 11-4-84 *(10—வது அத்தியாயம்)* எழுதிய விஷயமும், 16-5-84 *(15-வது அத்தியாயம்)* எழுதியிருக்கிற விஷயமும் என் மனைவிக்கு மிகப் பொருத்தமானதாக இருப்பதைக் கண்டு ஆச்சரியமாயிருக்கிறது. ஏனென்றால், நீங்கள் இவளுக்காகவே தனிப்பட்ட முறையில் எழுதியதுபோல் இவை இருக்கின்றன.

ஆனால், இதில் வருத்தப்படக்கூடிய விஷயம் என்னவென்றால், இந்த விஷயங்கள் எல்லாம் தனக்குப் பொருந்தாதென்றும், இப்படிப்பட்ட வேறு பெண்கள் உலகில் இருக்கிறார்கள் என்றும் என் மனைவி நினைப்பது தான்.

இன்னும் இதைப்போல பல சங்கதிகளையும் அவள் பத்திரிகையில் படிக்கும்போது, தன்னைப்பற்றி அவள் சிந்திப்பது இல்லை; மற்றவர்கள்மேல் உள்ள குறைகள்தான்

அவள் கண்களுக்குத் தெரிகின்றன. சொல்லப்போனால் தன் குறைகளை நேருக்கு நேராகச் சொல்லுபவர்களிடம் ஆத்திரப்படவும் செய்வாள்.

இவள் என் வாழ்க்கையில் பெரிய பிரச்சினை. நான் மிகப் பக்குவமாக வாழ்க்கையை ஓட்டிக்கொண்டு வருகிறேன்.

இவளுக்கு வேண்டியவர்களெல்லாம் இவள் ரத்த சம்பந்தப்பட்ட உறவினர்கள்தான் (பெற்றோர், சகோதர சகோதரிகள், பெற்றோர்களுக்குக் கூடப் பிறந்தவர்கள்).

என் நிலைமை உங்களுக்குப் புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். உங்களுடைய கட்டுரையில் இந்த விஷயத்தைப் பற்றியும் உங்கள் யோசனைகளைத் தெரியப் படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தங்களின் கருத்துக்கு நான் மிகவும் கடமைப் பட்டவனாக இருப்பேன்.'

2. 'தங்களின் கருத்துக் குவியலான 'சின்ன நூல்கண்டா நம்மைச் சிறைப்படுத்துவது' கட்டுரையை ஆழ்ந்து விரும்பிப் படிக்கும் ஜூ.வி. வாசகர்களில் நானும் ஒருவன். இதனா லேயே தங்களின் கவனத்திற்கு ஒரு பிரச்சினைக்குரிய விஷயத்தை எடுத்துவைக்க விரும்புகிறேன். தங்களின் விஷயத்தை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். எனக்குத் தெரிய வேண்டியதெல்லாம், வாழ்க்கையின் லட்சியம், குறிக்கோள் இவையெல்லாம் அமைதி தேடுவதுதானா? எங்கே நிம்மதி எங்கே நிம்மதி என்று மனிதன் அலைய வேண்டியது அவசியம்தானா? மேலும், இந்த அமைதி என்றால் என்ன? அமைதியாக இருக்கிறோம் என்று கூறுபவர்கள் வாழ்க்கை யில் ஒன்றையும் சாதிப்பதாக எனக்குப் படவில்லையே? அவர்கள் வாழ்க்கையில் எதையும் ஒரு Challenge ஆக எடுத்துக்கொண்டு சாதிக்கமாட்டேன் என்கிறார்களே!



என் கேள்வி சரியாகப் புரியவில்லையா? பொறுங்கள். உதாரணமாக ஒன்று கூறுகிறேன். உங்களுக்குப் புரிவது முக்கியம் என்று நான் இப்பிரச்சினையைக் கருதுகிறேன்.

முதலில் என் தந்தையைப்பற்றிக் கூறுகிறேன். வயது 45. தான் அமைதியாக இருப்பதாக அடிக்கடி கூறிக் கொள்பவர் இவர். சில சமயம் அமைதி இழந்து விட்டதாகவும் கூறுவார். அம்மாதிரியான நேரங்களில் வீட்டிலேயே அமைதி என்று ஒன்று இருக்காது! (ஒரே கூச்சலாக இருக்கும்)

இவர் அமைதியாக இருப்பதற்குக் கூறும் காரணங்கள் — அன்றாடம் ஸ்லோகங்கள் பல படிப்பதும், மற்றும் Meditation போன்ற பலவற்றைச் செய்வதும்தானாம்! விதவிதமாகப் பலவற்றை பல நேரத்தில் செய்வார். 'விஷ்ணு சகஸ்ரநாமம்' என்று ஒருநாள் ஆரம்பிப்பார். ஆனால், பத்து நாள் தாங்க மாட்டார். ஆனாலும் சிலவற்றை ஓரளவிற்கு regular ஆகவே செய்துவருகிறார்.

ஆனால் இவரிடம் இதனால் உள்ள சில குறைகள் எனக்குப் பெரிதாகப் படுகிறது. உதாரணமாக, எந்த ஒரு பிரச்சினையையும் இவர் தீர ஆலோசிக்கமாட்டார். வீட்டின் பிரச்சினைகளைக் காதில் போட்டுக்கொள்வதோடு சரி, பிரச்சினையைப் பற்றியும் நினைக்கமாட்டார். அதற்கு ஒரு Solutionயும் யோசிக்கமாட்டார். பல நேரங்களில் பிரச்சினை யைக் காதில் போட்டுக்கொள்வதைக்கூட தட்டிக்கழித்து விடுவார். இதற்கெல்லாம் காரணம் இவருக்கு மன அமைதி உடைந்துவிடுகிறது என்பதுதானாம். நிரந்தரமாக நல்லது பயக்கக்கூடிய திட்டம் எதுவும் எங்கள் வீட்டில் நிறைவேறிய தில்லை. என்றாவது ஒருநாள் இவர் காதில் அம்மா Sound ஆக எதையாவது ஒன்றைப்பற்றி (வீட்டுப் பிரச்சினை) போட்டுவைத்தாரென்றால் ஆர்ப்பாட்டமாய் ஏதாவது செய்வார். ஏதோ ஓரிரு நாள் அந்தப் பிரச்சினை இல்லாம லிருக்கும். இவர் செய்த ஆர்ப்பாட்டத்தை எண்ணி

நாங்களும் மறுபடி பேசாமல் இருந்துவிடுவோம். இவரும் இழந்துவிட்ட அமைதியைத் தேடிக்கொண்டு கிளம்பி விடுவார். ஒரு வீட்டில் தந்தை தீர்க்கவேண்டிய பிரச்சினை யென்றால் அவை எவ்வளவு பெரிதாக இருக்கும் என்று யூகித்துக்கொள்ளுங்கள்.

இவர் ஏன் இப்படி அமைதிஅமைதி என்று பறக்கிறார்?

இதனால் அல்லவா இவர் சிந்தனை செய்யக்கூட மறுக்கிறார்!

இது கோழைத்தனத்தால்தானே நிகழ்கிறது?

வாழ்க்கையை முன்னேற்றுவதற்கும் மற்றவர்களின் நலத்திற்கும் இந்த அமைதி என்பது துளியளவும் பயன்படுவதில்லையே?

இவர் கடைப்பிடிக்கும் தந்திரங்களை (meditation etc) ஒழுங்காகக் கடைப்பிடித்தால் இவருக்கு நிரந்தரமாக இவர் நினைக்கும் அமைதி கிடைக்குமா?

மூளைதான் மொத்தமாக மழுங்கிவிடும் என்கிறேன் நான்! தங்களின் கருத்து என்ன?

எல்லோரும் efficient ஆக புத்தியை செலவழித்து உருப்படுவதற்கு வழியைப் பார்க்கவேண்டும் என்று நான் நினைப்பதுதான் பைத்தியக்காரத்தனமா?'

3. 'சமூகத்தால் சிறுமைப்படுத்தப்பட்டவர்களை உலகுக்கு வெளிச்சம்போட்டுக் காட்டும் தங்களது எழுத்துக்களைத் தொடர்ந்து படித்து வருபவன் நான்.

கணவனால் கொடுமைப்படுத்தப்படும் ஒரு பெண்ணின் பரிதாபக் கதையை இப்போது உங்கள் முன் வைக்கிறேன். இவளைப் போன்ற பல பெண்களின் கதைகளை நீங்கள் அறிந்திருக்கலாம். எனினும், கணவனின் பிடியிலிருந்து அவளைத் தப்புவிப்பதில்தான் அவளுடைய எதிர்காலமே அடங்கியிருக்கிறது. இதற்குத் தங்கள் ஆலோசனை தேவை.



இந்த 33 வயதுப் பெண்மணி, 9 வருடங்களுக்கு முன், வேற்று சாதிக்காரனைக் காதலித்து மணந்துகொண்டவள். இது அவள் செய்த முதல் தவறு. பெற்றோரை எதிர்த்து செய்துகொண்ட திருமணத்தால், இன்றுவரை அவளது மனிதர்களின் ஆதரவு அவளுக்குக் கிடைக்கவேயில்லை.

இந்த 9 வருடங்களில் அவள் வாழ்ந்த வாழ்க்கையே ஒரு சித்ரவதைதான். உடம்பால் பட்ட அடிகளைத் தவிர, மனத்தால் மனிதர்களுக்காக, அவர்களது அன்புக்காக ஏங்கி அவள் பட்டபாடு இன்னும் அதிகம். அவளோடு யாரும் பேசுவதையேகூட விரும்பாத கணவனது நடத்தை யினால், அவளது தனிமை இன்னமும் அதிகமாயிற்று. இதற்கிடையில் அவர்களுக்கு மூன்று குழந்தைகள்— மூன்றும் பெண்கள்!

அந்தக் கணவனுடைய சித்ரவதைகள் அதிகமான நேரத்தில், கல்லூரி மாணவர்களாகிய எங்களுக்கு இந்தக் கதை தெரியவர, அவளையும் அவளது குழந்தைகளையும் எங்கள் வீட்டில் பாதுகாப்பாக இருக்கச் செய்து விவாகரத்துக்கு விண்ணப்பிக்க அவளுக்கு உதவினோம். ஒரு பெண்கள் நல சங்கத்திலிருந்த சட்ட ஆலோசகரிட மிருந்து ஆலோசனை பெற்று, காவல் அதிகாரிகளின் பாதுகாப்பும் பெற்றுக்கொடுத்தோம்.

இது தெரியவந்ததும், அவளது கணவன் மிக அழகான தந்திரம் ஒன்றைக் கையாண்டான். தன் மனைவியையும் குழந்தைகளையும் தன்னிடம் ஒப்படைக்காவிட்டால் தான் தற்கொலை செய்துகொண்டு விடுவதாகக் கூறி பய முறுத்தினான். அவர்களை விடுவித்துவிட்டால், இனிமேல் அன்பாக இருப்பதாகவும் சத்தியம் செய்தான்.

நம்பிக்கையின் பேரில் அவர்களை நாங்கள் விடுவித்து ஒரு மாதமான பிறகு, வெறுமே நாட்களைக் கடத்தவே அவன் இவ்வாறு சத்தியம் செய்தான் என்பது இப்போது தான் புரிகிறது.

ஒருமுறை, தன் குழந்தைகளைத் தான் வெறுப்பதாக வும், அவர்களைப் பராமரிக்கும் பொறுப்புத் தன்னிடம் எப்போதாவது வந்தால் அவர்களைத் தூக்கி எறிந்து விடுவதாகக் கூறியவனிடம் மாட்டிக்கொண்ட பெண்ணின் தவிப்பு உங்களுக்குப் புரிகிறதா?

இப்போது, உண்மை நிலையை உணர்ந்த அந்தப் பெண்மணி தன் கணவனை விட்டு விலக விரும்புகிறாள். இந்த நரக வாழ்க்கையை விட வேறு எந்த வாழ்க்கையுமே நன்றாகத்தான் இருக்கும் என்பதால், துணிந்து ஒரு முடிவு எடுக்க விரும்புகிறாள். விவாகரத்துக் கோரி கோர்ட்டுக்குப் போனால், அவள் கணவன் நிச்சயம் பழைய 'தற்கொலை' கதையை மீண்டும் ஆரம்பிக்கலாம். எனவே, யாரிடமும் சொல்லாமல் இந்த இடத்தைவிட்டு வெளியேற விரும்புகிறாள்.

ஒன்று அல்லது ஒன்றரை ஆண்டுகள், எந்த ஊரிலாவது— எந்த மாநிலத்திலாவது அவளுக்கு ஒரு ஆசிரியை வேலையும், அவள் குழந்தைகளுக்குப் பள்ளியில் இடமும் கிடைத்தால் போதும். அதற்குப் பிறகு, எங்களில் ஒருசிலராவது படிப்பை முடித்துவிட்டு வேலைக்குச் செல்ல ஆரம்பித்துவிடுவோம். அப்போது அவளுக்கு எங்கள் பாதுகாப்பு நிச்சயம் கிடைக்கும். அதுவரை?

தயவுசெய்து வழி காட்டுங்கள்.'

என்ன விடிவு இந்தப் பிரச்சினைகளுக்கு என்பதை அடுத்த அத்தியாயத்தில் பார்க்கலாம்.

# 21

சென்ற அத்தியாயத்தில் மூன்று கடிதங்களை வெளி யிட்டு, அவற்றில் காணப்பட்ட பிரச்சினைகளுக்கான தீர்வை அடுத்த அத்தியாயத்தில் பார்க்கலாம் என்று குறிப்பிட்டிருந்தேன்.

இந்தப் பிரச்சினைகள் தனிநபரின் பார்வையில் ஆராயக்கூடிய பிரச்சினைகளாக இல்லை என்பதால், உளவியல் நிபுணரான *மிஸ் சித்ரா கிருஷ்ணசாமியைச் சந்தித்து, அவர்முன் இந்தப் பிரச்சினைகளை வைத்தேன்.

**அவர் சொன்ன விளக்கங்களும் தீர்வுகளும் இதோ:**

முதல் கடிதம்— இந்தக் கடிதத்தில், 'தன்னைப்பற்றி அவன் சிந்திப்பது இல்லை, மற்றவர்கள் மேல் உள்ள குறைகள்தான் அவன் கண்களுக்குத் தெரிகின்றன' என்று குறிப்பிட்டிருக்கிறார். இந்தக் குறைபாட்டை ஒரு பிரச்சினை யாகக் காட்டின சம்பவங்கள் எதுவும் குறிப்பாகச் சொல்லப் படாததால், பிரச்சினைக்கான காரணங்களை ஆராய்வது சிரமமாகிறது. வியாதி என்னவென்று தெரியாமல் மருந்து எழுதிக் கொடு என்பதைப்போல்தான் இதுவும்!

இருந்தாலும், அவள் குண்டாக இருப்பது, கணவரைச் சேர்ந்தவர்களுக்கு மதிப்புத் தராதது, தன் உறவு மனிதர் களை மட்டும் உயர்வாக நடத்துவது— போன்றவற்றை வைத்துப் பார்க்கும்போது,

சிலவற்றை நாமே அனுமானிக்க வேண்டியிருக்கிறது.

---

* இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை மிகப் பொறுமையாக, விளக்கமாக அளித்த மிஸ் சித்ரா கிருஷ்ணசாமி அவர்களுக்கு எனது நன்றி.

பணக்காரப் பெண்ணாக அவள் இருந்து, கணவரைச் சேர்ந்தவர்கள் நடுத்தரவர்க்கத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம்— அல்லது,

இயற்கையிலேயே குண்டாகவோ அல்லது மற்றவர்களோடு சுமுகமாய்ப் பழகத் தெரியாதவளாகவோ இருந்து, மற்றவர்கள் அவளைத் திருத்துவதை விட்டு கேலியும் கிண்டலும் செய்திருக்கலாம்; அதன் விளைவாகத் தன் குடும்பம் என்று வந்தவுடன் தன் கணவரிடமும், அவரது உறவினர்களிடமும் அந்தக் கோபத்தைக் காண்பித்திருக்கலாம்— அல்லது,

பெற்றோர்களால் தவறாக வளர்க்கப்பட்டு சதா 'நீங்கள்—சொல்லி—நான்—என்ன—கேட்பது'—மனோபாவத்தையே கொண்டவளாக இருக்கலாம்— அல்லது...

இப்படி அனுமானித்துக்கொண்டே போகலாம். இவை அனைத்தும் உண்மையாக இருக்கவேண்டும் என்ற கட்டாயமில்லை.

சரி, இவைதான் காரணங்கள் என்று வைத்துக் கொள்வோம். இனி, அவளைத் திருத்துவது எப்படி?

இங்கேதான் இந்தக் கணவர் ஒரு சிறு தவறு செய்து விட்டாரோ என்று பயப்படுகிறேன்.

அவளுக்கு மிகவும் பொருந்துவதாக இவர் கூறும் அத்தியாயங்களை அவளிடமே காண்பித்து 'பார் உன்னைப் பற்றித்தான் எழுதியிருக்கிறார்கள்!' என்று நேராகவே சொல்லியிருப்பாரோ?

'நீ செய்தது தப்பு' என்று நேருக்கு நேர் சொன்னால், அது தப்புதான் என்பது புரிந்திருந்தாலும்கூட, 'இல்லை' என்று தற்காத்துக்கொள்வதுதான் மனித இயல்பு. எனவே, கணவர் இப்படிச் செய்திருப்பாரேயானால், அது ஒரு தவறான அணுகுமுறைதான். இது எந்தவிதத்திலும் அவளைத் திருத்தப்போவதில்லை.



ஒரு சின்ன உதாரணம் சொல்கிறேன்.

ஒரு குழந்தை எதையாவது கீழே போட்டு உடைத்து விட்டால், உடனே தன் தாயின் முகத்தைப் பார்க்கிறது. அம்மா நிச்சயம் திட்டத்தான் போகிறாள் என்ற எதிர்பார்ப்பில்! அம்மா திட்டினால் உடைத்தது தன் தவறு இல்லை என்ற வாதத்தையும் மனதுக்குள் தயார்செய்து கொள்கிறது. ஒருவேளை அம்மா திட்டாமலேயே இருந்துவிட்டால்? தன் தவறு தனக்கே புரிந்துவிடுவதால், அடுத்த தரத்திலிருந்து பொருட்களைக் கையாளுவதில் ஒரு ஜாக்கிரதை உணர்வு தானாகவே வருகிறது.

இதே முறையை இந்தக் கணவரும் கொஞ்ச காலத்துக்காவது பின்பற்றினால் விடிவு கிடைக்கலாம். இவருக்குப் பிடிக்காத செயல்களை மனைவி செய்யும்போது, அவளைக் கவனிக்காமல் 'இக்னோர்!' செய்துவிடுவதன் மூலம் அவளது மனத்திலேயே ஒரு குற்ற உணர்ச்சி உண்டாகிறது. தான் செய்வது தப்பு என்பது தெரிய வருகிறது. தொடர்ந்து இப்படித் தனது தவறுகள் கவனிக்கப் படாமல் இருப்பதில், அவளுக்கே அந்தச் செய்கைகளின் மேலுள்ள சுவாரஸ்யம் குறைந்துவிடும்.

கவனிக்காமல் என்றால், உதாசீனப்படுத்துவது என்று பொருளில்லை. மற்ற எல்லா விதங்களிலும் எப்போதும்போல் இருந்துகொண்டு, இந்தக் குறிப்பிட்ட செயல்களை மட்டும் 'கண்டுகொள்ளாமல்' இருக்க வேண்டும்.

இரண்டாவது கடிதம்—

அமைதி, அமைதி என்று சொல்லிக்கொண்டு வீட்டுப் பிரச்சினைகளையோ, அல்லது வேறு எந்தப் பிரச்சினைகளையோ கவனிக்காமல் இருப்பது ஒருவிதமான தப்பித்துக் கொள்ளுதலைத்தான் (Escapism) காட்டுகிறது.

இந்தப் பிரச்சினைபற்றி அதிகம் கவலைப்பட வேண்டாம். ஏனென்றால், நூற்றுக்குத் தொண்ணூறு பேர்களின் வீடுகளில் இப்படிப்பட்ட மனிதர்கள்தான் இருக்கிறார்கள்.

நேருக்கு நேர் பிரச்சினைகளைச் சந்திக்கப் பயப்படுபவர்கள் இவர்கள். மற்றவர்களுக்கு அதிகம் தொல்லை கொடுப்பதில்லை. இவர்களால் மற்றவர்களுக்குப் பயன் ஒன்றும் இல்லை என்று வேண்டுமானால் சொல்லலாம்!

இந்தத் தகப்பனாரின் வயது 45 என்று குறிப்பிட்டிருக்கிறார். ஒரு பதினாலு வயதுப் பையனைத் திருத்துவது சுலபம். ஆனால் இத்தனை வயதான ஒருவரை?

எனவே, இவரைத் திருத்துவதை விட்டு, வேறு வழியைத்தான் யோசிக்க வேண்டும். கடிதம் எழுதியவர் தன் தகப்பனார் செய்யத் தவறிய கடமைகளை, மெதுமெதுவே தன் தோளில் ஏற்றிக்கொள்வது நலம்.

இங்கேயும் 'கண்டுகொள்ளாத்தனம்' தான் வருகிறது. அவர் பயப்படும் பிரச்சினைகளை அவர் அறியாத வண்ணம் தாங்களே பொறுப்பெடுத்துக்கொண்டு செய்யலாம்.

உதாரணமாக, வீட்டில் திருமணப் பருவத்தில் ஒரு பெண் இருக்கலாம். திருமணமோ ஒத்திப் போடப்பட்டுக் கொண்டே வரலாம்.

இதைப் பெரிய குற்றமாகப் பேசிக்கொண்டு அப்பாவை விமர்சிப்பதைத் தவிர்த்துவிட்டு, வரன் தேடுவது, கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்வது போன்ற வேலைகளை வீட்டிலுள்ள மற்றவர்களே வெகு இயல்பாக, தான் ஒதுக்கப்படுவதை அவரே அறியாமல் செய்து முடித்துவிடலாமே?

எந்தப் பிரச்சினையையும் தீர்ப்பதுதான் முக்கியம் என்றால், அதற்கான நடவடிக்கைகளில் இறங்குவதுதானே புத்திசாலித்தனம்!



வாழ்வின் பெரும்பகுதியை முடித்துவிட்ட ஒருவரைத் திருத்த நினைப்பதைவிட, வாழ்க்கையைத் தொடங்க இருக்கும் இளைஞர்கள் சில உண்மைகளை ஏற்றுக் கொண்டு, அதற்கேற்பத் தங்கள் வாழ்க்கையை மாற்றிக் கொள்வதுதானே எளிது?

கடைசியாக மூன்றாவது கடிதம்—

மனோதத்துவ ரீதியில் இதில் நான் சொல்வதற்கு அதிகம் ஒன்றுமில்லை. பரிதாபகரமான இந்தப் பெண்ணை, நமக்கென்ன என்று ஒதுக்கிவிடாமல் அவளுக்கு இந்த இளைஞர்கள் உதவ நினைப்பது பாராட்ட வேண்டிய ஒரு விஷயம். அதற்கு முன்னாலும் ஒரு சின்ன எச்சரிக்கை...

கைதூக்கிவிட நாம் தயாராக இருந்தாலும், கையை நீட்டி நம்மைப் பிடித்துக்கொள்ளும் தீர்மானம் நிச்சயம் அவளிடமும் மிகமிக உறுதியாக இருக்கவேண்டும்.

அவளின் புது வாழ்விலும் அந்தக் கணவன் அவளைத் தொந்தரவு செய்தால், மனது மாறி இரக்கப்பட்டு அவள் அவனுடன் மறுபடியும் போகமாட்டாள் என்பதை நிச்சயமாகச் சொல்லமுடியுமா?

யோசிக்க வேண்டும். நிறைய யோசிக்க வேண்டும்.

உதவி பண்ணும் அவசரத்தில் நிதானத்தை இழப்பதினால் லாபமில்லை.

தீர்வு ஒன்றைக் குறிப்பாக இதற்குச் சொல்ல இயலாவிட்டாலும், அவளது பிரச்சினை இந்தப் பத்திரிகையில் பிரசுரமாகியிருப்பதைப் பார்த்து, யாராவது ஒரு வழியைக் காட்டக்கூடும் என்று நம்பலாம், அவ்வளவுதான்...

இந்த அத்தியாயத்தை முடிக்கு முன் ஒரு வார்த்தை...

இன்றைய இளைஞர்களுக்குப் பொறுப்பு கிடையாது. பொறுமை குறைந்துவருகிறது என்ற குற்றச்சாட்டுகளை, ஒரு பெண்ணின் நல்வாழ்வுக்காகப் பாடுபடும் இன்றைய இளைய தலைமுறையினரில் சிலரின் கரிசனம் மிக்க மூன்றாவது கடிதம் நிச்சயம் பொய் என்று நிரூபிக்கிறது. இது ஒரு சந்தோஷமான, ஆரோக்கியமான சமாச்சாரம்.

'I-care-for-you என்கிற மனப்பான்மை ஒன்றே உங்கள் நாட்டை மற்றவரிடமிருந்து பிரித்து உயர்த்திக்காட்டுகிறது' என்று அமெரிக்க நண்பர் ஒருவர் கூறியது நினைவுக்கு வர,

மீண்டும் நம் இளைய தலைமுறையினர் இதை நிரூபித்திருக்கிறார்கள் என்கிற சந்தோஷத்தோடு,

Hats off to you youngsters!

# 22

**அ**டர்ந்த மரங்கள் சேர்ந்து குடையாக நிழல் பரப்ப, அந்த இடத்தில் அடக்கமாக ஒரு சிறிய வீடு.

காற்றும், பறவைகளும் சேர்ந்திசைத்த முணு முணுப்பைத் தவிர, வேறு ஓசையே இல்லாத நிசப்தம்.

அடையாறு பிரம்மஞான சபையினுள் (Theosophical Society) நுழைந்து, பிரசித்தி பெற்ற ஆலமரத்தைப் பார்வையிட வரும் எத்தனை பேருக்கு, அதே இடத்தில் அந்த ஆலமரத்தை விடவும் அதிகக் காலம் தன் புகழ் நிலைக்கும்படி செய்த இன்னொரு ஆலமரம் இருப்பது தெரியும்?

பரதநாட்டியத்தின் இன்றைய பவித்ரமான தன்மைக்கு வித்திட்டவர்—

ஒரே மதத்தில், ஒரே இனத்தின் உட்பிரிவுகளுக்குள் கூட சம்பந்தம் வைத்துக்கொள்ளாத இருபதாம் நூற்றாண் டின் துவக்ககாலத்தில், தைரியமாக ஒரு ஆங்கிலேயரை மணந்தவர்—

அடக்கம், மனிதாபிமானம், பண்பு— இவற்றைத் தன் உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்பவர்—

வேறு யார்? திருமதி ருக்மணி அருண்டேல்தான்...

தன்னம்பிக்கை, விடாமுயற்சி, சமூகத்தின் மூட நம்பிக்கைகளை எதிர்த்து செயல்படல் — இவற்றைப் பற்றி யெல்லாம் எண்ணும்போது, ஒவ்வொரு முறையும் என் நினைப்பைத் தவறாமல் ஆக்ரமிப்பவர், இந்த அசாதாரண மான பெண்மணிதான்!

இவரைச் சந்திக்கும் வாய்ப்பு சமீபத்தில் எனக்குக் கிடைத்தது.

சரியாக மாலை நான்கு மணிக்கு நான் உள்ளே நுழைகையில் எனக்காக ஏற்கெனவே காத்துக்கொண்டு திருமதி ருக்மணி...

வெண்மையான புடவை— சுத்தமான தோற்றம். ஒரு காலத்தில் மிகமிக நளினமாகவும், திருத்தமாகவும் இருந்த அழகை இன்றைக்கும் உணர்த்திக்கொண்டிருக்கும் உடல்வாகு.

வெள்ளைத் தலைமுடியை வெறுமே கோதி முடிந்திருந்தார்.

இந்த எண்பது வயதில், இத்தனை எளிமையான அலங்காரத்தில் இப்படிக்கூடவா ஒரு சாத்வீகமான அழகு இருக்க முடியும்!

அன்று சற்று உடல்நலம் குன்றி, சோர்வாக இருந்த போதிலும், கம்பீரத்திலும், பேச்சுத் தெளிவிலும் துளியும் தளர்வில்லை.

"வித்தியாசமான உங்களுடைய சின்ன வயசு நாட்களைப் பத்தி கொஞ்சம் சொல்ல முடியுமா, அம்மா?"

திட்சண்யமான பார்வையோடு, என் கண்ணை நேருக்கு நேர் பார்த்து பதில் சொல்கிறார்.

"என் சின்ன வயசு முழுக்க இந்த இடத்துலதான் இருந்தேன். என்னைப்பத்தி சொல்றதுக்கு முன்னால, என் அப்பாவைப்பத்தி சொல்லணும். அவர் ஒரு 'தியாஸஃபிஸ்டா'க இருந்தவர். டாக்டர் அன்னிபெசண்ட், 1912 வாக்குல 'ஸ்டால்வர்ட் ப்ளெட்ஜ்'னு ஒண்ணு கொண்டு வந்தார். அப்போ அந்தக்காலத்துல இருந்த சின்னக் குழந்தைகளுக்கு ரொம்ப சிக்கிரம் கல்யாணம் பண்ணி வெக்கற வழக்கத்தையும், வரதட்சணை கொடுக்கறது மாதிரியான பழக்கங்களையும் எதுத்துதான் இந்த தீர்மானத்தைக் கொண்டுவந்தார். அதுல, எங்கப்பாவும் கையெழுத்துப்போட்டு, 'என் பெண்ணை அவளுக்குப் பதினாறு வயசு ஆகறதுக்கு முன்னால கல்யாணம் பண்ணிக் கொடுக்கமாட்டேன்'னு சத்தியம் பண்ணினார். எழுபது வருஷங்களுக்கு முன்னால இது எத்தனை பெரிய விஷயம் தெரியுமா?"



தன்னுடைய இன்றைய வாழ்க்கைக்குக் காரணமான அந்தச் சிறு பிராயத்தைப் பெருமிதத்தோடு நினைத்துப் பார்க்கிறார்.

"...அப்போ டாக்டர் அன்னிபெசண்ட்தான் எங்களுக்கு எல்லாமே. அவர் ஒரு வெளிநாட்டுக்காரரா இருந்தாக்கூட, இந்தியர்கள் இந்திய பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிக்கறதைத்தான் அவர் விரும்பினார். பள்ளிக்கூடத்துல, தரையிலதான் உக்காந்துக்கணும், நெத்தில இட்டுக்கலைன்னா, 'போய் இட்டுண்டு வா'ம்பார்..."

"டாக்டர் அருண்டேல் முழுக்கமுழுக்க ஒரு இந்தியராவே வாழ்ந்தவர், இல்லியா?"

"ஆமாம். டாக்டர் அருண்டேலுடைய ரசனைகளைப் பார்த்துட்டு, அவருக்கு ஒரு இந்தியப் பெண்தான் மனைவியாக வரணும்னு டாக்டர் அன்னிபெசண்ட் விரும்பினார். இதன் விளைவா, டாக்டர் அருண்டேல் என்னைத் தேர்ந்தெடுத்து, எங்கப்பாகிட்ட பேசினார். அப்பா, அம்மா சம்மதம் தெரிவிச்சாலும் பலரோட எதிர்ப்பும் இதுக்கு இருந்தது..."

"இந்த எதிர்ப்புகளால பாதிக்கப்படாம எப்படி உங்களால அவரைக் கல்யாணம் பண்ணிக்க முடிஞ்சது?"

சுவாரஸ்யமான சின்ன புன்முறுவல் ஒன்று இதழ்க் கடையில் எட்டிப்பார்க்க, கொஞ்சம் முன்னால் சாய்ந்து உட்காருகிறார்.

"இதுல ஒரு வேடிக்கை பாரு— அத்தனை பேரும், 'இது தப்பு, கூடாது'னு சொன்னப்போ, என்னோட 90 வயசு பாட்டி மட்டும், 'இதுல என்ன இருக்கு? அவர்தான்

பிராமணனை விட சிலமா இருக்காரே, என்ன வந்துடுத்து இப்ப?'னு சொன்னாள். எத்தனை உசந்த மனசு பார்த்துக்கோ! இப்படி கொஞ்சம் பேர் ஆதரிச்சாலும், மத்தவா ஏதாவது கலாட்டா பண்ணலாம்னு நினைச்சதால, எங்களை பம்பாய்க்கு அழைச்சுண்டுபோய் அங்க ரிஜிஸ்டர் கல்யாணமும், மெட்ராஸுக்கு வந்து, நம்ம வழக்கப்படி சாஸ்த்திரப்படியும் நடத்திவெச்சார். கல்யாணம் ஆகறப்போ எனக்கு வயசு பதினாறு, அவருக்கு என்ன தெரியுமா? முப்பத்தாறு!"

"இருபது வயசு வித்தியாசம் உங்க வாழ்க்கைல பெரிசாப்படலியா?"

"அன்புல வயசு வித்தியாசம் எங்க வந்தது? Dr. Arundale was everything to me. He was a Friend, Philosopher and Guide. He taught me everything in this world. He was the one who made me what I am today... (டாக்டர் அருண்டேல் எனக்கு எல்லாமாகவும் இருந்தார். நண்பராக, போதகராக, வழி காட்டியாக — எல்லாம் அவர்தான். எனக்கு எல்லா வற்றையும் கற்றுக்கொடுத்து, இன்று நான் இருப்பதற்குக் காரணம் அவர்தான்...)

தடங்கலில்லாத அழகான ஆங்கிலத்தில் பதில் வருகிறது.

"உங்களுடைய இல்லற வாழ்க்கை எப்படி இருந்தது?"

சற்றே கோபம் தெரிகிறது முகத்தில்.

"யூ மீன் செக்ஸ்? என்னவோ தெரியல, இப்ப எல்லாரும் இதைப்பத்தி ரொம்ப சுலபமாய்ப் பேசிடறேள்! எங்க காலத்துல இதுக்கெல்லாம் நாங்க முக்கியத்துவம் கொடுத்ததேயில்லை. சினிமா, பத்திரிகைகள்னு எங்க பார்த்தாலும் இதுதான் இப்ப முக்கியமாய் போயிடுத்து. எங்களுக்கெல்லாம் இதையும்விட அழுத்தமான பிணைப்பு இருந்தது. டாக்டர் எனக்குப் படிப்பு சொல்லிக்



கொடுத்தார், நாட்டியத்துல இருந்த ஈடுபாட்டைப் பார்த்து அதைக் கத்துக்க ஏற்பாடு பண்ணினார். இன்னும் அதான் முதல்லேயே சொல்லிட்டேனே, எனக்கு எல்லாம் அவர்தான்—னு..."

தேவதாசிகள் மட்டுமே கற்றிருந்த நாட்டியக் கலையை குடும்பப் பெண்களுக்கு அறிமுகம் செய்தவர் என்கிற முறையில், அவருடைய நாட்டிய சேவையின் அடிப் படையை அறிய ஆவல் பிறக்கிறது.

"பரதநாட்டியத்துல உங்களுக்கு குரு யாரு?"

"பரதநாட்டியத்தை மயிலாப்பூர் கௌரி அம்மா கிட்டயும், ஸ்ரீமதி கல்யாணியோட பெண்களான ஜீவ ரத்தினம், ராஜலட்சுமிகிட்டேயும் கத்துண்டேன். பாவம் இல்லாம பரதம் இல்லே, பாவத்துக்கு பாட்டு தெரிய வேண்டியது அவசியம். அதனால, டைகர் வரதாச்சாரி கிட்ட பாட்டும் கத்துண்டேன். ரஷ்யப் பெண்மணி 'அன்னா பாவ்லாவ்'கிட்ட 'பாலே'யும் படிச்சேன்..."

"குறிப்பிட்டுச் சொல்லும்படி பரதநாட்டியத்துல உங்களுக்கு ஈடுபாடு உண்டாகக் காரணம்?"

"பரதநாட்டியம்கறது ஒரு அபூர்வமான கலை. அதை தேவதாசிகள்தான் ஆடணும்னு சொல்லி வெளியே வேற யாருக்குமே தெரியாம முடக்கிவெச்சிருந்தா. பாவம், ராகம், தாளம், நளினம்னு இருக்கற ஒண்ணை இப்படி மறைச்சு வெக்கறது பாவமில்லையா? இந்த ஒரு காரணம் போறாதா ஈடுபாடு வர? மத்தபடி, அதை மத்தவாளுக்கும் சொல்லிக் கொடுத்து, என்னையும் வளர்த்துக்கத் துணையா இருந்தவர் டாக்டர் அருண்டேல்தான்."

காலைச் சற்று மாற்றிப் போட்டுக்கொண்டு அமர்ந்தவர், என்னை ஒரு புன்சிரிப்போடு பார்த்து,

"இத்தனை நேரம் என்னைப்பத்தி சொல்லிட்டேன். இனிமே, பொதுவான சில விஷயங்களைச் சொல்றேன், உங்க பத்திரிகைல எழுதுவியா?" என்கிறார்.

முற்போக்கான சிந்தனையும், அறிவும், இத்தனை அனுபவமும் கொண்டவரின் கருத்துக்கள் உபயோகமாகத் தான் இருக்கும், நிச்சயம் வாழ்க்கையை மேம்படுத்தத்தான் உதவும் என்பதால், "கண்டிப்பா" என்றேன்.

"பெண்கள் இப்போவெல்லாம் கல்யாணம் பண்ணிண்டு ரொம்ப கஷ்டப்படறதா கேள்விப்படறேன். வரதட்சணை தரலே, சீர் தரலேனு பெண்ணையே எரிக்கறாளே, இது என்ன அநியாயம்? கேக்கறதுக்கே வேதனையாயிருக்கு. குடும்பம், குணம் எதையுமே பார்க்காம ஏன் இத்தன அவசரமா பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் குடுக்கணும்? இதுக்கெல்லாம் பெண்ணைப் பெத்தவாளைத் தான் குத்தம் சொல்லணும். பிள்ளைகளைப் படிக்கவெச்சு பிழைக்க வழி சொல்லித்தர முடியும்னா, பெண்களையும் ஏன் அப்படியே வளக்கக்கூடாது? ஒண்ணு தெரிஞ்சுக்கோ... ஒரு ஆணுக்குப் பெண் தேவைப்படற அளவுக்கு, ஒரு பெண்ணுக்கு ஆண் தேவையில்லை. ஒரு கல்யாணம் எப்போ சரிப்பட்டு வரலையோ, அப்போ அந்தப் பெண் தைரியமா வெளில வந்து தனியா வாழக் கத்துக்கணும். இதோட, 'மதம்'ங்கற பேர்ல கொடுமையாவும், அர்த்த மில்லாததாகவும் இருக்கற வழக்கங்களை மூடநம்பிக்கை களை விட்டொழிக்கணும்— இதெல்லாம் மறக்காம எழுது."

"குடும்பக் கட்டுப்பாட்டைப்பற்றி உங்கள் அபிப்ராயம் என்னம்மா?"

"நிச்சயமா வேண்டியதுதான். ஆனா, இதுல எல்லா மதத்துக்கும் பொதுவான ஒரு சட்டம் இருக்கணும். ஒரு மதம் மட்டும் கடைப்பிடிச்சு, மற்ற மதங்கள் விட்டுடறதுல அர்த்தம் இல்லே. அப்புறம் மொத்தமா ஜனத்தொகையை



எப்படிக் குறைக்கறது? இன்னும் பாரு, இந்த சினிமா சென்ஸார் போர்டுல பெண்களைத்தான் மெம்பர்ஸா போடணும். ஒரு பெண்ணுக்குத்தான் எது ஆபாசம், எது அசிங்கம்கறது புரிஞ்சு, அதை நீக்கத் தெரியும். இதையே ரசிக்கற ஆம்பிள்ளைகளைப் போட்டு சென்ஸார் பண்ணச் சொல்றதுல அர்த்தம் இல்லியே! அப்புறம், பள்ளிக்கூடத்துல படிப்போட ஒழுக்கத்தையும் கத்துத் தரணும். அன்னிய பாஷை கத்துக்கறதுல மட்டும் பெருமைப்பட்டுண்டு, கான்வென்டுல சேக்காம, நம்ம கலாச்சாரத்தைச் சொல்லித் தர்ற இந்தியப் பள்ளிக்கூடத்துலதான் குழந்தைகளைச் சேர்க்கணும். எல்லாரும் படிச்சுட்டு அமெரிக்காவுக்குப் போயிட்டா, நம்ம ஊர்ல இருக்கப் போறது யாரு? சொந்தத் தாயையும், தாய் நாட்டையும் முதல்ல மதிக்கக் கத்துத் தர்றது முக்கியமில்லையா?"

என்ன அழுத்தமான கருத்துக்கள்!

இந்த வயசிலும் எத்தனை தெளிவு!

இந்து மதத்தின் பேரிலும், இந்திய மண்ணின் மீதும் என்ன அசைக்க முடியாத நம்பிக்கை, பெருமை!

சூழ்நிலைகளின் கனம் காரணமாய் தன்னம்பிக்கை இழந்து 'நான்—என்ன—பண்ணுவேன்' என்று பரிதவிக்கும் பெண்கள் எல்லாம் கட்டாயம் திருமதி ருக்மணி அருண்டேலை மனசில் நிறுத்திக்கொள்ளப் பழகவேண்டும். அவர் தன் இளமைக்காலங்களில் போட்ட எதிர்நீச்சலை நினைத்துப்பார்க்க முயல வேண்டும். சோர்ந்துபோயிருப் பவர்களுக்கு திருமதி அருண்டேலின் வாழ்க்கைச்சரிதம் புத்துணர்ச்சியூட்டும் ஒரு டானிக். இதில் சந்தேகமே வேண்டாம்.

## 23

**எ**திர்பார்ப்புகள்—

வாழ்க்கையின் எந்தத் துன்பத்திற்கும் அடிப்படைக் காரணம் எதிர்பார்ப்புகள்தான் என்று புத்தர் பெருமான் அன்றே அடையாளம் காட்டிய எதிர்பார்ப்புகள்—

ஆசை, கற்பனை, நம்பிக்கை போன்ற சன்னமான இழைகளாக, நமது எந்தச் செயலிலும், சின்ன அசைவிலும் கூட கூடு பின்னிவிடும் இந்த எதிர்பார்ப்புகளை, தக்க தருணங்களில் அறுத்தெறிந்து, காயப்படாமல் வாழக் கற்றுக்கொள்வதில் ஒரு துணிச்சலான சுவாரஸ்யம் இருக்கத் தான் செய்கிறது.

நூலிழைகளாக இருப்பின் இது சாத்தியமே— ஆனால் இந்த இழைகள் ஒன்றோடொன்று சிக்கி, பிணைந்து அழுத்தமான கயிறாக வளர, ஒருவித கையாலாகாத் தனத்துடன் இடம் கொடுத்துவிட்டால்?

ஆளை இறுக்கி, மூச்சை நிறுத்தி, துவம்சம் செய்து ஒரேயடியாக ஸ்வாஹா பண்ணிவிடும்— சத்தியம்.

பல முகங்களுடன் தன்னை வெளிப்படுதநிக் கொள்ளும் இந்த அசுரனை ஓர் உதாரணத்தோடு சந்திக்கலாம்.

ஸ்வர்ணா—

தங்க விக்கிரகம் மாதிரி இருக்கும் பெண்ணைப்பற்றி பெற்றவர்களுக்கும், மற்றவர்களுக்கும் ஏகப் பெருமை. அவளுக்கு முன்னால் ஒரு பெண், இரண்டு ஆண், பின்னால் ஒரு பெண் என்று வரிசையாய் இருந்தபோதிலும், ஸ்வர்ணாவின் அழகு வேறு யாருக்கும் இல்லை.



லேசாய் தொட்டாலும் சிவந்துபோய்விடுகிற நிறம்— வெல்வெட் கறுப்பில் கண்களும், கூந்தலும்— செதுக்கின மாதிரி மூக்கு, மொட்டு போன்ற வாய்—

இவற்றோடுகூட இன்னொன்றும் இருந்தது—

அதுதான், தான் அழகு என்கிற கர்வம்!

சுற்றி இருந்தவர்கள் வேறு இதற்குத் தீனி போட்டு வளர்த்ததில், இந்த கர்வம் சகலவிதமான எதிர்பார்ப்பு களுடன் ஜாம்ஜாம் என்று வளர்ந்தது.

— எங்க ஸ்வர்ணாவுக்கென்ன, கிளிமாதிரி! அவளவன் க்யூலே நின்னு கொத்திகிட்டுப் போயிடமாட்டானா!

— போய் ஃபேனைப் போட்டுக்கிட்டு உட்காருடி தங்கம்... நாளைக்குக் காரும், பங்களாவும், வேலைக் காரங்களுமா வாழப்போறவ, வீட்டுவேலை செஞ்சு தேயவாணாம்டிம்மா...

இந்த போதனைகள் ஏற்படுத்திய போதையில், எதிர் பார்ப்புகள் எக்கச்சக்கமாய் பெருக, ஸ்வர்ணாவுக்குள் காலை இல்லை, மாலை இல்லை என்று எப்போதும் கனவுகள்தாம்!

'தெருல இறங்கி பத்தடி நடக்கறதுக்குள்ள எல்லார் பார்வையும் என்மேலதான். கார்ல போறவன், வர்றவன் எல்லாம் இறங்கி 'ஐ லவ் யூ'னு சொல்லிவிடுவான் போல, என்ன முறைப்பு இது? ஏன் முறைக்கமாட்டான்? என்னை மாதிரி அழகு வேற எவளுக்கு இருக்கும்!'

ஏதோ ஒரு ராஜகுமாரன் வரப்போகிறான் என்ற நினைப்பில் அவளும், அப்படி வரப்போகிறவனால் தங்களுக்கும் விடிவுகாலம் என்ற நம்பிக்கையில் மற்றவர்களும்.

'இந்த மாதிரி சின்ன இடமெல்லாம் வேணாம் சார்! நாங்க சாதாரணப்பட்டவங்களா இருக்கலாம்— ஆனா, எங்க

பெண் மாதிரி ஒருத்தி லேசுல கிடைப்பாளா என்ன?' என்று, வருகிற வரன்களையெல்லாம் 'இவன் கறுப்பு— இவன் குட்டை— இவனுக்கு ரொம்ப சாதாரண உத்தியோகம்— இவன் குடும்பம் பெரிசு— அப்பன் முழி நல்லா இல்லே— ஐய, இந்தப் பையனின் தங்கை சமத்து போதாத மாதிரி தத்தக்கா பித்தக்கான்னு பேசுதே—' லொட்டு, லொசுக்கு என்று பாட்டியில் துவங்கி ஸ்வர்ணாவை ஒட்டுமொத்தமாய் ஒதுக்கித் தள்ளியதில்,

இன்று—?

வயசு மட்டும் ஏறிக்கொண்டே போகிறதே தவிர, கழுத்தில் தாலி இன்னமும் ஏறினபாடில்லை!

அளவுக்கதிகமான எதிர்பார்ப்புகளின் காரணமாக, தனக்கு இருபத்தெட்டு வயதாகிவிட்டது என்பதைக்கூடப் புரிந்துகொள்ளாமல், 'யதார்த்தம்' என்ற சொல்லுக்கே அர்த்தம் உணராமல் சிடுமூஞ்சி என்ற பட்டத்தோடு, அதே கர்வம் கலந்த எதிர்பார்ப்புகளோடு ஸ்வர்ணா காத்திருக்க, ஏதோ போதிமரத்தடியில் ஞானம் பெற்றுவிட்ட தினுசில் திடுமென அவளைப் பெற்றவர்கள் மட்டும் மாறிப்போயிருக் கிறார்கள்.

ஏன் இப்படிச் சொல்கிறேன் என்றால், சில நாட்களுக்கு முன்னால் ஸ்வர்ணாவின் அம்மாவைக் கோவிலில் பார்த்தேன்.

"... இனிமே காலம் பூராவும் இந்தப் பெண்ணை வெச்சிக்கிட்டு என்ன பண்ணப்போகிறேனோ! வயசு இருபத்தெட்டு ஆனாத்தான் என்ன, வாழ்க்கையே அஸ்தமிச்சா போச்சு? மனசைத் தேத்திக்கிட்டு, 'நான் உனக்கு தாலி கட்டறேன்'னு சொல்ற அத்தை மகனைக் கட்டிக்கிட்டா என்ன?'

அத்தை மகனையா?



தெற்றுப் பல்லும், குண்டு தொப்பையுமாக இருக்கும் அத்தை மகனையா?

இந்த ஜன்மத்தில் இது நடக்கும் விஷயமாகத் தோன்ற வில்லையே?

ஸ்வர்ணாவின் தாய் புலம்பியபோது, அவர்மேல் பரிதாபப்படுவதற்குப் பதில் கோபப்படத்தான் எனக்குத் தோன்றியது.

தகுதிக்கு மீறின எதிர்பார்ப்புகளை ஸ்வர்ணாவுக்குள் வளர்த்துவிட்டவர்கள் யார்?

எந்நேரமும் அவள் அழகைப் பற்றியே பேசி, வேறு எதிலும் மனசை லயிக்கவிடாமல் செய்து, ஆசைகளைத் தூண்டிவிட்டவர்கள் யார்?

இவர்கள்தானே!

இத்தனைக்கும் காரணம் இவர்களுடைய பேராசை தானே!

இப்போதும், அவளுக்கு வாழ்க்கையைப் புரிய வைப்போம்; நல்லதை— நிஜத்தில் சாத்தியமானதை எடுத்துச் சொல்வோம் என்றில்லாமல் அவளிடம் குற்றம் கண்டுபிடித்துக்கொண்டுதானே இருக்கிறார்கள்!

இங்கே கொஞ்சம் நாமெல்லாம் நின்று நிதானித்து யோசிக்க வேண்டும்.

இப்படி அதீதமாக இல்லாவிட்டாலும், ஒவ்வொருவரும் ஏதாவதொரு விதத்தில் துளித்துளியாய் இந்த எதிர்பார்ப்புகளின் அழுக்கலில் புதைந்துபோய்க்கொண்டு தானே இருக்கிறோம்?

சாதாரணமாகத் தெருவில் நடக்கும்போது தெரிந்தவர் எவரையாவது பார்க்க நேர்ந்தால், அவரே முதலில் நம்மைக் கவனித்துப் பேசவேண்டும் என்று எதிர்பார்ப்பதும்,

பிறந்தநாள் விழா, திருமணநாள் என்று எந்தச் சிறிய விழாவிலும், நண்பர்களிடமிருந்து பரிசுகளை எதிர் பார்ப்பதும்,

எவருக்காவது உதவி செய்துவிட்டு, அவரும் நமக்கு அதே ரீதியில் உதவ வேண்டும் என்று எதிர்பார்ப்பதும்,

புதுசு உடுத்திக்கொண்டிருந்தாலோ அல்லது, புதுநகை அணிந்துகொண்டாலோ அதை உடனே மற்றவர் கவனித்துப் பாராட்டவேண்டும் என்று எதிர்பார்ப்பதும்,

எந்தக் குப்பனுக்கும் சுப்பனுக்கும்கூடத் தோன்று பவைதான் என்பதோடு, ஓரளவுக்கு இவற்றால் பாதிப்பு அதிகம் இல்லை என்ற காரணத்தால் விட்டுவிடுவோம்.

ஆனால்—

வேலையாட்களுக்குப் பணமும் பொருளுமாக நிறையக் கொடுத்துவிட்டு, அவர்கள் தங்களிடம் எப்போதும் நன்றியுடன் இருக்கவேண்டும் என்று எதிர்பார்த்த சகுந்தலா, அப்படி நடக்காமல் போனதும், காண்போர் எல்லோரிட மும் இதையே புலம்பினதும்,

ஐ.ஏ.எஸ். ஆபீஸராக இருந்தபோது கிடைத்த மதிப்பு, மரியாதைகள் ரிடையராகிவிட்ட பிறகு கிட்டாத ஏமாற்றத்தில் ராமநாதன் வெதும்பினதும்,

கைக்குழந்தை பாலுக்காக அழுகையில், ஜோசியத்தை நம்பி தினமும் கட்டுக்கட்டாய் லாட்டரிச் சீட்டு வாங்கி, நிச்சயம் கோடீஸ்வரனாகிவிடுவோம் என்று கட்டிய கோட்டை இடிந்து பிரசாத் அரைப்பைத்தியமாகத் திரிந்ததும்,

பார்டர் லைன் தாண்டிய கேஸ்கள்... யார் செய்த புண்ணியமோ, அக்கறை கொண்டவர்களின் முயற்சியால் இவர்கள் இன்று சமாதானமாகி தெளிந்து, ஓரளவுக்கு மீண்டும் நல்லவிதமாக வாழ்க்கை நடத்துகிறார்கள்.



இவையிவை இப்படியிப்படித்தான் நடக்கவேண்டும் என்று நமக்கு நாமே வகுத்துக்கொண்டு கற்பனைகளை வளர்த்துக்கொள்கிறோம்.

நிறைவேறினால் சந்தோஷம்தான்!

இல்லாவிட்டால்?

கஷ்டம்... ரொம்ப கஷ்டம்.

எத்தனை அடிமட்டத்துக்குப் போகலாம் என்பதை பாலாஜியின் வாழ்க்கையை விவரிப்பதன் மூலம் தெளிவாக்குகிறேன்.

பாலாஜி அந்தப் பிரபல பாடகியின் விசிறி. மிகத் தீவிரமான விசிறி.

அவள் கச்சேரி எதையும் இவன் கேட்கத் தவறிய தில்லை. ஏதாவது புத்தகத்தில் அவளுடைய புகைப்படமோ அல்லது அவளைப் பற்றின செய்தியோ வந்தால் கத்தரித்து ஆல்பமாக செய்துவைத்துவிடுவான்.

அலமாரி முழுக்க அவளின் கச்சேரி காஸட்கள்.

பலமுறை பாராட்டி அவன் எழுதியிருந்த கடிதங் களுக்கு, ஒருமுறை, மரியாதை காரணமாய் அவள் பதில் எழுத—

பாலாஜி தேன் குடித்த நரியானான்.

நேரில் சென்று சந்திக்க முற்பட்டான். கச்சேரிகளை அலாதி சிரத்தையுடன் விமர்சித்தான்.

நல்ல ரசிகன் ஒருவனைச் சந்திக்கும் சந்தோஷத்துடன் பாடகியும் ஆவலுடன் உட்கார்ந்து பேசத் தொடங்க—

அவள் தன்னைக் காதலிப்பதாகவும், தன்னைத்தான் திருமணம் செய்துகொள்ளப்போவதாகவும் பாலாஜி நம்பத் தொடங்கினான்.

கற்பனையை சிறகடித்துப் பறக்கவிட்டான். ஆகாயத் தில் மிதந்தான். கனவுகளில் அவளுடன் குடித்தனம் பண்ணி குழந்தையும் பெற்றுக்கொண்டான்.

இந்த நிலையில் பாடகியின் திருமணச் செய்தி—

திருமணமா? என்னவளுக்கா? சாத்தியமேயில்லை!

என்னைக் காதலித்தவள் இன்னொருவனை எப்படிக் கல்யாணம் செய்துகொள்வாள்?

இது துரோகமல்லவா? சும்மா விடக்கூடாது அவளை — எப்படி நடக்கிறது இந்தக் கல்யாணம் என்று பார்த்துவிடுகிறேன்!

திருமண நாளன்று, அத்தனை பேர்களின் எதிரிலும் கத்தி, ஆர்ப்பாட்டம் செய்து, போலீஸ் வரவழைக்கப்பட்டு—

முதலில் ஜெயிலிலும், பின்னர் மூளை சரியில்லை என்று ஆஸ்பத்திரியிலும் வாசம்!

தானாக ஒன்றை உண்டாக்கி, அதை வளர்த்து, இதில் துளியும் சம்பந்தப்படாத இன்னொருவரின் வாழ்க்கையையே சிதைக்கப் பார்த்து... என்ன கஷ்டகாலம் இதெல்லாம்!

வாழ்க்கையின் முன்னேற்றத்திற்காக, நல்லவற்றையே நினைத்து அவற்றையே எதிர்பார்ப்பதில் தப்பில்லை.

ஆனால், அந்த எதிர்பார்ப்புகள் எந்த அளவில், எவற்றைப் பொறுத்து இருக்கவேண்டும் என்பதில்தான் வித்தியாசம் தேவை.

எதிர்பார்ப்புகள் நிஜத்தில் நடக்காதபோது வரும் ஏமாற்றங்களுக்கு நம்மைத் தயார்செய்துகொள்வதோடு, உண்மையாகவே நிகழக் கூடியவை— நிஜமாக பலிக்கவே முடியாதவை என்று இரண்டு பிரிவுகளுக்குள்ள பேதத்தையும் உணர்ந்து, துவக்கத்திலேயே பேராசையான எதிர்பார்ப்புகளைக் கட்டுப்படுத்திக்கொள்வதுதான் எல்லோருக்கும் நல்லது.

# 24

**செ**ன்ற அத்தியாயத்தில் எதிர்பார்ப்புகள் நிறைவேறாமல்போவதனால் உண்டாகும் பிரச்சினைகளைப் பார்த்துவிட்டதால், இப்போது, சில நேரங்களில் நாம் சற்றும் எதிர்பாராத சமாச்சாரங்கள் நிகழ்ந்து ஆளை நடுத்தெருவில் நிறுத்திவிடும் சாத்தியங்களைச் சந்திக்கலாம்.

ராஜன்— தனியார் கம்பெனி ஒன்றின் இரண்டு ஜூனியர் க்ளார்க்குகளில் ஒருவன்.

சும்மா சொல்லக்கூடாது, கெட்டிக்காரன்தான். வெட்டிக்கொண்டு வா என்றால் கட்டிக்கொண்டு வரும் ரகம்.

இவனுக்குள், பதவி உயர்வு பெறவேண்டும் என்கிற ஆசை புகுந்துகொண்டது.

நியாயமான இந்த விருப்பத்தை நிறைவேற்ற தன் திறமையை மட்டும் நம்பி செயல்படாமல், தெரியாத்தனமோ— அசட்டுத்தனமோ, இல்லை அதீதமான பேராசையோ— ஏதோ ஒன்றின் தூண்டுதலால், பம்பாயிலிருந்து மேலதிகாரி வந்திருந்தபோது அளவுக்கதிகமாகவே அவரைத் தாஜா செய்து, அவருக்காக ஏகத்துக்குச் செலவழித்து, பெட்டி கொள்ளாமல் குழந்தைகளுக்கான விளையாட்டுச் சாமான்களும், கூடை நிறைய பழங்களுமாய் அவரை வழியனுப்பிவைத்தான்.

செய்தது போதாது என்று, "... மனுஷன் அசந்துட்டாரு! சும்மாவா செஞ்சிருக்கேன், ஆபீஸ் ஃபைலுக்கு நடுவுல ஒரு கவர்ல ஐநூறு ரூபா பணம் வேற வெச்சிருக்கேன். பணத்துக்கு மசியாதவன் யாரு சொல்லு! பார்த்துக் கிட்டேயிரு, பிரமோஷன் எனக்குத்தான்..." என்று மனைவியிடம் பீற்றல் வேறு...

இரண்டு வாரங்களில் பம்பாயிலிருந்து பதவி உயர்வுக்கான ஆர்டர் வரவே செய்தது... ராஜனுக்கு அல்ல — இன்னொரு க்ளார்க்குக்கு!

ராஜனுக்கு இது முதல் இடி.

பியூனிலிருந்து மானேஜர் வரை சென்று புலம்பித் தீர்த்தவனுக்கு, நான்காம் நாள் அடுத்த இடி—

அவனை ஸஸ்பெண்ட் செய்துவிட்டதாக வந்த ஆர்டர்—

மேலதிகாரிகளிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்கிற பண்புகூடத் தெரியவில்லை என்பதும்; லஞ்சம் கொடுக்க முயன்றான் என்பதும் அவன்மேல் சாட்டப்பட்ட குற்றங்கள்!

பதவி உயர்வுக்காக ஆசைப்பட்டு, அதற்காக சிரத்தையுடன் நேர்மையாக உழைக்காமல் அடுத்தவரின் ஆசைகளை அளந்து செயல்பட முனைந்தது தப்புக் கணக்காகி விட்டது!

இந்த மாதிரி, 'நினைப்பது ஒன்று, நடப்பது ஒன்று' என்கிற விஷயம் தடுக்கி விழுந்தால் எல்லார் வாழ்விலும் நடப்பதுதான்— புதுசு ஒன்றுமில்லை என்பதை மனசில் வைத்துக்கொண்டு, 'அதற்காக ஆசைகளோ, எதிர்பார்ப்புகளோ இல்லாத ஞானியாகவா ஒருவர் வாழ முடியும்?' என்று நீங்கள் கேட்கலாம்—

முடியாதுதான்.

ஆனால், இந்த ஆசைகளை, எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக்கொள்வதில் நம்முடைய பங்கு எவ்வளவு தூரம் இருக்கிறது என்று இங்கே கொஞ்சம் சிந்திக்க வேண்டும்.

ஆசைகள் நியாயமாக இருக்கும் அளவிற்கு முயற்சிகள் நியாயமாக இருக்கின்றனவா?



லஞ்சம் கொடுக்க முயலாமல், வேலையில் தன் திறனைக் காட்டி மட்டும் பதவிஉயர்வுக்கு ஆசைப் பட்டிருந்தால் அது நியாயம்.

ஆனால், இதிலும்கூட ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும்.

'என் எதிரே இருப்பது பச்சை நிறக் கதவுதான்' என்று நாம் சாதிக்கையில், கதவுக்கு அந்தப்புறம் நின்றிருப்பவர் 'இல்லை—இது வெள்ளை நிறக் கதவுதான்' என்று கூற முற்படலாம் அல்லவா?

எப்படி?

கதவு ஒன்றுதானே?

இருந்தால் என்ன... கதவின் இரண்டு பக்கங்களிலும் இரண்டு வண்ணங்களைப் பூசியிருக்கக்கூடாதா?

அவரவர் பார்வையில் படுவதை அவரவர் சொல்லலாம் — இதிலே, 'நான் சொல்வதுதான் சரி' என்று சாதிப்பது எப்படி சரியான் வாதமாகும்?

அதீத எதிர்பார்ப்புகள் போடும் திரை காரணமாக மற்றவர்களுடைய கண்ணோட்டத்தில் எந்த விஷயத்தையும் எடைபோட மறந்துபோய்விடுகிறோம் என்பதுதான் நிஜம்.

இந்த 'கண்ணைக் கட்டிவிட்ட குதிரைத்தனம்' மட்டுமின்றி அநேக சமயங்களில் மற்றவர்களும் நம்முடைய மனசிலிருப்பதைத் தெரிந்துகொண்டு நம்முடைய நோக்கிலேயே சிந்திக்கவேண்டும் என்று வேறு எதிர்பார்க்கிறோமே — இது எத்தனைக் கேவலமான குணம் தெரியுமா?

தான் செய்வதையெல்லாம் கவனித்து கணவன் பாராட்ட வேண்டும்— 'என் மனைவியைப்போல் உண்டா' என்று பெருமைப்பட வேண்டும்— எந்த விசேஷத்திற்கும் தான் கேட்காமலேயே புடவை, நகை போன்றவை வாங்கித் தந்துவிட வேண்டும்— இன்னும், இன்னும்...

இப்படி நிறைய எதிர்பார்க்கும் பெண்கள், தங்கள் கணவன்மார்களுக்கும் இப்படிப்பட்ட ஆசைகள் இருக்கலாம், அவற்றைப் பூர்த்திசெய்ய வேண்டும் என்ற எண்ணத்தை மட்டும் ஏனோ மறந்துவிடுகிறார்கள்.

மாமியார், மாமனார், மருமகள், குழந்தைகள், நண்பர்கள், உறவினர்கள்— என்று மற்ற அத்தனை பேரிடமும் நாம் எதிர்பார்ப்பதை, அவர்களும் நம்மிடம் எதிர்பார்ப்பது இயற்கைதானே!

இந்த ரீதியில் மற்றவர்களைப்பற்றி நினைத்தே பார்க்காமல் நம்முடைய எதிர்பார்ப்புகளை மட்டும் முக்கியமாக நினைக்கும்போதுதான் ஏமாற்றங்கள் அதிகமாகின்றன என்கிறார்கள் மனோதத்துவம் படித்த நிபுணர்கள்.

நமக்கு ஒரு அளவுகோல், மற்றவர்களுக்கு இன்னொன்றா?

மகளுக்கு வரதட்சணை கொடுப்பதை எதிர்க்கும் எத்தனை பெற்றோர், தங்கள் மகனுக்கு வாங்காமலிருக்கிறார்கள்?

மருமகளை, பெற்ற மகள் போல் நடத்த வேண்டும் என்று வாய் கிழியப் பேசும் பல மாமியார்கள், வீட்டில் தன் பெண், மருமகளிடம் 'ஒரு கண் வெண்ணெய் ஒரு கண் சுண்ணாம்பு' குணத்துடன் நடந்துகொள்வதையும், 'என் மாமியார் எனக்கு அம்மாவைப் போன்றவர்' என்று நான்கு பேர் நடுவில் பெருமையாகச் சொல்லிக்கொள்ளும் மருமகள்கள் நிஜத்தில் அப்படி நடந்துகொள்ளாததையும் பார்த்துக்கொண்டுதானே இருக்கிறோம்!

தான் உடைத்தால் மண்குடம், மற்றவர் உடைத்தால் பொன்குடம், இதுதானே ஒரு வீடு தப்பாமல் நடக்கிறது!

அடுத்தவரின் குணம், வசதி, தகுதி, திறமை போன்றவற்றை மனசில் நிறுத்தி ஆராயாமல், கண்களை



மூடிக்கொண்டு தான் இஷ்டப்பட்டதை எதிர்பார்ப்பது தான் கண்டிப்பாக அன்றாடம் தலைதூக்கும் பல பிரச்சினைகளுக்கு ஆணிவேர் என்று அடித்துக் கூறலாம்.

எதிர்பார்ப்புகளைக் குறைத்துக்கொள்வதும், முடிந்தால் அதை அறவே தோண்டி எறிவதும் நிம்மதியான வாழ்க்கைக்கு நிச்சயம் வழி காட்டும். இதற்கு சுந்தரி மாமி ரத்தமும் சதையுமாக வாழும் உதாரணம்.

விபத்து ஒன்றில் பெற்றோரைப் பறிகொடுத்துவிட்டு, ஐந்து வயசில் அநாதையாக நின்ற புவனாவை, சுபாவமாகவே இரக்க குணம் உள்ள சுந்தரி மாமி, அவள் அத்தை— எடுத்து வளர்த்தாள்—

தன் குழந்தைகள் படித்த அதே பள்ளிக்கூடம்—

தன் குழந்தைகளுக்கு வாங்கிய அதே உடைகள்—

தன் குழந்தைகளுக்குக் கொடுத்த அதே உணவு—

அதே அன்பு, அதே பாசம், அதே வசதிகள், அதே உரிமை, எல்லாம்.

தன் பெண்ணுக்கு செய்ததைப்போலவே புவனாவுக்கும் இருபதாவது வயசில் கல்யாணமும் செய்து வைத்தாள்.

ஆனால், எங்கு எது கோளாறாகிப்போனதோ, கல்யாணத்திற்குப் பிறகு புவனா சுந்தரியைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

என்ன காரணம் என்று துருவின உறவினர்களிடம், தான் அத்தையின் குழந்தைகளைவிட மட்டமாக வளர்க்கப் பட்டுவிட்டதாகவும், தன்னை அன்பாக நடத்தவில்லை என்றும், போனால் போகிறது என்று இத்தனை வருஷங்களாகப் பல்லைக் கடித்துக்கொண்டு வாழ்ந்ததாகவும் நீளமாய் குற்றம்படித்தாள்.

இது அபாண்டமில்லையோ!

இப்படி நிறைய எதிர்பார்க்கும் பெண்கள், தங்கள் கணவன்மார்களுக்கும் இப்படிப்பட்ட ஆசைகள் இருக்கலாம், அவற்றைப் பூர்த்திசெய்ய வேண்டும் என்ற எண்ணத்தை மட்டும் ஏனோ மறந்துவிடுகிறார்கள்.

மாமியார், மாமனார், மருமகள், குழந்தைகள், நண்பர்கள், உறவினர்கள்— என்று மற்ற அத்தனை பேரிடமும் நாம் எதிர்பார்ப்பதை, அவர்களும் நம்மிடம் எதிர்பார்ப்பது இயற்கைதானே!

இந்த ரீதியில் மற்றவர்களைப்பற்றி நினைத்தே பார்க்காமல் நம்முடைய எதிர்பார்ப்புகளை மட்டும் முக்கியமாக நினைக்கும்போதுதான் ஏமாற்றங்கள் அதிகமாகின்றன என்கிறார்கள் மனோதத்துவம் படித்த நிபுணர்கள்.

நமக்கு ஒரு அளவுகோல், மற்றவர்களுக்கு இன்னொன்றா?

மகளுக்கு வரதட்சணை கொடுப்பதை எதிர்க்கும் எத்தனை பெற்றோர், தங்கள் மகனுக்கு வாங்காமலிருக்கிறார்கள்?

மருமகளை, பெற்ற மகள் போல் நடத்த வேண்டும் என்று வாய் கிழியப் பேசும் பல மாமியார்கள், வீட்டில் தன் பெண், மருமகளிடம் 'ஒரு கண் வெண்ணெய் ஒரு கண் சுண்ணாம்பு' குணத்துடன் நடந்துகொள்வதையும், 'என் மாமியார் எனக்கு அம்மாவைப் போன்றவர்' என்று நான்கு பேர் நடுவில் பெருமையாகச் சொல்லிக்கொள்ளும் மருமகள்கள் நிஜத்தில் அப்படி நடந்துகொள்ளாததையும் பார்த்துக்கொண்டுதானே இருக்கிறோம்!

தான் உடைத்தால் மண்குடம், மற்றவர் உடைத்தால் பொன்குடம், இதுதானே ஒரு வீடு தப்பாமல் நடக்கிறது!

அடுத்தவரின் குணம், வசதி, தகுதி, திறமை போன்றவற்றை மனசில் நிறுத்தி ஆராயாமல், கண்களை



மூடிக்கொண்டு தான் இஷ்டப்பட்டதை எதிர்பார்ப்பது தான் கண்டிப்பாக அன்றாடம் தலைதூக்கும் பல பிரச்சினைகளுக்கு ஆணிவேர் என்று அடித்துக் கூறலாம்.

எதிர்பார்ப்புகளைக் குறைத்துக்கொள்வதும், முடிந்தால் அதை அறவே தோண்டி எறிவதும் நிம்மதியான வாழ்க்கைக்கு நிச்சயம் வழி காட்டும். இதற்கு சுந்தரி மாமி ரத்தமும் சதையுமாக வாழும் உதாரணம்.

விபத்து ஒன்றில் பெற்றோரைப் பறிகொடுத்துவிட்டு, ஐந்து வயசில் அநாதையாக நின்ற புவனாவை, சுபாவமாகவே இரக்க குணம் உள்ள சுந்தரி மாமி, அவள் அத்தை— எடுத்து வளர்த்தாள்—

தன் குழந்தைகள் படித்த அதே பள்ளிக்கூடம்—

தன் குழந்தைகளுக்கு வாங்கிய அதே உடைகள்—

தன் குழந்தைகளுக்குக் கொடுத்த அதே உணவு—

அதே அன்பு, அதே பாசம், அதே வசதிகள், அதே உரிமை, எல்லாம்.

தன் பெண்ணுக்கு செய்ததைப்போலவே புவனாவுக்கும் இருபதாவது வயசில் கல்யாணமும் செய்து வைத்தாள்.

ஆனால், எங்கு எது கோளாறாகிப்போனதோ, கல்யாணத்திற்குப் பிறகு புவனா சுந்தரியைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

என்ன காரணம் என்று துருவின உறவினர்களிடம், தான் அத்தையின் குழந்தைகளைவிட மட்டமாக வளர்க்கப் பட்டுவிட்டதாகவும், தன்னை அன்பாக நடத்தவில்லை என்றும், போனால் போகிறது என்று இத்தனை வருஷங்களாகப் பல்லைக் கடித்துக்கொண்டு வாழ்ந்ததாகவும் நீளமாய் குற்றம்படித்தாள்.

இது அபாண்டமில்லையோ!

அவசியம். ஒருவரைப்போலவே இன்னொருவர் இருப்பதும், சிந்திப்பதும், நடந்துகொள்வதும், சாத்தியம் என்றால் அப்புறம் தனித்தன்மை என்பது ஏது?

கடைசியாய் ஒரு வார்த்தை—

எதிர்பார்ப்புகள் சகஜமான மனித வாழ்க்கையில், ஒவ்வொரு ஏமாற்றமும் ஏதாவது பாடத்தைக் கற்றுத் தரவே செய்யும்— இவற்றைச் சரியாகப் புரிந்துகொண்டு அடுத்த முறை அதே செயலைச் செய்து, அதே தினுசில் எதிர்பார்த்து, அதே விதத்தில் ஏமாறுவதைத் தவிர்த்து நம்மை நாமே காயப்படுத்திக்கொள்ளாமல் இருப்பதுதான் புத்திசாலித்தனம்!

# 25

'...நான் பொறியியல் டிப்ளமோ படித்துத் தேர்ச்சி பெற்றவன். கல்லூரியில் சேருமுன் அமைப்பியல் (Civil) வேண்டும் என்று விண்ணப்பித்து, எனது முதல்வர் எனக்கு அந்தக் கோர்ஸைத் தருவதாகக் கூறிய நிபந்தனையின் பேரில் வேறு பிரிவில் சேர்ந்தேன். சிறிது காலம் கழித்து எனது முதல்வர் 'சிவில்' கொடுக்க இயலாது என்று கூறி விட்டார். எனக்கு ஒரே ஏமாற்றம்! இந்த Branch Selection-க்கு முன் நன்றாகவே படித்துக்கொண்டிருந்தவன், 'சிவில்' கிடைக்கவில்லையே என்ற ஆதங்கத்தில் அடிபட்டு, படிப்பில் மிகவும் பின்தங்கிவிட்டேன். ஏதேதோ மனப் போராட்டங்கள்— திருப்தியில்லாத படிப்பு. இன்று? மிகவும் குறைந்த சம்பளத்தில் ஒரு வேலை!

என்னுடன் கல்லூரியில் சேர்ந்து, 'சிவில்' எடுத்துப் படித்தவர்கள் இன்று நல்ல நிலையில் இருப்பதைப் பார்க்கும்போது என் மனம் மிகவும் அவதியுறுகிறது. வேலைக்குச் செல்லவே மனமில்லாமல் ஏனோ—தானோ வென்று சென்று வருகிறேன். இது போதாது என்று, எனது சொற்ப சம்பளத்தில் தாயாரையும், தம்பிகளையும் காப்பாற்ற வேண்டிய சூழ்நிலை வேறு—

இதிலிருந்து மீள என்ன வழி?'

—இப்படி தினம் தினம் எத்தனை கடிதங்கள்!

கல்லூரியில் தான் விரும்பிய பாடத்தை எடுத்துப் படிக்க வாய்ப்பு கிடைக்கவில்லை— விரும்பிய தினுசில் வேலை அமையவில்லை— வாய்த்த கணவன் தான் கற்பனை செய்த விதத்தில் இல்லை—

இல்லை... இல்லை... இல்லை... எத்தனை இல்லைகள்!

எத்தனை ஏமாற்றங்கள்!

சென்ற இரு அத்தியாயங்களில் பார்த்த 'எதிர்பார்ப்பு' களின் பிரதிபலிப்புகளே இந்த ஏமாற்றங்கள் என்று புரிகிறது அல்லவா?

இப்படி ஏமாற்றமடைந்தவர்களும், இன்னும் இது போன்ற எதிர்பார்ப்புகளைச் சுமந்துகொண்டு இருப்பவர்களும், பாண்டியனைக் கொஞ்சம் தெரிந்துகொள்வது உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

பாண்டியன்— 'நாஸே' பாண்டியன்.

அண்ணாசாலையில்— எஸ்.ஐ.இ.டி. கல்லூரி பஸ் ஸ்டாண்டிற்கு அருகில் 'நாஸே' (NAESEY) சிற்றுண்டிக் கடை வைத்திருக்கும் இவரையும், இவர் வேலை செய்யும் பாங்கையும், கண்கூடாகப் பார்ப்பவர்களுக்கு இவர் கல்லூரியில் படித்தது தாவரவியல் என்று சொன்னால் ஆச்சர்யமாக இருக்கும்!

பட்டப் படிப்பை முடித்தபின், பாங்கில் சேர்ந்து பெரிய அதிகாரியாக வேண்டும்— கை நிறைய சம்பாதிக்க வேண்டும்—எட்ஸட்ரா—எட்ஸட்ரா ஆசைகள், கற்பனைகள் பாண்டியனுக்குள்ளும் இல்லாமலில்லை.

இருந்தன— ஆனால் யதார்த்த எல்லையைத் தாண்டாமல்...

இதனால்தான், நாள்தோறும் விண்ணப்பங்களை அனுப்புவது ஒரு பக்கம் இருந்தாலும் தண்டச்சோத்து தடிராமனாக உட்காருவது தவறு என்கிற விழிப்புணர்வோடு இடையிடையே அகப்பட்ட தனியார் கம்பெனிகளில் குமாஸ்தா உத்தியோகம், ஓரிரு மருந்துக் கம்பெனிகளில் விற்பனைப் பிரதிநிதி வேலை—

எல்லாம் தற்காலிகம்தான்!

ஒரு மாதம் சம்பளம் வந்தால், மூன்று மாதம் வராது. இந்த நிலை பாண்டியனுக்கு சலிப்பூட்டியது.



வேறு என்னதான் செய்வது?

நின்று நிதானமாக தனது கடமைகள், பொறுப்புகள் இவற்றை நினைத்துப்பார்த்தவருக்கு, வெள்ளைக்காலர் உத்தியோகம் கிடைக்க உடனடியாக வழியில்லை என்பதோடு, வேறு நல்ல நிரந்தர வேலை கிடைப்பதும் குதிரைக் கொம்புதான் என்பதும் புரிய, காலத்தை வீணடித்துக்கொண்டு இருப்பதில் அர்த்தமில்லை என்கிற உந்துதல் காரணமாய், சுயமாகத் தொழில் செய்தால் என்ன என்று யோசிக்க முற்பட்டார்.

யாரைப் பார்த்து என்ன செய்யலாம் என்று தவித்துக் கொண்டிருக்கையில், லட்டு மாதிரி செய்தித்தாளில் ஒரு விளம்பரம்...

'நாஸே'— சுயமாகத் தொழில் செய்யும் பட்டதாரி இளைஞர்களின் அமைப்பு (NAESEY - National Association for Educated Self-Employed Youth).

இந்த அமைப்பில் சேரும்படி இளைஞர்களை அழைக்கும் விளம்பரம்தான் அது.

பாண்டியன் உடனே, இந்த அமைப்பில் சம்பந்தப் பட்டவர்களை அணுகி தன்னையும் ஒரு உறுப்பினராகப் பதிவுசெய்துகொண்டார்.

சங்கத்தின் உதவியுடன் ஒரு சிற்றுண்டிக்கடை— பட்டப்படிப்பு படித்தவன் கேவலம் பலகாரக் கடையா வைப்பது என்று மேலும் கீழும் பார்த்து நொட்டாங்கு அடித்துக்கொண்டிருக்காமல்— துவங்குவதற்கான ஏற்பாடு களில் முனைந்தார்.

திட்டப்படி கடை அமைக்க ஆகும் செலவு மொத்தம் ரூபாய் பத்தாயிரம். இதில் 90 சதவிகிதத்தை, சங்கத்தின் சிபாரிசில் வங்கி ஒன்று உதவ முன்வர, தன்னுடைய முன்னேற்றத்திற்காக சங்கமும், வங்கியும் இத்தனை உதவி செய்யும்போது, தன் பங்காக ரூபாய் ஆயிரத்தை முதலீடு

செய்யத் தயங்குவது அசட்டுத்தனம் என்று புரிந்துகொண்ட பாண்டியன், துணிந்து அங்கே இங்கே கடன் வாங்கி ஆயிரம் ரூபாயைத் திரட்டினார்.

சுமார் 8' × 8' க்கு ஒரு கடை— மூன்று ஹாட் ஃப்ளாஸ்க்குகள், ஒரு ரேடியோ— இவை சங்கத்தின் உபயம். மற்றபடி ஒரு ஸ்டவ், கப்—ஸாஸர்கள், தட்டுகள், பாட்டில்கள், உணவுப் பொருட்கள் ஆகியவற்றைப் பாண்டியனே வாங்கிக்கொண்டார்.

அதோடு அக்கடா என்று உட்கார்ந்துவிடாமல், ஆடி ஓடி கடைக்கு வேண்டிய மின்சாரம், மாநகராட்சியின் அனுமதி ஆகியவற்றையும் சீக்கிரமே பெற்றார்.

ஜம்மென்று கடை ரெடி.

அன்று தொடங்கி இன்று வரை— இந்த ஐந்து வருடங்களில்— காப்பி, டீ, போர்ன்விடா, ஹார்லிக்ஸ், சமோசா, குளிர்பானங்கள் போன்றவற்றை விற்பனை செய்தே வங்கியில் வாங்கிய கடனை அடைத்திருக்கிறார்.

வெற்றிலை, பாக்கு, சிகரெட் சமாச்சாரங்களை பாண்டியன் தன் கடையில் விற்பதில்லை.

"இதெல்லாம் தப்பான பழக்கங்கள்னு நான் நினைக்கறேன். எனக்குத் தப்புனு படற விஷயங்களை மத்தவங்களுக்கு, காசுதான் முக்கியம்னு விக்கறது மனுஷனுக்கு மனுஷன் செய்ற துரோகமில்லையா?"

இந்த மாதிரி கொள்கை மட்டுமில்லை— நிரந்தரமான வாடிக்கையாளர்களும், சராசரியாக மாசம் ஆயிரம் ரூபாய் வருமானமும் இருப்பதின் காரணம், பாண்டியனின் ஒழுக்கமும், அயராத உழைப்பும்கூட...

கடை விற்பனை தவிர, அருகிலிருக்கும் அலுவலகங் களில் சிறிய அளவிலான பார்ட்டிகள், மீட்டிங்குகளுக்கும் முன்கூட்டியே ஆர்டர் எடுத்துக்கொண்டு சிற்றுண்டிகளை சப்ளை செய்கிறார்.



அவருடன் பேசிக்கொண்டிருக்கையிலேயே, கடைக்கு வரும் வாடிக்கையாளர்களைக் கவனித்து, அவர்கள் கேட்கும் பானங்களைக் கலந்து தருகிறார்.

போர்ன்விடா குடித்த ஒருவர், கப்பைத் திருப்பிக் கொடுத்து, "பால் ஒரே தண்ணியா இருக்கே..." என்று முணுமுணுக்க, பாண்டியன் அவரிடம், "உங்களுக்குத் திருப்தி இல்லேன்னா காசு தர வேணாங்க..." என்கிறார், நிஜமான வருத்தத்துடன்.

என்ன இது?

"முடிஞ்ச மட்டும் நல்ல பொருளாகக் கொடுக்க முயற்சி பண்ணியும், சில சமயத்துல இந்த மாதிரிதான் ஆயிடுதுங்க... கிடைக்கற பால் இப்படித் தண்ணியா இருந்திட்டா நமக்கு நஷ்டந்தான். சாப்பிடற பதார்த்தத்துல கலப்படம் பண்ணற பழக்கம் எப்போ ஒழியப்போவுதோ..."

"ஓஸில போர்ன்விடா, காபி கிடைக்கும்ன்ற ஆசைல யாராவது அடிக்கடி பால் தண்ணி, அது, இதுன்னு குறை சொன்னா என்ன பண்ணுவீங்க?"

சிரிக்கிறார்.

"அப்படி ஏமாறுவேனா? நம்பளை முட்டாளா நினைச்சி பேசறவங்ககிட்ட, 'இன்னிக்குப் பால் தண்ணி... குடிக்காதிங்க'ன்னு நானே முந்திக்கிட்டு பேசி, விற்பனையைத் தவிர்த்திடுவேன்."

பாண்டியன் நிஜமாகவே பிழைக்கத் தெரிந்தவர்தான் என்பதற்கு இன்னொரு ஆதாரம், அவர் தன் கடையை பத்தாயிரம் ரூபாய்க்கு இன்ஷ்யூர் செய்து, வருடத்திற்கு 48 ரூபாய் ப்ரீமியம் கட்டி, மழை— தீ போன்றவற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ளும் கெட்டிக்காரராய் இருப்பது!

மதியநேரத்தில் கடையில் விற்பனை அதிகமாக இல்லாத நேரத்தில், உதவிக்கு வைத்திருக்கும் சின்னப்

பையனிடம் கடையை ஒப்படைத்துவிட்டு, தன்னுடைய மற்ற அலுவல்களைக் கவனிக்கிறார்.

மற்ற அலுவல்களா? ஆம்— ஐந்து வருஷங்களில் தான் சம்பாதித்ததை வைத்து, ஸ்கூட்டர், டிவி. என்று வாங்கியது போக, மிச்சப் பணத்தை சின்னச்சின்ன இதர பிசினஸ்களில் முதலீடு செய்திருப்பது பாராட்டுக்குரிய விஷயம்.

உழைப்பு, உழைப்பு என்று நாள் முழுவதும் ஓயாமல் அலைந்து சுற்றினாலும், பலகாரக்கடை வியாபாரத்தைக் குறித்து மிகுந்த திருப்தி கொண்டிருக்கிறார்.

"செய்யும் தொழில் தெய்வங்க... என்னோட இன்றைய வளர்ச்சிக்குக் காரணம் அஞ்சு வருஷம் முன்னாலே ஆரம்பிச்ச இந்தக் கடைதான். வசதியான வாழ்க்கை வந்திருக்குன்றதை ஒரு பக்கம் வெச்சிக்கிட்டாலும், சாதாரண மத்த வேலைங்களைவிட இதுல சுவாரஸ்யம் அதிகம்னே எனக்குத் தோணுது. எத்தனை ஜனங்க... என்னென்ன அனுபவங்க..."

வியாபாரத்தை விரிவுபடுத்தும் நோக்கில், செலவைப் பாராட்டாமல் ஒரு தொலைபேசி வைத்துக்கொண்டிருக்கும் இவருக்கு, இந்தச் சின்னக் கடைக்குள் ஒரு மிக்ஸி, ஃப்ரிஜ், இன்னும் இதர சாமான்களையும் வாங்கி வைத்து, வாடிக்கையாளர்களுக்கு அதிகமான சௌகர்யங்களைச் செய்துதரவேண்டும் என்று கழுத்துவரை, நியாயமான, அவரால் நிறைவேற்றக்கூடிய ஆசைகள் இருக்கின்றன.

இன்றைய தேதியில் நேர்மை என்பதே எங்கும் இல்லை, குறுக்கு வழிதான் சிறந்தது என்று வாதித்து, கோணப் பார்வை பார்க்கும் அனைவரும் ஒரு தரமாவது, பாண்டியன் போன்றவர்களை மனசில் நிறுத்தி சிந்திக்க வேண்டும்.

கட்டுரையின் ஆரம்பத்தில் காணப்பட்ட கடிதத்தை எழுதியவருக்கும், மற்றும் இதேபோன்ற நபர்களுக்கும் ஒன்றை இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.



மனம் இருந்தால் மார்க்கம் உண்டு—

Where there is a will there is a way-

கேள்விப்பட்டிருப்பீர்களே!

வாழ்க்கையில் இது வேண்டும் என்று ஆசைப்படுவது மனித இயல்பு— நடந்தால் சந்தோஷம்; நடக்காவிட்டால்— அதற்கு மாற்று என்ன?

யோசிக்க வேண்டும்.

எனக்கு இதைச் செய்ய விருப்பம்—என்பதும், என்னால் இதுதான் செய்ய இயலும் என்பதும் வெவ்வேறானவை.

What I want to do is certainly different from what I can do...

ஆசை, எதிர்பார்ப்பு— இருக்கட்டும்.

ஆனால் கூடவே யதார்த்தமும், இது இல்லாவிட்டால் வேறு என்ன என்கிற மாற்றும் மனசில் தயாராக இருப்பதும் நல்லது.

புரிகிறது அல்லவா?

# 26

நேற்று என்னைச் சந்திக்க முன்பின் தெரியாத இரண்டு பெண்கள் வந்தார்கள்.

ரமாமணி, ஜானகி.

இருவருமே பாங்க் ஒன்றில் வேலைபார்ப்பவர்கள். திருமணமானவர்கள். பெரிசாகச் சொல்லிக்கொள்ளும்படி எந்தப் பிரச்சினையும் இல்லாதவர்கள்.

இருப்பினும், இரண்டு பேருக்குள்ளும்— இந்தக் குணமே நாளைக்கு பல பிரச்சினைகளுக்கு அஸ்திவாரமாக அமைந்து விடுமோ என்கிற பொதுவான சந்தேகம் ஒன்று ஜனித்திருந்தது.

அது என்ன என்பதை அவர்கள் வார்த்தைகளிலேயே விளக்குகிறேன்.

முதலில் ரமாமணி.

"எனக்கு வயசு இருபத்தி எட்டு ஆறது. ஏழு வருஷமா வேலை பாக்கறேன். கல்யாணம் நாலு வருஷம் முன்னால நடந்தது. ஒரே ஒரு பையன். என் கணவர் சுயமா வியாபாரம் பண்ணறார், வசதியான வாழ்க்கைதான். குறைன்னு சொல்லும்படி கண்டிப்பா எதுவும் இல்லே... ஆனா, வரவர... நான் நல்ல மனைவி, தாய், குடும்பத் தலைவியா இல்லே—னு எனக்குள்ள ஒரு உறுத்தல். வேலை முடிஞ்சி வீட்டுக்குத் திரும்ப ஆறரை ஏழு ஆயிடறதாலே வந்து உருப்படியா எந்தக் காரியத்தையும் என்னால செய்ய முடியறதில்லேன்ற குறை நிறைய இருக்கு. வேலையை விடு—னு சொல்லலாம். ம்ஹூம், முடியாது. அந்தப் பணம் உதவியா இருக்கறது மட்டுமில்லே, வேலைபாக்கறது எனக்கு அலாதி நிறைவைத் தர்றதும் நிஜம். வீட்டை அழகா, சுத்தமா வெச்சுக்கணும்னு ஏதாவது செய்ய உட்கார்ந்தாலும், டெலிபோன், டி.வி., வந்து போற விருந்தாளிகள்—னு நேரம்



என் கையை மீறிக்கிட்டு ஓடிடறது. ஞாயித்துக் கிழமைல செஞ்சிடலாம்னு நினைப்பேன்; ஆனா, அன்னிக்கும் மெதுவா எழுந்து, இன்னிக்கு ஒருநாள்தானே—னு சோம்பேறித்தனமா இருந்திடறேன். இந்த வயசிலேயே இப்படி அசமஞ்சமா இருந்தா நாளைக்கு எப்படி ஆயிடு வேனோன்னு பயமா இருக்கு. உடனே என்னை மாத்திக்கறது அவசியம்னு புரியறது. திறமையான குடும்பத் தலைவியா என்னை நானே உயர்த்திக்கறது எப்படி?"

திருமணமாகி பத்து மாசங்களே ஆன ஜானகியின் பேச்சும் கிட்டத்தட்ட இந்தக் கோணத்தில்தான் இருந்தது.

"இன்னிக்கு எனக்குப் பொறுப்புகள் அதிகம் இல்லே.. ஆனா, இப்பவே சோம்பி உட்கார்றதும், வம்பு பேசி சிரிக்கறதும் பழக்கமாயிட்ட மாதிரிதான் இருக்கு... மதுரைல இருக்கற அம்மா, 'மாசத்துக்கொருதரம் 'நான் சௌக்கியம்'னு நாலு வரி எழுதறதுகூடவா உனக்குக் கஷ்டமா இருக்கு'னு வருத்தப்படறா.. லெட்டர் எழுதணும், மத்த எல்லா வேலைகளையும் கச்சிதமா பண்ணிடணும்னு தான் நினைக்கறேன். ஆனா, என்னையும் மீறிகிட்டு நாள் போயிடறது.. நேரத்தை வீணாக்காம திட்டமிட்டு காரியம் செய்யறதுனா என்ன? I want to be a We' I organised, systematic person, இதுக்கு என்ன பண்ணணும்?

இதுவரை இந்த அத்தியாயத்தைப் படித்தவர்களில் யாருக்காவது— என்ன பிரச்னை என்று பெரிசாய் இதைப் பேச வந்துவிட்டீர்கள்! வீட்டுக்கு வீடு இருக்கும் சமாசாரம் தானே இது! என்று முகம் சுளிக்கத் தோன்றினால், அவர்கள் ஒரு நிமிஷம் நிதானிக்க வேண்டும்.

வீட்டுக்கு வீடு காணப்பட்டாலும், நூற்றுக்குத் தொண் ணூறு பேர்களிடம், நினைக்கும் எந்தக் காரியத்தையும் உருப்படியாய் செய்யவிடாமல் தடுக்கும் சோம்பேறித்தனம், திட்டமிடாத தெரியாத்தனம் குடிகொண்டிருந்தாலும், அதில் எத்தனை பேர்களுக்கு இந்தக் கானானை

மேன்மேலும் படர இடம் கொடுப்பது தவறு என்கிற ஞானோதயம் உண்டாகியுள்ளது? எத்தனை பேர்களுக்கு இப்போது இருப்பதைவிட இன்னும் திறமைசாலிகளாக நம்மை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என்கிற விழிப்புணர்வு தோன்றியுள்ளது?

யோசிக்க வேண்டும்.

பல வருஷங்களுக்கு முன், ஒரு வெளிநாட்டவர் கேட்ட கேள்வி இந்த நிமிஷம் என்னுள் எட்டிப்பார்க்கிறது.

"உங்கள் நாட்டில் எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் கும்பல் கும்பலாக ஜனங்கள் நின்று வெட்டியாய் பேசிப் பொழுதைக் கழிக்கிறார்கள, இது எதற்காக? இப்படி வீணடிக்கும் நேரத்தை ஆக்கபூர்வமாக செலவழித்தால் தன்னையும், நாட்டையும் எல்லா விதங்களிலும் உயர்த்திக் கொள்ளலாம் என்பதை இவர்கள் ஏன் மறந்து போகிறார்கள்? நேரத்தின் அருமை உணராமல் உங்களில் பலர் இருக்கிறார்களே, இது ஏன்?"

உண்மை.

நம்மில் படித்து விஷயமறிந்த பலருக்கும்கூட நேரத்தை உபயோகமாகச் செலவழிப்பது எப்படி என்று புரிய வில்லைதான்.

பொழுதை வீணடிப்பது என்றால் என்ன?

இதற்குப் பொது விளக்கம் ஏதேனும் இருக்கிறதா?

இல்லை.

குணமும், விருப்பு வெறுப்பும் ஆளாளுக்கு மாறுபடும் என்கிறதை மனதில் நிறுத்தி யோசித்தால், கண்டிப்பாய் நேரத்தை வீணடிப்பது என்பதின் அளவுகோலும் நபருக்கு நபர் மாறுபடும் என்பது புரியும்.



பாடுவது உபயோகமான காரியமாக ஒருவருக்குத் தோன்றுகையில், அதுவே இன்னொருவருக்குத் தண்டச் செயலாகப் படலாம்.

ஆக, இதைத் தீர்மானம் செய்யவேண்டியது சம்பந்தப் பட்ட நபர்தானே தவிர, கண்டிப்பாய் அடுத்தவர் அல்ல.

இது என் வாழ்க்கை, என் பிரச்சினை, என் சந்தோஷம், துக்கம், நிம்மதி— என்பதால் குறைநிறைகளை ஆராய்வதும், என்னால் எது இயலும், இயலாது என்று சிந்தித்து ஆக்கபூர்வமாகச் செயல்படுவதும் எனக்கு மட்டும்தானே சாத்தியம்?

பசி, அயர்ச்சி, கோபம், ஏக்கம், சரி, தவறு, என்று நம் இதர உணர்ச்சிகளை அடையாளம் காட்டுவதுபோல, நேரத்தை வீணடிக்கிறோமா, அல்லது பயனுற செலவழிக் கிறோமா என்பதையும் அவரவர் தம்தம் புத்தியை உபயோகித்து புள்ளிகுத்தக் கற்றுவிட்டால், கரையேறுவது சுலபம் என்கிறார்கள் உளவியல் படித்த நிபுணர்கள்.

சரி, மீண்டும் ரமாமணி, ஜானகி சமாச்சாரத்துக்கு வருவோம்.

பொழுதைத் திட்டமிட்டு ஆக்கபூர்வமாய், பூரணமாய் கழிக்க வேண்டும் என்கிற ஆதங்கத்துக்கு என்ன வழி என்று ஆராயுமுன், ரமாமணி குறிப்பிட்டுள்ள சில சங்கடங்களை சமாளிப்பது எப்படி என்று பார்த்துவிடலாம்.

என்ன சொன்னார்?

"ஏதாவது செய்ய உட்கார்ந்தாலும், போன், டிவி., வந்து போகும் விருந்தாளிகள்—னு நேரம் என் கையை மீறிக்கிட்டு ஓடிடறது..." என்றுதானே?

முதலில் போன்.

தொலைபேசி என்பது நமது வசதிக்காக, தேவையான போது உபயோகிப்பதற்காக கண்டுபிடிக்கப்பட்ட ஒரு

டபெரும் ... அப்பட்டமான கோஷித்...
துவது அப்பட்டமான
டுக்கும் அலமாரியை ஒழித்து சீர்படுத்த
ரண்டு உட்காருகையில் போன் ஒலித்து
கிறது என்றும், எடுத்தால் காரசாரமாக
னேகிதி என்றும் வைத்துக்கொள்வோம்.

ன்ன செய்யவேண்டும்? கிசுகிசுவா,
ா?

ஆதாயம் உண்டா?

மான, ம்ஹூம்.

டது அல்லவா? அடுத்து?

நான் வேலையா இருக்கேன். முக்கியமான
லனா அப்புறமா பேசலாமா?" — இது
... ரெண்டு நேர்மை.

நெரு
உட்
ஈர்க்
செ
பல
அ
பு

சாதனம் என்பதை மறந்து, தேமேனென்று உட்கார்ந்திருக்கும் அந்த ஜடப்பொருளை நமது பலவீனத்தை மறைக்க பலிஆடாக்குவது அப்பட்டமான கோழைத்தனம்!

குப்பையாகக் கிடக்கும் அலமாரியை ஒழித்து சீர்படுத்த கங்கணம் கட்டிக்கொண்டு உட்காருகையில் போன் ஒலித்து நம் கவனத்தை ஈர்க்கிறது என்றும், எடுத்தால் காரசாரமாக கிசுகிசுக்கக்கூடிய சினேகிதி என்றும் வைத்துக்கொள்வோம்.

இப்போது என்ன செய்யவேண்டும்? கிசுகிசுவா, இல்லை, வேலையா?

வம்பினால் ஆதாயம் உண்டா?

ஒரு அழுத்தமான, ம்ஹூம்.

புரிந்துவிட்டது அல்லவா? அடுத்து?

"ஸாரிம்மா... நான் வேலையா இருக்கேன். முக்கியமான விஷயம் இல்லேனா அப்புறமா பேசலாமா?" — இது வெட்டு ஒன்று துண்டு இரண்டு நேர்மை.

"வேலை இருக்கு; அஞ்சு நிமிஷம் பேசிட்டு வைக்கிறேன், ப்ளீஸ் தப்பா எடுத்துக்காதே..."— இது, காரம் ப்ளஸ் மென்மை கலந்த நிஜம்.

"தெரிஞ்சவங்க வந்திருக்காங்க... நாளைக்குப் பேசறேனே!" — இது நாசூக்குப் பொய்.

இந்த மூன்றையுமே கடைப்பிடிக்க விரும்பாதவர்கள், முதலிலேயே வேறு யாரையாவது எடுக்கச் சொல்லி, தான் இல்லை என்று கூறிச் சமாளிக்கலாம்.

இத்தனையும் சரிப்பட்டுவரவில்லை என்றால், என் நண்பர் வேணுகோபால் போல, முக்கியமான அலுவல்களைச் செய்யும் நாழிகையில் தொந்தரவு இல்லாமல் இருக்க வேண்டி, ரிஸீவரை எடுத்துப்படுக்க வைத்து விடலாம்!



ஏதோ ஒன்று— மொத்தத்தில் எந்தச் சாதனமும், கருவியும் நமக்கு அடிமைகளே தவிர, நாம் அவற்றுக்கு அல்ல. அது டி.வி. ஆகட்டும், ரேடியோ ஆகட்டும், எதுவானாலும் சரி.

மூலையோடு மூலையாய் ஒடுங்கியிருக்கும் டி.வியை நெருங்கி, ஸ்விட்ச் போட்டு, சானலைத் திருப்பி, எதிரில் உட்காருவது நாம்— அப்புறம் என்னமோ, நம் கவனத்தை ஈர்க்கவென, அது தானே ஓடுகிற மாதிரியும், ஒரு வேலையும் செய்யவிடாமல் கையைப் பிடித்துக்கொண்டு அடம் பண்ணுகிற மாதிரியும், ச்சே... இந்த டி.வி. சனியனால் அத்தனை காரியங்களும் கெட்டுப்போகின்றன என்று புலம்புவது மஹா மஹா அசட்டுத்தனம்!

இதே மாதிரி, அடுத்த நாள் பரிட்சைக்கான பாடங்களைப் பையனுக்குச் சொல்லிக்கொடுக்கும்போதோ, ஊருக்குப் புறப்படும் கணவருக்கு துணிமணி எடுத்து வைக்கும்போதோ, இதர முக்கியமான வேலையைக் கவனிக்கும்போதோ, சொல்லாமல் கொள்ளாமல் வந்து நிற்கும் விருந்தாளிகளைப் புன்சிரிப்புடனேயே, அவர்கள் மனம் நோகாமல், மரியாதை எள்ளளவும் குறையாமல், சமாளித்து சீக்கிரமே அனுப்பிவிட்டு, தொடர்ந்து கைக் காரியத்தைக் கவனிப்பதும் நம் கையில்தான் இருக்கிறதே தவிரவும், நிச்சயம் பக்கத்து வீட்டுக்காரரிடம் இல்லை.

ஒருசமயம் வசந்த விஹாரில் வேதாந்தி ஜே. கிருஷ்ண மூர்த்தியிடம் ஒருவர் கேட்ட கேள்வியையும், ஜே.கே. கூறின பதிலையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன்.

**ஒருவர்**– ஓவியம் தீட்டுவது எனக்கு மிகவும் பிடித்தமான பொழுதுபோக்கு. ஆனால், இதை அடிக்கடி செய்யமுடியாமல் அலுவலக வேலை, குடும்பப் பொறுப்பு குறுக்கே நிற்கின்றன. நினைப்பதை சாதிக்க இயலாத வருத்தத்தில் மனசு வெறுத்துப்போய்விடுகிறது. குற்ற

உணர்வு எதுவுமின்றி என் பொழுதுபோக்கை நிம்மதியாய் செய்வது சாத்தியமா?

**ஜே.கே.**– பசித்தால் சாப்பிடுகிறீர்கள், உறக்கம் வந்தால் தூங்குகிறீர்களே, இது ஏன்? அந்தந்த உணர்வு களும், அவைகளின் தேவைகளும் தீவிரமாக இருப்பதால் தானே? அதேபோல் ஓவியம் வரையவேண்டும் என்கிற ஆர்வம் வாஸ்தவத்திலேயே தீவிரமாக இருந்தால், தானே நேரத்தை தேடிப்பிடித்துக்கொண்டு ஓவியம் தீட்ட உட்கார மாட்டீர்களா?

புரிகிறதா ரமாமணி?

நம் உணர்வுகளை, நம்மால் எது முடியும் முடியாது என்பவற்றைச் சிருஷ்டிப்பதும், அடையாளம் காட்டுவதும், வளர்ப்பதும், தடுப்பதும், அழிப்பதும் நம்மிடம்தான் இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டீர்களா?

இனி, அன்றாட அலுவல்களை யதார்த்தத்தை மீறாத புத்திசாலித்தனத்துடன் திட்டமிட்டு, நினைப்பவை அத்தனையும் செம்மையாகச் செய்து முடித்து, திறமைசாலி என்கிற பட்டத்தை எப்படி வாங்குவது என்பதை அடுத்த அத்தியாயத்தில் பார்க்கலாம்.

# 27

**வே**லைக்குப் போகும் நபரோ, வீட்டோடு இருப்பவரோ, பெண்ணோ, ஆணோ, யாராக இருப்பினும், நினைத்த காரியத்தை செய்துமுடிக்கும் திருப்தியுடன் வாழ ஆசைப்பட்டால்— முதலில் எதையும் திட்டமிட்டு நிறைவேற்ற அவர் கற்கவேண்டும்.

தினமும் செய்யும் காரியங்களைக் கூடவா திட்ட மிடுவது அவசியம் என்றால்—

ஆமாம். நாளைக்கு சமையல் என்ன, அலுவலகத்துக்கு என்ன உடுத்திச்செல்லப் போகிறோம், யாருக்குக் கடிதம் எழுதவேண்டும் என்பது போன்ற அன்றாட அலுவல் களுடன், வருகிற புதன்கிழமை சுரேஷுக்குப் பிறந்த நாள், வெள்ளிக்கிழமை வரலக்ஷ்மி விரதம், பத்தாம் தேதி வரையில் மருந்து இருக்கிறது— போன்று அவ்வப்போது செய்யவேண்டியவற்றையும் முன்கூட்டியே குறித்துவைத்து விட்டால், மறுநாளுக்கான காய்கறிக்குக் காலையில் எழுந்து அவதிஅவதி என்று ஓடவேண்டாம்; கடைசி நிமிஷத்தில் 'என் சட்டையில் பட்டன் இல்லை' என்று கத்த வேண்டாம்; 'கல்யாணம் நிச்சயமான தேதி எழுதி யிருந்தேனே, உன்னிடமிருந்து அதற்குக்கூட பதிலே வரவில்லையே' என்று பெரியம்மாவிடம் வாங்கிக்கட்டிக் கொள்ள வேண்டாம்; சுரேஷுக்கு என்ன வாங்குவது என்று முதல்நாள் காலில் வெந்நீரைக் கொட்டிக்கொண்டு பறக்க வேண்டாம்; பூஜை சாமான்கள் சரியாக இல்லை என்று பெரியவர்களைச் சிடுசிடுக்க வைக்க வேண்டாம்; மருந்து தீர்ந்துபோய் இருமலுடன் அவஸ்தைப்படும் குழந்தையுடன் சேர்ந்து நாமும் அவதிப்பட வேண்டாம்...

திட்டமிடுவதன் அவசியம் புரிந்ததா?

சரி, திட்டமிடுவது என்றால் என்ன?

சின்ன விஷயமோ, பெரிசோ, செய்யப்போகும் காரியங்களை நினைத்துப்பார்த்து, தேவையானால் குறித்துவைத்துக்கொண்டு கச்சிதமாய் நிறைவேற்றிவிட்டு, அக்கடா என்று உட்காருவதுதான், வேறு என்ன?

இதற்கு ஏராளமான நேரம், கூர்மையான மூளை, அது, இது என்று எதுவும் தேவையில்லை.

ஞாபகசக்தி நன்றாக உள்ளவர்கள் இரவு படுக்குமுன் மறுநாள் முக்கியமாகச் செய்யவேண்டிய வேலைகளை, 1. ஆடி வெள்ளிக்கிழமை வாசலில் கோலம் போட்டு செம்மண் பூச, 2. கண்ணனின் ஷூவுக்குப் பாலிஷ் தடவ, 3. விமலாவின் கணக்குப் புத்தகத்துக்கு அட்டை போட, 4. புடவை ஓரம் மடித்துத் தைக்க— வேண்டும் என்று ஒரு தரம் நிதானமாக மனசில் நினைத்துப்பார்த்து, உறங்கி எழுந்து முதல் காரியமாய் இன்று செய்ய வேண்டியவை என்னென்ன என்று மறுபடி ஞாபகப்படுத்திக்கொண்டு விடுவதும் ஒரு நினுசு ப்ளானிங்தான்.

ஆனால் இப்படி ஏழெட்டுக் காரியங்களை அடுத்தடுத்து செய்ய நினைத்திருக்கையில், எதிர்பாராமல் வெளியில் போகவேண்டி இருப்பதாலோ, யாரேனும் வீட்டிற்கு வருவதாலோ அல்லது தலையை வலிப்பதாலோ, ஏதாவது ஒன்று மறந்துவிட வாய்ப்பு இருக்கிறது.

அதனால், நினைத்ததை முடிக்கவேண்டும் என்று உறுதியாய் விரும்புகிறவர்கள் முதலில் சில துண்டு காகிதங்கள், பேனா அல்லது பென்ஸிலை கைக்குச் சுலபமாய் எட்டும் இடத்தில் வைக்கவேண்டும்.

வாங்கவேண்டிய சாமான்களையும், செய்யவேண்டிய காரியங்களையும் ஞாபகம் வரும்போது பேப்பரில் எழுதி வைத்துக்கொண்டால், கடைக்குப் போய் 'நாலு சாமான்கள் வாங்க நினைத்தேனே, மூன்றுதானே நினைவுக்கு வருகிறது, நாலாவது என்ன?' என்று திருதிருக்க வேண்டாம்.



இத்துடன், நாள், வாராந்தர, மாத, வருட வேலைகளின் அட்டவணை ஒன்று தயாரித்துக்கொள்வது எல்லா விதத்திலும் உபயோகமாக இருக்கும்.

இதைப் புரியவைக்க என் சினேகிதி லாவண்யா எவ்வாறு தன் அலுவல்களைத் திட்டமிட்டுச் செய்கிறாள் என்பதை விளக்குகிறேன்.

லாவண்யாவும், அவள் கணவரும் கூட்டாக அட்டைப் பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிர்வகிக்கிறார்கள். தயாரிப்பு, வியாபாரப் பிரிவுகளை கணவர் மேற்பார்வையிட, நிர்வாகப் பொறுப்பை லாவண்யா ஏற்றிருப்பதால், காலையில் ஆறுக்கு எழுந்திருந்து வீடு, புருஷன், குழந்தைகள், தோட்டம் என்று அத்தனையும் கவனித்து, ஒன்பதரைக்குக் கிளம்பி தொழிற்சாலைக்கு வருபவள், மீண்டும் வீடு திரும்ப மாலை ஐந்தரை ஆகிவிடும். வீட்டுக்கு வரும் விருந்தாளிகள், வெளியில் போகும் ஜோலி, குழந்தைகளுக்குப் பாடம் சொல்லித் தருதல்— என்று ஒன்று விடாமல் அத்தனையும் செய்வ தோடு, வீட்டையும் தன்னையும் எப்போதும் பளிச்சென்று வைத்துக்கொண்டிருக்கிறாள் என்றால் அதற்குக் காரணம் முதலில் சொன்ன திட்டமிடுதல்தான்...

அன்றாட அலுவல்களைத் தவிர, செய்யவேண்டிய உபரிக் காரியங்களை, வேலைக்காரர்களுக்கு ஞாபகப்படுத்த, அல்லது தானே செய்யவென லாவண்யா தயாரித்து வைத்திருக்கும் அட்டவணையைத் தருகிறேன். நீங்களும் கொஞ்சம் பாருங்கள்.

திங்கள்: படுக்கை உறைகளை மாற்றி, துணிகளை சலவைக்கு அனுப்புதல்.

செவ்வாய்: மின் விசிறிகள், விளக்குகளைத் துடைத்தல்.

புதன்: ஜன்னல், கதவுகளைச் சுத்தம் செய்து கார்ஷெட் கழுவுதல்.

வியாழன்: சாமான், சமையலறை அலமாரிகளை ஒழித்து, மளிகை சாமான்களைச் சீர்செய்தல்.

வெள்ளி: ஃப்ரிஜ் துடைத்தல், துணிகளை இஸ்திரி பண்ணுதல்.

சனி: பட்டன், கிழிசல் தைத்தல், லெட்டர் எழுதுதல், மெஷினுக்கு எண்ணெய் போடுதல்.

ஞாயிறு: குழந்தைகள், கணவர் அறைகளைச் சீர் செய்தல்.

**பதினைந்து நாட்களுக்கொரு முறை செய்ய வேண்டியவை**

தோட்டத்துச் செடிகளைக் கிளறி, களை எடுத்தல், ஒட்டடை அடித்து, கண்ணாடிகளை சோப் போட்டுத் துடைத்தல், வெண்கலச் சாமான்களுக்குப் பாலிஷ் போடுதல்.

**மாதம் ஒரு முறை**

செடிகளுக்கு உரம் இடுதல், பரணை ஒழித்தல்.

**ஆறு மாதத்துக்கு ஒரு முறை**

திரைச்சீலைகளைத் தோய்த்தல்.

இவை போதாதென்று வாரம்தோறும் குடும்பத்திலுள்ளோர் நகங்களை வெட்டுகிறார்களா என்று கண் காணிப்பதில் தொடங்கி, நாவல்கள் படித்து, புது பாட்டுக்களைக் கற்று, வாரம் இரண்டு தரம் ஜெர்மன் மொழி பயின்று, கோயில்களுக்குச் சென்று, உறவினர் சினேகிதர் வீடுகளுக்கு விட்டுக்கொடுக்காமல் போய்வந்து சதா சிரிப்பும் சந்தோஷமுமாய்...

"எப்படி லாவண்யா இத்தனையும் உனக்கு சாத்தியமாகின்றன?" என்றால், அழகாய் சிரிப்பாள்...



அப்புறம் தீவிரமான பார்வையுடன் பதில்.

"ஒரு நாளைக்கு மொத்தம் இருபத்தி நாலு மணி நேரம். ரைட்? இதுல எட்டு மணி நேரம் தூங்கிடறதா வெச்சிக்கிட்டாலும், பாக்கி பதினாறு மணி... ஆபீஸுக்குப் போய் வர ஆறு மணி நேரம். அப்புறம் பத்து... சரியா? சாப்பிட, அரட்டை அடிக்க எல்லாத்துக்கும் நாலைக் கழிச்சிட்டாலும், பாக்கி இன்னும் ஆறு மணி. ஏ அப்பா! இதுல எத்தனை உபயோகமான காரியங்களைச் செய்யலாம்! வாஸ்தவமா நா செய்யறது போதாது. நம்பளை நாமே மனசாலையும், அறிவாலயும் வளர்த்துக்கணும்னா இன்னும் என்ன கத்துக்கலாம், என்ன செய்யலாம்ன்ற ஆர்வம் இருந்துகிட்டே இருக்கணும்..."

எப்படி!

அற்புதமான வார்த்தைகள் இல்லை!

இன்னும் கேளுங்கள்—

"நேரம் இல்லேனு சொல்றதுல எனக்கு நம்பிக்கையே இல்லே. அவகாசம் நிறைய இருக்கு... அதை ஒழுங்கா திட்டமிட்டு செலவழிக்கறது நம்ம கையில, சரியா சொல்லணும்னா, மன உறுதில இருக்கு. மாமூலா பண்ணற வேலைகளை போர் அடிக்குமன்றதால 'இடியட் வேலை'னு சொல்வாங்க. ஆனா இதைக்கூட சுவாரஸ்யத்தோட பண்ண முடியும். உதாரணத்துக்கு — பெருக்கி, துடைச்சி, பாத்திரம் அலம்பி, சமைக்கறப்போ பாடிக்கிட்டே— இல்லேன்னா, ரேடியோவைக் கேட்டுக்கிட்டே செய்யலாம். டி.வி. பாக்கறப்போ நான் நிட்டிங் போடுவேன், பின்ஸ் காம்பு ஆய்வேன், பட்டாணி உரிப்பேன். இதே மாதிரி மத்த சின்ன தையல் வேலைகளுக்குத் தேவைப்படற துணி களைப் பையில் போட்டு வெச்சிடுவேன். தெரிஞ்சவங் களோட உட்கார்ந்து பேசற நாழிகைல, பேசிக்கிட்டே அந்த வேலையைக் கவனிப்பேன். பொழுதுபோக்கு, காரியம்

இரண்டையும் கவனிச்ச திருப்தி! நிச்சயமா சொல்வேன், வேலைகளைச் சுவாரஸ்யமா ஆக்கிக்கறதும், கச்சிதமா திட்டமிட்டு நிறைய அவகாசத்தை உண்டுபண்ணிக்கறதும் நம்ம கையிலதான் இருக்கு..."

வெறும் பேச்சோடு நிற்காமல், வருஷத் துவக்கத்திலேயே ஒரு காலெண்டர் டைரியில் வேண்டியவர்களின் பிறந்தநாள், மணநாள் போன்ற முக்கிய நாட்களையும் குறித்து வைத்துக்கொண்டு டாண்டாண் என்று மறக்காமல் வாழ்த்து அட்டைகளை அனுப்புவதிலிருந்து பல சமாச் சாரங்களை எனக்குக் கற்றுத்தந்த குரு லாவண்யாதான்!

போபாலில் வசித்த நாட்களில், ஐந்தாறு பெண்களாக சேர்ந்து, வாரம் ஒருத்தர் வண்டியை எடுத்துக்கொண்டு பத்து கிலோ மீட்டர் தள்ளி உள்ள டவுனுக்குக் கூட்டாகச் சென்று, சாமான்களை வாங்கி வருவோம். மாசத்துக்கு நான்கு ட்ரிப் சென்று ஊர்ப்பட்ட பணத்தை போக்கு வரத்து செலவாக அள்ளி விடாமல் இருக்கவும், க்ரூப் ஷாப்பிங்கின் மகிமையை உணரவும் அந்த நாட்கள் ரொம்பவும்தான் உதவின.

இன்றைக்கும் டெல்லியில் எனக்குத் தெரிந்த மாமி ஒருவர், பொருட்கள் மலிவாகக் கிடைக்கும் சாந்தினி சௌக்கிற்குச் செல்லுமுன் தான் வசிக்கும் தெருவிலுள்ள குடித்தனக்காரர்களுக்கும் என்ன தேவை என்று அறிந்து, ஆட்டோவில் சென்று மொத்தமாக வாங்கி வந்து விடுவதில், மாசா மாசம் ஒவ்வொருத்தருக்கும் பல ரூபாய்கள் ஆதாயமாகின்றன!

திறமைசாலியாகத் திகழ திட்டமிடுதலுக்குப் பக்க பலமாக இருந்து அடுத்தபடியான ஸ்தானத்தைப் பெறுவது, எந்தப் பொருளையும் பராமரிக்கும் குணம்.

காசை வீசி சாமான்களை வாங்குவது பெரிசல்ல, அவற்றைப் பாங்குற பராமரிப்பது மிகமிக முக்கியம்.





அழுக்கானதை உடனே சுத்தப்படுத்துவதும், கிழிந்ததை கையோடு தைப்பதும், உடைந்ததை சீர் செய்வதும், வாங்கினதைத் துடைத்து, கோளாறு இல்லாமல் வைத்துக் கொள்வதும்— எல்லாவற்றையும் விட முக்கியமாய், பயனற்றவைகளைக் குப்பையாய் சேர்த்து வைக்காமல் உடனுக்குடன் தூக்கி எறிவதும் கட்டாயம் ஞாபகத்தில் வைத்து, செயலில் காட்டவேண்டிய பழக்கங்கள்.

இத்தனை படித்த பிறகும், 'சொல்வதென்ன கஷ்டம்.. நாள் முழுக்க நாயாய் ஆபீஸில் தேய்ந்துவிட்டு வீட்டுக்குள் காலடி வைக்கையிலேயே நைநை என்று அழும் பிள்ளை, லேட்டாக வந்ததற்காக மூஞ்சி தூக்கும் மாமியார், எனக்கென்ன என்று பேப்பரில் மூழ்கும் புருஷன் என்று அடிபட்டால் அல்லவா திட்டம் போடுவதும், கிட்டம் போடுவதும் சாத்தியமில்லாத சமாச்சாரம் என்பது புரியும்' — என்று நொடிப்பவர்களுக்கு நான் சொல்ல விரும்புவதெல்லாம் ஒன்றுதான்—

இது உங்கள் வாழ்க்கை. உணருவதும் உணராததும், மலர்வதும் கூம்புவதும் செய்வதும் செய்யாததும் உங்கள் கையில்—

தூங்குபவர்களைத்தான் எழுப்ப முடியும்.. அதுபோல, வளரவேண்டும் என்று ஆத்மார்த்தமாக விரும்புபவர்களைத் தான் தட்டிக்கொடுக்க முடியும்— அப்புறம், நடப்பதும், உட்காருவதும், ஏறுவதும், இறங்குவதும் அவரவர் இஷ்டம்!

# 28

உங்களை நீங்களே புரிந்துகொள்வதற்கு மனோதத்துவ நிபுணர்களோடு கலந்தாலோசித்து சில கேள்விகளைத் தயாரித்திருக்கிறேன்...

மனசாட்சிக்கு விரோதமில்லாமல் பதில் சொல்லுங்கள், ப்ளீஸ்...

1. உங்கள் உணர்ச்சிகளை வெளிக்காட்டிக்கொள்வது உண்டா?
   அ. அடிக்கடி
   ஆ. சில நேரங்களில்
   இ. இல்லவே இல்லை.
2. யாரிடம் உங்கள் மனசைத் திறந்து காட்டுவீர்கள்?
   அ. நெருங்கிய உறவினர்கள், நண்பர்களிடம்.
   ஆ. குறிப்பிட்ட ஒருவரிடம் மட்டும்
   இ. யாரிடமும் இல்லை.
3. நீங்கள் மனச்சோர்வுக்கு ஆளாக நேர்ந்தால்...
   அ. நாள் முழுவதும் சோம்பலுடன், எரிச்சலுடன் படுத்துக்கொண்டே இருப்பீர்கள்.
   ஆ. பிடித்தமான எண்ணம் அல்லது காரியத்தில் வலுக்கட்டாயமாகக் கவனத்தைச் செலுத்த முயற்சிப்பீர்கள்.
   இ. சோர்வாவது, மண்ணாங்கட்டியாவது என்று ஒரு அலட்சியச் சிரிப்புடன் உங்களை நீங்களே உலுக்கிக்கொண்டு, மேற்கொண்டு காரியத்தைக் கவனிப்பீர்கள்.



4. உங்களுக்கு மூட் அவுட்டாகும்போது, உங்கள் எதிர்பார்ப்பு என்ன?
   அ. மற்றவர்கள் அதைப் புரிந்துகொண்டு, சூழ்நிலையை மாற்ற வேண்டும்.
   ஆ. எல்லாரும் உங்களைப் பார்த்துப் பரிதாபப்பட வேண்டும்.
   இ. தனிமையில் உங்களை விட்டுவிட வேண்டும்.
5. நீங்கள் அசட்டுத்தனமாக எதையாவது உளறி வைத்து, நண்பர்கள் சிரிக்கும்போது,
   அ. கோபப்படுவீர்களா?
   ஆ. வெட்கப்படுவீர்களா?
   இ. நீங்களே பதிலுக்குச் சிரித்துவிட்டு, விட்டு விடுவீர்களா?
6. உங்களைச் சுற்றியுள்ளவர்கள் வழக்கமாக உங்களை நாடுவது,
   அ. ஏதேனும் ஆதாயத்துக்காக.
   ஆ. தங்கள் பிரச்சினைகளைச் சொல்லி அழ ஒரு தோள் கிடைத்தது என்பதற்காக.
   இ. நாடுவதேயில்லை.
7. கடைசியாக எப்போது வாய்விட்டுச் சிரித்தீர்கள்?
   அ. நேற்று.
   ஆ. போன வாரம்.
   இ. 'போங்க மேடம், வேற வேலையில்லை...'
8. தனியாக நடந்து போகும்போது எதைப்பற்றி யோசித்துக்கொண்டிருப்பீர்கள்?
   அ. அன்றைய தினத்தில் செய்யவேண்டிய வேலைகளை.

ஆ. பழைய நினைவுகளை.

இ. எதிர்காலத்தைப் பற்றி.

9. உங்களது வாழ்க்கை வருங்காலத்தில் எப்படி இருக்கும் என்று நினைக்கிறீர்கள்?

அ. இப்போது இருப்பதைவிட நன்றாக.

ஆ. இதே மாதிரிதான்.

இ. 'ஐயோ ரொம்ப பயமா இருக்கு...'

10. வாழ்க்கையை மறுபடி முதலிலிருந்து உங்கள் இஷ்டப்படி ஆரம்பியுங்கள் என்று சொன்னால், யாராக வாழ விரும்புகிறீர்கள்?

அ. இப்போதிருக்கும் நபராகவே.

ஆ. பிரபலமான ஆசாமியாக.

இ. நீங்கள் மதிக்கும் ஒரு மனிதராக.

11. வாழ்க்கையில் எது மிக முக்கியம்?

அ. பணம்.

ஆ. நிம்மதி.

இ. லட்சியங்கள்.

12. எப்போது மிகவும் மகிழ்ச்சியாக உணருகிறீர்கள்?

அ. வேலை செய்யும்போது.

ஆ. பொழுதுபோக்குச் சமாச்சாரங்களில் ஈடுபடும்போது.

இ. நண்பர்களுடன் பேசிக்கொண்டிருக்கும்போது.

13. தனிமையை நீங்கள் விரும்புவது உண்டா? எப்போது?

அ. சதா...

ஆ. எப்போதாவது.

இ. வேண்டவே வேண்டாம்.



14. நீங்கள் ரொம்ப அழகாக இருப்பதாக உங்களுக்கு மிகவும் நெருக்கமானவர் சொன்னால், என்ன நினைப்பீர்கள்?

அ. ஹை— சோழியன் குடுமி சும்மாவா ஆடும்? மனுஷனுக்கு ஏதோ காரியம் ஆகவேண்டும் என்று நினைப்பீர்களா?

ஆ. லேசான புன்னகையோடு ஏற்றுக்கொள்வீர்களா?

இ. ஆஹா— நிஜத்தைத்தானே சொல்கிறார் என்று பெருமைப்படுவீர்களா?

15. உலகத்திலேயே சந்தோஷமானவர் என்று யாரைக் கருதுகிறீர்கள்?

அ. இந்திரா காந்தி, சில்க் ஸ்மிதா.

ஆ. உங்களைத் தவிர பாக்கி எல்லோரும்.

இ. நீங்கள்.

16. நண்பர் ஒருவருடைய கருத்தைத் தவறு என்று தீவிரமாகக் கருதும்போது,

அ. மூக்கை உடைப்பதுபோல் அப்படியே சொல்லி விடுவீர்கள்.

ஆ. நாசூக்காக உங்களுடைய மாற்று எண்ணத்தை அவருக்குப் புரிய வைப்பீர்கள்.

இ. பேசாமல் இருந்துவிடுவீர்கள்.

17. உடைகளை எப்போது வாங்குகிறீர்கள்?

அ. ஒவ்வொரு மாதமும்.

ஆ. தேவைக்கும் சூழ்நிலைக்கும் தக்கபடி.

இ. இருக்கும் உடைகள் கிழிய ஆரம்பித்த உடன் அவசரம், அவசரமாகக் கடைக்கு ஓடி...

18. எந்த உடை உங்களுக்குச் சந்தோஷத்தைத் தருகிறது?
   அ. கவர்ச்சிகரமான வண்ணங்கள் கொண்டவை.
   ஆ. ஒரு இமேஜை உண்டுபண்ணும் எண்ணத்துடன் அணியப்படுபவை.
   இ. அந்தந்த விசேஷங்களுக்கும், இருக்கும் இடத்திற்கும் தக்கவை.

19. உணவில் கட்டுப்பாடு எப்போது தேவை என்று நினைக்கிறீர்கள்?
   அ. அவசியம் உண்டாகிவிட்டது என்று நீங்களே உணரும்போது.
   ஆ. மற்றவர்கள் சுட்டிக்காட்டும்போது.
   இ. கட்டுப்பாடு தேவை என்று நினைத்ததே இல்லை.

20. அது சரி, இத்தனை கேள்விகளுக்கும் எதற்காகப் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்?
   அ. 'இது என்ன' என்று தெரிந்துகொள்ளும் ஆர்வத்தால்.
   ஆ. பொழுது போகிறதே!
   இ. என்னைப்பற்றி நானே அறிந்துகொள்ளத்தான்.

| விடை | அ | ஆ | இ |
|---|---|---|---|
| 1. | 0 | 10 | 5 |
| 2. | 0 | 10 | 5 |
| 3. | 0 | 5 | 10 |
| 4. | 10 | 5 | 0 |
| 5. | 0 | 5 | 10 |
| 6. | 5 | 10 | 0 |



| | | | |
|---|---|---|---|
| 7. | 10 | 5 | 0 |
| 8. | 10 | 0 | 5 |
| 9. | 10 | 5 | 0 |
| 10. | 5 | 0 | 10 |
| 11. | 0 | 10 | 5 |
| 12. | 5 | 0 | 10 |
| 13. | 5 | 10 | 0 |
| 14. | 0 | 10 | 5 |
| 15. | 5 | 0 | 10 |
| 16. | 0 | 10 | 5 |
| 17. | 0 | 10 | 5 |
| 18. | 0 | 5 | 10 |
| 19. | 10 | 5 | 0 |
| 20. | 5 | 0 | 10 |

உண்மையான பதில்களைத்தானே சொன்னீர்கள்?

இப்போது மார்க் போட்டுக்கொள்ளுங்கள்.

அந்த மார்க் அடிப்படையில் நீங்கள் 'யார்' என்பதை விளக்கமாக அடுத்த அத்தியாயத்தில் சொல்கிறேன்!

## 29

**சுய** அலசல்—

இதைப்பற்றி அடிக்கடி கேள்விப்படுகிறோம்.

சுய அலசல் என்றால் என்ன?

எனக்கு ஜாங்கிரி பிடிக்கும். முறுக்கு பிடிக்கும், பாவக்காய் பிடிக்காது என்று நமது விருப்புவெறுப்புகளைத் தெரிந்துவைத்திருக்கும் அதே நேரத்தில்,

இது எனக்கு சந்தோஷத்தைத் தருகிறது— இது என் கோபத்தைத் தூண்டுகிறது— இது எனக்கு எரிச்சல் மூட்டுகிறது— இது அடுத்தவரை வேதனைப்படுத்துகிறது— இது என்னைப் பூரிப்படையச் செய்கிறது— இது என்னை சிலிர்க்கவைக்கிறது— இது எனக்கு நிம்மதியைத் தருகிறது என்று நம்முடைய செயல்களாலும் நடத்தையாலும் ஏற்படும் உணர்ச்சிகளை அடையாளம் காட்டி கட்டம் கட்டி, லகான் போடத் தெரிந்துவிட்டால்—

இதுதான் சுயஅலசல்.

"காலேஜுக்குப் போகிற வழியில் இந்தக் கார்டைத் தபாலில் சேர்த்துவிடேன்" என்று மெதுவாய்க் கேட்கும் அம்மாவிடம், தடக்கென்று "போம்மா, உனக்கு வேற வேலையில்லை" என்று மகன் எரிந்துவிழுவதும், காரண காரியமில்லாமல் வேலைக்காரியிடம் சண்டை போட்டு தன்னுடைய எரிச்சல் முழுவதையும் அவள் தலையில் எஜமானி கொட்டிவிடுவதும்— தினம் அநேக வீடுகளில் நடக்கும் சகஜமான விஷயங்கள்.

அந்தந்த நிமிஷங்களில் உணர்ச்சிவசப்பட்டு செய்து விடும் இந்தச் செயல்களின் பலன்களை உணர்ந்து



கொள்ளும்போது, 'சே.. ஏன் இப்படிச் செய்தோம்?' என்று பல சமயங்கள் மனசில் ஒரு உறுத்தல் தோன்றுகிறது பாருங்கள், அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் உடனே அந்தப் பிராண்டலை மனசில் அழுத்தமாகக் குறித்துவைத்துக் கொள்வதும், அடுத்த தரம் இப்படி நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று தீர்மானிப்பதும், தன்னை இன்னும்இன்னும் மேம்படுத்திக்கொள்ள ஜனிக்கும் விழிப்புணர்வுதான்...

சுய அலசல், சுய விமர்சனம்...

இதை எப்படிச் செய்வது?· எங்கு துவங்குவது?

யோசிப்போம்.

வழிகள் பல உள்ளன என்கிறார்கள் அறிஞர்கள்.

இரவு படுக்கப்போகும் முன், பேப்பர் பேனாவை எடுத்துக்கொண்டு ஓர் இடத்தில் அமர்ந்து, இன்று என்னென்ன காரியங்கள் செய்தேன், யார் யாரிடம் எப்படி நடந்துகொண்டேன், இதில் என்னைச் சந்தோஷிக்க வைத்தவை எவை, சுணுங்கிப்போகச் செய்தவை எவை, மகிழ்ச்சி— நிம்மதி தரும் பழக்கங்களை வளர்க்க முடியுமா, வேதனை தந்தவற்றைக் குறைக்க முடியுமா— என்று ஆத்மார்த்த உண்மையுடன் பட்டியல் போட்டு அவரவர் ப்ளஸ், மைனஸ் பாயிண்டுகளை ஆணி அடித்த மாதிரி உணர்வது சுலபமானது மட்டுமல்ல, உடனே பலனளிக்கக் கூடியதும் என்பது மனோதத்துவம் படித்தவர்களின் கருத்து.

முகமூடியை மாட்டிக்கொள்ளாமல், விருப்புவெறுப்பு இல்லாமல், நான்— நானாக இருந்து— என்னை— நானே— உயர்த்திக்கொள்வேன்— என்கிற உறுதியுடன் சுய அலசல் செய்ய விரும்புகிறவர்களுக்கு குட்டியாய் உதவும் தினுசில் தான் சென்ற அத்தியாயத்தில் அந்த க்விஸ் கொடுக்கப் பட்டது.

இப்போது அதற்கான விளக்கத்தைப் பார்க்கலாம்.

140க்கும் மேற்பட்ட மதிப்பெண்களைப் பெற்று, தங்களைத் தாங்களே தோளில் தட்டிக்கொடுத்து ஒருவார காலமாய் ஆகாயத்தில் மிதந்துகொண்டிருப்பவர்களை முதலில் கூப்பிடலாம்.

கங்ராட்ஸ்—

நிஜமாகவே நீங்கள் அதிர்ஷ்டசாலிதான்!

வாழ்க்கை உங்களைப் பொறுத்தவரை படு சுவாரஸ்ய மானது. உங்களுக்கு தன்னம்பிக்கையும், மற்றவர்களிடம் ஈடுபாடும் எக்கச்சக்கம். ரோஜா இதழ்கள் தூவப்பட்ட பாதை என்பார்களே, அது நிச்சயம் உங்களுடையதுதான்.

ஆனால்...

அதிர்ஷ்டத்தின் காரணமாகக் கல்லையும் முள்ளையும் மிதித்து அறியாத நீங்கள், தொடர்ந்து வாழ்நாள் பூராவும் இதே இன்பமும், சுகமும்தான் நீடிக்கும் என்கிற மனோ பாவம் கொண்டவர்களாக இருப்பது அத்தனை ஆரோக்கிய மானது இல்லை. You are too optimistic. யதார்த்தத்தைக் கொஞ்சம் கஷ்டப்பட்டாவது ஏற்கக் கற்றுக்கொள்வது அவசியம். இல்லையென்றால், தாரிணி மாதிரி ஒருநாள் சற்றும் எதிர்பாராமல் நீங்களும் அடிபட்டுப் போய்விடக் கூடும்.

தாரிணி, தொழிலதிபர் நமச்சிவாயத்தின் ஒரே மகள். அழகி. கெட்டிக்காரி. மனிதாபிமானம் மிக்கவள். பூ மாதிரி தான் பெற்றவர்கள் அவளை வளர்த்தார்கள். ஒரு ஏற்றம், இறக்கம்? ம்ஹூம். ஒன்றும் இல்லை. டிகிரி முடித்த கையோடு கல்யாணம். தனக்கு நிகரில்லை என்கிற சந்தோஷத்தோடு வாழ்ந்தபோது, முதல் அதிர்ச்சி... குறைப்பிரசவம். தனக்கா— இப்படியா? என்று புலம்பி



மீளுவதற்குள் இரண்டாவதும் அப்படியே. 'நான் நல்லவள். பிறருக்குக் கெடுதல் நினைக்காதவள். என் நல்ல மனசுக்கு எதுவுமே கோணிப்போகாது' என்று ஏதோ ஒரு அசட்டு நம்பிக்கையில் வாழ்ந்துவிட்டவளால் 'தன் கையை மீறிய விஷயங்கள்' பல உண்டு என்கிற யதார்த்தத்தை எடுத்துக்கொள்ளமுடியாமல் போக, மூன்றாவதை உண்டானபோது ஏகப்பட்ட குழப்பங்கள். Optimistic ஆக இருந்தவள், சரசரவென்று Pessimistic ஆக மாற, சித்தபிரமை பிடிக்காத தோஷம்தான்...

பூரணமாக வாழ்ந்தாலும், ஏமாற்றங்கள் நம்மை மீறினவை. அவற்றைத் தவிர்க்க இயலாவிட்டாலும், கூடுமானவரையில் எதிர்நோக்கவாவது பழகவேண்டும் என்கிற மனோபாவத்தை இந்தப் பிரிவினர் வளர்த்துக் கொண்டுவிட்டால் பிரச்சினை இல்லை.

90—140 வரையில் மார்க்குகள் எடுத்தவர்கள்தாம் வாழ்க்கையை அப்படியே ஏற்றுக்கொண்டு, மேடு பள்ளங்களோடு வாழத்தெரிந்த புத்திசாலிகள் என்பது நிபுணர்கள் கணிப்பு.

நேர்மை, நிதானம் நிறைந்த இந்தப் பிரிவினர் எந்தச் சூழ்நிலையையும் அனுசரித்துப்போகும் அளவுக்கு பிராக்டிக லாக இருப்பவர்கள் என்பதால் இவர்களுக்கு ஒரு விசேஷ ஷொட்டு! மனிதாபிமானம் என்று சொல்லிக்கொண்டு மெழுகுவர்த்தியாய் உருகித் தேயாமல், எல்லாம் நம்மை மீறின விவகாரம் என்ற சன்னியாசித்தனத்தோடு வாழாமல், ஒருவித நிதானம், யதார்த்தம், ஆசாபாசம் என்கிற அளவான கலவை இவர்களுடையது. இதற்கு நல்ல உதாரணம் ரமணி.

நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த ரமணி, கோவிந்தராஜை உயிராகக் காதலித்தாள். பெரியவர்களிடம் பேசி

திருமணத்தை முடித்துக்கொள்ள வேண்டியதுதான் என்ற நிலை வந்தபோது, திடுமென ஒருநாள் கோவிந்தராஜ் மனம் மாறி 'என்னை மறந்துவிடு— என் தாய் ஹார்ட் பேஷண்ட்' —எங்கிருந்தாலும வாழ்க—' என்று பணக்கார சம்பந்தத்தை ஏற்று டயலாக் பேச, ரமணி அடிபட்டுத்தான் போனாள். ஆனால், வாழ்க்கையில் இப்படிப்பட்ட திருப்பங்கள் இருக்கும் என்பதை விரைவில் உணர்ந்து, மனசைத் தேற்றிக் கொண்டாள். ஒரு வருஷம் வேலையில் கவனத்தைச் செலுத்தி தன் வேதனையை மறந்தாள். பின், பிராக்டிகலாக இருப்பதுதான் எல்லோருக்கும் நல்லது என்று தன்னுடன் வேலைபார்த்த மகேஷை மணந்து, இன்று குழந்தை குட்டியுடன் சௌக்கியமாய் வாழ்கிறாள்.

அடுத்து 50—90 மதிப்பெண்கள் வாங்கியவர்களைப் பார்க்கலாம்.

சட்டென்று எரிச்சலடையும் சுபாவமும், நிதான மின்மையும், சுயநலமும் இந்தப் பிரிவினரின் பலவீனங்கள்.

தானும் சுகப்படாமல், சுற்றியிருப்போரையும் நிம்மதியாக வாழவிடாத ரகம் இவர்கள் என்பதை மிகமிக வருத்தத்துடன் சுட்டிக்காட்ட வேண்டிவருகிறது.

சுய அலசலை இவர்கள் இன்றே, இப்போதே துவங்க வேண்டும். வலித்தாலும், தங்களின் சுயரூபத்தைப் பார்க்கப் பழகவேண்டும். சமுதாயம் என்பது தன் ஒருத்தரை மட்டும் பொறுத்தது அல்ல, நிம்மதியாய் வாழ அடுத்தவரின் ஒத்துழைப்பு தேவை என்பதால் விட்டுக்கொடுத்து அனுசரித்துப்போவதும், ஓரளவுக்கு சுயநலத்தை இழப்பதும் அத்யாவசியம் என்பதை இவர்கள் கட்டாயம் உணர வேண்டும்.

என்னை நானே சரிசெய்துகொள்வேன்— இது என் வாழ்க்கை. இதை சந்தோஷமாக வாழ்வது என் கையில்தான் என்கிற உறுதியை உடனே பூணவேண்டும்.



முயன்றால் ஆகாதது ஏதும் இல்லை.

Best of Luck.

கடைசியாக— 50க்கும் கீழ் மார்க் வாங்கியவர்கள்...

இந்தப் பிரிவில் யாரும் இருக்கமாட்டார்கள் என்றே மனசு நம்புகிறது. மீறி இருந்துவிட்டால்...

மனிதாபிமானம் என்றால் கிலோ என்ன விலை; நியாயம், தர்மம் என்றால் என்ன; அடுத்தவர் எக்கேடு கெட்டால் எனக்கென்ன; ஏன், நான் எப்படி வாழ்ந்தால் உனக்கென்ன— என்று, யாருக்கும் எதற்கும் கட்டுப்படாத அலட்சியத்துடன் வாழும் இவர்கள் உடனடியாக ஒரு சைக்கியாட்ரிஸ்டைப் பார்த்து ஆவன செய்து தங்களை அடியோடு மாற்றிக்கொள்ள முயன்றால் நல்லது. மாட்டேன் என்றால்—

I am truly sorry for them. வேறு என்ன சொல்ல?

# 30

"**கா**தல் கல்யாணம்— பெரியவர்களால் நிச்சயிக்கப்பட்டு நடக்கும் திருமணம்— இந்த இரண்டில் எது அதிகம் தோல்வி அடைகிறது என்று நினைக்கிறீர்கள்?" — இது என்னிடம் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளில் ஒன்று.

எதற்கு பலம் அதிகம்; பலவீனமானது என்பதை ஆராயுமுன், ஒரு வருஷ காலத்துக்குள் எனக்குத் தெரிந்த மூன்று இல்லங்களில் நடந்த சம்பவங்களில் கொஞ்சம் புகுந்து பார்க்கலாம்.

முதலில் ரமா.

பி.எஸ்.ஸி. படித்துவிட்டு கம்பெனி ஒன்றில் ரிசப்ஷனிஸ்டாக இருப்பவள். பெற்றவர்களுக்கு இரண்டாவது பெண். ஓரளவுக்கு வசதியுள்ள குடும்பம்தான். பளிச் சென்று மனத்தில் பட்டதைப் பேசுபவள்; தன்னம்பிக்கை நிறைந்தவள்.

இவளுடைய இருபத்தி இரண்டாவது வயசில் பெரியவர்கள் அலசுஅலசென்று அலசி, நூற்றியெட்டு பொருத்தங்கள் பார்த்து, வக்கீலாகத் தொழில் புரியும் சிவகுமாரைத் தேர்ந்தெடுத்து ஊரை அழைத்துக் கல்யாணம் செய்தார்கள்.

ஹனிமூன்.

கோவாவில் பத்து நாள் இருக்கவெனத் திட்டம் போட்டுக்கொண்டு போனவர்கள், போன மச்சான் திரும்பி வந்தான் என்று ஆறாம் நாள் சென்னைக்கு வந்ததோடு நிற்காமல், ஸ்டேஷனில் இறங்கின கையோடு ரமா பெற்றவர் வீட்டுக்கும், சிவகுமார் தன் இல்லத்துக்கும் கடுகடு முகத்துடன் பிரிந்தார்கள்.

— அவனோடு என்னால வாழ முடியாதும்மா... மனுஷனா அவன்?— இது ரமா.



She is Frigid. பொம்பளையா அவ? — இது சிவகுமார். என்ன ஆயிற்று?

எங்கு எது கோணலாகிப் போயிற்று?

எண்ணி ஏழு நாட்களில் மனுஷனா அவன் என்று அவளும், பொம்பளையா அவ என்று அவனும் புரிந்து கொள்ளும் அளவுக்கு என்னதான் நடந்தது?

ம்ஹூம்... தெரியவில்லை.

என்ன, ஏது என்று எல்லோரும் துருவினாலும் பெரிசாய் சொல்லும்படி எதுவும் கிடைக்கவில்லை என்பதுதான் நிஜம்.

இவர்களைப்பற்றி மேற்கொண்டு விவாதிக்குமுன், ரகு விஷயத்தையும் தெரிந்துகொண்டுவிடலாம்.

ரகு—விமலா சின்ன வயசில் அண்டை வீட்டில் வளர்ந்தவர்கள். பெரியவர்களின் சம்மதத்துடன் நடந்த காதல் கல்யாணம் இது.

பம்பாயில் மூன்று மாசங்கள் குடித்தனம் பண்ணிய பிறகு ஒருநாள் வேலையிலிருந்து வீடு திரும்பின விமலாவை ரகு எழுதி வைத்திருந்த கடிதம் வரவேற்றது.

— உன்னைக் காதலிப்பதாகத்தான் எண்ணி மணந்தேன். ஆனால், சென்ற மாசம் படிப்புக்காக வெளிநாட்டுக்குச் சென்றுவிட்ட என் பழைய காதலியை எதேச்சையாய் சந்தித்த நாளாய் அவள்மேல் உள்ளதுதான் உண்மையான காதல் என்பது புரிந்துவிட்டது. ஒரு மாசம்போல நானும் மனசைக் கட்டுப்படுத்த முயன்றுதான் பார்த்தேன். முடியவில்லை. அதனால் என் சாமான்களை எடுத்துக்கொண்டு அவளிடம் போகிறேன். நீ படித்தவள், புரிந்துகொள்வாய் என்கிற நம்பிக்கை உள்ளது...

எப்படி!

தாலி கட்டி, மூன்று மாசம் வாழ்ந்த வாழ்க்கை நொடிப் பொழுதில் அவமானப்படுத்தப்பட்டது இப்படி ஒரு கடிதத்தின் மூலம்தான்.

பழைய காதலியாம்— பார்த்தானாம்— அதுதான் காதல் என்று புரிந்ததாம்— போகிறானாம். எல்லா வற்றுக்கும் சிகரம் வைத்த மாதிரி 'நீ படித்தவள், புரிந்துகொள்வாய்' என்கிற வரிகள் வேறு!

ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்... இது பெரியோர்கள் சம்மதத்துடன் நடந்த காதல் கல்யாணம்.

இந்தச் சீரழிவுக்குக் காரணம் என்ன என்று அலச முற்படுமுன் கௌசல்யாவின் அனுபவத்தையும் பார்த்து விடலாம்.

பெற்றவர்களையும், உற்றவர்களையும் மீறி, எதிர்த்து நின்று, காதலித்த ராம்தாஸை மணந்தாள் கௌசல்யா. இவள் தமிழ், அவன் ஹிந்தி. இவள் சைவம். அவன் அசைவம். இப்படி முரண்பாடுகள் ஏராளம். இருப்பினும், 'எங்கள் காதலுக்கு முன் அத்தனையும் தூசி' என்று வீறாப்புப் பேசி போன வருஷம் மணந்தார்கள். சந்தோஷம்.

ஆனால், பத்து நாட்களுக்கு முன் என்னை கௌசல்யா சந்தித்தபோது எல்லாம் உல்டாவாகியிருந்தன.

ஆறு மாசங்களாக ராம்தாஸைப் பிரிந்து ஹாஸ்டலில் தனியாக இருக்கிறாளாம். ஏண்டா மணந்தோம் என்று வெறுப்பாக உள்ளதாம். ராம்தாஸை நல்லவன் என்று நம்பி மோசம்போய்விட்டாளாம். ஏகக் குடிகாரனாம். கண்டபடி பேசுகிறானாம். மரியாதை இல்லையாம். மொத்தத்தில் வாழவே பிடிக்கவில்லையாம். எட்சட்ரா... எட்சட்ரா...

"ராம்தாஸ் குடிப்பது புதுசில்லையே? முன்பே இந்த வழக்கம் உள்ளவன்தானே?" என்ற என் கேள்விக்கு, "தெரியும்தான். ஆனாலும் திருத்திவிடலாம் என்று இருந்தேன்... ஏமாந்துபோய்விட்டேன்" என்று பதில் கூறி மூக்கை சிந்திக்கொண்டு கௌசல்யா அழுதபோது எனக்கு அவள்மேல் கோபம்தான் உண்டானது.





குடிப்பவன் என்று தெரிந்து, மாற்றிவிடலாம் என்ற நம்பிக்கையில் மணந்தவள், சரியாக ஆறு மாசம்கூட முயற்சி செய்யாமல் வெளியில் வந்துவிட்டு, வாழ்க்கை வெறுத்து விட்டது என்று புலம்புவது சிறுபிள்ளைத்தனம் இல்லையா? அசட்டுத்தனம் இல்லையா?

நின்று நிதானித்து யோசிக்கும்போது மேலே குறிப்பிட்ட ரமா—சிவகுமார், ரகு—விமலா, கௌசல்யா—ராம்தாஸ் இவர்களின் அடிப்படைக் கோளாறு பொறுமையின்மை-impatience என்பது புரிகிறது.

திருமணமான ஒரு வாரத்துக்குள் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பதும், விரும்பி மணந்த மூன்று மாசங்களுக்குள் தாலி கட்டினவளைவிட இன்னொருத்தியிடமே அன்பு அதிகம் என்று நம்புவதும், காதலித்து மணந்தவர் தன்னை ஏமாற்றிவிட்டார், அதனால் இனி தொடர்ந்து அவரோடு வாழ்வது இயலாத சமாச்சாரம் என்று புலம்புவதும்...

கடவுளே!

இவர்களெல்லாம் மணவாழ்க்கையைத்தான் எப்படிக் கிள்ளுக்கீரையாக நினைத்து நடக்கிறார்கள்!

இவர்களாக சிலவற்றைக் கற்பனை பண்ணிக்கொண்டு, பலவற்றை எதிர்பார்த்து, பின், நினைத்தது நினைத்தபடி நடக்கவில்லை என்றவுடன், பொறுமை, நிதானத்தை இழந்து 'உன்னோடு இப்படி அவதிப்பட்டுக்கொண்டாவது வாழவேண்டும் என்று என்ன தலைவிதி?' என்று உதறி விடத் தயாராகிவிடுவது எந்தவிதத்திலும் நியாயமான செய்கையாகப் படவில்லையே!

மாங்கொட்டையை நட்ட மறுநாள் பழம் கிட்டுமா? அது முளைத்து, வளர்ந்து, பூ விட்டு, காய்த்து, பழுக்கும் வரை காத்திருப்பதுதான் நியதி என்பது புரிந்தவர்கள் இங்கு மட்டும் ஏன் அவசரப்பட்டு தப்புக்கணக்கு போடுகிறார்கள்?

காதல் கல்யாணமாகட்டும், பெரியவர்கள் நிச்சயித்த திருமணமாகட்டும், அதை வெற்றி பெறச் செய்வதும், தோல்வியாக்குவதும் நிச்சயம் சம்பந்தப்பட்ட அந்த இரண்டு நபர்களின் கைகளில்தான், இதை மறக்கக்கூடாது.

மேலே சொன்ன மூன்று நிகழ்ச்சிகளையும் கேள்விப் பட்ட பிறகு முதலில் அந்தந்த நபர்களின் பொறுமை யின்மை, அனுசரணையின்மை, அதீத எதிர்பார்ப்புகள் இவற்றை எண்ணி கோபம் எழுந்தாலும், பிற்பாடு எனக்குள் வருத்தம் வியாபித்தது உண்மை.

படித்து, வளர்ந்து, நாலும் தெரிந்த நபர்களாக இருந்து கொண்டும் இப்படி சிறுபிள்ளைத்தனமாய் நடந்துகொண்டு, தங்கள் நிம்மதியை இழக்கிறார்களே— என்று வருத்தம்; இந்த அசட்டுத்தனத்தை சரி என்று சாதித்து தன்னோடு நிற்காமல் இன்னும் சில இளநெஞ்சங்களையும் கோண லாக்குகிறார்களே என்று வருத்தம்; முக்கியமாய்—இப்படி ஒரு வாரத்தில், மூன்று ஆறு மாசங்களில், 'இனி என்னால் பொறுக்கமுடியாது' என்று பந்தத்திலிருந்து விடுபட்டுக் கொண்டு வந்தவர்கள், இந்தச் செய்கையை தைரியமாய் அந்த ஒரு வார, மூன்று ஆறு மாசங்களுக்கு முன்னாலேயே செய்திருந்தால் எத்தனை செலவு மிச்சம்? அவர்களைச் சார்ந்தவர்களுக்கு எத்தனை வேதனை மிச்சம்— என்று வருத்தம்.

ரமா, சிவகுமார் கல்யாணத்தை ஹேமமாலினியில் அத்தனை தடபுடலாய் நடத்தினதையும், பின் ஒரே வாரத்தில் மணமக்கள் பிரிந்து, என்னென்னவோ செய்தும் சேர்க்க முடியாமல் ஆகிவிட, இரண்டுபக்க பெற்றோரும்



தலைதூக்க முடியாத அவமானத்தில் குன்றிப்போனதையும் என் கண்ணால் பார்த்துவிட்டதால்தான் இத்தனை அவஸ்தையோ?

அதனால்தான் மீண்டும் சொல்கிறேன். ஒரு திருமணத் தின் வெற்றி, அது எந்த அடிப்படையில் அமைக்கப்பட்டது என்பதில் இல்லை— அந்த உறவை ஏற்று, சுகதுக்கத்தில் சமபங்கு வகித்து, தோளோடு தோள் நின்று அத்தனை பொறுப்புக்களையும் சுமந்து, மரியாதையும், தன்னல மில்லாத அன்பையும் கொடுத்து, வாங்கி, ஆயுசு பரியந்தம் கை கோர்த்து நடைபோட முனையும் அந்த இரண்டு ஆத்மாக்களை மட்டுமே சார்ந்திருக்கிறது.

இது சத்தியம்.

அனுபவித்தவர்களின் அனுபவம்.

தாம்பத்தியம் என்றால் என்ன?

Marriage is an institution — என்றும், கல்யாணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர் என்றும் பெரியவர்கள் அர்த்தம் இல்லாமலா சொல்லியிருப்பார்கள்?

யோசிக்க வேண்டும்.

தாம்பத்தியம்— இதன் தாத்பர்யத்தை கொஞ்சமாவது புரிந்துகொள்ள அடுத்த அத்தியாயத்தில் முயற்சிக்கலாமா?

# 31

"**தா**ம்பத்தியம் என்பது சென்ற அத்தியாயத்தில் நீங்கள் குறிப்பிட்டுள்ளபடி அந்த இரண்டுபேர் மட்டுமே சம்பந்தப்பட்ட விஷயம்தான். ஆனால், வயதுவந்த, விவரம் புரிந்த இருவர் நடுவில் உண்டாகும் அந்த ஒப்பந்தத்துக்கு மேளம், தாளம், மந்திரம், விருந்து இதெல்லாம் எதற்கு? அனாவசிய செலவு என்பதுடன் ஒன்றரை மணி நேரம் கண்கள் எரிய புகை முன் உட்காரும் அவஸ்தை வேறு! மொத்தத்தில் திருமணம் என்கிற அர்த்தமற்ற சடங்கு தாம்பத்தியம் என்கிற ஒப்பந்தத்தைத் துவங்க அவசிய மில்லாதது என்பது என் தாழ்மையான கருத்து; ஒப்புக்கொள்கிறீர்களா?"

— பாலவாக்கத்திலிருந்து தாமோதரன் என்ற வாசகர் இந்தக் கடிதத்தின் மூலம் திருமணச் சடங்குகளைப்பற்றி கொஞ்சம் சிந்திக்கத் தூண்டியிருக்கிறார்.

வருத்தப்படமாட்டீர்கள் என்ற எதிர்பார்ப்பில் சொல்கிறேன்— திருமணம் என்பது வெறும் அர்த்தமற்ற சடங்கு— மேளம், தாளம், விருந்து இவற்றோடு மட்டுமே சம்பந்தப்பட்ட விஷயம் என்று நினைப்பதில் ஓரளவுக்குத் தெரியாத்தனம் கலந்திருக்கிறது, மிஸ்டர் தாமோதரன்.

ஹிந்து தர்மத்தின்படி கல்யாணம் என்பது நினைத்த போது உதறித் தள்ளிவிடும் ஓர் ஒப்பந்தம் அல்ல; அது, ஆயுசு முழுவதும் ஒருவரோடு ஒருவர் ஈருடல், ஒருயிர் என்று பிணைந்து, சொல்லும் அர்த்தமும்போல இணை பிரியாமல் சுக துக்கங்களிலும், மேடு பள்ளங்களிலும் ஒன்றாக வாழ்ந்து காட்டுவோம் என்று சங்கல்பம் பூணும் வாழ்க்கை ஒப்பந்தம்.



இதை, திருமணம் செய்துகொள்ளும் இருவரும் ஒன்றாகப் புரிந்துகொள்ள வேண்டி சில சடங்குகளை அவசியமாக்கியிருக்கிறார்கள் நம் பெரியோர்கள்.

மாதிரிக்கு 'சப்தபதி' என்கிற சடங்கை எடுத்துக் கொண்டு அது எவற்றை வலியுறுத்துகிறது என்று பார்ப் போம்.

மணமகளின் கையை தன் வலக்கரத்தால் பற்றி ஏழு அடிகளை எடுத்துவைக்கும் மணமகன் கூறுகிறான்: "ஏழு அடிகளைச் சேர்த்து நடந்ததன் மூலம் நீயும் நானும் ஒன்றாகப் பிணைந்துவிட்டோம். இனி, உன்னுடைய அப்பழுக்கில்லாத அன்பை எனக்கு நீ பரிபூரணமாய் தா; பதிலுக்கு என்னுடைய முழுமையான அன்பை உனக்கு நான் தருகிறேன். இனி, எந்தக் காரியத்திலும் நாம் இணைந்தே செயல்பட்டு நம் கருத்துக்களும், ஆசைகளும், சங்கல்பங்களும் ஒரே மாதிரியாக இருக்கப் பாடுபடுவோம். உன் ஒத்துழைப்புடன் என் கடமைகள் அத்தனையும் நான் தவறாமல் செய்வேன். இனி, நீ பாடல் என்றால் நான் ராகமாவேன்; நீ பூமி என்றால் நான் உரமாவேன்; நான் விதை என்றால் அதன் ஊட்டச்சத்து நீயாவாய்; நான் எண்ணம் என்றால் நீ வாக்கு ஆவாய்."

இந்தக் கருத்தையே ஒரு கவி வெகு அழகாக, "வில்லும் நாணும் போல ஒரு ஆண், பெண் உறவு இருக்கவேண்டும். அவனை வளைப்பவளும் அவளே; அவனால் வளைக்கப் படுபவளும் அவளே; அவனை நல்வழிக்கு இழுப்பவளும் அவளே; அவனைத் தொடர்பவளும் அவளே; ஆக, நாண் இல்லாத வில் எப்படி உபயோகமற்றதாகக் கருதப் படுகிறதோ, அதேபோல சரியான உறவு இல்லாத தாம்பத்தி யமும் அர்த்தம் இல்லாததாகவே ஆகிறது..." என்று கூறி யிருப்பதை உங்களில் சிலராவது படித்திருக்கக்கூடும்.

கிட்டத்தட்ட இதே கருத்தைத்தான் இதர மதத் திருமணச் சடங்குகளும் வலியுறுத்துகின்றன.

திருமணத்தை இஸ்லாமியர்கள் 'நிகாஹ்' என்று அழைக்கின்றனர். மரங்களின் வேர்கள் ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்து இணைந்திருப்பதைக் குறிப்பிடும் 'நகஹ' என்ற அரபுமொழி மூலச்சொல்லையே, ஒரு ஆணையும் பெண்ணையும் ஒன்றாகச் சங்கமித்து வாழச் செய்யும் சடங்கிற்கு வெகு பொருத்தமாக இஸ்லாம் தந்திருக்கிறது.

இதேபோல, 'மரணம் நம்மைப் பிரிக்கும்வரை, உயர்விலும், தாழ்விலும், சந்தோஷத்திலும், கஷ்டத்திலும் நாம் ஒருவருக்கொருவர் உறுதுணையாக நிற்போம்' என்று சத்தியப் பிரமாணம் செய்வது கிறிஸ்தவர்களின் திருமணத்தில் முக்கியமான கட்டமாகும்.

சரி, திருமணச் சடங்குகளின் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டீர்கள். ஆனால், வயதுக்கு வந்த, விவரம் புரிந்த, நல்லது கெட்டதை அலசத் தெரிந்த இருவர் மனமொப்பி இணைவதற்கு இந்தக் கட்டாய வாக்குமூலங்கள் எதற்கு? — என்று கேட்க விரும்புகிறவர்கள் கொஞ்சம் பொறுமையாக இருக்கவேண்டும்.

நானே விஷயத்துக்கு வருகிறேன்.

நீங்கள் குறிப்பிட்ட தினுசில் நல்லது கெட்டதை அலசத் தெரிந்த, விவேகமான, அறிவில் முதிர்ந்த இரண்டு நபர்கள், 'இது எங்கள் இருவர் மட்டுமே சம்பந்தப்பட்ட விஷயம், இதற்கு நாலுபேர் நடுவில் வெளிப்படையாக, நாங்கள் வாழப்போகும் வாழ்க்கையையும், செய்யவேண்டிய கடமைகளையும் பிரகடனம் செய்வது அனாவசியம் என்று நினைப்பதால்— மரபு வழி திருமணச் சடங்குகள் எங்களுக்குத் தேவையில்லை' என்று மனப்பூர்வமாகக் கூறி அருமையான தாம்பத்தியத்தைத் தொடங்கி, தொடர்ந்தால் அவர்களுக்கு நம் இருதயம் நிறைந்த பாராட்டு.

ஆனால் அப்படி நிஜத்தில் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள்? யோசிக்க வேண்டும்.



சம்பிரதாயத் திருமணத்துக்கு நான் வக்காலத்து வாங்குவதாக யாரேனும் நினைத்தால்— அது முழுமையாக சரியல்ல.

திரும்பத்திரும்ப ஒன்றையே கூறுவதற்கு மன்னிக்க வேண்டும்— தாம்பத்தியம் என்பது விளையாட்டு சமாச்சாரமில்லை.

சடங்குகளில் நம்பிக்கை இல்லாவிட்டாலும்கூட, பத்து பேர்கள் ஒன்றுகூடி நடத்திவைத்த திருமணமாயிற்றே, இதை சட்டென்று உடைத்துக்கொண்டு வெளியேறுவது அத்தனை எளிதான சமாச்சாரம் இல்லையே, நாளைக்கு சமுதாயம் பழிக்குமே— என்று தயங்கினதும், அந்தத் தயக்கத்தினூடே எதிர்பாராமல் கிடைத்த அவகாசத்தில் புருஷனை மனைவியும், மனைவியைப் புருஷனும் சரியாகப் புரிந்துகொண்டுவிட, அசைக்கமுடியாத இனிமையான தாம்பத்தியம் பலரிடையே ஜனித்திருப்பது நிஜம்.

இதற்கு சரஸ்வதி, புருஷோத்தமன் தம்பதி சிறந்த உதாரணமாகிறார்கள்.

புருஷோத்தமன் பொருளாதாரத்தில் எம்.ஏ. படித்தவன். கல்லூரி ஒன்றில் லெக்சரர். இவன் தலையெடுக்கும் வரை சாப்பாட்டுக்கே கஷ்டப்பட்ட குடும்பம். ஓரளவுக்கு வசதியான குடும்பத்துப் பெண்ணை மணந்து, இனியாவது நிம்மதியாக வாழவேண்டும் என்று அவன் ஆசைப்பட்டது நடக்காமல், ஒரு விபத்தில் தாய், தந்தையை திடுமென இழந்துவிட்ட தூரத்து உறவுப்பெண்ணான ஏழை சரஸ்வதியை பெரியவர்கள் நிச்சயம் செய்துவிட, பெற்றவர்களை மீறத் துணிவில்லாமல் சரஸ்வதிக்கு புருஷோத்தமன் தாலி கட்டினான்.

தாலி கட்டினதோடு சரி, மற்றபடி அவளைத் தொடக்கூடப் பிடிக்காமல் வெறுப்பு.

வீட்டோடு இருந்தால் மற்றவர்கள் நச்சரிக்கிறார்கள் ன்று திருநெல்வேலிக்கு மாற்றல் வாங்கிக்கொண்டான். அங்கு இரண்டு வருஷம். வாழ்க்கை வெறுத்து தனியாய் வாழ்ந்தானே தவிரவும் தப்புத்தண்டா எதுவும் பண்ணிய இல்லை. அப்புறம் தஞ்சாவூரில் மூன்று வருஷங்கள்.

இதற்கிடையில் அப்பா பாரிசவாயு வந்து படுத்த படுக்கையானார். அம்மாவுக்கு மெனோபாஸ் கோளாறு. இவன் அனுப்பும் பணத்தை வைத்துக்கொண்டு சிக்கனமாய் குடும்பம் நடத்தி, சொந்தத் தாய் தந்தைபோல மாமியார், மாமனாரைக் கண்ணுக்குள் வைத்துக் காத்ததோடு, படித்த படிப்பை வீணாக்காமல் நாலு குழந்தைகளுக்கு ட்யூஷன் சொல்லித்தந்தும், எம்ராய்டரி போட்டுக் கூடை பின்னி விற்றும் முடிந்தவரை தன் பங்குக்கு சம்பாதிப்பதும், ழக்கியமாய் எவரைப் பற்றியும் புகார் செய்யாமல் இதமாய் சரஸ்வதி வளைய வருவதும் போகவர கண்ணில்பட்டு, மனசில் தங்க, புருஷோத்தமனிடம் சிறுகச்சிறுக மாற்றம்.

ஐந்து வருஷங்கள் முடிவதற்குள் மீண்டும் சென்னைக்கே மாற்றல் வாங்கிக்கொண்டு வந்தவன், இன்று இந்த மாதிரி பெண்டாட்டி யாருக்கு அமைவாள் என்கிற பெருமிதத்தோடு அவளை உள்ளங்கையில் வைத்துத் தாங்கு கிறான். தானும் நிம்மதியாய் வாழ்க்கை நடத்துகிறான்.

எதற்கு இத்தனை விஸ்தாரமாகச் சொல்கிறேன் என்றால், போன அத்தியாயத்தில் சொன்னதுபோல, அது காதல் கல்யாணமாகட்டும், பெரியோர்களால் நிச்சயம் செய்ததாகட்டும், சம்பிரதாயங்களில் நம்பிக்கை உள்ளவ ராகட்டும், 'அ— இதெல்லாம் என்ன அசட்டுபிசட்டென்று அர்த்தமில்லாமல்- For two grown up individuals who want to ive as husband and wife, we don't need any witness. All these ituals are absolutely unnecessary' என்று புருவங்களை நெரித்து, ஒதுக்கி, தாலி கட்டாமல் மேளம் கொட்டாமல்



ரிஜிஸ்ட்ரார் அலுவலகத்தில் கையெழுத்துக்கூட போடாமல், தனி அறையில் ஒருவர் கையை மற்றவர் பற் தங்கள் இல்லறத்தைத் துவங்குபவர் ஆகட்டும்— யாரா இருந்தாலும் சரி, சம்பந்தப்பட்ட அந்த இருவரி ஒத்துழைப்பு, அனுசரணை, விட்டுக்கொடுத்தல், பொறுமை இவை மட்டுமே அந்த தாம்பத்தியத்தை வெற்றியடைய செய்யுமே ஒழிய, அவர்கள் எந்த வழியில் இணைந் இல்வாழ்க்கையைத் தொடங்கினார்கள் என்பது முக்கி மல்ல என்பதை வலியுறுத்தத்தான்.

# 32

எந்த ஒரு உறவையும் இனிக்கச் செய்வதற்கு அடிப்படைத் தேவைகள் புரிந்துகொள்ளுதல், அனுசரணை, பொறுமை, விட்டுக்கொடுத்தல்— என்றாலும், கணவன் மனைவி விஷயத்தில் இந்த நான்கும் மிகமிக அத்யாவசிய மாகின்றன என்றே நான் நம்புகிறேன்.

நிச்சயமாய் இந்தக் குணங்கள் கழுத்தில் தாலி ஏறின கணமே, கைகளில் மோதிரங்கள் போடப்பட்ட நிமிஷமே சம்பந்தப்பட்ட நபர்களிடம் குடிகொண்டுவிடாதுதான்...

திருமணமான கையோடு, இவை ஆகாசத்திலிருந்து மடியில் தொப்பென்று விழுவதும் இல்லை, கடைகளில் ரூபாய்க்கு இத்தனை என்று விற்கப்படும் சமாச்சாரங்களும் இல்லை...

சிவப்பாக, கறுப்பாக, மாநிறமாக பிறப்பிலேயே அமைவது போல சிலருக்கு வேண்டுமானால், (தயவுசெய்து சிலருக்கு என்பதைப் பெரிய எழுத்துக்களில் போட்டிருப் பதைக் கவனிக்கவும்) இயற்கையிலேயே மற்றவரிடம் அன்பு செலுத்துவதும், பரிவாகப் பேசுவதும், இதமாக நடப்பதும், சுபாவமாக இருக்கலாம்; ஆனால் பெரும்பான்மையோரிடம் இந்த இயல்பு ரொம்பவும் குறைவு என்பது உண்மை.

அப்புறம்?

சுய அலசல் மூலம் விழிப்புணர்வு பெற்று, விடாமல் வளர்த்துக்கொள்ளவேண்டிய வழியைத் தவிர வேறு ஏதும் இல்லை என்கிறார்கள் நிபுணர்கள்.

"நீங்கள் சொல்வதுபோல கண்மூடித் திறக்கும் நாழிகையில் இந்தக் குணங்களுக்கு நம்முள் இடம் கொடுக்க



வேண்டும் என்று எதிர்பார்ப்பது பேராசைதான்— ஒப்புக் கொள்கிறேன்; ஆனால் திருமணமாகி ஓராண்டு பூர்த்தி ஆகியும் இன்னும் எங்கள் நடுவில் பூரண அன் யோன்யம் பிறக்கவில்லையே..." என்று ஒருமுறை என்னிடம் சுஜாவும், மதுகரும் குறைப்பட்டுக்கொண்டதும், அவர் களுக்கு நான் கூறின சமாதானமும் இப்போது என்னுள் எட்டிப்பார்க்கின்றன.

மணவாழ்க்கையில் ஈடுபட்ட உடனே, 'ரூ மந்திரக்காளி' என்று இவனை அவளும், அவளை இவனும் முழுமையாகப் புரிந்து செயல்படுவார்கள் என்ற எதிர் பார்ப்பு எத்தனை அதீதமானதோ, கிட்டத்தட்ட அந்த அளவுதான் ஒரு வருஷத்தை ஒன்றாகக் கழித்துவிட்ட காரணத்தாலேயே அற்புதமான தாம்பத்தியம் கிட்டவில்லை என்று ஏங்குவதும்.

எழுத்தாளர் திருமதி உஷா சுப்பிரமணியம் ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில் 'திருமணமாகிப் பத்து வருஷங்கள் கழிந்து என் கணவரைப் புரிந்துகொண்ட பிறகுதான் நான் காதலிக்கவே ஆரம்பித்தேன்' என்று கூறியிருப்பதில் எனக்கு முழு உடன்பாடு.

இது ஓரளவுக்கு என் அனுபவமும் என்பதோடு, இன்றைக்கு மிகமிக நிறைவாக, ஒருவித சினேக பாவத் துடன் தாம்பத்தியம் நடத்தும் பலரின் ஆமோதிப்பையும் பெறும் என்பதில் சந்தேகமே இல்லை...

என் அனுபவம் என்ன என்பதைப்பற்றி இங்கே கொஞ்சம் எழுதப்போகிறேன்.

திருமணமானபோது என் கணவர் போபாலில் இருந்தார். தனிக்குடித்தனம்— சமைக்க, குடும்பத்தைச் சரிவர நடத்தத் தெரியாத நிலை.

மஹா ஆர்வத்துடன் சின்னச்சின்ன விஷயங்களிலும் கவனத்தைச் செலுத்தி, எல்லோரிடமும் 'கெட்டிக்காரி' என்று பேர் வாங்கப் பாடுபட்ட நாட்கள் அவை.

மூன்று வருஷங்கள் அப்படி...

பின், சென்னையில்...

அமெரிக்கன் வங்கி ஒன்றில் வேலைக்குச் சேர்ந்ததும், பலப்பல புது அனுபவங்களால் பாதிக்கப்பட்டு எழுத்தாள ராக அறிமுகம் ஆனதும் அப்போதுதான்.

காலையில் ஆறுக்கு எழுந்தால்— வீட்டு நிர்வாக மேற்பார்வை, போன் கால்ஸ், பாங்க் வேலை, மாலையில் கணவரோடு செல்லும் சினிமாக்கள், விருந்துகள் என்று வரிசையாய் ஆக்ரமிக்கக் காத்திருக்கும் சம்பவங்களால் பொழுதுபோவது தெரியாது.

இதனூடே— யார்யாரோ நம் எழுத்துக்களைப் பாராட்டும்போது, என் கணவர் மட்டும் அவற்றைத் தனி ஈடுபாட்டுடன் படிக்காததோடு, புகழ்ந்தும் ஒரு வார்த்தை சொல்லமாட்டேன் என்கிறாரே என்கிற வருத்தம் அவ்வப்போது தலைகாட்டும்.

உண்மையைச் சொல்லவேண்டுமென்றால், 'நம் அருமை இவருக்குத் தெரியவில்லை' என்ற ஏக்கமும் குட்டியாக ஜனித்தது உண்டுதான்.

இதற்காக நாங்கள் ஒருவரையொருவர் நேசிக்காமல் இருந்தோம்; இல்லை, அன்றாடம் வாக்குவாதம் செய்து கொண்டிருந்தோம் என்று நிச்சயமாக அர்த்தமில்லை.

இந்தத் தருணத்தில்தான் என் கணவர், ஹெவி எலக்ட்ரிகல் நிறுவனத்தில் ரீஜனல் மானேஜர் வேலை பார்த்து வந்ததை ராஜினாமா செய்துவிட்டு, விழுப்புரத்தில் உள்ள சொந்தத் தொழிற்சாலை நிர்வாகப் பொறுப்பை



ஏற்க, ராமன் இருக்கும் இடமே சீதைக்கு அயோத்தி என்று தெரிந்தவர்களிடம் டயலாக் பேசிவிட்டு, நானும் வேலையைத் துறந்து விழுப்புரத்துக்குச் சென்றேன்.

விழுப்புரம்—விழிப்பைத் தந்த புரம்— இந்தக் கட்டுரை யின் துவக்கத்தில்கூட இதைக் குறிப்பிட்டுள்ளதாக நினைவு.

வாஸ்தவம்தான்.

என்னைப் பொறுத்தவரை சாதாரண மனுஷியாக இருந்தவளுக்குள் சுய அலசலின் பிரக்ஞையை உண்டாக்கி, நான் பேசும், சிந்திக்கும், செய்யும் அத்தனை காரியங்களைப் பற்றின விழிப்புணர்வை உண்டாக்கியது விழுப்புர வாழ்க்கைதான்.

கிட்டத்தட்ட ஐந்து ஏக்கரா பரப்பில் அமைந்த தொழிற்சாலையிலேயே சின்னதாய் வீடு. சுற்றிலும் வயக்காடு. கிராம வாசனை, நீலவானம். இதுநாள் வரை பார்த்திராத சுதந்திர ஜீவராசிகள். மூன்றாம் நபர் குறுக்கிடு இல்லாமல் என் கணவரும் நானும் மட்டும். முக்கியமாய்— ஆக்கபூர்வமாக சிந்திக்க, சுய அலசல் செய்ய அமைதியான பொழுது.

'இத்தனையும் அமைந்ததால்தானே சுய அலசல் உங்களுக்கு சாத்தியமாயிற்று? எங்களுக்கும் அப்படியொரு சூழ்நிலையைக் கொடுங்கள், அற்புதங்கள் செய்து காட்டுகிறோம்' என்று அவசரப்பட்டு யாரும் விரலை நீட்டிக் குற்றம்சாட்ட வேண்டாம், ப்ளீஸ்...

நின்று நிதானித்து எதையும் சிந்திக்க அவகாசம் இல்லாமல் இருந்த நிலை மாறி— நாங்கள் இருவர் மட்டும் நாங்கள்— நாங்களாக வாழ ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது தான் இதில் கவனிக்கப்பட வேண்டிய விஷயம்.

என்னைப் பொறுத்தவரை- It was a true metamorphosis.

சுய அலசல் வளரவளர, இத்தனை வருஷங்களாக நான் பார்க்கத் தவறிய கோணங்கள் புரிபடலாயின.

மாதிரிக்கு ஒன்று.

— ஓரோர் கணவன்மார்போல சந்திரா (என் கணவர்) என் எழுத்துக்களைப் பூரணமாகப் படிப்பதில்லை, பாராட்டுவதில்லை என்று குறைப்படுகிறேனே, அவர் விரும்பி நடத்தும் தொழிற்சாலையின் அன்றாட நட வடிக்கைகளில் எத்தனை தூரம் என்னை ஈடுபடுத்திக் கொள்கிறேன், லேபர் ப்ராப்ளத்தையும் அரசியலையும் எந்த அளவுக்கு சுவாரஸ்யத்தோடு அவரோடு அலசுகிறேன்? எனக்கு அவற்றில் பெரிசாக ஈடுபாடு இல்லாத மாதிரி, அவருக்கும் கதைகளில் இல்லை. விஷயம் அதுதானே? ஒன்றை எதிர்பார்க்கும் நான், அதைத் திருப்பிக் கொடுக்கிறேனா என்று ஏன் இதுவரை சிந்திக்கவில்லை? நான் எழுதும் கட்டுரை, காணும் பேட்டி அனைத்திலும் உற்சாகமாகப் பங்கு கொண்டவர், கதைகளைப் படித்து விமர்சிக்காததற்குக் காரணம், அவருக்கு அந்தப் பிரிவில் ரசனை இல்லை என்பதால்தானே தவிரவும், என் மேல் அன்போ, கரிசனமோ, மரியாதையோ குறைந்ததால் அல்ல என்று நான் ஏன் உணரவில்லை? எத்தனையோ முறைகள் அவர் இதைப் பொறுமையாக விளக்க முயன்றும் காதில் வாங்காமல் பிடிவாதம் பிடித்தது என் தவறுதானே?

இந்த ஞானோதயம் பிறந்து, வேண்டாத குறை காணுவது மறைந்த பிறகு— என் கணவரை நான் வெகுவாக மனசால் நெருங்கியது நிஜம்.

இப்படி அவரிடமும் அவ்வப்போது மாற்றங்கள்...

மொத்தத்தில், விழுப்புரத்தில் வாழத் தொடங்கி இரண்டு வருஷங்கள் முழுசாய் போவதற்குள், நம்மை நாமே



உணரவேண்டும் என்கிற விழிப்புணர்வைப் பெற்றதில் இருவர் இடையிலும் புதுசாய் காதல், நட்பு, அன்யோன்யம் நாளுக்கு நாள் வளரவே செய்தது.

We learnt to accept each other with their plus and minus points.

குறைநிறைகளுடன் ஒருவரையொருவர் ஏற்றுக் கொள்ளத் துணிந்த பக்குவத்தைத்தான் திருமதி உஷா சுப்பிரமணியமும் தன் பதிலில் கூறியிருக்கிறார் என்று நம்புகிறேன்.

புரிந்துகொள்ளுதல்— பொறுமை— விட்டுக் கொடுத்தல்— அனுசரணை— இவற்றின் துணையோடு, தெளிவாகச் சிந்திக்க, செயலாற்றப் பழகிவிட்டால், இயலாதது ஏதும் இல்லை.

இது சத்தியமான கூற்று.

# 33

'இயந்திர கதியில் மக்கள் வாழக் கற்றுக்கொண்டு விட்ட இந்த நாட்களில், சூழ்நிலையும், சரியாகத் தொடர்பு கொள்ளாமையும், அவகாசமின்மையுமே ஒருவரை ஒருவர் தெளிவாகப் புரிந்துகொள்ளவிடாமல் செய்து, உறவுகளைக் கசக்க வைக்கின்றன' என்று ஒரு சமயம் எதிலோ படித்தேன்.

உண்மை.

இன்றைக்குப் பல குடும்பங்களில் பெற்றோர்— குழந்தைகள்; சகோதரர் சகோதரிகள்; நண்பர்கள் இடையில் சுமுகமான பிணைப்பு இல்லாமைக்கு மேற்சொன்ன காரணங்களே அஸ்திவாரங்கள் ஆகின்றன என்றாலும், கணவன்— மனைவி உறவில் இவை சரியானபடி அடக்கி வைக்கப்படாவிட்டால் ஆணிவேரான தாம்பத்தியத்தைத் துளை போட்டுத் துளைத்து அந்தக் குடும்பத்தையே ஒட்டுமொத்தமாய் துவம்சம் பண்ணிவிடும். நிச்சயம்.

இதைத் தெளிவாக விளக்க மீனா ஸ்ரீதரனின் வாழ்க்கையை விளக்குகிறேன்.

மீனா நல்ல பாடகி. கடவுள் பக்தி அதிகம். திருமணத்திற்கு முன்பே பஜனைக் குழு ஒன்றோடு ஊர்ஊராகச் சென்று பாடிப் பழக்கம்.

இவளைக் கைப்பிடித்த ஸ்ரீதரன் மெடிகல் ரெப்ரஸன்டேடிவ். காடாறு மாசம், நாடாறு மாசம் கதைதான். பத்து நாட்கள் வீட்டில் இருந்தால், இருபது நாட்கள் பையுடன் சுற்றிக்கொண்டிருப்பான்.

பூர்வாசிரமத்தை நன்கு அறிந்து, பெரியவர்களின் ஆசியுடன் மணவாழ்க்கையை மேற்கொண்டாலும், வீட்டில்



தங்கிப் பொறுப்பாகக் குடித்தனம் பண்ண அவளுக்கோ, கிடைக்கும் அவகாசத்தைப் பொறுமையுடன் மனைவியுடன் செலவழிக்க அவனுக்கோ மனம் இல்லாமல் போனதில் — ரொம்ப சீக்கிரமே இருவர் நடுவிலும் கசமுசா...

இரண்டு குழந்தைகள் வேறு அடுத்தடுத்து பிறந்து பொறுப்பின் சுமையை அதிகமாக்க, பிரச்சினை என்ன என்று ஒன்றாய் உட்கார்ந்து பேச அவர்களுக்கு நேரமும், பொறுமையும், அக்கறையும் இல்லாது போக... விளைவு? விரிசல் பிளவானது...

'நான் பாரதி கண்ட புதுமைப்பெண்— உன் மிரட்டல்களுக்கு நான் அஞ்சமாட்டேன்' என்று அவளும், 'சரிதான் போடி, நான் ஆண்பிள்ளை, உன்னை விட்டால் வேறு நாதியில்லை என்று கொக்கரிக்காதே' என்று அவனும் உறும, குழந்தைகளின் எதிர்காலம் பற்றின பிரக்ஞை துளி இல்லாமல் இருவரும் பிரிந்தார்கள்.

இன்று, ஸ்ரீதரன் இன்னொருத்தியை மணந்துவிட்டான்; மீனா பஜனைக் குழுவுடன் சிங்கப்பூர், மலேசியா என்று போய்க்கொண்டிருக்கிறாள். .

குழந்தைகள் இரண்டும், வயசான பாட்டி தாத்தாவுடன் திருச்சியில் ஏனோதானோ என்று வளர்கின்றன...

மீனா, ஸ்ரீதரன் தாம்பத்தியத்தின் சீரழிவைப்பற்றி எழுதுகையில், சில வருஷங்களுக்கு முன் இங்கிலாந்தில் நடந்த ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது.

ஊர் மெச்சும் சமூக சேவகியும், புகழ் பெற்ற தொழிலதிபரும், கண்டதும் காதல் என்று ஒரு சந்திப்பில் மயங்கி மணந்தார்கள். அவரவர், அவரவர் வழியில் சென்றும், வருஷம் இரண்டு போவதற்குள் சலிப்பு, கசப்பு—

வழி, இருக்கவே இருக்கிறது விவாகரத்து.

விண்ணப்பித்தார்கள்.

அவர்கள் அதிர்ஷ்டம், கேஸ் அருமையான மண வாழ்க்கை நடத்தும் ஒரு மனிதாபிமானமுள்ள நீதிபதியிடம் வந்தது.

பொறுமையாய் இருவரின் வாதங்களையும் கேட்டார்; யோசித்தார்.

நிதானமாகத் தீர்ப்பை வாசித்தார்.

"விவாகரத்தை வழங்குமுன் இவர்கள் இருவரையும் ஒரே அறையில் மூன்று நாட்கள் இரவு, பகல் தொடர்ந்து பூட்டி வைக்க உத்தரவிடுகிறேன்..."

என்ன தீர்ப்பு இது, புது தினுசாய்! எலியும், பூனையுமாய் இருப்பவர்களை ஒரே அறையில் வைத்துப் பூட்டுவதாவது! கேட்டவர்கள் திகைத்தார்கள்.

ஆனால்— மூன்று நாட்கள் ஒன்றாக ஒரே அறையில் இருந்துவிட்டு வெளியில் வந்த தம்பதி முகங்களில் ஏக பூரிப்பு...

"நாங்கள் இரண்டு வருஷங்கள் ஒன்றாக வாழ்ந்திருந் தாலும், அவகாசமின்மையாலும், முயற்சிக்காததாலும் ஒருவரையொருவர் புரிந்துகொள்ளவே இல்லை. இந்த மூன்று நாட்களும் மனம் விட்டுப் பேசி, கூடவே இருந்ததில் இதுவரை பார்த்திராத கோணங்களில் ஒருவரை மற்றவர் கண்டு, புதுசு புதுசாய் பல விஷயங்களை உணர்ந்திருப் பதால்— மீண்டும் சேர்ந்து வாழ ஆசைப்படுகிறோம்..."

எப்படி?

ஆச்சர்யமாக இல்லை?

வேண்டாத சண்டைகளுக்கும், கோபங்களுக்கும், அனாவசிய தர்க்கங்களுக்கும், புகார்களுக்கும் காரணம்



நம்முடைய தெரியாத்தனமும், முயன்று பார்க்காத குணமும் தான்— என்றால் திகைப்பாக இல்லை?

புரிந்துகொண்டு தெளிந்துவிட்டால் பிரச்சினைகளே இல்லை...

இதற்கு நேரம் வெகு முக்கியம்— கூடவே, செய்ய வேண்டியது குறித்த விழிப்புணர்வு— அப்புறம், நிறைய முயற்சி.

இதெல்லாம் தூங்கி எழுந்து டக்கென்று ஏறி உட் கார்ந்துகொள்ளும் குணங்கள் இல்லை. அதனால்தான் திருமணமான சில நாட்களில், ஏன் முதல் சில வருஷங் களில் கூட தாம்பத்தியம் முழுமையாக அமையவில்லையே என்று பெருமூச்சு விட வேண்டாம் என்று முன் அத்தியா யத்தில் குறிப்பிட்டேன்.

ஆங்கிலத்தில் Seven year itch என்று ஒரு வசனம் சொல்லுவார்கள்.

திருமணமான சில ஆண்டுகளில் மணவாழ்க்கை போரடித்து, நேர்மை தவறி வாழ உந்தும் சபலம் பலரிட மும் — அது ஆணாகட்டும்— பெண்ணாகட்டும்— தலை தூக்கும் என்பதைத்தான் விளையாட்டாக 'ஏழாவது வருஷ நமைச்சல்' என்று குறிப்பிடுகிறார்கள்.

இந்தச் சபலத்துக்கு, மற்றவர்களுடன் தன்னை, தன் வாழ்க்கைத்துணையை ஒப்பிட்டு ஏங்குவது ஒரு முக்கிய தூண்டுகோலாகிறது என்பது நிபுணர்களின் வாதம்.

நீங்களே பார்த்து, கேட்டு அனுபவித்திருக்கலாம்.

— என்ன இருந்தாலும் உன் தங்கை நீலா மாதிரி உனக்கு உடம்பு வாகு இல்லேதான்...

— நான்கு குழந்தைகளைப் பெற்று தளர்ந்துவிட்ட மனைவியிடம் கணவன் கூறும் புகார்.

— என் ஃப்ரெண்ட் சச்சுவோட புருஷன் ஆனாலும் இல்லாடி தெரியுமா? கல்யாணம் ஆகி வருஷம் மூணு ஆகியும் ஒருநாள்கூட ராத்திரி அக்கடான்னு விடற தில்லையாம். ஹூம். அவ கொடுத்து வெச்சவ...

— வேலை நிமித்தமாய் வெளியூர் சென்று களைத்து வரும் புருஷனை சீண்டும் மனைவி இவள்.

— உனக்குத் துப்பு பத்தாதுதான். சகுந்தலாவப் பாரு... வீட்டை எப்படி பளபளனு வெச்சிருக்கா! வெங்காய சாம்பார் வெச்சா வாசனை மூக்கைத் தள்ளிக்கிட்டு போகுது... நீயும் செய்யறியே, தத்... காசுதான் தண்டம்...

— உங்களுக்கு கழுத்த நீட்டி என்ன பிரயோஜனம்! பேருதான் பெரிசா ஆ.பீ.ஸர்... என்ன ஆதாயம்? ஒரு கலர் டி.வி. உண்டா? ஒரு ஸ்டீரியோ உண்டா? ஒரு மண்ணாங்கட்டியும் இல்லே... தியாகராஜனும், மணிவண்ணனும் உங்ககூடத்தான் வேலைபாக் கறாங்க... ஆனா வீடு கொள்ளாம சாமான்... எல்லாம் என் தலைவிதி...

அப்பப்பா...

இப்படி எத்தனை பெருமூச்சுக்கள்— ஏக்கங்கள், ஆத்தாமை வெடிப்புகள்...

இந்த ரீதியில் சதாசர்வகாலம் பொருமி, முகத்தைத் தூக்கிவைத்துக்கொள்வதனாலேயே, தங்கள் வாழ்க்கைத் துணை தங்களை விட்டு விலகிப்போகிறார்கள் என்பதை ஏன் இவர்கள் உணரமாட்டேன் என்கிறார்கள்?

யாரும் அத்தனையும் துறந்த ஞானியாக இருக்க வேண்டாம்; ஆனால் இது நமக்கு அவசியம், அனாவசியம், திட்டமிட்டால் முடியும், இல்லை நிச்சயமாய் அகலக்



கால்— என்று ஆற அமர யோசித்து ப்ராக்டிகலாய் நடந்துகொள்ளப் பழகவேண்டாமா?

வாழ்க்கையை அமைதியாக, நிம்மதியாகக் கழிக்க விரும்புவதுதானே புத்திசாலித்தனம்?

அப்புறம் புத்தியும், நல்லதுகெட்டதை ஆராயும் தன்மையும் இருந்தென்ன, அழிந்தென்ன?

ஒன்றையும் காதில் வாங்காமல் இது, என் வாழ்க்கை— என் தாம்பத்தியம்— அது எக்கேடு கெட்டால் யாருக் கென்ன— என்று அனாவசியமாக முகத்தைத் திருப்பிக் கொள்பவர்களைச் சந்திக்கையில்— எனக்கு ஏனோ தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக்கொள்ளும் யானையின் நினைவுதான் வருகிறது.

## 34

சில வருஷங்களுக்கு முன் ரீடர்ஸ் டைஜஸ்டில் ஒரு க்விஸ் வெளியாகியிருந்தது. "உங்கள் கணவரை நீங்கள் எந்த அளவுக்குக் காதலிக்கிறீர்கள்?" என்பது தலைப்பு.

என் அக்காவும் நானும் இந்தக் க்விஸ்ஸை கையில் வைத்து பதிலளித்துக்கொண்டிருக்கையில் அந்தப் பக்கமாய் வந்த அம்மா "என்னது அது?" என்று குழந்தைத்தனமான ஆர்வத்துடன் வினவ, "உட்கார் அம்மா, உனக்கும் மார்க் போட்டுப் பார்க்கலாம்" என்று அவர் கையைப் பற்றி அருகில் அமரச் செய்து கேள்விகளைக் கேட்க முற்பட்டோம்.

முதல் நான்கு கேள்விகளுக்குச் சிரத்தையுடன் பதில் அளித்தவரிடம், "உங்கள் கணவரிடம் ஒரு நாளைக்கு எத்தனை முறைகள் 'உங்களை நான் நேசிக்கிறேன்' என்று கூறுகிறீர்கள்?" என்ற ஐந்தாவதைக் கேட்டவுடன், அம்மாவின் முகம் வெட்கத்தில் சிவந்துபோயிற்று.

"ச்சீ... என்ன கேள்வி இது! இப்படிக் கூடவா தத்துபித்தென்று தாலி கட்டினவரிடம் பேசுவது?"

அம்மாவின் நாணத்தையும், கூச்சம் கலந்த பேச்சையும் கேட்டு வெகுவான பெருமை கலந்த சந்தோஷத்தோடு நாங்கள் அன்று சிரித்தது இன்றும் நன்றாக நினைவிருக்கிறது.

அது அம்மா.

பதிமூன்றாம் வயதில் அப்பாவுக்கு வாழ்க்கைப்பட்டு உலகமே அவராக வாழ்ந்து, கல்லானாலும் கணவர், புல்லானாலும் புருஷர் என்று மனப்பூர்வமாக நம்பி, அவரால் லவலேசமும் ஏமாற்றப்படாமல் பாதுகாக்கப்பட்டு, அரவணைக்கப்பட்டு, காதலிக்கப்பட்டு உயர்வான



தாம்பத்தியத்தில் பங்கெடுத்த அம்மாவால் வேறு எப்படியும் அந்தக் கேள்விக்கு பதில் கூறியிருக்க முடியாதுதான்.

கணவரைப் பேர் சொல்லி அழைப்பது தவறு, 'உங்களை நான் நேசிக்கிறேன்' என்று வாய் வார்த்தையாய் வெளிப்படுத்துவது அனாவசியம், அவர் பார்வை புரிந்து செயலாற்றுவது தன் கடமை, சந்தோஷம் என்று வாழ்ந்த, வாழும், முந்தைய தலைமுறையினரைச் சேர்ந்தவர் அம்மா.

அவர் காலத்துக்கு அத்தனையும் சரி.

ஆனால் இன்று!

— வேலைபார்க்கும், லட்சணமான, அடக்கமான பெண் இருந்தால் சொல்லுங்களேன்? என் பிள்ளைக்குக் கல்யாணம் பண்ணலாம் என்றிருக்கிறேன்...

— பெண் வேலைக்குச் செல்வதோடு நான்கு பேர்களுடன் கலகலவென்று பேசிப் பழகுபவளாக இருக்க வேண்டும். எனக்கு சிநேகிதர்கள் அதிகம். எல்லோரையும் 'இம்ப்ரெஸ்' பண்ணுபவளாய் என் மனைவி அமைய ஆசை...

— பார்த்துக்கொண்டிருக்கும் வேலையை விட்டுவிடச் சொன்னால் நான் ரெடி. ஆனால் என்னை வெறும் போகப் பொருளாக மட்டும் நினைக்காமல் சுக, துக்கங்களில் சம பொறுப்பெடுக்க விரும்பும் நபராக ஏற்று, காதலுடன், மரியாதை, சுதந்திரத்தையும் மனப்பூர்வமாகத் தருபவராக என்னை மணக்கப் போகிறவர் இருக்கவேண்டும்.

இது இன்றைய பெரும்பான்மை நிலை.

ஆக, பழைய அளவுகோலையே வைத்து இன்றைக்குப் பல விஷயங்களையும் நாம் அளக்க, மதிப்பிட, விமர்சிக்க முனைவது தவிர்க்கவேண்டிய ஒரு பழக்கம் என்றே நான் நம்புகிறேன்.

பெயர் சொல்லி அழைப்பது, சம்பந்தப்பட்ட அந்தக் கணவன் மனைவிக்கு சம்மதம் என்றால், பிடித்திருக்கிறது என்றால்— தாராளமாகக் கூப்பிடட்டுமே! இதில் மற்றவர்கள் முகம் சுளிக்க என்ன இருக்கிறது?

கணவருடன் எல்லாவிதத்திலும் ஐக்கியமாகி, அவன் சந்தோஷமே தன் மகிழ்ச்சி என்று ஆரோக்கியமாக தாம்பத்தியம் நடத்தும் பெண்மணி, சிநேக பாவத்துடன் அவனைப் பெயர் சொல்லிக் கூப்பிடுவது எந்த விதத்தில் தவறான செய்கையாகும்?

இது மரியாதைக் குறைச்சல் என்று மூன்றாம் நபர் முணுமுணுப்பதும் எப்படி நியாயமாகும்?

இப்படி— சின்னச் சின்னதாய் இன்னும் எத்தனையோ விஷயங்கள்.

காலம் மாறிவிட்டது. இதை உணர்ந்து ஓரளவுக்கு நம்மையும் மாற்றிக்கொள்வதுதான் விவேகம்.

இந்தக் கருத்தில் உடன்பாடு இல்லாதவர்கள் என்மீது கோபப்படுவதைத் தவிர்த்து, தனித்து உட்கார்ந்து நிறைய யோசித்தால் பலன் அவர்களுக்குத்தான்; எனக்கொன்றுமில்லை.

காலம் இருக்கும் இருப்பில், பொழுது எப்படி ஓடுகிறது என்று புரியும் முன்னர் ஜெட் வேகத்தில் நாட்கள் பறந்து, புருஷனும் மனைவியும் மனம் விட்டுப் பேசி, ஒருத்தரை ஒருத்தர் சரியாகப் புரிந்துகொள்ளக்கூட அவகாசமில்லாத இந்த நாட்களில்— நான் உன்னை நேசிக்கிறேன்— என்று கூறவும், ஐ'ம் ஸாரி என்று சொல்லவும், கணவனும் மனைவியும் தயங்கவே கூடாது என்பதை ஒரு கொள்கையாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது என் அவா.

எப்பேர்ப்பட்ட மனஸ்தாபங்களையும், வாக்குவாதங்களையும் நொடிப்பொழுதில் சரிபண்ணும் மஹா வல்லமை படைத்தவை இந்த ஐ'ம் ஸாரியும், ஐ லவ் யூ—வும்.



தயவு செய்து நம்புங்கள்.

இரண்டு கை கொட்டினால்தான் சப்தம்.

சின்ன தர்க்கம் சண்டையாக மூளுமுன் ஐ'ம் ஸாரி என்றோ, நான் புரியாமல் பேசிவிட்டேன், மன்னித்துவிடு என்றோ, கணவன் மனைவியில் விவேகம் கூடுதலாய் உள்ளவர், சிரமப்பட்டாவது கூறினால்— நூற்றுக்கு எழுபத்தைந்து தரமாவது சண்டை புஸ்வாணமாகும். இது நிஜம்.

இரண்டு, மூன்று தரம் தம்பதியில் ஒருவர் விழிப்புணர்வோடு இப்படிச் செயல்பட்டால், அடுத்தமுறை மற்றவர் தானாக விட்டுக்கொடுக்க முன்வருவார்—இதுவும் நிஜம்.

ஐ லவ் யூ— உன்னை நான் நேசிக்கிறேன்...

ப்பா! உலகத்திலேயே மிகவும் சக்தி படைத்த வார்த்தைகள் இவை என்பதை நாம் ஏன் உணர மறுக்கிறோம்?

விகல்பமில்லாமல், பாலுணர்வு சம்பந்தப்படாமல் எல்லா ஜீவராசிகளிடமும் உண்மையான அன்பைத் தந்து, பெறுவது சாத்தியம் என்பதைத்தான் நம் பெரியவர்கள் அன்பே சிவம், அன்பினால் சாதிக்க இயலாதது ஏதும் இல்லை என்று கூறியிருக்கிறார்களோ?

இதையேதான் மதர் தெரிஸாவும் 'Love everybody as much as you can' என்று அடிக்கடி கூறுகிறாரோ?

அப்படியிருக்க, புனிதமான தாம்பத்தியத்தை மேற்கொண்டவர்கள், ஈருடல் ஒருயிராக ஒன்றிப்போனவர்கள், வாழ்வின் ஏற்றம், தாழ்வு, கஷ்டம், சந்தோஷம், அத்தனையிலும் சமமாகப் பங்கெடுப்போம் என்று பிரதிக்ஞை எடுத்தவர் நடுவில் மட்டும் ஐ லவ் யூ என்று சொல்லத் தயக்கம் என்ன, வெட்கம் என்ன, இது மரியாதைதானா என்கிற பயம்தான் என்ன?

அதுவும் ஆண்களில்— அ, நான் புருஷன், ஒரு பெண்ணிடம் 'ஸாரி' என்று சொல்வது அவமானம் அல்லவா?—என்று நினைக்கும் பலரை எனக்குத் தெரியும்.

பெற்றோர், உற்றாரை விட்டுப் பிரிந்து, தாலி கட்டினவரே சகலமும் என்று நம்பி வரும் பெண்ணிடம்— அவள் சமைத்து சாப்பிடலாம், துணி துவைத்து உடுத்தலாம், நானாவித வேலைகள் செய்வதையும் ஏற்றுக்கொள்ளலாம், ஏன் அவள் மூலம் உடல் இன்பத்தை அனுபவிக்கலாம் என்னும்போது, இத்தனையிலும் இல்லாத தயக்க, அவமான உணர்வு, அவளிடம் அவசியத்தின் காரணமாய் எப்போதாவது 'ஸாரி' என்று சொல்வதில் மட்டும் வந்து புகுந்துகொள்வதை எந்த வகையில் நியாயப்படுத்த முடியும்?

நெஞ்சில் கை வைத்து சம்பந்தப்பட்டவர் பதிலளிக்க வேண்டும்.

Hen pecked - பெண்டாட்டிதாஸனாகத் தனித்தன்மையின்றி வாழும் ஆண் வாஸ்தவத்தில் எவ்வளவு வெறுக்கத்தக்கவனோ, அத்தனை, நான்— ஆண்— மனைவி — என்பவள்— எனக்கு அடங்கினவள் என்கிற ஈகோ— அர்த்தமில்லாத திமிரோடு இருப்பவனும் என்பது என் தாழ்மையான அபிப்ராயம்.

ஸாரி— என்கிற வார்த்தையை, என்னை மன்னித்துவிடு என்ற பொருளில்தான் கூறவேண்டும் என்பதில்லை. நடந்தது நடந்துவிட்டது, எல்லாவற்றையும் மறந்து கசப்பின்றி இருக்கலாம் என்று நீளமாக விவேகமாகப் பேச்சு பேசுவதைத் தவிர்த்து, ஒற்றை வார்த்தையில் மனசைப் புரியவைப்பதுதான் இந்த 'ஸாரி'.

கணவன் மனைவி உறவு ஆரோக்கியமாக இருக்க உதவும் 'ஸாரி' என்கிற பதத்தை தக்க தருணத்தில் மனப்பூர்வமாக சொல்லிக் கற்றதன் மூலம், தங்கள் வாழ்க்கையை சதா தென்றல் வீசும் பூஞ்சோலையாக மாற்றிக்கொண்டவர்கள் ஏராளம். மீண்டும் கூறுகிறேன், புரிந்து செயல்பட்டால், ஆதாயம் அவரவருக்குத்தான்.

# 35

**நா**ன்கு அத்தியாயங்களுக்கு முன் 'காதல் கல்யாணம், பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு நடக்கும் திருமணம்— இந்த இரண்டில் எது அதிகம் தோல்வி அடைகிறது என்று நினைக்கிறீர்கள்?' என்று கேட்ட கேள்விக்கு இப்போது மீண்டும் வருவோம்.

'கட்டாயம் காதல் திருமணங்களில்தான்' என்று பெரும்பான்மை முந்தைய தலைமுறையினரும், 'நோ— நிச்சயம் பெரியவர்கள் நடத்தி வைக்கும் கல்யாணங்களில் தான்' என்று பெரும்பான்மை இளைய தலைமுறையினரும் வாதித்தாலும், அவற்றை ஒரு பக்கமாய் ஒதுக்கிவிட்டு மஞ்சள் கண்ணாடி மாட்டிக்கொள்ளாமல் இரண்டையும் அலசிப்பார்க்கலாம்.

"அந்தக் காலத்தில் ஒழுக்கம் அதிகம். பெரியவர்களுக்கும் அவர்கள் பேச்சுக்கும் மரியாதை கூடுதலாக இருந்தது. தனக்கு எல்லாம் தெரியும் என்று எதிர்த்து வாதாடும் இன்றைய குணம் அன்று இல்லை. பெற்றவர் ஒரு முடிவுக்கு வந்துவிட்டால் 'இவர் எந்த தீர்மானத்தைச் செய்தாலும் அதை நம் நன்மைக்காகவே செய்வார்' என்ற நம்பிக்கை இளையவர்களிடம் அசைக்க முடியாததாக இருந்தது. அவர்களுக்கு அடிபணிந்து போனதில், அந்தக் காலத்தில் தொங்கத்தொங்க தாலிகட்டிக்கொண்டு பல வருஷங்களுக்கு வாழ்ந்த தம்பதி அநேகம். விவாகரத்து என்பதற்கு அர்த்தம்கூடத் தெரியாமல் வாழ்ந்தவர்களை மேல்நாட்டு நாகரிகம் தொற்றிக்கொண்டு, காதல், அது இது என்று பேச வைத்து, இன்று பலரின் மணவாழ்க்கையைச் சீரழிக்கிறது. ஆக, காதல் திருமணங்களில்தான் தோல்வி அதிகம்."

இவர்கள் வாதத்தில் எனக்கு முழு உடன்பாடு இல்லை, நிச்சயமாய்.

அந்தக் காலத்தில் கூட்டுக் குடும்ப உணர்வு, மனிதாபிமானம், கட்டுப்பாடு, பெரியவர்களுக்கு மரியாதை ஆகியவை அதிகமாக இருந்தன என்பதை ஒப்புக்கொள்ளும் அதே சமயத்தில் அந்தக்கால தம்பதிகள் அத்தனை பேரும் ஓஹோ என்று சந்தோஷத்துடன் வாழ்ந்தார்கள் என்று ஒட்டுமொத்தமாய் ஏற்க முடியவில்லை.

பெண்கள் சமையல்கட்டைவிட்டு வெளிவராத காலம் அது.

ஒருத்தியின் உலகம் பின்கட்டாகவும், ஆசாபாசங்கள் புருஷனைச் சுற்றியும் இருப்பதே ஒரு நல்ல குடும்பப் பெண்மணியின் லட்சணங்கள் என்று தெரிந்தோ தெரியாமலோ பெரியவர்கள் வகுத்துவைத்திருந்ததால் மனசில் நினைப்பதை வெளிப்படுத்தக்கூட சுதந்திரம் இல்லாமல் பல பெண்கள் வாழ்ந்ததும், ஆண்கள் தாங்கள் வைத்ததே சட்டமாக வளையவந்ததும் ஊர் அறிந்த விஷயம்.

It was certainly a male dominated society, then.

இதை யாரும் மறுக்க முடியாது.

தோசை சரியாக வார்க்கவில்லை என்பதால், பிள்ளையின் கண் எதிரிலேயே 'இந்தக் கைக்கு அத்தனை வணங்காமுடித்தனம் என்ன?' என்று கேட்டு கோபத்துடன், கொதிக்கும் தோசைக்கல்லில் உள்ளங்கையை மாமியார் தேய்க்க, வலி தாங்காமல் அலறிய மருமகள்...

வீட்டு வேலை அத்தனையும் லொங்கு லொங்கு என்று செய்துவிட்டு களைத்துப்போய், ஊசிப்போன ரசத்தை, பழையதில் விட்டு சாப்பிட உட்காரும் நிமிஷத்திலும், நாத்தனாரும் மாமியாருமாய் சேர்ந்துகொண்டு, 'ஐயோ இப்படித் தின்றால் அடுக்குமா?' என்று ஒப்பாரி வைத்ததனால், சாப்பிடாமல், வயிற்றை நாட்கணக்கில் காயப்போட்ட மாட்டுப்பெண்...



உட்காருவது எழுந்திருப்பது மட்டுமல்லாது, இரவு கணவனுடன் படுப்பதுகூட மாமியார் உத்தரவு இல்லாவிட்டால் நடக்காது என்று வாழ்க்கை நடத்திய மனைவி...

இன்னும் இதுபோன்ற ஓராயிரம் சம்பவங்கள் நடந்தும் அதை எதிர்த்துப் பேசவோ, நடக்கவோ, அஞ்சி அடங்கிப் போன பெண்கள் எக்கச்சக்கம் என்று கூற முடியாவிட்டாலும் நிறையவே இருந்தார்கள் என்பதால்—

சமூகத்துக்கும், பெரியவர்களுக்கும் பயந்து வாழ்ந்தவர்களையெல்லாம் சந்தோஷமாக தாம்பத்தியம் நடத்தியவர்களுடன் சேர்ப்பது சரியான காரியமாகப் படவில்லை.

இந்தக் கால சூழ்நிலை; விவாகரத்து சாத்தியம்; வெளியே சென்றால் என்னால் தனித்து வாழமுடியும், என் படிப்பும் வேலையும் அதற்கு உதவும் என்ற தன்னம்பிக்கை அப்போதும் ஓரளவுக்காவது இருந்திருந்தால் ஒருசில பெண்களாவது 'வேண்டாம் இந்த நரக வாழ்க்கை' என்று கட்டாயம் வெளியேறியிருப்பார்கள்; இன்றைக்கு இந்தக் கட்சிக்காக வரிந்துகட்டிக்கொண்டு வாதாடும் நபர்களின் எண்ணிக்கையும் கணிசமாகக் குறைந்திருக்கும்.

அடுத்து 'தொங்கத்தொங்க தாலி' விஷயத்துக்கு வருவோம்.

அந்த நாட்களில் ஒரு பெண்ணுக்கு சர்வசாதாரணமாய் பத்திலிருந்து பன்னிரண்டுக்குள் திருமணமானது என்பதை யாரும் மறக்கக்கூடாது. அவள் ஐம்பது வருஷங்கள் உயிர் வாழ்ந்தாலும், அது நாற்பது வருஷ தாம்பத்தியத்தைத் தந்து, 'தொங்கத்தொங்க தாலி' பெருமையை வாரி வழங்கியது.

ஆனால் இன்று?

போனவாரம் என் சினேகிதி பவானி என்னைச் சந்தித்தபோது, 'தெரிந்தவர் வீட்டில் இரண்டு பெண்களுக்கு மாப்பிள்ளைகள் தேவை... வயசு கொஞ்சம் அதிகம்தான்... எப்படியாவது உதவ முடிந்தால் தேவலை' என்று குறைப்பட்டுவிட்டு, வயசைச் சொன்னபோது நான் அதிர்ந்தேன்.

நம்புங்கள்— மூத்தவளுக்கு வயசு நாற்பத்தி இரண்டு. சின்னவளுக்கு நாற்பது.

என்ன கொடுமை இது!

வரதட்சணை அரக்கனால் பாதிக்கப்பட்டிருக்கும் இவர்களுக்குத் திருமணம் ஆவது எப்போது? தொங்கத் தொங்க தாலியுடன் வாழ்ந்த பத்தினிப் பட்டம் கிட்டுவதும் தான் எப்போது?

அடுத்து, காதலித்து மணந்தவர் நடுவில் தோல்வி கம்பி என்று தூக்கிவிட்ட காலருடன் நிற்பவர்களை அணுகலாம்...

இவர்களுடைய வாதத்திலும் ஏகப்பட்ட ஓட்டைகள் இருக்கவே செய்கின்றன.

உதாரணத்துக்கு சுதர்ஸனின் அனுபவத்தை எடுத்துக்கொள்ளலாம்.

சுதர்ஸன் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவன். அரசாங்க அலுவலகம் ஒன்றில் டைப்பிஸ்ட். இவனை, இன்னொரு கம்பெனியில் ஸேல்ஸ் அஸிஸ்டெண்டாக இருந்த சித்ராவும், அவளை இவனும் மனதார காதலித்தார்கள்.

காதல், சுமார் ஒன்றரை வருஷங்களுக்குமேல் சினிமா இருட்டிலும், கடற்கரைப் படகு மறைவிலும், போனிலும், துண்டுக் கடிதங்களிலும், வளர்ந்து தழைக்க, 'நாம் ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்துகொண்டுவிட்டோம்— நான் வான், நீ நிலா, நான் மலர், நீ மணம்' — என்று கிளுகிளுப் பேச்சுக்கள் பேசி முடித்த பிறகு வழக்கம்போலப் பெரியவர் களின் மனஸ்தாபத்தை மீறி மணந்தார்கள்.



சரியாக ஒரு மாசம்...

— நீ நல்லவன் மாதிரி வேஷம் போட்டு என்னை மோசம் பண்ணிவிட்டாய்; நீ முன்கோபி; சுயநலவாதி— உன் சுகம்தான் உனக்கு முக்கியம் என்று சித்ரா சீற—

— நீ மட்டும் என்ன? சதா நைஸாகப் பேசி, சிரித்து என்னை மயக்கியதை நிஜம் என்று நம்பி மோசம் போய்விட்டேன். சமைக்கப் பொறுமை இல்லை. அக்கறையாய் புருஷனைக் கவனிக்க விருப்பமில்லை. ஊதாரித்தனமாய் செலவழிக்கவும், எந்நேரமும் குதிரை மாதிரி ஊர் சுற்றவும்தான் உனக்குப் பிடிக்கிறது. நீ எல்லாம் ஒரு நல்ல மனைவியாக எப்படி இருக்க முடியும்? என்று சுதர்ஸன் சாட...

ஒன்றரை வருஷத்துக் காதல் ஒரே மாதத்தில் எப்படி தூள்தூளாக முடியும் என்று சுற்றியிருந்தவர்களுக்கு ஆச்சர்யம், வேதனை...

ஆற அமர யோசித்தால் இந்த மாதிரி கல்யாணங் களின் தோல்விக்கு அடிப்படைக் காரணம் புரியவே செய்யும்.

காதலிக்கும்போது மிஞ்சிப்போனால் ஒருசில மணி நேரங்களே சேர்ந்திருப்பதால், அப்போது மைனஸ் பாயிண்டுகளை அடக்கி, ப்ளஸ் பாயிண்டுகளை மட்டுமே வெளிக்காட்டுவது சுலபமாகிறது. இதை வேஷம் என்று சொல்வது தவறு. காதலிப்பவரை 'இம்ப்ரெஸ்' செய்யத் துடிக்கும் ஆர்வம் இப்படிப் பலவீனங்களை அமுக்கியும் பலங்கள் தலை தூக்கவும் செய்வது பலரிடம் இயற்கையாக அமையும் குணமாகிறது.

போனவாரம் என் சினேகிதி பவானி என்னைச் சந்தித்தபோது, 'தெரிந்தவர் வீட்டில் இரண்டு பெண்களுக்கு மாப்பிள்ளைகள் தேவை... வயசு கொஞ்சம் அதிகம்தான்... எப்படியாவது உதவ முடிந்தால் தேவலை' என்று குறைப்பட்டுவிட்டு, வயசைச் சொன்னபோது நான் அதிர்ந்தேன்.

நம்புங்கள்— மூத்தவளுக்கு வயசு நாற்பத்தி இரண்டு. சின்னவளுக்கு நாற்பது.

என்ன கொடுமை இது!

வரதட்சணை அரக்கனால் பாதிக்கப்பட்டிருக்கும் இவர்களுக்குத் திருமணம் ஆவது எப்போது? தொங்கத் தொங்க தாலியுடன் வாழ்ந்த பத்தினிப் பட்டம் கிட்டுவதும் தான் எப்போது?

அடுத்து, காதலித்து மணந்தவர் நடுவில் தோல்வி கம்பி என்று தூக்கிவிட்ட காலருடன் நிற்பவர்களை அணுகலாம்...

இவர்களுடைய வாதத்திலும் ஏகப்பட்ட ஓட்டைகள் இருக்கவே செய்கின்றன.

உதாரணத்துக்கு சுதர்ஸனின் அனுபவத்தை எடுத்துக்கொள்ளலாம்.

சுதர்ஸன் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவன். அரசாங்க அலுவலகம் ஒன்றில் டைப்பிஸ்ட். இவனை, இன்னொரு கம்பெனியில் ஸேல்ஸ் அஸிஸ்டெண்டாக இருந்த சித்ராவும், அவளை இவனும் மனதார காதலித்தார்கள்.

காதல், சுமார் ஒன்றரை வருஷங்களுக்குமேல் சினிமா இருட்டிலும், கடற்கரைப் படகு மறைவிலும், போனிலும், துண்டுக் கடிதங்களிலும், வளர்ந்து தழைக்க, 'நாம் ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்துகொண்டுவிட்டோம்— நான் வான், நீ நிலா, நான் மலர், நீ மணம்' — என்று கிளுகிளுப் பேச்சுக்கள் பேசி முடித்த பிறகு வழக்கம்போலப் பெரியவர் களின் மனஸ்தாபத்தை மீறி மணந்தார்கள்.



சரியாக ஒரு மாசம்...

— நீ நல்லவன் மாதிரி வேஷம் போட்டு என்னை மோசம் பண்ணிவிட்டாய்; நீ முன்கோபி; சுயநலவாதி— உன் சுகம்தான் உனக்கு முக்கியம் என்று சித்ரா சிற—

— நீ மட்டும் என்ன? சதா நைஸாகப் பேசி, சிரித்து என்னை மயக்கியதை நிஜம் என்று நம்பி மோசம் போய்விட்டேன். சமைக்கப் பொறுமை இல்லை. அக்கறையாய் புருஷனைக் கவனிக்க விருப்பமில்லை. ஊதாரித்தனமாய் செலவழிக்கவும், எந்நேரமும் குதிரை மாதிரி ஊர் சுற்றவும்தான் உனக்குப் பிடிக்கிறது. நீ எல்லாம் ஒரு நல்ல மனைவியாக எப்படி இருக்க முடியும்? என்று சுதர்ஸன் சாட...

ஒன்றரை வருஷத்துக் காதல் ஒரே மாதத்தில் எப்படி தூள்தூளாக முடியும் என்று சுற்றியிருந்தவர்களுக்கு ஆச்சர்யம், வேதனை...

ஆற அமர யோசித்தால் இந்த மாதிரி கல்யாணங் களின் தோல்விக்கு அடிப்படைக் காரணம் புரியவே செய்யும்.

காதலிக்கும்போது மிஞ்சிப்போனால் ஒருசில மணி நேரங்களே சேர்ந்திருப்பதால், அப்போது மைனஸ் பாயிண்டுகளை அடக்கி, ப்ளஸ் பாயிண்டுகளை மட்டுமே வெளிக்காட்டுவது சுலபமாகிறது. இதை வேஷம் என்று சொல்வது தவறு. காதலிப்பவரை 'இம்ப்ரெஸ்' செய்யத் துடிக்கும் ஆர்வம் இப்படிப் பலவீனங்களை அமுக்கியும் பலங்கள் தலை தூக்கவும் செய்வது பலரிடம் இயற்கையாக அமையும் குணமாகிறது.

பத்து வருஷங்களைக் காதலித்தே கழித்தாலும், அப்போது வெளிப்படாத வேண்டாத குணங்கள், ஒருவருடன் மற்றவர் இருபத்தி நாலு மணி நேரத்தையும் சேர்ந்து வாழ முற்படும்போது தலைதூக்க, பிரச்சினை பிறக்கிறது.

எத்தனை நாழிக்குத்தான் முகமூடியை அணியமுடியும்? மூச்சு முட்டத் துவங்கிவிட்டால் காதலும் ஆச்சு, கத்தரிக்காயும் ஆச்சு— என் அவஸ்தை எனக்கல்லவா புரியும் என்ற ஆத்திரத்துடன் முகமூடியைக் கழட்டி எறிய...

— உன் சுயரூபம் இத்தனை அசிங்கமானதா? ஏமாற்றி விட்டாயே!

— உங்களுடன் வாழ்வது நம்மால் ஆகாது சாமி! சரியான எத்தர் நீங்கள்!

எட்ஸட்ரா எட்ஸட்ரா புகார்கள்— வாக்குவாதங்கள்— சண்டைகள்— கடைசியாக, பலர் பிரிவு, சிலர் விவாகரத்து வரையிலும் போவதுண்டு...

ஆக, தோல்விகள் இரண்டு வகைத் திருமணங்களிலும் உண்டு என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். ஒரு சமயம் இதில் கூடுதலாய் இருக்கலாம். இன்னொரு சந்தர்ப்பத்தில் மற்றதில் அதிகமாக இருக்கலாம்...

எதுவானாலும் சரி— மீண்டும் கூறுகிறேன்—

இல்லறம் தெளிவதும் கலங்குவதும், கூம்புவதும், மலர்வதும், துக்கிப்பதும் சந்தோஷிப்பதும் சம்பந்தப்பட்ட புருஷன், மனைவியின் கைகளில் மட்டுமே இருக்கின்றது.

எந்த ஒரு வார்த்தை மூன்று தரம் சொல்லப்படுகிறதோ, அது சத்தியப்பிரமாணமாகிறது என்பது வேதவாக்கு.

அதனால்— திரும்பச் சொல்கிறேன்—

அற்புதமான தாம்பத்திய வாழ்க்கையின் திறவுகோல் அந்தந்த தம்பதி கையில், தம்பதி கையில், தம்பதி கையில்...

# 36

நண்பர் வேணுகோபாலனுக்கு என்மீது அசாத்திய கோபம்.

"அது என்ன, ஒரு தலைப்பட்சமாகக் கட்டுரையை எழுதிவருகிறீர்கள்? ஆண்களைக் கொடுமைக்காரர்களாகவும், சுயநலமிக்கவர்களாகவும் சித்தரித்து, பல சந்தர்ப்பங்களில் அவர்கள் அனுசரித்து நடக்காததே தாம்பத்தியத்தின் கசப்புக்குக் காரணம் என்பது எந்த வகையில் நியாயமான வாதமாகும்? எத்தனையோ நல்லவிதமாய் நடந்துகொண்டும், மட்டம்தட்டிச் சீண்டும் (Nagging wife) மனைவியால் அஸ்தமித்துப்போன மணவாழ்க்கை ஏராளம் என்பது உங்களுக்குத் தெரியாதா? அல்லது தெரிந்தும், பெண்ணுக்குப் பெண் என்கிற அசட்டுத்தனத்தில் கண்மூடித்தனமாய் இருக்கிறீர்களா? இல்லறத்தின் இடிபாடுக்கு, மனைவிகளின் சீண்டல் முக்கியமான கடப்பாரை என்று ஒரு பாரா எழுதினால் குறைந்தா போய்விடுவீர்கள்?"

பாரா இல்லை நண்பரே— முழு அத்தியாயமே எழுதத் தீர்மானித்திருந்ததால்தான் இதுவரை இந்தக் கேவலமான குணம் பற்றி ஏதும் குறிப்பிடவில்லை. கோபத்தை மறந்துவிட்டு தொடர்ந்து படியுங்கள், ப்ளீஸ்...

'நாகிங்'— மட்டம்தட்டிச் சீண்டுதல்— இது பல வகைப்படும். உதாரணத்துக்கு மூன்று.

முதலில் மணிமொழி.

ஆட்டோமொபைல் ஏஜென்ஸி வைத்திருக்கும் வசதியான குடும்பத்தின் ஒற்றைப்பெண். கூடப்பிறந்த அண்ணன், தம்பிமார்கள் நான்குபேர். செல்லம். இவன் மேல் தூசிபடச் சம்மதிக்காத அப்பா, அம்மா, உடன்

பிறப்புக்கள்... கண்ணுக்குள் வைத்துத் தாங்கும் சமாச்சாரம் தான்.

இப்படிப்பட்டவர்களுக்கு, மணிமொழிக்குத் திருமணம் செய்வித்து வீட்டோடு மாப்பிள்ளையை வைத்துக்கொள்ள ஆசை எழுந்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. கிடைத்தவன் ராதாகிருஷ்ணன். என்ஜினீயரிங் படித்தவன். நல்லவன். கெட்டிக்காரன். ஏழை.

ஏற்கெனவே, 'இவர்கள் பணக்காரர்கள், நான் ஏழை' என்கிற பிறாண்டல் மனத்தில் ஜனித்திருக்க, வீட்டோடு மாப்பிள்ளையானவனை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் மணிமொழி பேசின பேச்சுக்கள் இன்னும் இன்னும் தலைகுனிய வைத்தன.

— என்னங்க... டேபிள்ல அத்தனை பேரோட சாப்பிடறப்போ சத்தம் போட்டு உறிஞ்சி சாப்பிடாதீங்க... மேனர்ஸ் இல்லேனு சிரிப்பாங்க...

— சட்டையை நல்லா 'இன்' பண்ணிக்கங்க... காலைல நித்தமும் புது ஷர்ட் போட்டாலும், அரைமணிலே கசகசானு ஆக்கிடறீங்களே... அண்ணன்களைப் பாருங்க, எந்நேரமும் மடிப்புக் கலையாம எப்படி இருக்காங்க...

— நாலு பேர் நடுவுல எதையாவது உளறாதீங்க... எங்க அப்பா, அண்ணன் மாதிரி பேசத் தெரிஞ்சா பேசுங்க... இல்லாட்டி கம்முனாவது இருங்க.. வரவர உங்களோட இது பெரிய ரோதனையாப் போச்சு...

பத்து வருஷ காலமாய் குளவி கொட்டுகிற மாதிரி மணிமொழி கொட்டிக்கொட்டி, அன்றைக்கு அத்தனை துறுதுறுப்பு, கெட்டிக்காரத்தனத்துடன் இருந்த ராதா கிருஷ்ணன், இன்று எதையும் தைரியமாகப் பேச, செய்யத் தெரியாத அசல் மண்ணாந்தை! மனைவி, அவள் பெற்றோர், உடன்பிறப்புக்கள் மட்டம்தட்டுவது போதாது என்று



இப்போதெல்லாம் அவன் பெற்ற நண்டு சிண்டு பிள்ளைகளே, 'நீ சும்மா இரு, டாடி... உனக்கு ஒண்ணும் தெரியாது' என்று சர்வ அலட்சியத்துடன் அவனை ஒதுக்குவது பரிதாபத்திலும் பரிதாபம்.

அடுத்து, சௌந்தரம் மாமியைப் பார்க்கலாம்.

சடகோபன் மாமா வாயில்லாப்பூச்சி ரகம். இவர் ஆதியிலிருந்தே இப்படியா, அல்லது இது மாமியின் சீண்டலின் மகிமையா என்று எனக்குத் தெரியாது.

அவர்கள் வீட்டுக்குப் போய் பத்து நிமிஷம் தங்கிவிட்டு வருவதற்குள், மாமாவை மாமி எல்லார் நடுவிலும் மட்டம் தட்டுவதைக் கண்கூடாகப் பார்த்து, கேட்டு வரலாம்.

—உங்களுக்கு எதுக்குத் துப்பு இருக்கு? வெறும் பேப்பர், இதக்கூடவா உருப்படியா கடைல போட்டுட்டு வர முடியலை? போன மாசம் நான் போட்டேனே... மூணு கிலோ இருந்தது. வேலை ஒழியலைன்னு உங்களைப் போகச் சொன்னா 'ரெண்டரை கிலோதாண்டி இருந்தது'னு அரைகிலோவ கோட்டை விட்டுட்டு வந்து நிக்கறேள்! காய்கறிக்காரன் முத்தல் காயை வச்சுண்டு, நீங்க எப்படா வருவேள், தலைல கட்டலாம்னு காத்துண்டு இருக்கான். அதான் மூஞ்சிலியே எழுதி ஒட்டியிருக்கே— 'ஏமாந்த சோணகிரி'! த்தூ... இப்படிக்கூட துப்புக்கெட்டத்தனமா யாராவது இருப்பாளோ!

மாமி கரித்துக்கொட்டும் அளவுக்கு மாமா அப்படி ஒன்றும் துப்புக்கெட்டவராக எனக்குத் தோன்றவில்லை. மாசம் ஆயிரத்து ஐநூறு சம்பாதிக்கிறார்; சின்னதாக சொந்த வீட்டைக் கட்டியிருக்கிறார்; ஸ்கூட்டர் உண்டு; கடன், அது இது என்று எதுவும் இல்லை.

இருந்தாலும், உறவு ஜனங்களின் நடுவில் இவருடைய செல்லப்பெயர் 'பேக்கு சடகோபன்' என்பதோடு, வேலைக்காரிகூட இவர் ஏதாவது வேலை சொன்னால்,

அந்த வீட்டில் மதிப்பு, கௌரவத்துடன் அழகாய் வளைய வருகிறாள் நிர்மலா.

இதேபோல, ஊனமுள்ள சங்கரை மணந்த மாலதியும் அந்தக் குறையைப் பெரிசுபண்ணி மற்றவர்கள் பேச இடம் கொடாமல், 'சங்கர் சங்கர்' என்று தாலி கட்டினவரை மரியாதை கலந்த அன்போடு மனப்பூர்வமாய் மதித்து நடந்து காட்டியதில், இன்றைக்கு அவளைச் சார்ந்தோர் அத்தனை பேர்களுக்கும் சங்கர் என்றால் 'ஓஹோ'தான்.

யாரையுமே அடுத்தவர் மதித்து, மரியாதையுடன் நடக்கவேண்டும் என்றால், அந்த நபருக்கு மிகமிக நெருக்கமானவர் முதலில் இந்த மரியாதை, மதிப்பைக் கொடுக்க முன்வர வேண்டும். இதை மறக்கக்கூடாது.

அருமையான தாம்பத்தியத்தின் திறவுகோல், அந்தந்த தம்பதி கையில் என்றால், ஒரு புருஷன் மனைவியைச் சுற்றார் உற்றார் நடுவில் மதிப்பான உயரத்தில் தூக்கி வைப்பது கண்டிப்பாய் அந்தந்த துணையின் பேச்சு, நடத்தையில்தான் இருக்கிறது.

யோசிக்க வேண்டும்; நிதானமாய் ஆற அமர யோசித்து, அவரவர் தங்களை மாற்றிக்கொள்ள வேண்டும்.

# 37

**ம**னவியல் நிபுணர் டாக்டர் ராமச்சந்திரனிடம், 'இந்தத் தலைப்பை முடிக்கு முன், வேண்டாத சண்டைகளை விட்டுவிட்டு தம்பதி ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துகொண்டு, அருமையான தாம்பத்தியத்தை நடத்த, நிபுணர் என்ற முறையில் ஆக்கபூர்வமாக சில யோசனைகளைத் தாருங்களேன்' என்று நான் கேட்டதும், முக்கியமான அறிவுரைகளையும் அவற்றை விளக்க சில உதாரணங்களையும் டாக்டர் கூறினதை, இந்த அத்தியாயத்தில் எழுதுகிறேன்.

முதலில் உதாரணங்கள்.

"கோகிலாவுக்கு இப்போது நாற்பத்திநாலு. இவர் புருஷன் மஹாதேவனுக்கு நாற்பத்தி எட்டு. மூன்று பிள்ளைகள். முதலாமவன் என்ஜினியரிங் கல்லூரியில். அடுத்தவன் பி.ஏ. முதலாண்டில். கடைக்குட்டி பத்தாவதில்.

மஹாதேவன் சொந்தமாக வியாபாரம் செய்வதில், ஆஹா ஊஹு என்று வாழ்க்கைத்தரம் இல்லாவிட்டாலும் குறைப்பட்டுக்கொள்ளமுடியாத வசதிகள் இருக்கவே செய்கின்றன.

இந்த கோகிலா திருமணமான புதிதில் கூட்டுக் குடும்பமாக, மாமியார், மாமனார், நாத்திகளுடன் வாழ்ந்த நாட்களில், அம்மாவிடம் அபிமானம் கொண்ட பிள்ளையாய், மனைவிக்காக அதிகம் பரிந்து பேசாதவராய் மஹாதேவன் இருந்திருக்கிறார், நிஜம்.

இது, புருஷன் ஒரு கோழை, வாயில்லாப் பூச்சி, தொடை நடுங்கி, அடித்துப் பேசி பிழைக்கத் தெரியாதவர், அம்மா கோண்டு என்கிற எண்ணத்தைக் கோகிலாவுக்குள் ஆழப் பதித்துவிட, இன்றைக்கும் அவர்கள் நடுவே மூளும்

அன்றாட சண்டைகளுக்கு இந்த வடுவே மூலகாரணமாய் அமைந்துவிடுகிறது.

காய்கறிக் கடைக்குப் போய்வருகையில், தெரிந்தோ தெரியாமலோ கோகிலாவுக்கு அவ்வளவாகப் பிடிக்காத வகைகளை வாங்கிவிட்டால் போயிற்று.

"என்னது! பூசணிக்காயா? அது எனக்கு ஒத்துக்காதுனு தெரியுமில்லே? அப்படிக்கூடவா ஒருத்தருக்கு ஞாபக மறதி இருக்கும்? என் விஷயம்னா எல்லாம்தான் மறந்துபோகும்! அதான் இருவத்தி அஞ்சு வருஷமா அனுபவிக்கிறேனே! உங்களை எனக்குத் தெரியாதா! சாந்தி முகூர்த்தத் தன்னிக்கே 'எங்கம்மா கிட்ட திமிரா பதில் சொன்னி யாமே?'னு கேட்டு, தள்ளி படுத்தவருதானே? சொக்கலிங்கம் வீட்டுக் கல்யாணத்துக்குக் கூட அழைச்சிட்டுப் போன வளை மறந்திட்டு, தான் மட்டும் தனியா வீட்டுக்குத் திரும்பினவர்தானே! நான் எக்கேடு கெட்டா உங்களுக்கு என்ன? பூசணிக்காய் தின்னு பேதி கண்டு செத்தா என்ன, இருந்தா என்ன? அம்மா, தங்கச்சிங்கன்னா மாஞ்சுமாஞ்சு செய்வீங்க, உங்களைத் தெரியாதா? நா ஆசையா வாங்கிக்கிட்ட கறுப்பு ஊசிவாணப் புடவையை 'தங்கச்சி ஆசைப்பட்டா, மசக்கைக்காரி... பாவம்'னு எடுத்துக் கொடுத்தவர்தானே! உங்களைத் தெரியாதா?"

சாதாரண பூசணிக்காயில் துவங்குவது, அத்தோடு நிற்காமல், 'அடியைப் பிடிடா பாரத பட்டா' என்று எங்கோ சென்று, இருபத்தி ஐந்து வருஷங்களாக மஹா தேவன் செய்த காரியங்களில் புகுந்து புறப்பட்டு, அவரை யும் அவர் குடும்பத்தாரையும் துளைத்தெடுத்து, ஒருநாள் பூராவும் கத்தித் தீர்த்த பிறகே நிற்கும்.

இதனடுவில் சமையலாவது, சாப்பாடாவது!

அதது போட்டபடி கிடக்க, பிள்ளைகளும் மஹா தேவனும் மூச்சைக்கூட சப்தமாக விட பயந்துகொண்டு



கோகிலாவின் கண்பார்வையில் விழாமல், விட்டால் போதும் என்று எங்காவது அந்தர்தியானமாகிவிடுவார்கள்.

வாரத்துக்கு இரண்டு மூன்று தடவைகளாவது சகஜமாக நடக்கும் இந்தச் சம்பவத்தால், அண்டை அசலில், உறவினர் நடுவில் கோகிலாவுக்கு 'ஹிஸ்டீரியா' நோய் கொண்டவள் என்ற பட்டப்பெயர்.

இனி விஸ்வத்தின் விவகாரத்துக்கு வருவோம்.

விஸ்வம் எழுநூறு ரூபாய் சம்பாதிக்கும் ஒரு டைப்பிஸ்ட்.

பத்து வருஷங்களுக்கு முன் சீதாவை இவன் கை பிடிக்கும்போது அவள் துணிக்கடை ஒன்றில் வேலை பார்த்து வந்தாள்.

திருமணமான மறு வருஷம் தலைச்சன் பெண் பிறந்துவிட சீதா வேலையை விட்டுவிட்டாள்.

கல்யாணத்தின்போது, மாமனார் கொடுக்காத மயில்கண் வேஷ்டியும், தீபாவளி சமயத்தில் தங்க மோதிரம் செய்து போடுவதாகச் சொல்லி வார்த்தை தவறியதும், பொங்கல் சீர்வரிசை நன்றாக வைக்காததும், பெண் பிறந்ததற்கு தொட்டில் தடபுடலாகப் போடாததும் விஸ்வத்தை வெகுவாகக் கிளப்பிவிட, இன்றைக்கும் முணுக் கென்று எதற்காவது கோபம் வந்தால் இத்தனையும் இழுத்து சீதா நாக்கைப் பிடுங்கிக்கொள்ளாத குறையாக வசை பாடுதான்.

—குழம்பா வெச்சிருக்கே? மூதேவி- புளியும் மிளகாயும் தனித்தனியா நிக்குதே. நீயெல்லாம் ஒரு பொம்பளை! உன்னைக் கட்டிக்கிட்டு நான் மாரடிக்கணும்னு இருக்கு. கட்டிக் கொடுக்கறதுக்கு முன்னால பிறந்த வீட்டுல நாலும் சொல்லிக் கொடுப்பாங்க- கேள்விப்பட்டிருக்கேன்! ஆனா, நீதான் வேலைபார்க்கிற திமிர்ல குதிரை மாதிரி ஊரைச் சுத்திகிட்டு இருந்தியே! உன்னைப் பெத்தவங்களுக்கும்

வாய்தான் இருக்குதே ஒழிய, வேற எந்தத் துப்பும் இல்லே! மயில்கண் வேஷ்டி, தங்க மோதிரம், ஆடிச்சீர், பொங்கல் சீர்னு வாய்ப்பந்தல் போட்டிருக்காங்களே தவிரவும், கையால ஒரு எழவும் இன்னி வரை கிடையாது... போய் கேட்டு வாங்க உனக்கும் சாமர்த்தியம் இல்லே... மூளை கெட்ட முண்டம்... குழம்பா வெச்சிருக்கே! நீயே கொட்டிக்க...

வாயோடு நிற்காமல், எதற்கெடுத்தாலும் கையும் நீள, ஒருநாள் ஏகப்பட்ட அடிகளோடு சீதாவை ஆஸ்பத்திரியில் சேர்க்கும் அளவுக்கு நிலைமை மோசமாகிவிட்டது. இது போதாது என்று விஸ்வத்துக்கு மூளை சரியில்லை என்ற சந்தேகம் வேறு!

தம்பதி என்றால் அவ்வப்போது தர்க்கமும், சண்டையும் மூளுவது இயல்புதான். ஆனால் பல சந்தர்ப்பங்களில் இந்தச் சண்டைகள் அன்றைக்குச் செய்த ஒரு காரியத்தின், பேச்சின் விளைவாகத் துவங்கினாலும், அதோடு நிற்காமல் என்றோ, எப்போதோ நடந்துபோன பல நிகழ்ச்சிகளைத் தோண்டி எடுத்து உதாரணம் காட்டி, பழைய கசப்பை, வெறுப்பை புதுப்பித்துக்கொள்ளுவதில், சின்னதாக ஒதுக்கிவிடக்கூடிய பேச்சு வார்த்தைகளும், வாக்குவாதங்களாக, சண்டைகளாக மாறி, தம்பதி இடையில் சரி பண்ணமுடியாத ஒரு நிரந்தரப் பிரிவை உண்டாக்கி விடுகின்றன.

கோகிலா, விஸ்வம் விவகாரங்களும் இப்படிப் பட்டவைதாம். உப்புசப்பில்லாத சம்பவங்களையும், பழைய நிகழ்ச்சிகளின் கசப்போடு அணுகி பூதாகாரமாக்கியதில், இன்று அந்த வீடுகளில் நிம்மதி என்பதே இல்லாமல் போய், மனவியல் நிபுணரின் உதவியை நாடும் அளவுக்கு விஷயம் வளர்ந்திருக்கிறதேஒழிய, கண்டிப்பாய் இது ஹிஸ்டீரியாவும் இல்லை, மூளைக் கோளாறும் இல்லை. ஆக, ஒற்றுமையாய் வாழ விரும்பும் தம்பதி, தெரியாத்தனம், புரிந்து



கொள்ளாமை, பொறுமையின்மை, அனுசரிக்காமை ஆகிய குணங்களால் உண்டாகும் விளைவுகளே இவை என்பதைப் புரிந்துகொள்வதோடு, முதலில் நடந்து முடிந்துபோனவற்றை இழுத்து சண்டை பிடிக்கும் சுபாவத்தை ப்ரயத்தனப் பட்டாவது மாற்றிக்கொள்வது அவசியம்."

இதையடுத்து டாக்டர் கூறின மற்றொரு அறிவுரையையும் உதாரணத்தின் மூலமே விளக்குகிறேன்.

வித்யா நல்ல அழகி. கல்யாணமாகுமுன் கொடிபோல இருந்தவளின் அழகுக்காகவே சித்தார்த் அவளை மணந்தான். திருமணமான சந்தோஷமோ, பிள்ளை பிறந்த சுதூகலமோ, அல்லது எனக்குத்தான் எல்லாம் இருக்கின்றனவே என்கிற அலட்சியமோ, தெரியவில்லை— இரண்டு வருஷத்துக்குள் வித்யா திமுதிமுவென்று ஊதிப்போனாள்.

சித்தார்த் ஜாடைமாடையாகச் சொல்லிப் பார்த்திருக்கின்றான். அத்தனையும் செவிடன் காதில் ஊதிய சங்கு கதையாக, மேற்கொண்டு சில வருஷங்கள் போவதற்குள் இரண்டு பேரும் சதா எலியும் பூனையுமானார்கள். குற்ற உணர்வுக்கு பயந்துகொண்டு வேறு பெண்ணிடம் போகத் தயங்கிய சித்தார்த் குடிக்கு அடிமையாகி, முப்பத்திரண்டாவது வயசில் ஆல்கஹாலிக் பட்டத்துடன் டாக்டரை சரணடைந்தான்.

"மேலை நாட்டில் அறுபது வயசானாலும் பெண்கள் தங்களை நல்ல உடற்கட்டோடு வைத்துக்கொள்வதில் கவனத்தைச் செலுத்துகிறார்கள். விவாகரத்து சுலபம் என்கிற நிலையில், அங்கு பெண்கள் தங்கள் அழகு, இளமையை என்றும் வளமாகப் பராமரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறார்கள். ஆனால் இங்கோ, கல்யாணச் சந்தையில் விலைபோகும் வரையில்தான் முக்கால்வாசிப் பெண்கள் தாங்கள் கவர்ச்சியாக அழகாக இருக்கவேண்டியது அவசியம் என்று நினைக்கிறார்கள்.

கழுத்தில் தாலி ஏறினதும், ஒரு பாதுகாப்பான வாழ்க்கை கிடைத்துவிட்ட நிம்மதியில் குணம் கெட்டுப்போவதும், உடலைச் சீராக வைத்துக்கொள்ளாததும் இங்கு சர்வ சகஜமாகின்றன. இந்த வகை மனோபாவம் தவறானது. துறுதுறுப்பும், இளமையும் நிறைந்த பெண்/ஆண் திருமணமான சில மாசங்களில் அசிரத்தையுடன் செயல்படத் துவங்குவது பலரின் தாம்பத்தியத்தின் அழிவுக்குக் காரணமாகியுள்ளது. சின்னச்சின்ன விஷயங்களிலும் விழிப்புணர்வோடு இருந்து, அவ்வப்போது தவறுகளைத் திருத்திக்கொள்வதுதான், எவரையும் நிம்மதியாக வாழ வைக்கும். இதைப் புரிந்துகொண்டால் எந்தப் பிரச்சினையும் இல்லை."

டாக்டர் கூறிவிட்டார், நான் எழுதிவிட்டேன்.

இனி, உங்கள் பாடு, உங்கள் வாழ்க்கை பாடு.

**Best of Luck!**

# 38

**தா**ம்பத்தியம் குறித்து எழுதத் தொடங்கிய நாளாகவே, தம்தம் வாழ்க்கைப் பிரச்சினையால் குழம்பிப்போய், ஆலோசனை கேட்டு கடிதம் எழுதியவர்கள் ஏராளம்.

இவற்றில்—

'அருமையான தாம்பத்தியத்தின் திறவுகோல் அந்தந்த தம்பதி கையில்' என்ற உங்கள் வாக்கு சத்தியமானதுதான்; என்றாலும் 'என்னால் முடியாது' நான் சிந்திக்கவே மாட்டேன்,' 'என்னிடம் குறையே இல்லை' என்று தன்னைத் திருத்தி, மேம்படுத்திக்கொள்ள மறுக்கும் ஜடஜன்மங்களும் இருக்கிறார்களே, என்ன சொல்கிறீர்கள்?' என்ற ரீதியில் ஒருவித விரக்தி, ஏக்கத்தோடு வரும் கடிதங்களுக்கு யாராலும், எந்த நிபுணராலும் எளிதில் பதில் கூற முடியாது என்பதை நினைக்கையில் வருத்தமாகவே இருக்கிறது.

அதேபோலத்தான் ஊதாரித்தனமாக அளவுக்கு மீறி செலவழிக்கும் குணம் கொண்டு, ஏகச்சக்கக் கடனில் அமிழ்ந்து திண்டாடும் கணவன்/மனைவியை, வெகுவாகத் திருத்த முயன்றும் முடியாமல் தோற்றுப்போன அந்தந்த துணைகள்...

வரதட்சணைக் கொடுமையால் வீட்டுக்கு அனுப்பப் பட்ட பெண்கள்...

சம்பாதிக்கும் திமிரில் கணவன், கண்ட பெண்களை வீட்டுக்கே கூட்டிவந்து கண் முன்னேயே கூத்தடிப்பதைக் கண்டிக்க முனைந்து, 'இருக்க விருப்பம் இருந்தால் இரு, இல்லாவிட்டால் நடையைக் கட்டு' என்ற பதிலை வாங்கிக்கொண்டு, தனியாகச் சென்று வாழ, படிப்போ, வேலைபார்க்கும் திறமையோ, நாலு காசு சம்பாதிக்க வக்கோ, தாங்க பிறந்தகமோ இல்லாத கொடுமையை

உணர்ந்து எதற்கும் அடங்கிப்போகும் வாயில்லாப்பூச்சி மனைவிகள்...

எங்களுக்கெல்லாம் வழி என்ன— என்று கண்ணீர் மல்க வினவுகையில், மனசு வேதனையில் விம்மவே செய்கிறது.

ஆனால், இப்படிக் கேள்வி கேட்டவர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும்.

எந்தப் பிரச்சினையையும் ஒரு கண்ணோட்டத்தி லிருந்து பார்த்து அலசி, தீர்வு காணுவது என்பது அசாத்தியமானது. அதிலும், கண்ணைக்கட்டிவிட்ட குதிரையாய் தம்பதியில் ஒருவர் எதற்கும் ஒத்துழைக்க மாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்கையில் விஷயம் இன்னும் இறுக்கவே முடிச்சு போட்டுக்கொள்கிறது. ஒரே அளவுகோலை உபயோகித்து வெவ்வேறு பிரச்சினைகளை அளந்து, அலசி, தீர்வு காணுவது பாரபட்சமாகவே இருக்கும் என்பதோடு, பிரிக்கக்கூடிய ஒருசில எளிய சிக்கல் களுக்கே இப்படிப் பத்திரிகை வாயிலாகத் தீர்வு காணுவது சாத்தியமாகும் என்பதையும் சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இனி—

மேலே குறிப்பிட்ட, பிரிக்கக்கூடிய சில சிக்கல்களைத் தாங்கிவந்த கடிதங்களை இப்போது பார்க்கலாம்—

*1.* என் வாழ்க்கையில் மிகப்பெரிய பிரச்சினை எழுந்து, தீர்க்கப்படாமல், பதில் தெரியாமல் குழம்பிக்கொண்டு அமைதி இல்லாமல், நீங்கள் குறிப்பிட்டுள்ளபடி நானும் சந்தோஷமாக வாழ முடியாமல், என்னைச் சார்ந்தவர் களையும் சந்தோஷமாக வாழ வைக்காமல், இருக்கும் படியான நிலைக்கு ஆளாகிவிட்டேன்.

பிரச்சினை என்னவென்றால், பொதுவாகப் பெண்கள் மீது நல்ல அபிப்ராயம் இல்லாத நான் திருமணம் செய்து



கொண்டேன். மனைவியிடம் சற்றுக் கண்டிப்பாகவே இருந்தேன். என் மனைவி மிகவும் அப்பாவி போலவும், மிகவும் நல்லவள் போலவும், எல்லாப் பெண்களிலிருந்தும் வித்தியாசப்படுபவளாகவும், உயர்ந்தவளாகவும் என் மனத்தில் இருந்தாள்.

ஆனால், அவள் கர்ப்பமாகி இரத்தப் பரிசோதனையில் Blood VDRL- Reactive வந்தது. என்னால்தான் இப்படி ஏற்பட்டிருக்கும், ஏனென்றால் நானும் திருமணத்திற்கு முன் தவறுகள் செய்தவன்தானே என்று என் இரத்தத்தைப் பரிசோதித்துப் பார்த்தேன். ஆனால் எனக்கு Non-Reactive வந்தது. திருமணத்திற்கு முன்பு நான் என் உடலை மிகவும் பத்திரமாகப் பாதுகாத்து (தவறுகள் செய்தாலும்) Blood VDRL Non Reactive என்று தெரிந்துதான் திருமணம் முடித்தேன்.

இது குறித்து என் மனைவியிடம் எதுவும் தெரிவிக்க வில்லை. ஆனால் இரண்டு மூன்று MBBS டாக்டர்களைக் கலந்தாலோசித்தேன். அவர்கள் எல்லோரும் உன் மனைவி யின் தவறு என்ற ஒரே பதிலைத்தான் தந்தார்கள். இவள் தவறு செய்ததற்கான எந்த ஒரு அறிகுறியும் இல்லை. அப்படி அவள் நடந்துகொள்கிறாள். கடைசியில் குழந்தை பிறந்த பிறகு இது குறித்து விசாரிக்கலாம் என்று பொறுமை யுடன் இருந்தேன். ஆனால் குழந்தை பிறந்து இறந்துவிட்டது.

இந்த அதிர்ச்சி என்னை மேலும் வேதனைக் குள்ளாக்கியது. இரத்தத்தில் இருந்த வி.டி.யினால்தான் குழந்தை இறந்தது என்று டாக்டர்கள் மறைமுகமாகத் தெரிவித்தார்கள்.

வேறு ஒருவரிடம் நேரிடையாகத் தொடர்பு இருந்தால் ஒழிய இப்படி வி.டி. நோய் உண்டாகாது என்று சொல் கின்றனர். வி.டி. 1 in 8 Dilution இருந்தது. இது அதிகப்படி என்று சொன்னார்கள். அவளைப் பார்க்கும்போதெல்லாம்

மிகப் பெரிய துரோகியைப் பார்ப்பது போல் எனக்குத் தோன்றியது.

வி.டி. உண்டாக வேறு ஏதாவது ஒரு காரணம் கிடைத்தாலும் பரவாயில்லை. அல்லது நடத்தை காரண மில்லாமல் வேறு எங்காவது எப்படியாவது ஒரு காரணம் கிடைத்தால் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவுகாண வழியுண்டு.

எனக்கு நீங்கள் உதவுவதாக இருந்தால், பெரிய நிபுணர்களை (வி.டி.) கலந்தாலோசித்து வேறு காரணங் களால் வி.டி. உண்டாக வழியிருந்தால் தெரிவியுங்கள். கட்டுரையில் பதில் எழுதுவதாக இருந்தால் தயவுசெய்து என் பெயரைக் குறிப்பிடாமல் எழுதுங்கள்.

2. உங்களுடைய தீவிர ரசிகையான எனக்கு இப்போது ஒரு பெரிய பிரச்சினை எழுந்துள்ளது. நான் திருமண மானவள். நான்கு ஆண்டுகள் ஆகின்றன. குழந்தைகள் இல்லை. சமீபத்தில் அலமாரியை ஒழிக்கும்போது ஐந்து வருஷங்களுக்கு முன் என் கணவருக்கு ஒரு பெண் எழுதிய காதல் கடிதங்களைப் பார்க்க நேர்ந்த விநாடியிலிருந்து என் நிம்மதி பறந்துவிட்டது. 'இது முடிந்துபோன கதை, அவள் திருமணமாகிச் சென்று விட்டாள். என்னை நம்பு' என்கிறார் என் கணவர். ஆனால், என் மனது அதை ஏற்க மறுக்கிறது. முடிந்துபோன கதை என்றால் அவள் கடிதங்களை இவர் ஏன் இன்னும் வைத்திருக்க வேண்டும்? ஒரே குழப்பம். இப்போது என்ன செய்வது என்று புரியாத நிலை.

பாரதி கண்ட புதுமைப்பெண்ணாக வீட்டை விட்டு, 'போதும் இந்த அவல வாழ்க்கை' என்று வெளியேறட்டுமா? அல்லது, அடிமைப்பெண்ணாக நிம்மதி இழந்து கிடந்து அல்லாடட்டுமா! தயவுபண்ணி உடனே, எனக்கு ஒரு வழி சொல்லுங்கள்.

3. என் அப்பாவுக்கு இரண்டு மனைவிகள். முதல்



மனைவி இறந்துவிட்டார். அவருக்குப் பிறந்த பெண்ணை, இரண்டாவது மனைவியான என் அம்மாவின் சொந்தத் தம்பிக்கு திருமணம் செய்து வைத்துவிட்டார்கள். இப்போது, அவர்கள் மகளை என்னைத் திருமணம் செய்யச் சொல்கிறார்கள்—என்மேல் அவள் உயிராக இருப்பதால் நானும் சரி என்று சொல்லிவிட்டேன். அவள் அளவான அழகு உள்ளவள். எனக்குப் போதும். ஆனால் நல்ல விஷயம்தெரிந்த படித்த ஒருவர், சொந்தத்தில் திருமணம் செய்துகொள்ளக்கூடாது, அதுவும் அக்கா மகள், மாமா மகள் (இரண்டுமே எனக்கு வருகிறது) என்றால் கண்டிப்பாக செய்துகொள்ளக்கூடாது. மீறி செய்தால், பிறக்கும் குழந்தை ஊனமாகவோ, மந்த புத்தி உள்ளதாகவோ இருக்கும் என்கிறார். இப்படிப் பலபேர் சொல்லிவிட்டார்கள். நான் என்ன செய்வது?

இந்த வருத்தத்தில், அவ்வப்போது நண்பர்களுடன் சேர்ந்து பார்ட்டி என விஸ்கி சாப்பிடுவது ஒரு பெக்கில் துவங்கி இப்போது குவார்ட்டர் வரை வந்துவிட்டது. தங்களது 'ஒரு மனிதனின் கதை' த்யாகுவின் முதல் அனுபவம் போலதான் எனக்கும். ஒருவேளை எனக்கு மணவாழ்க்கை சரியாக அமையவில்லையானால், நான் த்யாகுவைவிட மோசமாகிவிடுவேனோ என்று பயமாக உள்ளது.

நான் இனி அடுத்து என்ன செய்யலாம், செய்ய வேண்டும் என தயவுசெய்து, தங்கள் சகோதரன்போல் பாவித்து உடன் எனக்குத் தெரிவியுங்கள். கண்டிப்பாகப் பின்பற்றுவேன்.

4. ஆறு மாதங்களுக்கு முன் கணவனை இழந்த துர்ப்பாக்கியவதி நான். நான்கு மாசக் கைக்குழந்தையும் உள்ளது. தற்சமயம் பிரச்சனை என்னவென்றால், என் புக்ககத்தார் என்னை மிகவும் அந்நியமாக நடத்துவது

தான். மகன் போன பிறகு என்னைக் கண்டால் கரித்துக் கொட்டுகிறார்கள். ஏற்கெனவே புண்பட்டிருக்கும் நெஞ்சு இவர்களால் இன்னும் ரணமாகிறது. நான் வேலை பார்க்கிறேன். சம்பளம் எண்ணூறு. என் தாய், தந்தையர், 'எங்களோடு வந்துவிடு' என்கிறார்கள். பிரிந்துபோவ தென்றால் நான்காயிரம் ரூபாய் பெறுமானமுள்ள என் பாத்திரங்களை என் மாமியார் கொடுக்க மறுக்கிறார். நான் என்ன செய்யட்டும்? பெற்றவர்களை நம்பி, புருஷனின் வீட்டை விட்டு வெளியேறலாமா? அவர்களுக்கும் எத்தனை நாளைக்கு பாரமாக இருப்பது? என் பாத்திரங்கள் என்னாவது? குழந்தை, என் எதிர்காலத்தை நினைத்தால் பயமாக உள்ளது. ப்ளீஸ் ஹெல்ப் மீ...

இந்த நான்கு கடிதங்களுக்கும் விரிவான பதில் அடுத்த அத்தியாயத்தில்.

# 39

சென்ற அத்தியாயத்தில் வெளியிட்ட கடிதங்களில் காணப்பட்ட பிரச்சினைகளுக்காக, வைத்திய நிபுணர்களை யும், மனவியல் அறிஞர்களையும் கலந்தாலோசித்தபோது அவர்கள் கூறின கருத்துக்களை, அறிவுரைகளை அப்படியே கீழே தருகிறேன்.

முதலில், பால்வினை நோய் மனைவியைத் தாக்கி விட்டதை அறிந்து பாதிக்கப்பட்ட வாசகர்.

"இரத்தப் பரிசோதனையில் பால்வினை நோய்க்கு அறிகுறியாக 1 in 8 dilution என்று முடிவு வந்திருப்பது பால் நோய்க்கான அறிகுறிதான் என்பதில்லை என்பதை வாசகர் புரிந்துகொள்வது நல்லது. இந்த மாதிரி 1 in 8 dilution இருப்பது பால்வினை நோய்க்கு மட்டுமல்லாது உடம்பில் உள்ள வேறு சில நோய்க்கும் அறிகுறியாக சில சமயங்களில் அமைவதுண்டு. மனைவியின் உடலைத் தக்க நிபுணர்கள் கொண்டு பரிசோதனை செய்தால் வேறு ஏதாவது கோளாறு இருந்தால் கண்டிப்பாகப் புரிபடும். சில சமயங்களில் பரிசோதனைச் சாலைகளிலும் தவறுகள் ஏற்படுவதுண்டு. நண்பர் வேறு ஏதாவது பரிசோதனைக் கூடத்தில் double check செய்தாரா என்பதை ஏனோ குறிப்பிடவில்லை. குற்றம் குறை காணாமல், உணர்ச்சி வசப்படாமல் அணுகவேண்டிய பிரச்சினை இது. அவசரப் பட்டு சந்தேகப்படுவதால் அனாவசிய சிரழிவுக்கு மனைவியை ஆளாக்குவதோடு, தானும் நிம்மதி இழக்கக் கூடும். நிதானம். நிதானம்."

இத்தனை கூறினாலும், இந்தச் சந்தர்ப்பத்தில் சில உண்மைகளை எடுத்துச் சொல்வது என் கடமையாகிறது. வி.டி. என்பது தொட்டால் ஒட்டிக்கொள்ளும் சமாச்சாரம் என்று மக்களிடையே ஒரு தவறான அபிப்ராயம்

ஊடுருவியுள்ளது. மேற்கத்திய பாணி டாய்லட்டை, சலவைத் துணிகளை உபயோகிப்பதன் மூலம் பால்வினை நோய் பரவ இடமிருக்கிறது என்பது மிகமிகத் தவறான கருத்து. உடலுறவு, (அபூர்வமாக வெறும் முத்தங்கள்) இருந்தாலே ஒழிய நோய் பரவுவது சாத்தியமில்லை. தவறு செய்துவிட்டவர்கள் தங்கள் நேர்மையை சாதிக்க, வேலிக்கு ஓணான் சாட்சியாக சிருஷ்டிக்கப்பட்ட இந்த எண்ணத்தை மக்கள் மாற்றிக்கொள்வது அவசியம்.

நிற்க— நண்பர் எதற்கும் ஒரு வி.டி. நிபுணரை விட்டு உடனடியாக மனைவியைப் பரிசோதிக்க வைத்தால் கண்டிப்பாய் பல புதிர்கள் விடுபடும். உண்மையை எதிர் நோக்க பயந்து ஆயுசுபர்யந்தம் அவஸ்தையுடன் வாழ்வதை விட, நிஜத்தைத் தெரிந்துகொண்டுவிடுவது உத்தமம்.

இரண்டாவது வாசகருக்கு மனவியல் நிபுணர் சொல்லும் அட்வைஸ்:

"இந்த வாசகி அனாவசிய சந்தேகத்தால் தன் வாழ்க்கையை நாசமாக்கிக்கொள்ளத் தீர்மானித்துவிட்ட தாகவே தோன்றுகிறது. மிகவும் அன்பாகவே இருக்கும் கணவர், 'இது முடிந்துபோன கதை, என்னை நம்பு,' என்று சொல்வதைக் காதில் வாங்காமல் இப்படிப் பிடிவாதம் பிடிப்பது விவேகமான செயலாகத் தோன்றவில்லை. திருமணத்துக்கு முன் மனதாலோ நடத்தையாலோ தவறு செய்பவர்கள், காதல் வசப்படுபவர்கள் மிக அதிகம் என்றால், தவறை உணர்ந்து அவர்கள் திருந்துவதும், கைகூடாத காதலை மறப்பதும், மிகமிக சகஜம். இதைப் போய் வாசகி பெரிதுபடுத்துவதனால் அவருக்கு ஆதாயம் என்ன? புதுமைப்பெண் என்பவள் மன்னிக்க, மறக்கத் தெரியாதவளாக இருக்கவேண்டும் என்று பாரதி சொல்ல வில்லையே! கடிதம் எழுதியவர் தனிமையில் அமர்ந்து யோசிக்க வேண்டும். முதல் முறை பிடிபடும் தவறுக்காக



தாம்பத்தியத்தை எட்டி உதைத்து, சின்னாபின்னப் படுத்தலாம் என்பது கண்மூடித்தனமான வாதம். மாறாக, நான்கு வருஷங்களாக இனிய துணைவராக இருந்த கணவர் சொல்வதை நம்பி, ஒருதரம் சந்தர்ப்பம் அளித்துப் பார்ப்பதுதான் விவேகம். மனிதாபிமானமும்கூட. முடிந்து போன காதலின் சாட்சிக் கடிதங்களை கணவர் இத்தனை வருஷங்களாகப் பத்திரப்படுத்தி வைத்தது தவறுதான். இது தெரியாத்தனத்தின் அல்லது மறதியின் காரணமாகவும் இருக்கலாம் அல்லவா? முதிர்ச்சியுடன் சிந்தித்தால் நிச்சயம் தெளிவு பிறக்கும்."

இனி மூன்றாவது கடிதம்... ரங்கா நர்ஸிங் ஹோம் டாக்டர் வெங்கட்ராமனின் ஆலோசனை இதோ:

"டாக்டர் என்ற ரீதியில் உறவுமுறை கல்யாணங்களைப் பொதுவாக நான் வரவேற்பதில்லை. மாமா, அத்தை வாரிசுகளிடையே திருமணம் நடப்பதன் மூலம் பல சந்தர்ப்பங்களில் பிறக்கும் குழந்தைகள் குறைபட்டுப்போவது நிஜம். முக்கியமாய், மூளைக் கோளாறு, சர்க்கரை வியாதி போன்றவை எங்கே எங்கே என்று காத்திருந்து ஜீவ அணுக்களில் ஒட்டிக்கொள்ளும் வியாதிகளே. ஆஸ்துமா, வெண்குஷ்டம், மாறுகண், இன்னும் பல வகைகளும்கூட தலைமுறை தலைமுறையாய் மனிதர்களை ஆக்கிரமிப்பதில் பிரசித்தி பெற்றவைதாம். எதற்காக நெருங்கின உறவு முறையில் சம்பந்தம் வேண்டாம்? சொல்கிறேன். பரம்பரை யாக வரும் வியாதி—ஸே—டயபடீஸ்— அப்பாவிலிருந்து பிள்ளை பூபதிக்கு வந்திருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். இந்த பூபதி தன் அத்தை மகள் புவனாவை மணக்கத் தீர்மானிக்கையில், அதே குடும்ப ரத்தம் ஓடும் பெண் என்கிற காரணத்தால் புவனாவுக்குப் பிற்காலத்தில் நீரிழிவு நோய் வர சந்தர்ப்பம் இருக்கிறது என்பதோடு, பூபதிக்கும் புவனாவுக்கும் பிறக்கும் குழந்தைகளையும் டபிள் டோஸ் காரணமாய் இந்த நோய் பீடிப்பது

ஓரளவுக்கு நிச்சயம் என்றே சொல்லலாம். 'அ- இப்பத்தான் புதுசா என்னென்னமோ விதி கொண்டுவந்திருக்கீங்க... அப்பா, தாத்தா காலத்துல எல்லாம் உறவு முறை கல்யாணந்தானே அதிகம்? செஞ்சுகிட்ட எல்லாருமா வியாதிலே படுத்திட்டாங்க?' என்று அலட்சியத்துடன் பதில் கேள்வி கேட்பவர்களும் உண்டுதான். இவர்களுக்கு 'அந்தக் காலத்தில் விஞ்ஞான, வைத்திய துறை இன்றளவுக்கு வளராததால், முக்கால்வாசி சின்ன வயசு சாவுகளுக்கும் இன்ன காரணம் என்பது புரியாமல் இருந்தது என்பதைத் தவிர வேறு என்ன பதில் கூற முடியும்? எனக்குத் தெரிந்த குடும்பம் ஒன்றில் இப்படி நெருங்கிய உறவில் திருமணம் செய்துகொண்ட தம்பதிக்குப் பிறந்த மூன்று பெண்களும் பார்வையற்றவர்களாக இருப்பது பரிதாபத்துக்குரிய விஷயம். தாத்தா வழியில் ஏற்கெனவே குருடாகக் குழந்தைகள் பிறந்திருப்பதுதான் இரட்டிப்பாக இந்தத் தலைமுறையைத் தாக்கிவிட்டது என்பது பரிசோதித்த நிபுணரின் கருத்து. இது குறித்து இன்னும் நுணுக்கமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறவர்கள் ஜெனிடிக் ஸ்பெஷலிஸ்ட்களை அணுகுவது நல்லது."

கடைசி கடித வாசகிக்காக நான் இரண்டு மனவியல் நிபுணர்களைக் கலந்தாலோசித்தேன். இருபது வரி கடிதத்தை வைத்துக்கொண்டு, சின்ன வயசில் பெருமளவுக்கு அடிபட்டு, க்ராஸ்ரோடில் இருக்கும் இவரது நிலைமை புரியாமல் எதையாவது சொல்லி இன்னும் கஷ்டத்தை அதிகமாக்கிவிடக் கூடாதே என்கிற பயம் எழுந்ததால் ஒருத்தருக்கு இரண்டு நிபுணர்கள்.

இருவருமே தீர்மானமாகச் சொல்லியது இதுதான்:

"நடக்கக்கூடாதது நடந்துவிட்டது, சின்ன வயசில் வாழ்க்கைத்துணையை இழந்தது கொடுமையே. ஆனாலும் 'மாற்று' இல்லாத சம்பவங்கள் நடந்து விடும்போது



விவேகத்தோடு அவற்றை ஏற்று வாழப் பழகுவதுதான், விரைவில் அடிபட்ட நபர் நிம்மதியாக இருக்க வழி. When there is no alternative, the best is to accept reality, as early as possible! வாசகிக்கு மன தைரியம் அத்யாவசியம். பிள்ளை போன பிறகு மருமகளை வேண்டாதவளாக நடத்துவது மனிதாபிமானமற்ற செயல். அன்பைக் கொடுத்து அன்பை வாங்குவதுதான் என்றைக்கும் சந்தோஷத்தைத் தரும். ஒரு வழி நடப்பு, சாலையில் இருக்கலாம். அன்பு செலுத்த வேண்டிய இருவரிடையே கூடாது. கணவனை இழந்த சகோதரிக்கு ஒரு மிகப்பெரிய ப்ளஸ் பாயிண்ட் உள்ளது. அதுதான் வேலை, எண்ணூறு ரூபாய் சம்பளம். தன்மானம் முக்கியம் என்று கருதினால், இவர் தனியாகப் பிரிந்து வாழ்வதைத் தவிர வேறுவழி இல்லை. வாழ்நாள் பூராவும் கூடவே துணையாய் இருப்பார் என்று நம்பியவரே போன பிறகு, நான்காயிரம் மதிப்புள்ள பாத்திரத்துக்கு முக்கியத்துவம் ஏன்? நிம்மதியா, பாத்திரங்களா என்று வாசக சகோதரிதான் தீர்மானிக்க வேண்டும். கைக்குழந்தை பெரிதாகும் வரை, பிறந்த வீட்டில் தாராளமாய் இருக்கலாம். பிறகு தன் வருவாயில், இருக்கும் வசதிகளுடன், பெண்ணுடன் தனியாக நெஞ்சுரத்துடன் வாழ முடியும் என்றால், அது தன் காலில் நின்று தன் கையை நம்பி வாழும் திருப்தியை பிற்காலத்தில் கண்டிப்பாகத் தரும்."

நான்கு கடிதங்களுக்கும் நிபுணர்கள் பதில் கூறிவிட்டார்கள். தீர்வு இருக்கிறதா இல்லையா என்று சம்பந்தப்பட்டவர்கள்தாம் தீர்மானிக்க வேண்டும்.

கடைசியாக ஒரு வார்த்தை. மூன்றாவது கடிதத்தில் வாசகர், பிரச்சினை தாளாமல் தான் இப்போது குடிக்கத் துவங்கிவிட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறார். இது எனக்குக் கோபத்தையே தருகிறது. நிஜத்தை எதிர்நோக்காமல் நொண்டிச் சாக்குகளைத் தேடி ஓடி ஒளிவதனால் யாருக்கும் எந்த லாபமும் இல்லை. இப்படிக் 'குடியில்'

வேதனைகளை மறப்பவர்களும், துறவுப் போர்வையில் பொறுப்புகளைத் தள்ளிவிடுகிறவர்களும், தவறுகள், தோல்விகள், இழப்புகளால் நிரந்தரமாகக் கலைந்துபோய் மற்றவர்களுக்குச் சுமையாக மாறுபவர்களும், என்னைப் பொறுத்தவரை கோழைகளே. சோதனைகளால் தற்காலிக மாகச் சிதைந்து போகலாம். இது மனித இயல்பு. ஆனால் விழிப்புணர்வோடு, அந்நிலையிலிருந்து மீள முயற்சிக்காதவர் களுக்கு என் பச்சாதாபம் மட்டும் கண்டிப்பாகக் கிடையவே கிடையாது.

# 40

ரொம்ப வருஷங்கள் கழித்து நான்கு நாட்கள் முன்பு ஜானகியை எதேச்சையாய் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது.

இந்த ஜானகியும் நானும் முதல் ஃபாரத்திலிருந்து எஸ்.எஸ்.எல்.ஸி. வரையிலும் ஒன்றாகப் படித்தோம். அதீத நெருக்கம் என்று சொல்லமுடியாவிட்டாலும் ஆறு வருஷங்களை சேர்ந்து கழித்ததன் காரணமாய் ஒருத்தரை ஒருத்தர் நன்றாகவே அறிவோம்.

ஜானகிக்கு அன்று நாங்களெல்லாம் வைத்திருந்த செல்லப் பெயர் 'சுத்த சகுன ஜானகி'. உட்கார, எழுந்திருக்க, பேச என்பதுபோல் தொட்டதற்கெல்லாம் சகுனம் பார்த்ததும் அல்லாமல், அத்தைப்பாட்டி மாதிரி வயசுக்கு மீறின சுத்த உணர்வுடன் இருந்ததாலும் அவளுக்குக் கிடைத்த கௌரவப் பட்டம் அது.

பேசிக்கொண்டே இருப்பாள். திடுமென 'கக் கக்' என்று வாயை மூடிக்கொண்டு தொண்டையில் ஓசை எழுப்புவாள். 'என்ன ஜானகி?' என்றால், 'பல்லி கத்துகிறது, பதிலுக்குக் குரல் கொடுத்தேன்' என்பாள்.

"வாசலில் விற்கும் 'ஐஸை' யாராவது வாங்கித் தின்பார்களா? எந்த ஜலத்தில் செய்தானோ! ஈ மொய்க்கும் மாங்காய் துண்டா? ஹுக்.. எனக்கு வேணாம்பா.." என்பாள்.

"வால் நீண்ட கருங்குருவி வலமிருந்து இடம் போயிற்று. கண்டிப்பாய் இன்று நல்ல சேதி வரும்" என்பாள்.

ஜலதோஷத்தின் காரணமாய் தும்மினால்கூட 'அபசகுனம்' என்று முகம் சுளிப்பாள்.

பரீட்சை சமயம், முதல் நாள் நன்றாக எழுதிவிட்டால், பாக்கி ஏழு நாட்களும் அதே பாவாடை தாவணிதான்..

அதிர்ஷ்டப் பாவாடை, அதிர்ஷ்டப் பேனா, எட்ஸட்ராவில் எக்கச்சக்க நம்பிக்கை.

சின்ன வயசாக, எதிலும் தீவிர நம்பிக்கை இல்லாத பெண்களாக, சதா சிரித்து, கேலி செய்து மகிழும் பருவத்திலிருந்த எங்களுக்கு ஜானகி வெறும் வாய்க்குக் கிடைத்த அவலாக இருந்ததில் ஆச்சர்யம் என்ன?

பின்னால் வந்த வருஷங்களில், எப்போதாவது ஜானகியின் நினைவு நெஞ்சில் மின்னினால், அவ்வளவு தீவிரமாக சகுனங்களிலும், அதிர்ஷ்ட துரதிர்ஷ்டங்களிலும் அவள் நம்பிக்கை வைத்ததற்குக் காரணம் என்ன? அவள் பிறந்த வீட்டின் சூழ்நிலையா, கண்டிப்பா?— என்று எனக்கு நானே யோசனை செய்து, எதுவானாலும், வளர்ந்து மனத்தில் முதிர்ச்சி கூடின பிறகு தன்னால் இவற்றிலிருந்து மீண்டிருப்பாள் என்ற சமாதானத்துடன் நினைப்பை மாற்றிக்கொண்டதுண்டு.

ஆனால், அந்த ஜானகியை துளியும் மாறாதவளாக, சரியாகச் சொல்லப்போனால் இன்னும்இன்னும் வேண்டாத பழக்கவழக்கங்களை வளர்த்துக்கொண்டவளாக சமீபத்தில் சந்தித்ததும், நான் அதிர்ந்துதான் போனேன்.

வீட்டிற்குள் வந்து செருப்பைக் கழட்டி, கூடத்தில் உட்கார்ந்தவள் இரண்டு நிமிஷங்களில் எழுந்துபோய் கைகளைக் கழுவிக்கொண்டு வந்தாள். பின்னர், சரியாகப் பத்து நிமிஷங்களில் மீண்டும் ஒருமுறை கைகளை அலம்பிக்கொண்டாள். தொடர்ந்து அரைமணி என்னோடு பேசுவதற்குள், ஒருவித இருப்புக்கொள்ளாமை அவளிடம் இருக்கிற மாதிரி தோன்ற "என்ன ஜானகி?" என்றேன்.

"கை அலம்பணும்."

"இப்பத்தானே அலம்பினே?"

"இல்லே... கையிலே கசகசனு வேர்வை இருந்தா எனக்குப் பிடிக்காது... அதான்..."



பின்னர், ஜானகி எழுந்து உள்ளே சென்று என் தாயாருடன் பேசிய பொழுதில், கூட வந்திருந்த அவள் மகள் சின்னக் குரலில் பேசினாள்.

"அம்மா எப்பவுமே இப்படித்தான். நினைச்சா ஒண்ணைச் செய்யணும்னு பிடிவாதம் பிடிப்பாங்க. ஏக சுத்தம். வெளியில போயிட்டு வந்தா வீட்டுக்குள்ள எதையும் நாங்க தொடவிடமாட்டாங்க. கைய சோப் போட்டு கழுவிக்கணும். நம்பமாட்டீங்க, எங்க வீட்டுல தினமும் செருப்பு, பை, எல்லாத்தையும்கூட நாங்க கழுவிட்டுதான் உள்ளே கொண்டு வருவோம்... அப்பா அழுக்கு நோட்டுக்களா கொண்டுவந்திட்டா, தூள் சோப் ஜலத்தில் அலசி, காய வெச்சித்தான் உள்ளே எடுத்து வெப்பாங்க..."

இந்த அளவுக்கு ஜானகி ஆசாரமா என்ன?

"ஆசாரம்னு சொல்ல முடியாது, ஆண்ட்டி... ஆனா, பயங்கர சுத்தம். அவங்க எதிர்பாக்கற அளவுக்கு நடந்துக் கலைனா, அன்னிக்கு வீட்டுல பிரளயமே வந்திடும். அம்மா வோட சுத்த பைத்தியத்தால், எந்த வேலைக்காரியும் ஒரு மாசத்துக்கு மேல வேலை செய்யறதில்லே... அம்மா ரொம்ப நல்லவங்கதான், ஆனாலும் அதீத சுத்தம், வேண்டாத மூடநம்பிக்கை— இதையெல்லாம் குறைச்சிக்கிட்டாங் கன்னா எல்லாரும் நிம்மதியா இருப்போம்."

அன்றைக்கு அவர்கள் புறப்பட்டுப்போய் வெகுநேரம் ஆகியும், ஜானகியைச் சுற்றியே என் நினைவுகள் சுழன்று கொண்டிருந்தன.

சாதாரணமாக இருக்கவேண்டிய பழக்கவழக்கங்கள் இப்படிச் சிலரிடம் தீவிரமாகப் படிந்துபோவதன் காரணம் என்ன?

தன் வேண்டாத கண்டிப்பு, நம்பிக்கையால் குழந்தை கள், கணவன், குடும்ப வாழ்க்கை பாதிக்கப்படுவதைக்கூட

உணர முடியாமல் அது என்ன அசுர, அசட்டுப் பழக்க வழக்கம்?

யோசிக்க யோசிக்க ஜானகியைப் போலவே இன்னும் பலரைச் சந்தித்திருப்பது ஞாபகத்துக்கு வந்தது.

வீட்டைத் தானே பூட்டிவிட்டு, சினிமாவுக்கு வந்து இருட்டில் உட்கார்ந்ததும், 'சரியாகப் பூட்டினோமா?' என்கிற சந்தேகம் எழ, பாதி படத்தில் மனைவியைக் கிளப்பி, 'உங்களோட எப்பவும் இதே ரோதனையாப் போச்சு' என்று அடிக்கடி மனைவியிடம் வாங்கிக்கட்டிக் கொள்ளும் அசோக்...

சென்னையிலிருந்து பிறந்த வீட்டுக்கு வந்துவிட்டு, ஹீட்டர் ஸ்விட்சை அணைத்தோமா, கொல்லைக் குழாயை மூடினோமா என்று ஓயாமல் புலம்பி, அடுத்தவர்களைப் பிடுங்கியெடுத்து, 'இனிமே நீ உன் வீட்டை விட்டு வராதே... எப்பப்பார்! இந்தப் பிடுங்கலுக்கு பதில் சொல்லி மாளலை' என்ற பெற்றோரின் சிடுசிடுப்பைப் பொருட் படுத்தாமல் ட்ரங்கால் போட்டு, தினமும் கணவரைத் தொணதொணக்கும் சாவித்திரி...

அட்ரஸ் எழுதினோமா, ஒட்டினோமா, கையெழுத்து போட்டோமா என்று ஒவ்வொரு முறை லெட்டர் எழுதி, போஸ்ட் செய்த பிறகும் கவலைப்படும் சேஷன்...

பஸ் வருவதற்குள் விநாயகர் அகவலை முழுசாய் ஒரு தரம் சொன்னால் இன்று மானேஜர் சுமுகமாக இருப்பார் என்று நம்பும் மலர்விழி...

புத்தகங்களை அலமாரியில் இப்படி அடுக்கி வைத்தால்தான் முதல் வகுப்பில் பாஸ் பண்ணுவேன் என்ற கண்மூடித்தனமான நம்பிக்கையில், யாராவது தெரியாத் தனமாய் அலமாரியைத் தொட்டு, ஒரு புத்தகத்தை நகர்த்தி விட்டாலும் கூரையே இடிந்துபோகிற மாதிரி கத்தும் ஜகதீஷ்...



மேஜைமேல் பேனா இந்தப் பக்கம், பென்ஸில் இந்தப் பக்கம், ரப்பர் இப்படி, பேப்பர் வெயிட் அப்படி இருந்தால் தான் பொழுது நல்லவிதமாகப் போகும் என்று மனப்பூர்வமாய் நினைக்கும் விவேக்...

காரில் பயணிக்கையில் ஒருவிதக் கட்டுப்பாடும் இன்றி இஷ்டத்துக்குப் பேசி சிரித்தாலும், தானே ஓட்ட வேண்டிய சமயங்களில் கண்ணில் தென்படும் அத்தனை கோவில் களுக்கும் ஒரு தரம் கட்டாயம் கன்னத்தில் போட்டுக் கொள்ளாவிடில் விபத்து ஏற்படும் என்று நம்பும் ராஜீவ்...

இரவு படுக்கச் செல்லுமுன், கிழக்குப் பக்கம் பார்த்து நின்று, புடவையைக் களைந்து நைட் ட்ரஸ் அணிந்தால் மட்டுமே நன்றாக உறங்க முடியும், இல்லாவிட்டால் அன்றைய உறக்கத்துக்கு 'குட் பை' என்று ஆணித்தரமாக நினைக்கும் மேரி...

இன்னும் இந்த ரீதியில் எத்தனை பேர்கள்!

அன்றாட வாழ்க்கையில் இட்தும், வலதுமாய் இப்படி வேண்டாத பழக்கம், நம்பிக்கைகளால் ஆக்கிரமிக்கப்பட்டி ருப்பவர்களை அடிக்கடி சந்திக்க நேர்ந்தும், கொஞ்சம் நிதானித்து இவர்களைப்பற்றி இதுவரை சிந்தித்திருக் கிறோமா?

ஏன் இப்படி இருக்கிறார்கள் என்று அலசத் துணிந்தி ருக்கிறோமா?

இவையெல்லாம் வெறும் பழக்கங்கள்தானா, அல்லது ஏதாவது கோளாறின் அறிகுறிகளா?

'எந்த நடவடிக்கையும் சம்பந்தப்பட்ட மனிதரையும், அவரைச் சார்ந்தவர்களையும் வித்தியாசமாகப் பாதிக்காத வரை அது சாதாரண பழக்கம் மட்டுந்தான்; ஆனால், எல்லையைக் கடந்து எரிச்சல், கோபம், நிதானமின்மை போன்ற உணர்வுகளைத் தொடர்ந்து ஒரு காரியம்

எழும்புமேயானால், அது கண்டிப்பாய் வரப்போகும் ஒரு கோளாறுக்கான அறிகுறியே. சுத்தமோ, நம்பிக்கையோ, பழக்கமோ— வரையறை மீறி அதிகமாகி, சுற்றியிருப்பவர் புருவங்களை 'என்ன இது?' என்று தூக்க வைத்தால்— அங்கு 'அப்ஸஸிவ் கம்பல்ஸிவ் நியூரோஸிஸ்' ஜனித்து விட்டது என்று பொருள்.

இப்படி நான் கூறவில்லை. சைக்கியாட்ரிஸ்ட்கள் சொல்கிறார்கள்.

இந்த 'அப்ஸஸிவ் கம்பல்ஸிவ் நியூரோஸிஸ்' என்பதன் ஜாதகத்தை, விஞ்ஞான விளக்கங்களுடன் அடுத்த அத்தியாயத்தில் பார்க்கலாம்.

# 41

**அப்ஸஸிவ் கம்பல்ஸிவ் நியூரோஸிஸ்...**

வாயில் நுழையக்கூடக் கஷ்டப்படுத்தும் இதற்கு தமிழில் பொருத்தமாக ஒரு பெயரைச் சூட்டலாமா?

சில எண்ணங்களால் அழுத்தமாக ஆக்கிரமிக்கப்பட்ட மனநிலை?

வேறு?

ம்ஹூம்— புரிபடவில்லை.

மனத்தில் பதியும்படி இன்னும் எளிமையாக யாராவது மொழிபெயர்த்துக் கூறினால் சந்தோஷப்படலாம்.

நிற்க—

அப்ஸஸிவ் கம்பல்ஸிவ் நியூரோஸிஸ்— (இனி, 'அ.க. நியூரோஸிஸ்')— என்றால் என்ன?

ஒரு குறிப்பிட்ட எண்ணத்தின் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து உடனே அதைச் செயலில் காட்டவேண்டும் என்கிற துடிப்பு எழுவது வரை சாதாரண பழக்கமாகத் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளும் குணம், எதிர்பார்த்த பலன்கள் இல்லாததாலோ, அல்லது வேறு எந்த காரணத்தாலோ தாங்கமாட்டாத தவிப்பையும், வேண்டாத விளைவுகளையும் குறிப்பிட்ட நபரிடம் உண்டுபண்ணும் போது, ஒரு மனக்கோளாறாகக் கருதப்பட்டு அ.க. நியூரோஸிஸ் என அழைக்கப்படுகிறது. புரிகிறதா?

இதை ஓர் உதாரணத்தின் மூலம் சுலபமாகப் புரிந்து கொள்ள முயற்சிக்கலாம்.

கற்பகம் சுபாவத்தில் ரொம்ப சுத்தமானவள், கண்டிப்பானவள், எதையும் திட்டமிட்டு செய்வதில் நம்பிக்கை உள்ளவள்.

பள்ளி, கல்லூரி நாட்களிலே ஞாயிறு அன்று தன் துணிமணிகளைத் தானே துவைத்து, இஸ்திரி செய்து கச்சிதமாக அலமாரியில் அடுக்கிவைத்துக்கொள்வாள்.

எதிலும் ஒரு ஒழுங்கு இருக்கவேண்டும் என்கிற எண்ணத்தோடு, புடவைகளின் மடிப்பு ஒரு பக்கமாயும், குஞ்சலங்கள் இன்னொரு பக்கமாயும் அடுக்கி, அவசரத்தில் திண்டாடாமல் இருக்கவேண்டி ரவிக்கைகளை நிறம் வாரியாக வைக்கும் இவளது நெர்விசான காரியம், பெரியவர்களிடம் பல சந்தர்ப்பங்களில் ஷொட்டு வாங்கித் தந்திருக்கிறது.

இந்த கற்பகத்துக்குக் கல்யாணம் ஆயிற்று.

ஆரம்ப நாட்களில் புருஷனும், மாமியாரும், மிச்ச புக்கக மனிதர்களும்கூட இவள் காரியங்களின் சவரணையைப் பார்த்து மூக்கில் விரலைத்தான் வைத்தார்கள்.

ஆனால் போகப்போக, தன் அலமாரி மட்டுமல்லாது புருஷன், மற்ற நபர்களின் பெட்டி, அலமாரிகளிலும் இதர நடவடிக்கைகளிலும் இதே சுத்தம், ஒழுங்கை கற்பகம் எதிர்பார்க்கத் துவங்க, பிரச்சினை முளைவிட்டது.

—ஆபீஸ் இல்லாமல் அக்கடா என்று உட்கார எனக்குக் கிடைப்பது ஞாயித்துக்கிழமை ஒரு நாள்தான். அன்று ஒட்டடை அடி, தூசி தட்டு, குத்துவிளக்குக்கு பாலிஷ் போடு, சாமான் அறையை ஒழிக்க வா— என்று அண்ணி விரட்டுவது எனக்குப் பிடிக்கவில்லை. இது என்ன வீடா இல்லை ராணுவப் பயிற்சி முகாமா?— இது முதல் நாத்தனாரின் புகார்.

—இது மட்டுமா? என் அலமாரி, என் புத்தகங்கள், என் சாமான்கள், இவற்றை என் இஷ்டம்போல வைக்கவிடாமல் 'பாடப் புத்தகம் இந்தப் பக்கம்,' 'கதைப் புத்தகம் அந்தப் பக்கம்,' இது இப்படி, அது அப்படி— என்று





இவர்கள் என்ன தொணதொணப்பது?—இது இரண்டாவது நாத்தனார்.

இந்த மாதிரி புகார்களைத் தவிர, நினைத்ததை நினைத்தவுடன் பண்ண இயலாது போனால், அன்று கற்பகம் புருஷனை உண்டு இல்லை என்று ஆக்கிவிடுவது தான் தாங்க முடியாது போயிற்று.

—கரெண்ட் எப்போது நின்றது! இஸ்திரி பண்ணா விட்டால் அறை முழுக்க கசங்கின துணிகள் வாரி இறையுமே! நான் என்ன செய்வேன்? திட்டமிட்டபடி வேலைகள் நடக்காவிட்டால் வீடு நாறிவிடும் என்பதுகூடப் புரியாமல் சும்மா உட்கார்ந்திருந்தால் எப்படி? கரெண்ட் எப்போது வரும் என்று போன் பண்ணிக் கேளுங்களேன்– இல்லாவிட்டால் லாண்டரியில் கொடுத்தாவது வாங்கி வாருங்களேன்.

கற்பகம் பொருமலுடன் நிற்கமாட்டாள். கூரை இடிந்து விழுந்துவிடப்போகும் தவிப்புடன் படபடப்புக்குள்ளாகி சின்னக் குழந்தையாய் அழத் துவங்கிவிடுவாள்.

பொய் இல்லை, நிஜம். ஒரு ஞாயிறு அன்று தெரியாத்தனமாய் அவர்கள் வீட்டுக்குப் போய்விட்டு இந்தக் கூத்தை என் கண்ணால் பார்த்திருக்கிறேன்.

உப்பு சப்பில்லாத விஷயம். அதற்கா இத்தனை ஆர்ப்பாட்டம்?— சடக்கென்று தூஷிக்க முற்படுபவர்கள் கொஞ்சம் நிதானிக்க வேண்டும்; கற்பகம் வேண்டுமென்றே இப்படி நடக்கவில்லை. அவளையும் மீறி ஒருவிதக் கோளாறு அவளை ஆட்டிப்படைக்கிறது— என்பதை, விமர்சனம் பண்ணுமுன் உணரப் பார்க்கவேண்டும்.

சின்ன வயசில் சாதாரண— ஏன், நல்ல என்றுகூட சொல்லலாம்— பழக்கமாகக் கருதப்பட்டது, ஒரு எல்லையைத் தாண்டி அ.க. நியூரோஸிஸ் ஆக மாறியதற்கு கற்பகம் நல்ல உதாரணம்.

இந்த அ.க. நியூரோஸிஸ் திருமணமான/ ஆகாத, ஆண்/ பெண் இருபாலார்களிடையேயும் பரவலாகக் காணப் பட்டாலும், பணக்கார வர்க்கத்தினரிடையேயும், அறிவு ஜீவிகளிடமும் அதிகமாக இருக்கும் சமாச்சாரம் என்று ஆராய்ச்சிக் குறிப்பு விரல் நீட்டுகிறது.

சின்ன வயசிலும், அடலஸண்ட் (பருவமடையும்) பிராயத்திலும், தான் வளர இந்த ஆள் சரியானவரா என்று மோப்பம் பிடித்துவிட்டு, ஸ்வாதீனத்துடன் உள்ளே நுழை யும் குணம், இடத்தைக் கொடுத்து செமை தீனி போட்டு வளர்த்தால் சிக்கிரமே பிரச்சினையாக உருமாறுகிறது.

சரி— திடுமென இப்படி எல்லை மீறி இந்தக் குணம் கோளாறாக மாறுவதற்குக் காரணம்தான் என்ன?

புள்ளி குத்த முடியாது; எனினும், சிறு பிராயத்தில் வரும் காய்ச்சலோ, வியாதியோ, ஏதோ, ஒரு அழுத்தமான சம்பவத்தின் பாதிப்போ, சிலருக்குத் தங்கள் மேலேயே ஒருவித அருவருப்பை, தங்களைக் குறித்து ஒரு வெட்க உணர்வை எழுப்புவது அ.க. நியூரோஸிஸ் ஜனிக்க உதவுகிறது என்கிறார்கள் நிபுணர்கள்.

Displacement of fear- பயம் இடமாறிப் போவதும் ஒரு காரணம் என்கிறார் மனோதத்துவமேதை ஃப்ராய்ட்.

இந்த அ.க. நியூரோஸிஸை இரண்டு வகையாய் பிரிக்கலாமாம்.

ஒன்று: அழுத்தமாக ஆக்கிரமித்துவிட்ட எண்ணங் களைச் செயலாற்ற நினைக்கும் மனநிலை.

இரண்டு: தான் இப்படி வேண்டாத எண்ணங்களால் பீடிக்கப்பட்டிருப்பதை உணர்ந்து, அதைத் தவிர்க்கப் பாடுபட்டு தவிக்கும் மனநிலை.

முதலாவதுக்கு சென்ற அத்தியாய ஜானகி, மேலே குறிப்பிட்ட கற்பகம் சரியான உதாரணங்கள் என்றால்; இரண்டாவதுக்கு சீதாராமன்.



சீதாராமன் தனியார் நிறுவனம் ஒன்றில் லைப்ரேரிய னாகப் பணியாற்றின வரையில் பிரச்சினை ஏதும் இல்லை. கெட்டிக்காரன், வேலையில் வெகு சிரத்தை — என்ற பாராட்டுக்களோடு இருந்தவன், சும்மா இருந்த சமயத்தில் எம்.ஏ. எழுதிப் பாஸ் பண்ணிவிட்டு, இன்னொரு கம்பெனியில் கூடுதல் சம்பளத்தில் உதவி மானேஜராகப் பதவி ஏற்க, தலைவலி தொடங்கியது.

நூலகப் பொறுப்பாளராக இருந்தவரையில் அந்த வேலையைச் செம்மையாகச் செய்ய உதவிய அதீத ஒழுங்கு, கண்டிப்பு, நேரம் தவறாமை இத்தியாதி எண்ணங்களே இப்போது பத்து பேர்களைக் கட்டிமேய்க்க வேண்டிய புது வேலையில் பிரச்சினை எழக் காரணமாயின.

ஒன்பதே முக்காலுக்கு சீட்டில் இருக்கவேண்டிய சுந்தரம், ஒன்பது ஐம்பதுக்கு வருவதும், மேஜைமேல் டைப்பிஸ்ட் ராணி ஃபைல்களை ஒழுங்கில்லாமல் வைத் திருப்பதும், ஆல்பர்ட் உரக்கப் பேசிச் சிரிப்பதும்கூட சீதா ராமனால் தாங்க முடியாதுபோக, எதையும் கண்டு கொள்ளாமல் இருக்கப் பார்த்து, இயலாமல், சதா சர்வ காலம் கடுவன் பூனையாக 'உர்'ரென்று மாறி சண்டை போட்டு, எரிந்து விழுந்து, பின்•உடனே தன் செய்கைக்காக வருந்த— வேலையில் சேர்ந்த ஆறாம் மாசம் 'ஸாரி, உங்களால் மற்ற ஊழியர்கள் கஷ்டப்படுகிறார்கள். ராஜினாமா செய்துவிடுங்கள்; எல்லாருக்கும் நல்லது' என்று மானேஜர் அவனைத் தனியாகக் கூப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு விஷயம் முற்றிவிட்டது.

வேலையை இழந்தபின், அறையை விட்டு வெளியே வராமல், பிரமை பிடித்த மாதிரி ஏதும் ஈடுபாடு இல்லாத வனாக மாறிய சீதாராமன், சைக்கியாட்ரிஸ்டிடம் அழைத் துச் சென்று கெமிகல் இம்பாலன்ஸுக்கு மருந்துகளும், தெரபியும் கொடுத்த பிறகே, ஓரளவுக்குத் தெளிந்தி ருக்கிறான்.

பொதுவாக அ.க. நியூரோஸிஸ் உள்ளவர்கள் அழுத்தமான பர்ஸனாலிடி கொண்டவர்கள். எதையும் உன்னிப்பாகக் கவனித்து திட்டமிட்டு, திருத்தமாகச் செய்யும் குணம், ஒரு பாதுகாப்பு உணர்வைக் கொடுப்பதால், தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று சாதிப்பது இவர்களின் இயல்பு. தன்னிச்சையாக ஓவியர், சிற்பி, நூலகர் போன்ற தொழில்களைச் செய்கையில் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் இருப்பார்கள். ஒருவரிடம் அடிபணிந்து போகையிலோ நிர்வாக வேலை செய்ய முற்படுகையிலோ, தங்களது வளைந்து கொடுக்காத குணத்தாலும், அதீத எதிர்பார்ப்புகளாலும் தங்களையும் அறியாமலேயே மன நோயாளிகளாகிவிடுகின்றனர்.

தனியாக அமர்ந்து சுய அலசல் செய்துகொள்ளும் போது, வேண்டாத குணம் நம்மையும், நம்மைச் சார்ந்தவர்களையும் பாதித்து, நிம்மதியைப் பறிக்கும் அளவுக்கு வளர்ந்துவிட்டதாக உணர்ந்தோமானால், அதை உடனே குறைக்கப் பார்த்து, நம்மால் இயலாதுபோனால் மனவியல் நிபுணரிடம் சென்று நம்மைச் சரி செய்துகொள்ள நாம் தயங்கவே கூடாது.

காலம் மாறிவிட்டதையும், வைத்தியத்துறை ஏகத்துக்கு வளர்ந்துவிட்டதையும் ஞாபகப்படுத்திக்கொண்டால், மனக்கோளாறுகள் பயந்து ஒளிக்கவேண்டிய பிரச்சினைகளும் அல்ல, குணப்படுத்த இயலாத வியாதிகளும் அல்ல என்பது விளங்கும்.

கண் சரியாக இல்லாவிட்டால் கண் டாக்டரிடம் சென்று கண்ணாடி அணிவது மாதிரிதான், மனம் சரியில்லாத போது மனவியல் நிபுணரிடம் சென்று அந்தக் கோளாறை நிவர்த்தி செய்துகொள்வதும்... நினைவு இருக்கட்டும்.

# 42

"ஏனோ சில நாட்களாக வாழ்க்கை வெறுத்துவிட்டது. அத்தனையும் விட்டுவிட்டு கண்காணாமல் எங்காவது ஓடிவிட்டால் தேவலைபோலத் தோன்றுகிறது..."

"என்ன குடும்பம், என்ன உறவு மனிதர்கள்! ஒன்றும் வேண்டியிருக்கவில்லை. எல்லோரும் சுயநலவாதிகள். நம்மை யார் புரிந்துகொள்கிறார்கள்? எதற்காக இந்த வாழ்வைத் தொடர வேண்டும்? ஹூம்... எதற்கும் அர்த்தம் இல்லை. அர்த்தமே இல்லை..."

"பட்ட காலிலேயே படும் என்கிற தினுசில் இப்படி மேலே மேலே அடிகளாக விழுந்துகொண்டே இருந்தால் யாரால் தாங்க முடியும்? பைத்தியம் பிடிக்காத குறையாய் வாழ்வதனால் யாருக்கு என்ன லாபம்? போதும் சாமி... போதும்... அனுபவித்த வரைக்கும் போதும் என்று உயிர் பிரிந்துவிட்டால் நிம்மதி..."

இப்படி, இன்னும் என்னென்ன விதங்களில் அன்றாடம் விரக்தியின் வெளிப்பாடுகளைக் கேட்கிறோம்! ஏன், நாமே பேசுகிறோம்!

இதற்கெல்லாம் காரணம்?

வேறு என்ன?— டிப்ரஷன்— மனச்சோர்வுதான்.

மனச்சோர்வு என்பது: கவலை, படபடப்புடன் கூடிய எதிர்பார்ப்பு, விரக்தி இவற்றிலிருந்து நிச்சயம் மாறுபட்டது. (Depression is different from worry, anxiety or frustration.)

ஒரு காரியத்தை எண்ணி, திட்டமிட்டுச் செயலாற்றும் போதே இது சரியாக வருமா என்று கவலைப்படுவதையும், நன்றாக அமையவேண்டுமே என்று அதீத படபடப்புடன் எதிர்பார்ப்பதையும், முடிவு எதிர்பார்த்த விதத்தில் இல்லாது

போனால், எரிச்சலுடன் கூடிய விரக்தி, கையாலாகாத் தனத்துக்கு உள்ளாவதையும் மனச்சோர்வாகக் கருதிவிடும் பழக்கம் நம்மில் பலருக்கு இருக்கிறது.

தவறு.

எரிச்சல், ஆத்திரம் போன்ற தளும்பல்கள் இல்லாமல், சலனமேயில்லாமல் அடங்கிப்போய், சுயபச்சாதாபத்துக்கு ஆளாகி தன்மேலும், தான் சார்ந்திருக்கும் சூழ்நிலை மேலும் சலிப்பு உண்டாகி, இனி யாராலும் சரிபண்ண முடியாத படி எல்லாமே சீர்கெட்டுப்போய்விட்ட தீவிர நம்பிக்கை யுடன், தெளிவாக புத்தி செயல்பட இயலாமல் கனமான ஓர் அசமஞ்சப் போர்வையை எடுத்துப் போர்த்திக்கொள் ளும் நிலைக்குப் பெயர்தான் மனச்சோர்வு. புரிகிறதா?

நாள் முழுக்க மாடுமாதிரி உழைத்துவிட்டு, அக்கடா என்று உட்காரும்போது தோன்றும் உடல் சோர்வையும், முதலில் கூறின விரக்தி நிலையையும் தனியாக ஒதுக்கி விட்டு நிதானமாக யோசித்தால், மனச்சோர்வின் தனித்தன்மை கண்டிப்பாய் புரியும்.

வைத்திய நுணுக்கத்தோடு அணுகாமல் எளிமையாக விளக்குவதென்றால், மனச்சோர்வு இரண்டு வகைப்படும்.

நிரந்தரம், தற்காலிகம்.

இதில் நிரந்தரத்துக்கான விமோசனம் மனோதத்துவ நிபுணர்கள் சிகிச்சையில் என்றால், தற்காலிகத்திலிருந்து விடுபடுவது சத்தியமாய் நம் கையில்தான்.

முதலில், நிரந்தர மனச்சோர்வு என்றால் என்ன என்பதை லேசாகத் தொட்டுவிட்டு, பிற்பாடு தற்காலிகத் துக்கு வருவோம்.

பைபோலார், யூனிபோலார், ரியாக்டிவ், மேனியாக் (Bipolar, Unipolar, Reactive, Maniac Depression) என்று



வைத்தியத்துறை பல வகைகளாகப் பிரிக்கும் மனச்சோர்வு வியாதிக்குள் புகுந்து புறப்படாமல், ஓரிரு உதாரணங்கள் மூலம் அவற்றைச் சுலபமாய் புரிந்துகொள்ள முயற்சிக்கலாம்.

விவேகானந்தனுக்கு இப்போது வயசு இருபத்தி எட்டு. எந்தத் தப்புத்தண்டாவும் செய்யாத, ஒரு தீய பழக்கத்துக்கும் அடிமையாகாத, அடிப்படையில் சாதுவான இவனுக்கு ஐந்து வருஷங்களுக்கு முன் திருமணம் ஆயிற்று.

முதல் பிரசவத்துக்கு மனைவி சென்றிருந்தபோது தனிமையின் தொல்லை தாங்காமலும், கூட இருந்த நண்பரின் தூண்டுதலாலும் இன்னொரு பெண்ணிடம் போய் வந்தவனுக்குள், சின்னதாகக் குற்றவுணர்வு புகுந்து கொண்டது.

இது, மனைவி குழந்தையுடன் திரும்பி வந்ததும் அவளை ஒவ்வொரு முறை நெருங்கும்போதும், ஏறிடும் போதும், தொடும்போதும் தபதபவென்று ராட்சஸத்தன மாய் வளர, விவேகானந்தன் மனச்சோர்வுக்குள்ளானான்.

காதுக்குள் யாரோ 'நீ தப்பு பண்ணினவன். அசிங்க மானவன்' என்று சதா முணுமுணுக்கிற மாதிரியும், உடம்பில் வியாதி புகுந்துவிட்ட மாதிரியும் அருவருத்துப் போக, பெண்டாட்டியை எந்தவிதத்திலும் நெருங்க முடியாமல் தவித்தவன், மெதுவாகத் தன்னைச் சார்ந்த அனைவரையுமே வெறுக்க ஆரம்பித்தான். தனிமையை நாடினான். செய்த காரியத்தை நினைத்துநினைத்து வெட்கி, குமைந்தான். அடிக்கடி வாய்விட்டு அழுதான். மொத்தத்தில் ரொம்ப சீக்கிரமே மனநோயாளியானான்.

ஆறு மாசங்கள் முன்புவரை தெளிவான பேச்சு, நடவடிக்கைகளுடன் இருந்த கணவர் திடுமென பித்து பிடித்த மாதிரி நடந்துகொள்ள, விவேகானந்தனின் மனைவி குழம்பித்தான் போனாள்.

முதல் சில நாட்கள் குழந்தையைக் கவனிக்கும் மும்முரத்தில் ஆழ்ந்திருந்தவள், கணவனின் போக்கில் நிச்சயம் ஏதோ கோளாறுதான் என்பதை உணர முடிந்ததும் அதிர்ந்தாள்.

பெரியவர்களிடம் கூற, எல்லோருமாகச் சேர்ந்து துவக்கத்தில் மூடி மறைக்க முயன்றார்கள்; முடியாமல் போனதும் காற்று, கருப்பு என்று தீர்மானித்து மந்திரம், தந்திரத்தில் இறங்கினார்கள். பலனில்லாமல் ஆன பிறகு, வேறு வழியின்றி ஒரு தினுசாய் மனசைத் தேற்றிக்கொண்டு மனவியல் நிபுணரிடம் அழைத்து வந்தார்கள்.

"கிட்டத்தட்ட ஒரு வருஷத்துக்கும் மேலாய் கோளாறு வேர்விட்டுக்கொண்டுவிட்டதில் வெகு சுலபமாய் குணப் படுத்தியிருக்க வேண்டிய கேஸ், மாசக்கணக்காய் இழுபட்டு விட்டது." விவேகானந்தன் பற்றின விவரங்களை எடுத்துச் சொன்ன சைக்கியாட்ரிஸ்ட் இப்படிக் கூறினபோது, அவர் குரலில் விரவியிருந்த வருத்தத்தை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

"இந்தத் தாமதத்துக்குக் காரணம் என்ன டாக்டர், பயமா, அறியாமையா?"

"இரண்டும்தான். சாதாரண தலைவலிக்குக்கூட எக்ஸ்ரே எடுத்து, நிபுணரிடம் போகும் மக்கள், ஏனோ மனவியல் வைத்தியரிடம் வருவது என்றால் மட்டும் பயப்படுகிறார்கள். 'பைத்தியப்' பேர் வந்துவிடுமோ என்று அஞ்சுகிறார்கள். இது ரொம்பத் தவறான எண்ணம். மனசும் உடம்பில் ஓர் உறுப்புதான். மற்ற உறுப்புகள்போல, மனசுக்கும் அவ்வப்போது கோளாறு வரலாம். இதைச் சரிசெய்து, ஆரோக்கியமாக வைத்திருப்பது அவசியம் என்று உணர்ந்துவிட்டால், கட்டாயம் பல பிரச்சினைகளை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடலாம்."



டாக்டர் கூறின வார்த்தைகளை ஒரு தரத்துக்கு இரண்டு தரம் நினைத்து புத்தியில் படிய வைத்துக் கொண்டு அடுத்த உதாரணத்துக்குப் போகலாம்.

புவனேஸ்வரி.

நீட்டு நிற்கும் வயசில் (மெனோபாஸ்) ஹார்மோன்கள் படுத்திய பாட்டில், கணவருக்குத் தன்னைப் பிடிக்கவில்லை என்ற மனச்சோர்வுக்குள்ளாகி, தான் வேண்டாதவளாகிப் போனதால், தூங்குகையில் தன்னைக் கொலை செய்து விடுவார் என்கிற பயம் ஜனித்து, பிரமை பிடித்த நிலையைத் தொட்டு, இரண்டு வருஷங்கள் கஷ்டப்பட்டு, சிகிச்சை எடுத்து, ஒரு வழியாய் நீட்டு நின்ற கையோடு பழைய நிலையை அடைந்தவர்.

ரிடையர் ஆன கையோடு ஆண்களிடையேயும், மெனோபாஸ் உள்ள பெண்களிடையேயும் தற்காலிக மனச்சோர்வு பரவலாகக் காணப்படும் சமாச்சாரம்தான் என்றாலும், சிலர் விஷயத்தில் கோளாறு தற்காலிகமாக இல்லாமல், நிரந்தரமாக மாற நேர்ந்தால், உடனடியாக சம்பந்தப்பட்டவர்களுக்கு தகுந்த சிகிச்சை அளிக்க அவர்களைச் சார்ந்தவர்கள் முன்வர வேண்டும். தவிர, மனச்சோர்வு எங்கெல்லாம் தொடர்ந்து காணப்படுகிறதோ அங்கு நிபுணரின் ஆலோசனை, உதவி, அவசியம் தேவை என்பதால், தயவுசெய்து யாரும் தயங்கவேண்டாம்; மற்றவர்கள் என்ன சொல்வார்களோ என்று அஞ்ச வேண்டாம்; பைத்தியப் பட்டம் வந்துவிடுமோ என்று பயப்படவும் வேண்டவே வேண்டாம்.

மனசில் ஆயிற்றா?

இனி, தற்காலிக மனச்சோர்வை அடுத்த அத்தியாயத் தில் சந்திக்கலாம்.

# 43

ஏதோ ஒரு காரணத்தால், (அல்லது இன்ன காரணம் என்று புரியாமல்கூட) சில மணி நேரங்கள், சில சமயங் களில் சில நாட்கள் வரையிலும், எதுவுமே பிடிக்காதுபோய், 'ச்சே என்ன வாழ்க்கை இது!'— என்கிற சலிப்பால் ஆக்கிரமிக்கப்பட்டு, பின்னர் தானாகவோ அல்லது 'இந்த நிலை நீடிப்பது நல்லதற்கு இல்லை' என்கிற உந்துதலி னாலோ, நம்மைச் சரிசெய்துகொள்வதுதான் தற்காலிக மனச்சோர்வும், அதிலிருந்து நாம் மீண்டு வருவதும்...

நம்மில் பலரும் இப்படிப்பட்ட மனச்சோர்வுக்கு அடிக்கடி பலியாவதால், இந்த அனுபவத்துக்குக் காரணம் என்ன, இந்த அவஸ்தையை எப்படித் தடுக்கலாம் என்பதை விளக்கமாகவே ஆராயலாம்.

தற்காலிக மனச்சோர்வுக்குப் பல காரணங்கள் அஸ்திவாரங்களாகின்றன என்கிறது மனவியல் துறை.

அவற்றில் சிலவற்றை உதாரணங்களோடு பார்க்கலாம்...

டிப்ரிவேஷன் (deprivation) 'இது வேண்டாம்' என்று தீர்மானிப்பதால் உண்டாகும் மனச்சோர்வு.

வேதகிரி, மத்தியதர வகுப்பைச் சார்ந்த குடும்பஸ்தர். அரசாங்க அலுவலகத்தில் தலைமைக் கணக்கராக இருக்கிறார். வெற்றிலையோடு, புகையிலை போடும் பழக்கம் கிட்டத்தட்ட இருபது வருஷங்களாக இருந்துவருவதை நிறுத்த எத்தனையோ முயன்றுவிட்டார். எல்லாவற்றுக்கும் போன வருஷம் வரை 'பெப்பே'தான்.

சென்ற நவம்பரில் ஒருதரம் மின்சார ரயிலில் பயணிக்கையில், வண்டி நிற்கப்போவதை உணராமல் ஜன்னல் வழியாகப் புகையிலைச் சாற்றைத் துப்பப்போய், அது பிளாட்பாரத்தில் நின்றிருந்த ரோஷக்கார ஆண்



ஒருத்தர்மேல் பட்டுவிட, அப்புறம் என்ன? வண்டி நின்றதும் காலரைப் பிடித்து இழுத்துப் புரட்டாத குறைதான். நல்ல வேளையாய், கூடவந்த நண்பர்கள் தடுத்தார்களோ, அன்றைக்கு வேதகிரி பிழைத்தாரோ!

இந்தச் சம்பவம் வேதகிரியினுள் உறங்கிக்கொண்டிருந்த தன்மான உணர்வைத் தட்டியெழுப்ப, 'அட— இனியும் இந்தப் பழக்கத்தை வைத்துக்கொண்டிருந்தால் நான் மனுஷன்தானா?' என்று முருகன் படத்துக்கு முன் நின்று 'விட்டேன் இந்தப் பழக்கத்தை' என்று சத்தியம் பண்ணிவிட்டார்.

சந்தோஷம்.

ஆனால், மறுநாளிலிருந்து தொடங்கியது பிரச்சினை...

இருபது வருஷ பழக்கத்தை சட்டென்று நிறுத்தியதும், லாகிரி வஸ்துவின் போதைக்கு அடிமையாகிவிட்டிருந்த உடம்பு சண்டி பண்ணத் துவங்கியது.

சதா தொண்டையில் அரிப்பு, நாக்கில் வரட்சி...

இருப்புக்கொள்ளாமை, நமநமவென்று எரிச்சல், பசியின்மை...

நான்கு நாட்கள் இப்படி...

அப்புறம் யார் எக்கேடு கெட்டால் எனக்கென்ன, என் தவிப்பு அல்லவா முக்கியம் என்கிற சலிப்பு மெள்ள மெள்ள பீடிக்க, அடுத்து வந்த நாட்களில் வேதகிரி ஆபீஸ் போகவில்லை, யாருடனும் பேசவில்லை. நடமாடக்கூட இல்லை...

பத்து நாட்கள் இப்படிக் கழிந்த பின்னர், சற்றும் எதிர்பாராத பெரிய இடத்தில் பெண்ணுக்குத் திருமணம் பேச தரகர் வர, புத்தி அதில் போக வேண்டிய நிர்ப்பந்தம் எழ, ஒருதினுசாய் தன் தற்காலிக மனச்சோர்விலிருந்து வேதகிரி மீண்டார்.

சிகரெட்டை நிறுத்தி மனச்சோர்வுக்குள்ளாகி, ஏகத்துக்குப் புகை பிடித்துத் தாடையில் புற்றுநோய் வந்து அவஸ்தைப்படும் நோயாளியைப் பார்த்து தன்னைச் சரிபடுத்திக்கொண்ட ஆத்மா; நிறைய சினிமா பார்ப்பதை நிறுத்தின சியாமளி; இன்னும் இந்தப் பிரிவுக்குத்தான் எத்தனை உதாரணங்கள்!

சில சந்தர்ப்பங்களில் பிரச்சினைகளை எதிர்நோக்க அஞ்சுவதும்கூட மனச்சோர்வுக்குக் காரணமாகுமாம், கிருஷ்ணனுக்கு உண்டானதைப் போல...

மனைவியை அம்மா படுத்துவது தவறு என்று தோன்றியும், அதை எடுத்துச்சொல்லி கண்டித்தால் அம்மா தன்னை பெண்டாட்டிதாசனாகக் கருதிவிடுவாளோ என்கிற பயத்தோடு வாயை மூடிக்கொண்டுவிட, கடைசியில் அவர்கள் சண்டை பெரிதானதோடு, தன் இயலாமை குறித்து கிருஷ்ணன் மனச்சோர்வுக்கு உள்ளானதுதான் நடந்தது.

லல்லு விஷயம் சுத்தமாக இன்னொன்று...

லல்லு நல்லவள்தான், ஆனால் கண்டிப்புதான் கொஞ்சம் அதிகம்.

ரேஸ் ஆடும் தம்பிக்கு புத்தி புகட்ட வேண்டும் என்ற தீர்மானத்தில், ஒருதரம் அவன் 'என் மனைவிக்குப் பிரசவ வலி எடுத்துவிட்டது. ஆஸ்பத்திரிக்கு அழைத்துப்போக பணம் தா, அக்கா' என்று வந்து நின்றபோது, பொய் சொல்லி ரேஸ் ஆட பணம் கேட்கிறான் என்ற நம்பிக்கையில் மறுக்க, கடைசியில் குழந்தை செத்துப் பிறக்க, இதற்குத் தான்தானே காரணம் என்று இடிந்துபோய் ஒரு மாசம் போல தற்காலிகமாய் லல்லு கலங்கித்தான் போனாள்.

லல்லு இப்படி என்றால், கீதா கதை வேறு.

தாயை இழந்தபின், அப்பாவை மணந்து வீட்டுக்கு வந்த சித்தி இவளைக் கேவலமாக நடத்தியது ஒரு



வடுவாகவே பதிந்துவிட, பிற்காலத்தில் இந்த சித்தியைக் காணநேர்ந்தபோதெல்லாம் அடுத்துவந்த இரண்டு நாட்களுக்கு ஒருவித மனச்சோர்வுக்கு கீதா ஆளானது நிஜம்.

நன்றாகப் படித்துவிட்டு, கண்டிப்பாக முதல் வகுப்பில் தேறிவிடுவோம் என்று நம்பிய மகேஷ், சற்றும் எதிர்பாராத வகையில் மூன்றாம் வகுப்பில் பாஸ் செய்திருப்பதை அறிந்ததும் தன்னம்பிக்கை இழந்து, மேலே படிக்க மாட்டேன், வேலைக்குப் போகமாட்டேன் என்று மூன்று மாசங்கள் போல இடிந்து உட்கார்ந்ததற்குக் காரணம் தற்காலிக மனச்சோர்வே!

பிரசவ வைராக்கியம், ஸ்மசான வைராக்கியம், கேள்விப்பட்டிருப்பீர்களே! இவை உண்டாகத் தூண்டுகோலாக இருப்பதும், வேதனையில் பிறந்த ஒருவகை மனச்சோர்வுதான்...

ஜேஜே என்று எந்நேரமும் மனிதர்கள் புடைசூழ கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து பழகிய உதயராஜா, முதல் முறையாகப் படிப்புக்காக வடக்கே சென்று புது சூழ்நிலையில் தனியாக ஹாஸ்டலில் வாழ நேர்ந்தபோது, அவனையுமறியாமல் தனிமை அவனை மனச்சோர்வுக்கு உள்ளாக்க, தனக்கு வடநாட்டுக் குளிர், உணவு முறை ஒத்துக்கொள்ளாமல் உடம்புக்கு வந்துவிட்டது என்ற சாக்கை சொல்லிக்கொண்டு, படிப்பும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம் என்று ஊர் திரும்பியவன்...

சாரதா கேஸ் இன்னொரு வகையானது.

எப்போதும் கெட்டதையே கற்பனை பண்ணும் பழக்கம் இவளுக்கு உண்டு. பள்ளிக்குச் சென்ற குழந்தை திரும்ப அரைமணி நேரம் கூடுதலானாலும் போயிற்று—பிள்ளை பிடிக்கிறவன் கடத்திச் சென்றுவிட்டான் என்று பதறிவிடுவாள். வேளை கெட்ட வேளையில் போன், தந்தி என்றால் ஊரில் கல்லுகுண்டாக இருக்கும் அப்பா போய்விட்டதாக எண்ணி மயக்கமே போட்டுவிடுவாள்.

இப்படி எதற்கெடுத்தாலும் நெகடிவ் நினைப்புகளை வளர்த்துக்கொண்டதில் சதா மனச்சோர்வுடனே இவள் இருந்ததில் வியப்பு என்ன?

மேலே குறிப்பிட்டவற்றைத் தவிர, எதிர்பாராத சம்பவம், விபத்து, இழப்புக்களும் தற்காலிக மனச்சோர்வை உண்டாக்கக்கூடியவை. மோட்டார் சைக்கிள் விபத்தில் கணவனை இழந்த சுமித்ரா, சமீபத்தில் வீசிய புயலால் வாழைத்தோட்டம் முழுசாக பாதிக்கப்பட்ட விஸ்வேஸ்வரன், காதலனுடன் பெண் ஓடிவிட்டதை கடிதம் மூலம் தெரிந்துகொண்ட விமலா— இவர்கள் எல்லோருமே தங்கள் இழப்புக்களால் மாசக் கணக்கில் கலங்கி, வாழ்வில் சுவாரஸ்யமின்றி இருந்துவிட்டு, இப்போது தேறுவதைத் தவிர வேறு வழி இல்லை என்ற உண்மையை உணர்ந்து சமாதானமாகி இருப்பவர்கள்.

சரி, உதாரணங்கள் போதும்.

இனி, தவிர்க்க இயலாமல் வரும் மனச்சோர்வுகளை ஏற்பதும், அவற்றின் பாதிப்புகளைக் குறைப்பதும் எப்படி?

நடந்தது என்ன என்று தெளிவாகப் புரிந்துகொள்ளுவதும்; மாற்று இருந்தால் உடனே அதை ஏற்பதும்; இல்லாததை, நடந்தது நடந்ததுதான், இனி இதற்கு மாற்று இல்லை என்று உணர்வதும்; நடந்து முடிந்ததைப் புரட்டிக் கிளறுவதினால் வேதனைதான் அதிகம் என்பதைப் புரிந்துகொள்வதும்; கூடுமானவரையில் தனிமையை நாடாதிருப்பதும்; புரிந்துகொள்ளும் நண்பர்கள், உறவினர்கள் இருந்தால் அவர்களோடு மனபாரத்தைப் பகிர்ந்துகொள்வதும்; 'இந்த நிகழ்ச்சியினால் உலகம் முடிந்துவிடவில்லை; இது என்னைப் பாதிக்கவோ அல்லது நிம்மதியைப் பறிக்கவோ இடம் கொடேன்' என்று தீர்மானிப்பதும்; சும்மா உட்காராமல் அடுத்தடுத்து ஏதேனும் காரியங்கள், சிந்தனைகளால் உடம்பு, மனத்தைச் சுறுசுறுப்பாக வைத்திருப்பதும்; புது சூழ்நிலைக்கு மாறுவதும்; முடிந்தால் அடுத்தவருக்கு உதவுவதும்; அவரது துன்பங்களில் பங்கெடுப்பதும்; கடைசியாக, காலம் ஒன்றுதான் எந்த ரணத்துக்கும் சரியான மருந்தாகும் என்பதைப் புரிந்துகொண்டு, தன்னம்பிக்கையுடன் வாழ முயற்சிப்பதும்—



கட்டாயம் ஒருவரை மனச்சோர்வின் பிடிகளிலிருந்து காப்பாற்றிக் கரையேற்றும் பிடிமானங்கள் என்று மனவியல் நிபுணர்கள் அடித்துக் கூறுவது, அனுபவப்பட்டு மீண்டு வந்தவர்களை விசாரித்தவரையில் நிஜம், நிஜம், நிஜம், நிஜம், நிஜம்.

# 44

இரண்டு நாட்களுக்கு முன் வெளிநாட்டிலிருந்து வந்திருந்த நண்பரை வழியனுப்ப வாசல் வரை சென்றேன். அது நாழிகை சிரித்த முகமாக இருந்த நண்பர் சாலையை அடைந்ததும் சட்டென்று மாறிப்போனார்.

தெருவில் ஆங்காங்கே கும்பல் கும்பலாகவும், பரவலாகவும் கிடந்த குப்பைகளை வெறித்துவிட்டு அவர் பேசியபோது குரலில் வருத்தம் விரவியிருந்தது.

"என்ன குப்பை, என்ன சத்தை! தெருவின் ஓரமாய் நடக்கக்கூட முடியாதபடி என்னென்ன அசிங்கங்கள்! எங்கு சென்றாலும் அசுத்தம், நாற்றம்! ஒருகாலத்தில் அழகு நகரம் என்று பேர் வாங்கின சென்னையா இது என்று வேதனையாக இருக்கிறது! சென்ற மாசம் உல்லாசப் பயணிகளாக வந்திருந்த சில நண்பர்கள் சென்னை நகரம் ஒரு மாபெரும் சேரியாக மாறிக்கொண்டு வருகிறது என்று வெளியிட்ட கருத்தை ஏற்கவேண்டியதுதான் போலிருக்கிறது..."

பேசிக்கொண்டு போனவரைத் தடுத்து, "சமீபத்தில் புயல் அடித்தது இல்லையா, அதான் இப்படிக் குப்பையும் சத்தையுமாய்..." என்று நான் துவங்கியதும் கோபத்துடன் நண்பர் குறுக்கிட்டார்.

"ஓ, ப்ளீஸ்! இந்த சப்பைக்கட்டெல்லாம் வேண்டாமே? நான் இங்கிலாந்தில் வேலைபார்ப்பவனாக இருக்கலாம். ஆனாலும் வருஷம் தப்பாமல் தாய்நாட்டுக்கு வந்து மூன்று வாரங்களைக் கழிப்பவன்தான், மறக்காதீர்கள்... இந்தக் குப்பை புயலால் வந்ததில்லை, வரவர சதாசர்வகாலமும் தெருக்களில் காணப்படுவது என்பது உங்களுக்கே தெரிந்ததுதானே? சரி— உங்கள் வாதப்படி புயல் காரணம்





என்றே வைத்துக்கொண்டாலும், புயல் அடித்து இன்று கிட்டத்தட்ட ஒன்றரை மாசங்கள் ஆகப்போகின்றன. இன்னுமா இவை அகற்றப்படவில்லை? கடவுளே! கார்ப்பரேஷனால் இந்த அடிப்படை சுகாதார சமாச்சாரத்தைக் கூடவா ஒழுங்காகச் செய்யமுடியவில்லை?"

"அ... அது வந்து..."

என்ன பதில் கூறுவது என்று புரியாமல் நான் தடுமாற நண்பர் தொடர்ந்தார்.

"எதனால் இந்த நிலை? அரசாங்கத்தில் தொடங்கி மக்கள் வரை எதிலும் ஒரு அசமஞ்சத்தனம், பொறுப்பில்லாமை வேர்விட்டுவிட்டதுதானே காரணம்? நம் நாட்டில் இப்போது எதுவுமே ஒழுங்காக நடப்பதில்லை என்பதை நீங்கள் உணருகிறீர்கள் அல்லவா? எந்த அரசாங்க அலுவலகத்துக்குச் சென்றாலும், பாதி பேர்கள் காண்டீனில் இருக்கிறார்கள், மீதிபேர்களும் விரலை அசைத்து ஒரு சின்ன வேலை செய்வதற்குக்கூட கூசாமல் லஞ்சம் கேட்கிறார்கள்! மனசாட்சியை ஒட்டுமொத்தமாக அடகு வைத்துவிட்டு வேலைக்கு வரும் இவர்கள் இப்படியென்றால், இளைய தலைமுறையினரில் பலர் கட்டுப்பாடே இல்லாமல் வளர்ந்துவருகிறார்கள். நேற்று சில இளைஞர்கள் என்ன காரணத்தாலோ பஸ் ஒன்றை அடித்து நொறுக்கிக்கொண்டிருந்ததை நானே பார்த்தேன்! பொதுச் சொத்துக்களை இங்கே யார் மதிக்கிறார்கள்? சாலைகளை எடுத்துக்கொள்ளுங்கள்... வரி செலுத்துவோரின் பணம் எப்படியெல்லாம் சீரழிக்கப்படுகிறது! சீரான ஒரு சாலையை சென்னையில் உங்களால் காட்ட முடியுமா? எத்தனை குண்டு, குழிகள்! பற்றாதகுறைக்கு, சரியாகத் திட்டமிடாமல் சாலைகளைச் செப்பனிடுவதினால் 'மேன்ஹோல்' அத்தனையும் அரை அடி கீழே போய்விட்ட பைத்தியக்காரத்தனம் வேறு! அரசாங்கம்தான் இப்படி

என்றால், தனியார் நிறுவனங்களோ இன்னும் மோசம்! போனவாரம் மௌண்ட் ரோடு தியேட்டர் ஒன்றில் சினிமா பார்க்கச் சென்றோம். பாதி இருக்கைகளைக் காணவேயில்லை. மிஞ்சி இருப்பவற்றிலும் ரப்பரும் பஞ்சும் வெளியில் நீட்டிக்கொண்டு... இதற்கு ஆறு ரூபாய் கட்டணம்... எப்படி! அடுத்து உணவு விஷயத்துக்கு வாருங்கள்... எதிலும் கலப்படம் இருப்பதால், வந்து இறங்கின மறுநாள் வயிற்றுப்போக்கு தொடங்கிவிடுகிறது! எந்த அக்கிரமத்தையும் எதிர்க்காததோடு எவர் எக்கேடு கெட்டால் என்ன என்று ஒதுங்கிப்போகும் மக்கள்; பொறுப்பில்லாத அரசாங்கம்! தேசப்பற்று, மொழிப்பற்று என்றால் கிலோ என்ன விலை என்று கேட்கும் இளைய தலைமுறையினர்! இத்தனைக்கும் மேலாக, இந்தக் கோளாறுகளை எப்படி நிவர்த்தி செய்வோம் என்று முனையாமல் சப்பைக்கட்டு கட்டும், நொண்டிச் சாக்குகளைத் தேடும் மனோபாவம் வேறு..."

பொருமித் தீர்த்துவிட்டு நண்பர் கிளம்பிப் போக, இந்த இரண்டு நாளாய் நிம்மதியாய் சாப்பிட, உறங்க, அமரக்கூட முடியாமல் அவர் பேசின பேச்சுகள் வலிக்க வலிக்க குடைந்ததில், ஒருவித இருப்புக்கொள்ளாமை என்னை ஆக்கிரமித்திருக்கிறது...

அடிப்படை சுகாதாரம் பற்றிய பிரக்ஞை நம் நாட்டில் சுத்தமாக இல்லாதது நிஜம்தானே!

எத்தனை பேர்கள் இது நம் தெரு, நம் ஊர், நம் மக்கள் என்கிற பொறுப்புடன் காரியங்களைச் செய் கிறோம்!

குழந்தைகளை சாலைகளில் 'இருக்கச்' சொல்லி ஊசுக்கு விக்கும், கண்ட இடங்களில் நினைத்தபோதும் மூக்கைச் சிந்தி, காறித்துப்பும் நபர்கள்தான் எத்தனை எத்தனை!



நம் வீட்டுச் சாக்கடையைத் தெருவில் விட்டுவிட்டு அங்கே அது தேங்கினாலும், ஆயிரக்கணக்கில் கொசு மொய்த்தாலும் நமக்கென்ன என்றுதானே இருக்கிறோம்! இதே மாதிரிதானே குப்பைகள் சமாச்சாரமும்!

வசதி படைத்தவர்கள் நடுவிலேயே இந்த மனோ பாவம் வேர்விட்டிருக்கிறது என்றால், வசதிகள் இல்லாத, சுகாதாரத்தின் அவசியத்தை உணராத, கல்வியறிவு அற்ற ஏழை மக்களைப்பற்றிச் சொல்லவே வேண்டாம் அல்லவா?

இந்தச் சந்தர்ப்பத்தில் எனக்கு சங்கீதாவின் நினைவு வருகிறது.

சங்கீதா வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவள். பணத்துக்குப் பஞ்சமே இல்லை. அவள் வரவேற்பறைக்குள் காலை வைத்தால் செல்வத்தின் பளபளப்பு வெளிச்சத் தோடு நம்மைக் கூசவைக்கும். ஸில்க் துணியால் ஆன சோபா செட் என்ன, லேஸ் கர்ட்டன் என்ன, கார்பெட் என்ன என்று ஒவ்வொன்றும் தடபுடல்தான்...

ஆனால் தப்பித்தவறி இந்த சங்கீதாவின் வரவேற் பறையைத் தாண்டி உள்ளே சென்று அவளது சாப்பாட்டு, சமையல் அறைகளைப் பார்த்துவிட்டோமானால் சத்தியமாய் ஒருவாய் தண்ணீர் உள்ளே இறங்குவதுகூடக் கஷ்டம். அத்தனை ஊழல்.

என்றோ சிந்திய குழம்பு, தயிரால் வரவரத்துப்போன ஈ மொய்க்கும் மேஜை, எண்ணெய் பிசுக்கேறிய சமையல் கட்டு, காலை வைத்தால் பசக்கென்று ஒட்டிக்கொள்ளும் தரை, நன்றாகத் தேய்த்துக் கழுவப்படாத பாத்திரங்கள், எண்ணெய்க் குளியல் கண்ட அடுப்பு, நாறும் முற்றம்... போதுமா?

இவளுடைய படுக்கையறையும் இதே அழகில் இருப்பதைப் பார்த்தபோது நான் அதிர்ந்துதான் போனேன்.

நின்று நிதானித்து யோசிக்கையில் சமையல், குளியல், படுக்கை அறைகளை அசுத்தத்தில் மூங்க வைத்துவிட்டு வரவேற்பறையை மட்டும் பளபளவென்று வைத்திருக்க, ஆடம்பர மோகம் மட்டுமின்றி, சுகாதாரம், சுத்தம் பற்றின அறிவின்மையும் சோம்பேறித்தனமும் காரணங்கள் என்பது புரிந்தது.

மூடாமல் பதார்த்தங்களை வைத்திருப்பதும், கையால் எதையும் தொட்டுப் பரிமாறுவதும், நகம் நிறைய அழுக்கை ஏற்றிக்கொண்டு தண்ணீர் தம்ளருக்குள் விரலை விட்டு எடுத்து வருவதும், முந்தானையில் மூக்கைச் சிந்துவதும், 'வெளிக்குப்' போன குழந்தையைக் கழுவிவிட்ட கையுடன் சாப்பிட உட்காருவதும், அழுக்கு உள்ளாடைகளை உடுத்துக்கொண்டு, மேலுக்குப் பகட்டாக அணிவதும், இன்னும் இதுவும் அதுவும், அதுவும் இதுவும்... அன்றாடம் நாமெல்லாம் செய்யும் நூற்றுக்கணக்கான சுகாதாரமற்ற காரியங்களில் ஒருசிலதானே!

இந்த நிலை மாற வேண்டாமா? எளிமையாக, ஆனால் சுத்தமாக நம்மையும், நம் சூழ்நிலையையும் வைப்பது நம் சந்ததிகளுக்காவது இயல்பாக வரவேண்டாமா?

யோசிக்க வேண்டும்... நிறைய...

பொதுச் சொத்துக்களைப் பாழாக்கும் குணம் பற்றி நண்பர் கூறினார்; வாஸ்தவம். அண்மையில் நடந்து முடிந்த தேர்தலை எடுத்துக்கொள்ளலாம். 'சாலைகளை நாசப் படுத்துபவர்கள் கடுமையாக தண்டிக்கப்படுவர்' என்று அதிகாரிகளின் அறிவிப்பு ஒரு பக்கம்; மாலை போய் இரவு வந்தால் கையில் உளி, சுத்தியல் சகிதமாய் அத்தனை ரோடுகளிலும் கட்சி சின்னங்களை பள்ளம் பள்ளமாய் தொண்டர்கள் எந்தச் சட்டம், அறிவிப்புக்கும் பயப்படாமல் செதுக்கியது இன்னொரு பக்கம்.



அதையும் கேட்டு, இதையும் பார்த்து ஒன்றும் செய்யாமல் கையாலாகாத்தனத்துடன் நகர்ந்த மக்கள்...

யோசிக்க வேண்டும் நிறைய...

அடுத்து மொழி, தேசப்பற்று...

இன்றைய இளைய தலைமுறையினரில் பலர் கான் வெண்டுகளில் படிப்பதையும், நுனிநாக்கு ஆங்கிலம் பேசுவதையும் பெருமையாக நினைத்து, தாய்மொழியை அலட்சியப்படுத்துகிறார்கள் என்றால், தவறு அவர்களைப் பெற்றவர்களிடமே இருக்கிறது... வளர்ப்பு அப்படி.

க்ராஷ் ப்ரோக்ராமில் (Crash Programme) ஜெர்மன், ஃப்ரெஞ்ச் மொழியை தாராளமாக மாணவிகள் கற்கட்டும், ஆனால் கூடவே தாய்மொழியும் தெரிந்திருப்பதுதான் அடுத்தவரிடம் மரியாதையைப் பெற்றுத் தரும் என்பதையும் பெரியவர்கள் அல்லவா பக்குவமாய் எடுத்துச்சொல்ல வேண்டும்?

அன்றைக்கு, இரண்டு இளைஞர்கள் என் கண் எதிரில் சுண்டல் வாங்கித் தின்றுகொண்டு நடந்தபோது, சுண்டலை மடித்துக்கொடுக்கப்பட்ட காகிதத்தில் நம் தேசியக்கொடி அச்சடிக்கப்பட்டிருந்த விவரத்தை அதை விற்ற ஏழைக் கிழவர்தான் புரிந்துகொள்ளவில்லை என்றால், படித்தவர் களாகத் தோன்றிய அந்த இளைஞர்களும் உணர வில்லையே! உணர்ந்திருந்தால், சுண்டலைத் தின்றுவிட்டு, அந்தக் காகிதத்திலேயே கையைத் துடைத்து, கசக்கி எறிந்து, அதை மிதித்துக்கொண்டும் நடந்திருப்பார்களா?

இந்த நிலை மாற வேண்டாமா?

தேசப்பற்று, மொழிப்பற்று, சுத்தம் இவை தனிநபரின் மேம்பட்ட வாழ்க்கைக்கு இன்றியமையாதவை என்பதால், இந்த விதைகள் நாளைக்கு திடமான மரங்களாக வேர் விட்டு வளரவேண்டியதற்கான மண்வளத்தை இன்றே, இப்போதே குழந்தைகளிடம் தோற்றுவிப்பது நம் கடமை அல்லவா?

சிந்திய பால் சிந்தியதாக இருக்கட்டும்.

சென்றதற்காக வருந்துவதை விட்டுவிட்டு, இனி வருவதை எதிர்கொள்வதில் முனைவோம்...

எங்கே துவங்கலாம்?

ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையாது என்பதாலும், கற்பதை இளம் பிராயத்தில் கற்பது சாலச்சிறந்தது என்பதாலும்— அடிப்படையிலேயே ஆரம்பிக்கலாம்.

மூன்று, மூன்றரை வயசில் எல்.கே.ஜி., யூ.கே.ஜி., சென்று 'பாபா... ப்ளாக் ஷீப்' என்றும் 'ஜாக் அண்ட் ஜில்' என்றும் அர்த்தம் புரியாமல் நம் இளசுகள் பாடுவதை உடனடியாக நிறுத்தலாம். தமிழ் அனா, ஆவன்னாவுக்கோ, ஏ.பி. ஸி.டிக்கோ ஹிந்தி அ ஆவுக்கோ இப்போது அவசரமில்லை என்பதால் அத்தனையும் மூட்டை கட்டி ஒரு பக்கமாக வைத்துவிட்டு, தாய்மொழி, தாய்நாடு பற்றின விழிப்புணர்வை வீர, தீர, தியாக, மனிதாபிமான மிக்க உண்மை கற்பனைக் கதைகள் மூலம் அந்த இளநெஞ்சங்களில் பசுமரத்தாணியாகப் பதிக்கலாம். சுத்தம் சோறு போடும் என்கிற விழிப்புணர்வை உண்டாக்கலாம். கூடவே, அடிப்படை சுகாதாரம் தனிமனிதனையும், பின்னர் அவன் சார்ந்திருக்கும் சமுதாயத்தையும் ஆரோக்கியமாக்கும் என்கிற பிரக்ஞையை ஊதிவிடலாம். அந்த வளமான ஈர நெஞ்சங்களில் பக்குவமாய் இந்த விதைகளைத் தூவி, மூன்று நான்கு வருஷங்களில் அவை செழித்து வளர முற்பட்டதும், இரண்டாம் வகுப்பிலிருந்து வழக்கம்போல இதர பாடங்களையும் இவற்றுடன் சேர்த்துப் புகட்டலாம்...

சரிதானே?

மனம் இருந்தால் மார்க்கம் உண்டு.

சம்பந்தப்பட்டவர்கள் தீர்மானித்துவிட்டால் ஆகாததும் உண்டா?

# 45

இந்த அத்தியாயத்தில் ஒரு முக்கியமான தலைப்பை எடுத்துக்கொண்டு ஆராயப்போகிறோம்.

பொறாமை...

நீங்கள், நான், அவர், இவர் என்று மனிதர்களில் தொடங்கி, மிருகங்கள் வரை எல்லோரையும் ரொம்ப சீக்கிரம் தன் பிடியில் கவ்வி, நிலைகுலைந்துபோக வைக்கும் சக்தி படைத்த உணர்வு— இந்தப் பொறாமை.

இது உண்டாகக் காரணம் என்னவாம்?

பல, என்கிறார்கள் மனவியல் நிபுணர்கள். அவற்றில் சிலவற்றைப் பார்க்கலாம்.

'அவள் ஸ்தானத்தில் நாம் இருக்கக்கூடாதா' என்கிற ஏக்கம் தூண்டிவிடும் பொறாமைக்கு சந்திரிகா நல்ல உதாரணம்.

சந்திரிகா, குடும்பத்தில் மூத்த பெண். இவளுக்குக் கீழ் இரண்டு தம்பிகள், ஒரு தங்கை— ராதிகா. மூத்தவளுக்குக் கல்யாணம் ஆனபோது பெற்றவரின் நிலை சுமாராய் இருக்க, அந்தஸ்துக்கு ஏற்ற மாப்பிள்ளையைத் தேடி, பெண்ணை ஒப்படைத்தார். ஐந்து வருஷ காலத்தில், ராதிகா பருவப்பெண்ணாவதற்குள் வியாபாரம் ஜாம் ஜாம் என்று வளர்ந்துவிட, இரண்டாவது மாப்பிள்ளை பணக்காரராக அமைந்துவிட்டார். சந்திரிகாவுக்கு, பிற்பாடு சேர்த்துவைத்து தந்தை சீர்செனத்தி செய்துவிட்டாலும், சதா தங்கையோடு தன்னை ஒப்பிட்டுக்கொண்டு, 'ஹூம், அவளுக்கென்ன? ராஜாத்தி' என்று பொருமியதில், வாய்த்திருக்கும் சத்புருஷனின் அருமை புரியாததோடு, அல்சர் காரணமாய் எந்நேரமும் வயிற்றுவலி, சிடுசிடு முகம்...

சதா தன்மேல் சுயபச்சாதாபம் கொண்டுள்ள சிவலிங்கத்தை எதற்கெடுத்தாலும் எரிச்சலடைய வைப்பது கூட பொறாமையின் ஒருவித வெளிப்பாடுதான் என்பது சைக்கியாட்ரிஸ்டின் அபிப்ராயம்...

ஷண்முகத்தின் கதை வேறு. ஓரளவுக்கு சுமாராகப் படித்து, சுமாரான வேலையில் அமர்ந்த பிறபாடும், தான் இன்னும் நன்றாகச் செய்திருக்க வேண்டும், சிறப்பாக முன்னுக்கு வந்திருக்க வேண்டும் என்கிற எண்ணம் பொறாமையை வெளிப்படையாகக் காட்டவைத்ததில், இன்றைக்கு 'ஷண்முகமா! வயத்தெரிச்சல் பிடிச்சவன்— எதுலேயும் திருப்தி இல்லாதவன்' என்கிற பட்டத்தை அவனுக்கு வாங்கித்தந்துவிட்டது.

அடுத்து நந்தினி.

இவளைப் பற்றின விவரங்களைச் சொன்னால், இப்படிக் கூடவா மனிதர்கள் இருக்க முடியும் என்று புருவத்தை உயர்த்துவீர்கள், நிச்சயமாய்...

தந்தையைச் சின்ன வயசில் இழந்த நந்தினிக்கு அண்ணா ரமேஷ்தான் சர்வமும். தன் பங்குக்கு தங்கையை கண்ணுக்குள் வைத்துக் காத்துவந்த ரமேஷுக்குத் திருமணம் ஆயிற்று. அண்ணி வந்தாள். அதுநாள்வரை 'நந்து நந்து' என்று தன்னைச் சுற்றிவந்த அருமை அண்ணன், அண்ணியின் வரவால் பாதிக்கப்பட்டுவிட்டதாக நினைத்த நந்தினிக்கு, ஆரம்பத்திலிருந்தே அண்ணி என்றால் கசப்பு. அண்ணனும், அண்ணியும் சேர்ந்து சிரித்தால், வெளியில் போய்வந்தால், ஏன் படுக்கையறைக்குள் சென்று கதவைத் தாள்போட்டுக்கொண்டால், போயிற்று. நந்தினிக்குள் பொறாமை தகதகக்க முறப்பட்டுவிடும். தலைவலி என்பாள், ஜுரம் என்பாள், மயக்கம் வருகிறது என்பாள்— இன்னும் என்னென்னவோ சொல்லி அண்ணனைப் பதற அடிப்பாள். இந்தக் குணம் வயசு ஏறஏற அதிகமானதோடு, திருமணம் ஆகி, தன் புருஷன் வீட்டுக்கு வந்த பிறபாடும் நந்தினியை ஆட்டிவைத்ததுதான் ஆச்சர்யமான விஷயம்!



கணவனுடன் சினிமாவுக்கோ, ஏதேனும் விசேஷத்துக்கோ போவாள். அங்கு அண்ணியின் ஜாடையில் யாரேனும் இருந்துவிட்டால், அல்லது ஏதாவது நடவடிக்கை அண்ணியை நினைவுபடுத்திவிட்டாலும், உடனே தன்னிடமிருந்து அண்ணனைப் பிரித்த அண்ணி என்கிற பொறாமை ஆளை மூச்சுமுட்டவைக்கும்; உடம்பு உதறிப் போடும், படபடப்பு வந்துவிடும்.

வைத்தியரைச் சந்தித்து பலமுறைகள் பேச்சுக் கொடுத்து ஆராய்ந்த பின்னரே, இப்படி ஒருவரின் நினைப்புக்கூட பொறாமை உணர்வுக்குக் காரணமாகிறது என்கிற உண்மை வெளிப்பட்டது!

எந்நேரமும் அடுத்தவரின் குழந்தைகள், வசதிகள், இதர விஷயங்களுடன், தங்களையும், தங்கள் குழந்தைகள், சூழ்நிலை இத்யாதிகளையும் ஒப்பிடுவதனால் பொறாமைக்கு உள்ளானவர்கள் அதிகம் என்றாலும், 'இந்தப் பொறாமையால் ஆகப்போவது ஒன்றுமில்லை' என்று தனக்குத்தானே சமாதானம் கூறிக்கொண்டு தேற முயற்சிக்கும் சகஜமான மனித குணம் இது என்பதால் இந்தப் பிரிவை விட்டுவிட்டு அடுத்ததுக்குச் செல்லலாம்.

நாம் கற்பனை செய்திருப்பது ஒன்றாக இருக்க, நிஜம் வேறாக அமையும்போது பொறாமை திடீரென்று எழுவதற்கு காந்தாமணி சிறந்த எடுத்துக்காட்டு.

கூட வேலைபார்க்கும் சம்யுக்தாவின் எளிய உடை, நடையை வைத்து இவள் சாதாரண குடும்பம் என்று இதமாகப் பழகியவள், ஒருநாள் சற்றும் எதிர்பாராமல் சம்யுக்தாவின் வீட்டுக்குச் செல்ல நேர்ந்து அவள் தன்னைவிடப் பலமடங்கு வசதியானவள் என்பதை உணர்ந்தபோது, சினேகிதியின் எளிமையைப் பாராட்டு

வதற்குப் பதிலாக இத்தனை வளமா இவளுக்கு என்கிற புழுக்கம் உண்டாக, அன்று முறிந்தது அவர்கள் நட்பு.

திடுமென ஒருவர் முக்கியத்துவம் பெறுவதால் அடுத்த வரிடம் தோன்றும் பொறாமைக்கு, ராமாயண கௌசல்யா வும், கைகேயியுமே உதாரணமாகிறார்கள். ராமன் பட்டாபி ஷேகம் செய்துகொண்டால் கௌசல்யாவுக்குப் பெருமை அதிகரித்துவிடும் என்று கூனி மூட்டிய பொறாமைத் தீயில் கைகேயி விழுந்ததைக் குழந்தைகூட அறியுமே!

உதாரணங்கள் போதும்.

பொறாமை உணர்வு ஜனிக்க பல தினுசான காரணங்கள் உண்டென்றாலும், இந்தக் குணத்தை இரண்டு வகையாகப் பிரிக்கலாம் என்பது நிபுணர்களின் கணிப்பு.

பொதுவான பொறாமை. அடுத்து, குறிப்பிட்ட காரணத்துக்காக, குறிப்பிட்ட நபர்களிடையே தோன்றும் பொறாமை.

Universal and Specific Jealousy.

முதலாம் பிரிவுக்கு— ஏழை, பணக்காரன், அசடு, புத்திசாலி— இவர்களிடம் தோன்றும் பொதுப்படையான அசூயையை எடுத்துக்கொண்டால், இரண்டாவதுக்கு துவக்கத்தில் குறிப்பிட்ட அத்தனை நபர்களும் உதாரண மாகிறார்கள்.

ஓரளவுக்குப் பொறாமை உணர்வு ஆரோக்கியமான அளவில் நம்மிடம் இருப்பது நல்லது என்று அறிஞர்கள் கூறுகிறார்கள் என்றால், வேடிக்கையாக இருக்கிறது அல்லவா?

எப்படி என்று புரிந்துகொள்ளலாம்.

பொறாமை— ஆக்கபூர்வமான எண்ணம்— செயல்— வெற்றி.



இந்த வரியை இரண்டுதரம் படித்துப் பார்த்தாலே உண்மை புரியும். என்றாலும், விளக்கமாகப் பார்க்கலாம்.

தீபாவுக்குப் பாட்டு கற்பதில் எக்கச்சக்க தீவிரம். ஊக்க மளிக்கும் பெற்றோரால் வாத்தியார் வைத்துக் கற்றுத் தரப்பட்டாள். ஆனால் சதிபோல பன்னிரண்டாம் வயசி லிருந்து அம்மாவின் ஆஸ்த்மா அவளிடமும் மெள்ள எட்டிப் பார்த்து, அடிக்கடி இழுப்பு ஜுரத்தில் கொண்டு விட, 'உனக்கு இனிமேல் பாட்டு வேண்டாம்மா' என்று சொல்லி வாத்தியார் நின்றுவிட்டார். அடுத்தவர் களெல்லாம் பாடும்போது தன்னால் முடியவில்லையே என்கிற ஏக்கம் தீபாவுக்குள் பொறாமையாகப் பிரசவித்தது. அவளின் நல்லகாலம், இந்தப் பொறாமை நீசத்தனமாக இல்லாமல் நல்லதாக இருந்தது. ஆக்கபூர்வமாகச் செயல் படத் தூண்டியதில் 'எனக்கா பாடமுடியாது? இப்படிச் சொன்ன அனைவர் முகத்திலும் கரி பூசவேன்' என்கிற வைராக்கியம் பிறக்க, விடேன் தொடேன் என்று தினமும் விடிகாலை எழுந்து அசுர சாதகம் செய்தாள். பலன் கைமேல். இன்றைக்கு ரேடியோவில் பாடும் பாடகியாக இருப்பதுடன், விடாமல் மூச்சடக்கி பயிற்சி செய்ததில் அவளுடைய ஆஸ்த்மாவும் இருந்த இடம் தெரியாமல் மறைந்தது நிஜம்!

இதே போல,

பொறாமை— அழிவுபூர்வமான எண்ணம்— செயல்— வீழ்ச்சி.

இதற்குப் புதுசாய் உதாரணங்கள் வேண்டாம், பார்த்தவரைக்கும் போதும்.

சரி,

இந்த அழிவுபூர்வமான பொறாமை உணர்வைக் குறைக்க, தடுக்க வழிகள் உள்ளனவா?

ஏன் இல்லாமல்?

கேட்டுக்கொள்ளுங்கள்— யதார்த்தத்தை எதிர்நோக்கப் பழகுவதும், அடுத்தவரின் திறமைகளைப் புரிந்து கொள்வதும், பொறாமை உணர்வைத் தூண்டும் நபர்களிட மிருந்து விலகி நிற்பதும், நம் திறமைகளை வளர்க்க என்ன வழி என்று ஆராய்ந்தறிவதும், அரசமரத்தைச் சுற்றியவுடன் வயிற்றைத் தொட்டுப் பார்ப்பது தவறு என்பதால் எந்தப் பலனை எதிர்பார்க்கும் முன்னரும் தேவையான அவகாசத் தைத் தருவதும், பொறாமை உணர்வு பல சந்தர்ப்பங்களில் வீழ்ச்சிக்கே அடிகோலுகிறது என்று உணர்வதும், ஓரளவுக்கு மரத்துப் போவதும்— வெகுவாக பொறாமை ராட்சஸனின் கொடுக்கிலிருந்து நம்மைத் தப்பிக்கச் செய்யும் வழிகளே...

கடைசியாக,

நமக்கு உண்டாகும் பொறாமையை எப்படி எதிர் நோக்குவது என்று பார்த்தோம்; இனி, நம்மைப் பார்த்து அடுத்தவர் பொறாமையுறும்போது அதையும் எப்படிச் சமாளித்து ஏற்பது என்பதையும் தெரிந்துகொள்வது நல்லது அல்லவா? இதோ—

1. மற்றவர் நம்மைக் கண்டு பொறாமைப்படுவதற்கு நம்முடைய 'இமேஜ்' முக்கியக் காரணமாகிறது. அதனால், ஒருவித நிதானம், விவேகத்துடன் நம்மை வெளிப்படுத்திக்கொள்வதும், எளிமையாக இருப்பதும் நல்லது.
2. பொறாமையின் காரணமாய் ஒருத்தரால் தீங்கி ழைக்கப்படும்போது, அடிபட்டுப்போவதோ, பதிலுக்கு வஞ்சம்தீர்க்க முனைவதோ தவறு. ஏனென்றால்,

பொறாமை— உங்களுக்கு அடுத்தவர் கொடுக்கும் மறைமுகப் பாராட்டு (Jealousy is a form of compliment) என்பதுதான் உண்மை! அதனால் அதைப் புன்னகையுடன் அனுபவிக்கக் கற்றுக்கொள்வது— உசிதம்!

# 46

'அடிக்கடி உங்கள் பேட்டிகளிலும், கதைகளிலும் மனிதாபிமானம், மனிதாபிமானம் என்கிற சொல்லை உபயோகிக்கிறீர்களே. இதை உங்கள் கண்ணோட்டத்தில் விளக்க இயலுமா?'— என்று கேட்டிருக்கிறார் கடலூர் வாசகி கலையரசி.

முயற்சிக்கிறேன்.

அதற்குமுன் ஒரு குட்டிக்கதையும் ஒருசில வார்த்தை களும்...

ஓர் ஊரில் ஓர் அரசன் இருந்தான். இவன் மெத்தப் படித்தவன். நல்லவன். ஈவு இரக்கம் உள்ளவன். நாட்டு மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்து முடித்தபின், ஊருக்கு ஒதுக்குப்புறமான காட்டில் தனியாக வாழ்ந்துவந்த ஞானி ஒருவரைச் சந்தித்து அவர் ஆசியைப் பெற எண்ணினான்.

திட்டமிட்டபடி ஒருநாள் முனிச்ரேஷ்டரின் இருப்பிடத்தை அடைந்து, வணங்கி 'ஸ்வாமி, நான் இதைச் செய்திருக்கிறேன், அதைச் செய்திருக்கிறேன்' என்று பட்டியல் தந்துவிட்டு, 'இத்தனை நல்லது செய்யும் எனக்கு மோக்ஷம் கிட்டும்தானே? நான் சிறந்த மனிதன் தானே? சொல்லுங்கள்' என்று கேட்டான். ஞானி கண்ணைத் திறந்து அவனை ஏறிட்டு மெதுவாய், 'நான் இருக்கும் வரை நடக்காது அப்பனே' என்று கூறி, மீண்டும் தியானத்தில போக, அரசன் திடுக்கிட்டான். 'என்ன இது! இத்தனை நல்லது செய்யும் என்னைவிட இந்த முனிவர் எந்த விதத்தில் சிறந்தவர்!' என்று யோசித்தவன், நாட்டுக்கு வந்து, விட்டுப்போயிருந்த பல நல்ல காரியங்களைத் தேடித்தேடிச் செய்துவிட்டு மறு வருஷம் ஞானியிடம் வந்து பழைய கேள்விகளைக் கேட்க, மீண்டும் அதே பதில்! மனம்

தளராது இந்த முறை நாட்டின் பிரஜைகளுக்கு ஒரு சின்ன குறைகூட இல்லாத வண்ணம் மேன்மேலும் நன்மைகளைச் செய்துவிட்டு அதற்கும் அடுத்த வருஷம் மறுபடியும் ஞானியிடம் வந்து கேட்டான்; 'ஸ்வாமி, நான் இது அது, அது இது என்று அத்தனை காரியங்களையும் நிறைவேற்றி விட்டேன். மக்கள் பூராவும் திருப்தியுடன் வாழ்கிறார்கள். நாட்டில் இல்லாமை, பொய்மை, திருட்டு எதுவும் இல்லை. இப்போதாவது சொல்லுங்கள், இத்தனை நல்ல காரியங் களைச் செய்த நான் உயர்ந்த மனிதன்தானே? எனக்கு மறுபிறவி இல்லைதானே?'

மறுபடியும் ஞானி உதட்டைப் பிதுக்கி, 'நான் இருக்கும்வரை நடக்காது அப்பனே!' என, வந்ததே கோபம் அரசனுக்கு! "போனால் போகிறது என்று உங்களை நான் மதித்து வருவதற்காக, இத்தனை நல்ல காரியங்களைச் செய்யும் என்னைவிட நீங்கள் உயர்ந்தவர் என்பது எப்படி நியாயமாகும்? 'நான் இருக்கும் வரை நடக்காது' என்றால் நீங்கள் என்ன அத்தனை பெருமைமிக்க மனிதரா?"— மன்னன் பொரிந்து தள்ள, ஞானி தன் மெல்லிய குரலில் சிரித்தார். பின் பதில் கூறினார்: "அப்பனே! 'நான்' இருக்கும்வரை நடக்காது என்பதற்கு நான் என்று அர்த்தம் இல்லை. உனக்குள் 'நான் இதைச் செய்தேன்', 'நான் அதைச் செய்தேன்' என்கிற 'மமகாரம்' 'நான்' என்கிற அகந்தை இருக்கும்வரை, நீ உயர முடியாது என்பதையே குறிப்பிட்டேன். மனிதாபிமானத்துடன், பிரதிபலனை எதிர்பார்க்காது பிறருக்கு நன்மை செய்பவரிடம் 'நான்' என்கிற மமதையைக் காண முடியாது. அந்த எளிமையான, பூரண அன்பு ஒன்றுதான் ஒருத்தனை உய்வித்து, மாந்தரில் மாணிக்கமாக ஒளிரச் செய்யும்."

அடுத்து—

கிருபானந்த வாரியார் கூறும் ஒரு உபமான விளக்கம்:



"குழம்பு குழம்பியிருக்கிறது; ரசம் தெளிவாக உள்ளது. ஏன்? குழம்பில் 'தான்' இருக்கிறது; ரசத்தில் அது இல்லை!"

சிரிப்பினூடே வாரியார் கூறும் இந்தச் சின்ன உபமானத்தின் ஆழம்தான் எத்தனை!

இவற்றைப்போலவே, நினைவுதெரிந்தநாளாய் சிந்தனையை ஆக்ரமித்து, வேண்டிய வேண்டாத குணங் களைப்பற்றி அவ்வப்போது சிந்திக்க வைத்த ஒரு பாடல் ஆதிசங்கரர் எழுதிய 'பஜகோவிந்தம்.'

முக்கியமாய் அதன் பதினோராவது பாடல்—

'மா குரு தன— ஜன யௌவன கர்வம்—

ஹரதி நிமேஷாத் காலஸ் ஸர்வம்...'

செல்வம், சுற்றத்தார், இளமை, அழகு, வசதி, செல்வாக்கு இத்யாதிகளினால், 'ஹா நான் அழகு, என் னிடம் பணபலம் உள்ளது, நான் நினைத்தால் யாரையும் கண்டுவிரலால் ஆட்டிப்படைப்பேன்' என்று கர்வம் கொள்வது கூடாது. இமை கொட்டும் நேரத்தில் அழியக் கூடிய இவை எதுவுமே சாஸ்வதமான சமாச்சாரம் இல்லை. எந்தக் கணமும் எவையும் நம்மிடமிருந்து பறிக்கப்படலாம் என்பதால், அகங்காரமற்று, பற்றற்று இருப்பதே விவேகம்— என்கிறார் ஆதிசங்கரர்.

இனி, விஷயத்துக்கு வருவோம்.

கலையரசி கேட்ட கேள்வி— மனிதாபிமானம் என்றால் என்ன?

இதை விளக்குவதற்கும் மேலே குறிப்பிட்டுள்ள கதை, உபமானம், பாடலுக்கும் சம்பந்தம் என்ன?— என்றால்,

கண்டிப்பாய் இருக்கிறது.

ஒருவனிடம் செல்வமோ, தர்மம் கொடுக்கும் வழக்கமோ, நான் எது செய்தாலும் சரியாக இருக்கும், நான் புத்திசாலி என்கிற அகந்தையோ நிச்சயம் மனிதாபிமானத்தை வளர்க்க உதவுவதில்லை என்பது என் தாழ்மையான அபிப்ராயம் மட்டுமல்ல, பல அறிஞர்களின் அறிவுரையும் கூட...

எப்படி என்று உதாரணத்துடன் பார்க்கலாம்.

சபாபதி சிறந்த பக்தர். வசதியானவர்கூட.

ஊரின் எந்தக் கோவில் உற்சவத்தின் வசூலிலும் முதல் வரவு இவரிடமிருந்துதான் இருக்கும்.

கும்பாபிஷேகமா? ஆயிரம்... மண்டலாபிஷேகமா? நூறு... மார்கழி உற்சவமா? பிடி இருநூற்றைம்பது... இப்படி எதற்கும் அலுக்காமல், சலிக்காமல் வாரி வழங்குவதோடு கோவில்களுக்குச் செல்லும்போதெல்லாம் வாசலில் அமர்ந்திருக்கும் பிச்சைக்காரர்களுக்குத் தப்பாமல் ஆளுக்கு நாலணாவாவது கொடுக்கும் இவரது குணம் 'தர்மப்பிரபு சபாபதி' என்கிற பட்டப்பெயரை அள்ளித் தந்திருந்தாலும், தனிப்பட்ட முறையில் இவரது ஆள், உறவினர் யாராவது 'மனைவிக்குப் பிரசவ காலம்,' 'பிள்ளைக்குச் சம்பளம் கட்ட வேணும்,' 'அம்மாவுக்கு உடம்பு சுகமில்லை, வைத்தியரிடம் போகவேண்டும்' என்றபடி வந்து நின்றால் சல்லிக் காசைக்கூட மனிதர் கண்ணில் காட்டமாட்டார் என்றால் நம்ப முடிகிறதா? பற்றாதகுறைக்கு 'எதுக்கடா வக்கில்லாதவன் எல்லாம் மூணாவது பிள்ளை பெத்துக்கணும்?' என்பார். 'ஏன், அய்யா வீட்டுப் பையனுக்கு பாடம் படிக்கலைனா சோறு எறங்காதாமா?' என்பார். 'அறுபது வயது தாண்டின கிழவிக்கு என்னடா ஆஸ்பத்திரியும், வைத்தியமும்? மூலையா படுக்கச்சொல்லி, போயிட்டா இழுத்துப் போட்டுடு' என்பார்.



சபாபதியின் இந்த முரண்பாடான குணம் மனசை நெருட, ஒரு தரம் மனவியல் நிபுணரைச் சந்தித்தபோது இதுபற்றி விவாதித்தேன்.

"சபாபதி கோவிலுக்கும், ஏழைகளுக்கும், ஏகத்துக்கு செலவு செய்வதெல்லாம் வேஷமா, டாக்டர்? வெறும் புகழுக்கு மட்டும்தானா? இல்லாதுபோனால், நிஜமாய் உதவி தேவைப்படும் நபர்களிடம் இத்தனை கடுமையாய் நடந்துகொள்வது எப்படி சாத்தியம்?"

டாக்டர் என் கணிப்பை மறுத்து தலையசைத்தார்.

"சின்ன வயசிலிருந்தே தான, தர்ம, தெய்வ வழிபாடு அவசிய கண்ணோட்டத்தோடு சபாபதி வளர்க்கப்பட்டிருப்பதால், இவையே பழக்கமாகி தன்னால் இயன்றவரை இவற்றைச் செய்கிறார். அஃப்கோர்ஸ், இதில் தற்பெருமை, புகழின் மயக்கம், இரண்டும் இருக்கவே செய்கின்றன. ஆனால் கண்டிப்பாய் சபாபதி வேஷம் போடுகிறவர் இல்லை. மனிதாபிமானம் பற்றின பிரக்ஞையை சின்ன வயசில் வளர்க்க இவருடைய பெரியவர்களும், பிற்பாடு இவரும் தவறியதாலேயே அடுத்தவரின் தனிப்பட்ட கஷ்டம் புரியாத ஒரு நிலை. புரிகிறதா?"

டாக்டரின் கருத்தில் எனக்கு முழு உடன்பாடு.

வெறும் பணம், உடல் உதவி மட்டும் மனிதாபிமானமாவதில்லை. மனசு, இதில் ஜனிக்கும் கரிசனம், கருணை, அன்பு, இதம்— ஒருவரை மனிதாபிமானம் மிக்கவராக்க மிகமிக முக்கியமானவை...

அடுத்தவரின் கண்ணோட்டம், பிரச்சினைகளை அணுக இயலாமை, ப்ளஸ் அண்ட் மைனஸ் பாயிண்ட்ஸ், இவற்றைப் புரிந்துகொள்ள முனைவதோடு, முதலில் சொன்ன கரிசனம், கருணை, அன்பு, இதத்தையும் விடாப்பிடியாகப் பற்றிக்கொள்வதுதான் மனிதாபிமானத்தின் அழுத்தமான அஸ்திவாரங்கள்.

"ரொம்ப சரி. அதற்காக எல்லாரும் மதர் தெரிஸாவாக முடியுமா?" என்று ஒரு சமயம் என்னிடம் ஒரு நண்பர் நமுட்டாகக் கேட்டதுண்டு.

முடியுமோ, முடியாதோ—

ஆனால், அவரில் ஒரு பங்கையேனும் தொடவாவது முயற்சிக்கலாம் அல்லவா?

தொழுநோயாளிகளை பெற்ற தாயின் கனிவுடன் அணைக்க வேண்டாம், சாகக் கிடக்கும் ஆதரவற்ற ஏழைகளை மடியில் சாய்த்து ஆறுதல் சொல்ல வேண்டாம், வியாதியுள்ள குழந்தைகளை மார்போடு அணைத்து உச்சி முகர வேண்டாம்...

அட, நம்மைச் சுற்றி இருக்கும் பெரியவர்கள், உடல் இயலாதவர்கள், மற்றவர்களுக்கு நம்மாலான உதவியை மனிதாபிமானத்துடன் செய்ய கை நீட்டுவதுகூடவா கஷ்டம்?

கண் தெரியாத பாட்டிக்குக் கதை படித்துச் சொல்வதும், அடுத்த வீட்டுத் தாத்தாவுக்குக் கடிதாசு எழுதிக் கொடுப்பதும், வேலை பார்த்தால் தள்ளாடும் அம்மாவுக்கு துணி தோய்த்துக் கொடுப்பதும், சாலையைக் கடக்கத் தடுமாறும் குழந்தைக்கு உதவுவதும், பொதுஇடத்தில் கிடக்கும் கண்ணாடித்துண்டை யார் மிதித்தாலும் அபாயமாயிற்றே என்று அகற்றுவதும், முடிந்தபோதெல்லாம் உபரியாய் உடம்பில் ஓடும் ரத்தத்தை தானமாகக் கொடுப்பதும், எதையும் இயன்ற வரையில் இல்லாதவருடன் பகிர்ந்து கொள்வதும், இன்னும் என்னென்னவோ ஆயிரமாயிரம் சின்னச்சின்னக் காரியங்கள்கூட மனிதாபிமானம் மிக்கவை தாமே!

இதுபோல—

நம் வீட்டு ரேடியோவை உரக்க வைத்து அடுத்த வீட்டுக் குழந்தை படிக்க முடியாமல் இம்சிப்பதும், ஒலி



பெருக்கியில் விடிகாலையிலும் மாலையிலும் குறிப்பிட்ட மத சம்பந்தப்பட்ட பாடல்களை, பல சந்தர்ப்பங்களில் அரசியல் பேச்சுக்களை ஒலிக்கச் செய்து, சுற்றுப்புறத்தில் வாழும் மக்களின் காதுகளைப் புண்படுத்துவதும், எவர் எக்கேடு கெட்டால் எனக்கென்ன என்று விட்டேத்தியாய் இருப்பதும், பணம் கொடுத்தால் ஆயிற்று என்ற நினைப்பில் செயல்படுவதும், எனக்குத்தான் பேசத் தெரியும் என்று காட்டமாய் வார்த்தைகளை வாரியிறைப்பதும், யோசிக்காமல் பிறர் மனசை நோகடிப்பதும், இன்னும் நித்தமும் நாம் தெரிந்தும் தெரியாமலும் செய்யும் பல குட்டிக்குட்டி சமாச்சாரங்களும் சத்தியமாய் மனிதாபிமான மற்ற செயல்கள்தாம்...

முதலில் கூறினவற்றை வளர்க்கவும், கடைசியில் குறிப்பிட்டவற்றைக் குறைக்கவும் விழிப்போடு இருக்க முயற்சிப்போமேயானால், ஒரு மதர் தெரிஸா இல்லை, பல நூறு, ஆயிர, லட்ச அன்புள்ளங்கள் உருவாவது சாத்தியம் தான்... இதில் சந்தேகமே வேண்டாம்!

# 47

ஒருநாள் நான்கு பெண்மணிகள் ஒன்றாக என்னைச் சந்திக்க வந்திருந்தார்கள்.

“எதைப்பற்றியெல்லாமோ எழுதுகிறீர்களே, இந்த இளைய தலைமுறையினர் அடக்க ஒடுக்கமாய், பெரியவர்களை மதித்து எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றி அழுத்தம் திருத்தமாய் எழுதக்கூடாதா?”

சுற்றி வளைக்காமல், பீடிகை போடாமல் தாங்கள் சொல்லவந்ததைப் பளிச்சென்று பேசிவிட்டு அவர்கள் சென்ற பிறகு, அன்றைய தபாலைப் பார்க்க உட்கார்ந்தேன்.

முதல் கடிதம் ஜோலார்பேட்டை வெங்கடேசனிடமிருந்து...

“1985ஆம் வருடத்தை ‘Year of the Youth’— இளையவர்கள் வருஷமாக அறிவித்திருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். இந்த வருஷத்திலிருந்தாவது பெரியவர்கள் காலம் மாறிவிட்டதை உணர்ந்து, மீண்டும் மீண்டும் பழைய அளவுகோல்களை உபயோகித்து தங்கள் பெண், பிள்ளைகளை விமர்சிப்பதைத் தவிர்த்து, அவர்களைப் புரிந்துகொள்ள முயற்சித்தால், தலைமுறை இடைவெளியைக் குறைக்கலாம் அல்லவா?”

இதோடு நிற்காமல் தன் பெற்றோர் பல சந்தர்ப்பங்களில் தன்னை வளர்ந்தவனாக, கல்லூரியில் படிக்கும் பொறுப்புள்ள ஒரு மாணவனாக மதிக்காமல் எப்படி தங்கள் இஷ்டத்துக்கு, மனம் நோக நடக்கிறார்கள் என்றும் வெங்கடேசன் எழுதியிருந்ததைப் படிக்கையில், காலையில் சில தாய்மார்கள் கூறிய புகார்கள் நினைவுக்கு வர, இப்படி இரண்டு பக்கமும் ஆட்டிவைக்கும் இந்தத் ‘தலைமுறை இடைவெளி’ - Generation Gap பற்றி யோசித்தால் என்ன என்று தோன்றியது.



தலைமுறை இடைவெளி— அப்படியென்றால்?

வளர்ந்துவிட்டவர்களும், வளர்ந்துகொண்டிருப்பவர்களும் ஒருவரையொருவர் சரியாகப் புரிந்துகொள்ளாததால் உண்டாகும் விரிசல்— அதாவது பெரியவர்களுக்கும் சின்னவர்களுக்கும் பிறக்கும் கசமுசா...

தலைமுறை இடைவெளியைப்பற்றி இன்னும் விஸ்தாரமாகத் தெரிந்துகொள்ளும் முன்னர், இதற்குக் காரணமாகக் கருதப்படும் அடாலஸண்ட் ஏஜ் - adolescent age அல்லது இரண்டாங்கெட்டான் வயசு எனப்படும் பருவத்தைக் கொஞ்சம் பார்த்துவிடலாம்.

13லிருந்து 18 வயசு வரை உள்ள பிராயத்தை பொதுவாக அடாலஸண்ட் பருவம் என்பார்கள். குழந்தையாய் இருப்பவர்கள், ஹார்மோன்களின் உற்பத்தி காரணமாக திடுமென உடம்பிலும், மனசிலும் வளர்ச்சி வருகையில் எதுவும் தெளிவாகப் புரிபடாமல் தடுமாற்றத்துக்கு உள்ளாகி, தனிமையை உணர்ந்து தத்தளிக்கும் ஒரு உணர்ச்சி மிக்க இரண்டாங்கெட்டான் பருவம் இது என்றும், ‘உணர்வுகளின் சரியான பாதிப்பும் பங்கிடும் இல்லாததே இந்த மன உளைச்சலுக்குக் காரணம்’ என்றும் கூறுகிறார் மனவியல் நிபுணர் விண்ட்மென்.

அடாலஸண்ட் பருவத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால், முதலில் அந்தப் பிராயத்தில் ஒரு நபருள் உண்டாகும் மாற்றங்களை உணரவேண்டியது அவசியம்.

பெண்களுக்கு செகண்ட்ரி செக்ஷுவல் காரக்டர்களான மார்பகம் வளருவதும், உடல் அழகு பெறுவதும் மாதவிலக்கு வருவதும் போலவே, பையன்களுக்கு முகத்தில் முடி வளருவதும், குரல் உடைவதும், உடம்பு குழந்தைச் சதை குறைந்து முறுக்கேறுவதும் இதே சமயத்தில்தான்.

இப்படி உடம்பில் உண்டாகும் மாற்றங்களால் இயற்கையாக மனமும் பாதிக்கப்படுவதால், இந்தப் பிராயத்தினர் சுற்றி இருப்பவர்களை மறந்து, தங்கள் பிரச்சினைகள், மாற்றங்களில் மூழ்கிப்போக, இன்று வீட்டுக்கு வீடு முழங்கும் தலைமுறை இடைவெளி சுலபமாக ஜனிப்பதாகச் சொல்லப்படுகிறது.

—ரமேஷுக்குக் குரல் ஆம்பிள்ளைத்தனமாக இருக்கிற மாதிரி எனக்கு ஏன் இல்லை? இத்தனைக்கும் அவனைவிட நான் எட்டு மாதம் பெரியவனாயிற்றே!

—சியாமளிக்கு மார்பு கச்சிதமாய் இருக்கிறது. என் உயரம், பருமனுக்கு எனக்குச் சின்னது. இது அசிங்கமாக இருக்கிறதோ? நான் தெருவில் போனால் பையன்கள் என்னை ஏறிட்டுப் பார்க்கமாட்டார்களோ?

இதுவரையில் வெறும் பிரச்சினையாக இருப்பது, புரிந்துகொள்ளாத பெரியவர்களால் இன்னும் ஊதிவிடப்பட்டு பூதாகாரமாகிறது.

—மேல் உதட்டில் முடி அதிகமாக இருக்கிறது... என்ன செய்யலாம்? நித்யா மாசாமாசம் ப்யூட்டி பார்லருக்குச் சென்று வேக்ஸ் செய்துகொள்கிற மாதிரி நானும் போகலாம் என்றால் அம்மா 'அந்தப் பேச்செல்லாம் இங்க வேண்டாம்' என்று காதில் வாங்காமல் கத்துகிறாளே!... ச்சே இந்த அம்மாவுக்கு என்மேல் அன்பே இல்லை...

—நான் ரொம்ப குண்டு... ஜீன்ஸ் போட்டால் அசிங்கமாக இருக்கிறது. முதலில் இளைக்க வேண்டும், ஷாலினி போல. ஆனால் நெய், ஸ்வீட் வேண்டாம் என்றால் பாட்டியும் அப்பாவும் புரிந்துகொள்ளாமல் நரசிம்ம அவதாரம் எடுக்கிறார்களே!

—எப்போது பார்த்தாலும் படி படி படி... இதைத் தவிர இந்த அண்ணா, அம்மாவுக்கு வேறு பேச்சே தெரியாதா! அட, ராம்குமார் மாதிரி தினமும் ஸ்விம்மிங் போக வேண்டாம், நிகில் மாதிரி டென்னிஸ் ஆட வேண்டாம். அவர்கள் அத்தனை நாங்கள் வசதி படைத்தவர்கள் இல்லை. ஒப்புக்கொள்கிறேன். ஆனால் காலையில் ஓடுவதையும், மாலையில் மைதானத்தில் எக்ஸஸைஸ் பண்ணுவதையும் தடுத்து, 'வேண்டாம்—படி—நேரத்தை வீணாக்காதே' என்றால்? அவனவன் பாடி பில்டிங் எக்ஸஸைஸ் பண்ணி சினிமா ஹீரோ மாதிரி உடம்பை வைத்துக்கொண்டிருக்கிறான். வகுப்பில் உள்ள அத்தனை பெண்களின் பார்வையும் அவர்கள்மேல்தான்... எனக்கு உயரம் இருந்து என்ன பிரயோஜனம்? ஹூம்...



இப்படி anorexia - nervosa அதிகமான கவலைகளாலும், தங்களைப்பற்றின சிந்தனைகளாலும் தீவிரமாய் ஆக்கிரமிக்கப்படுவதால், இந்தப் பிராயத்தினர் மற்றவர்களின் அபிப்ராயங்களைக் காதுகொடுத்து வாங்காததில் ஆச்சர்யம் என்ன? இல்லை, 'இவர்கள் சுயநலவாதிகள், பெரியவர்களை மதிக்காதவர்கள், அடுத்தவர் எக்கேடு கெட்டால் என்ன என்று அலட்சியமாய் நடப்பவர்கள்' என்று எல்லோராலும் பொதுவாகக் குற்றம்சாட்டப்படுவதிலும்தான் வியப்பு என்ன?

மளமளவென்று, நினைத்துப்பார்க்கும் முன்னர் உடம்பு— மன வளர்ச்சி— மாற்றங்கள் உண்டாகி, இதுநாள் இருந்துவந்த விதத்திலிருந்து மாறுபட்டு அந்தப் பிராயத்தினர் தங்களை வெளிப்படுத்திக்கொள்ள முனைவதை சரியாகப் புரிந்துகொள்ள முடியாத பெரியவர்கள், குழந்தைகள் தங்களுக்கு எல்லாம் தெரிந்த மாதிரி அதிகப்பிரசங்கித்தனமாய் நடக்கிறார்கள், யாரையும் மதிப்பதில்லை என்ற முடிவுக்கு வந்து, வாய்விட்டு 'இது சரி, இது தவறு' என்று கண்டிக்க முற்பட... விளைவு? இன்று தடுக்கி விழுந்தால் பேசப்படும் தலைமுறை இடைவெளி... அப்படித்தானே?

'இந்தக் கால குழந்தைகளுக்கு எதன் மதிப்பும் புரிவ தில்லை— அவர்கள் சுயநலவாதிகள்—' என்று ஒட்டு மொத்தமாய் பெரியவர்கள் புலம்ப, 'பெற்றுவிட்டதால் நம்மை அடிமைகளாக நடத்தலாம் என்று நினைக்கிறார் களா? எங்கள் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்கத் தெரியாதவர்களுக்கு நாங்கள் ஏன் அன்பு, மரியாதை கொடுக்க வேண்டும்?' என்று இன்றைய பல சின்ன வயசுக்காரர்கள் எதிர்வாதம் செய்ய...

இந்த வாதத்தின் எதிரொலி பல சந்தர்ப்பங்களில்— தனிமை; என்னை யாரும் புரிந்துகொள்வதில்லை என்கிற ஏக்கம்; கஞ்சா, குடி, சிகரெட் போன்ற போதைப் பொருட்களுக்கு அடிமையாதல்; 'என்னைப் பற்றின அக்கறை உனக்கு ஏன், நீ சொல்லி நான் என்ன கேட்பது' — என்கிற வீம்பில் வீட்டைவிட்டு வெளியேறல்... என்பதில் முடிந்திருப்பதைப் பரவலாக நாம் இங்குமங்கும் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறோம்!

சரி— பிரச்சினை புரிந்துவிட்டது—இதற்கு விமோசனம் உண்டா என்றால்—கண்டிப்பாக உண்டு என்பதோடு, 'ஒருவன் பிறந்ததில் துவங்கி— குழந்தை, இளமை, முதுமை என்று பல பருவங்களைக் கடப்பதுபோலவே அடால ஸண்ட் என்பதும் ஒரு குறிப்பிட்ட கால அளவில் மாறிப் போகும் பிராயம்; இதற்குத் தேவைக்கு அதிகமாக முக்கியத் துவம் கொடுப்பதும், இது கையை மீறின ஒரு சமாச்சாரம் போல மேடை போட்டு விவாதிப்பதும் தவறு; என்னைக் கேட்டால் தலைமுறை இடைவெளி என்று எதுவுமே இல்லை— தலைமுறை இடைவெளிப் பிரச்சினை என்பதே வெறும் கட்டுக்கதை— The Generation Gap is only a myth' என்று ஒரே போடாய் போடுகிறார் விண்ட்மென்... எப்படி?

இது சாத்தியம்தானா என்று திகைப்பவர்களுக்கு அவரே அழகாய் விளக்கமும் சொல்கிறார்.



"வாழ்க்கை என்பது குழந்தை, அடாலஸண்ட், அடல்ட், முதியவர் என்கிற பருவங்களால் ஆனது. ஒரு கட்டத்திலிருந்து இன்னொரு கட்டத்துக்கு வளர்ச்சி பெறுகையில் உண்டாகும் மாற்றங்கள்தாம் அடாலஸண்ட் பிராயத்திலும் உண்டாகிறது. மாற்றங்கள் தோற்றுவிக்கும் பிரச்சினைகள் எந்தப் பிரிவில்தான் இல்லை? தன் விளையாட்டுச் சாமானை இன்னொருவர் தொட மறுக்கும் குழந்தை, சற்று வளர்ந்து அடுத்தவருடன் சேர்ந்து விளை யாடுவதில் உள்ள இன்பத்தைப் புரிந்துகொண்டபின், தானே கூப்பிட்டு பொருட்களைப் பகிர்ந்து விளையாடு கிறது. முதன்முதலில் பள்ளிக்குச் செல்லும் குழந்தை, அம்மாவை விட்டுப் பிரிய மறுத்து அழுகிறது. ஆனால் இதே குழந்தை ஆறு மாசம் கழித்து தன்னை அழைக்க வரும் தாயைக் காக்க வைத்துவிட்டு நண்பர்களுடன் விளையாடுவதைத் தொடர்கிறது. இதேபோலத்தான் அடல்ட், முதியோர் பருவங்களும். மனைவி மனசுக்கு ஏத்த தினுசில் அமைவாளா, வேலையில் பதவி உயர்வு கிடைக்குமா, சொந்த வீடு கட்டுவது சாத்தியமா, காட்ராக்ட் ஆபரேஷன் நல்லவிதமாய் முடிந்து பார்வை கிட்டுமா போன்று அந்தந்த காலகட்டத்துக்கு ஏற்ப பிரச்சினைகள் நிரம்பியதாகவே உள்ளன.

எப்படி மேற்சொன்ன காலகட்டம் முடிந்தபிறகு, அந்தந்த பிரச்சினைகளிலிருந்து மீண்டு, அடுத்த திருப்பத்திற்குத் தயாராகிறோமோ, அதைப் போலவே அடாலஸண்ட் பிராயத்தையும் அதற்குண்டான ஏற்றத் தாழ்வுகளுடன் கழித்து, அந்த வயதைத் தாண்டியவுடன் நிச்சயம் குறிப்பிட்ட குண மாறுபாடுகளை சட்டையை மாற்றுவது போல சர்வசாதாரணமாய் பலரும் கழற்றி விடுவதால், அளவுக்கு மீறின முக்கியத்துவமோ, விவாதமோ தலைமுறை இடைவெளிப் பிரச்சினைக்குக் கொடுப்பதே அனாவசியம்—'

நின்று நிதானமாக யோசித்துப்பார்த்தால், விண்ட்மெனின் இந்தக் கணிப்பை ஏற்றுக்கொள்ளத் துணிவதோடு, "இளைய தலைமுறையினர்களே— உங்கள் பொன்னான பருவகாலத்தின் அழகான பகுதி இந்த அடாலஸென்ஸ்; மாற்றங்கள் இனிமையானவை என்பதை உணர்ந்து, இப்பருவத்திற்குண்டான சோர்வு, தனிமை, அவஸ்தை, வேண்டாத தீய பழக்கங்கள் போன்றவற்றை விழிப்புடன் தவிர்த்து வாழ்க்கையை அனுபவிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்; பெற்றோர்களே— நீங்களும் உங்கள் குழந்தைகளிடம் காணும் இந்த குண மாற்றங்கள் வளரும் காரணத்தால் உண்டானவை, தற்காலிகமானவை என்று புரிந்து, உங்கள் பெண், பிள்ளைகளை சினேகத்துடன் அணுக முயற்சியுங்கள்— தயவுபண்ணி இரு சாரர்களும் ஒன்று சேர்ந்து, 'ஜெனரேஷன் கேப்' என்கிற மாயை உண்டாக்குகிற கஷ்டங்களைத் தவிர்க்கப்பாருங்கள்" என்றும் கூறவே தோன்றுகிறது.

# 48

கிருஷ்ணமூர்த்தியும் கோதண்டமும் ஒருவருடன் ஒருவர் பேசுவதை நிறுத்தி பத்து நாட்களாகின்றனவாம்! 'அவன் முகத்தில் இனி விழித்தால் பாவம்' என்று நான்கு பேர் நடுவில் ஏசிக்கொள்ளும் அளவுக்கு நட்பு முறிந்து விட்டதாம்!

விஷயத்தைக் கேள்விப்பட்டதும் எனக்குத் தூக்கிவாரிப் போடத்தான் செய்தது?

பின்னே?

கடந்த இரண்டு மாசங்களாக ஒருயிர், ஈருடலாக அவர்கள் வளைய வந்ததும், நாங்கள் இணைபிரியா தோழர்கள் என்று மார்தட்டியதையும் பார்த்து, கேட்டவர் களில் நானும் ஒருத்திதானே?

பிறகு?

அப்படி ஈஷிக்கொண்டிருந்தவர்கள், திடுமென இப்படி மாறிவிட்டார்கள் என்றால் வியப்பாக இருக்காதா?

அதுவும் உப்பு சப்பில்லாத ஒரு சமாச்சாரத்துக்காக— சினிமாவுக்குப் போக எண்ணி, இருவரும் தியேட்டரில் சந்திப்பதாகத் தீர்மானித்தபடி கிருஷ்ணமூர்த்தி சென்று காத்திருந்திருக்கிறான்; படம் ஆரம்பித்து ஐந்து நிமிஷம் கழித்து கோதண்டம் வந்திருக்கிறான். 'என்ன?' என்றால், வள்ளென்று விழுந்திருக்கிறான். மீண்டும் கோதண்டம் ராணி சீதை ஹாலின் முன் கால்மணி நேரம்போல் கிருஷ்ணமூர்த்தியைக் காக்க வைத்திருக்கிறான். 'என்னடா

இது?' என்று இவன் கேட்க, 'என்னமோ நாழி ஆயிட்ட துப்பா' என்று அவன் சொல்ல, 'போனதரமும் இப்படித் தான் செய்தே' என்று இவன் குற்றம் சாட்ட, 'வேணும்னு பண்ணுவேனா?' என்று அவன் பதிலுக்குக் கேட்க, 'வேணும்னு வேற பண்ணணுமா?' என்று கிருஷ்ணமூர்த்தி முறைக்க, 'என்ன முறைக்கறே... அதெல்லாம் என்கிட்ட வேணாம்' என்று கோதண்டம் கத்த— இப்படிப்பட்ட சாதாரண சமாச்சாரம் பெரிய சண்டையாகி, இன்று அவர்கள் ஒருத்தன் பேரைச் சொன்னாலே, 'அவனா படவா ராஸ்கல்' என்று உறுமிக்கொண்டு கிளம்பும் அளவுக்கு விட்டுப்போய்விட்டதென்றால், இதெல்லாம் கூட 'நட்பு' என்ற பிரிவில் சேர்ந்ததுதானா?

ம்ஹூம், இல்லை... நிச்சயம் இல்லை.

நிஜமான நட்பு என்பது பரிச்சயம், தொடர்பு ஆகியவற்றிலிருந்து மாறுபட்டது. அதன் அழகிய குணாதிசயங்களைப்பற்றிப் பேசும் முன், மேலே குறிப்பிட்ட கோதண்டம்—கிருஷ்ணமூர்த்தியின் 'நுனிப்புல் நட்பை'ப் பற்றியும் கொஞ்சம் தெரிந்துகொண்டுவிடலாம்.

1. முதலில் அறிமுகம்— புன்சிரிப்பு— 'ஹலோ'...
2. சந்தித்த நிமிஷத்தில் காணாததைக் கண்டுவிட்ட துடிப்புடன் பழக முற்பட்டு, மேலெழுந்தவாரியாகத் தன்னை, தன் குடும்பத்தைப் பற்றின விவரங்களைப் பரிமாறிக்கொள்ளல்.
3. மறுநாளே' வரும் பிறந்தநாள், திருமண நாளுக்கு விழுந்தடித்துக்கொண்டு பரிசுகளை வழங்குதல்.
4. குடும்பத்தோடு பழக முற்படல்.
5. குடும்பப் பிரச்சினைகளை அலசுதல்.
6. சலபமாகத் துணிமணி, இதர பொருட்கள், பணத்தைக் கொடுத்து வாங்கல். (உன்னிடம் இருந்தால் என்ன, என்னிடம் இருந்தால் என்ன? போன்ற வசனங் களுடன்!)
7. சௌகரிய, அசௌகரியங்களைப் பொருட்படுத்தாது எந்நேரமும் சேர்ந்து இருக்க முற்படல், (இதுவரை ஏற்றம், இனி இறக்கம்)
8. காரணமே இல்லாமல் சட்டென்று சின்னச்சின்ன காரியங்கள், வார்த்தைகளால் அடிபட்டுப்போதல்.
9. பேசுவதற்கு உள்ளர்த்தம் கற்பித்து, ச்சே, ரொம்பத்தான் இடம்கொடுத்துவிட்டதில், என்னை மதிப்பதில்லை என்று கோபப்படுதல்.
10. கோபம் பெரிசாகி, சண்டையாகி, 'வேண்டாம் சாமி உன் உறவு' என்று ஆரம்பித்த வேகத்திலேயே முறித்துக்கொள்ளுதல்.

முதலில் கூறின கோதண்டம்—கிருஷ்ணமூர்த்தியின் உறவு மேலே பட்டியல் போட்டுள்ள ரீதியில் பத்தே நாட்களில் விஸ்வரூபம் எடுத்து, இரண்டு மாச காலம் போல உயிர் வாழ்ந்து, பிறகு அனாவசிய சண்டையின் காரணமாய் பொட்டென்று பிராணனை விட்டது.

நட்பு என்று நினைப்பது அசல் நட்பாக இல்லாமல் இப்படி அகால மரணம் அடைவதற்கு, ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொள்ளாததும், எங்கோ எப்போதோ ஒரு சின்ன முடிச்சு விழுந்துவிட்டதை உணராததும், மற்றவரின் பலவீனங்களைத் துவக்கத்திலேயே அறிந்து ஏற்காததும், யோசிக்காமல் பேசி, நடந்துகொள்வதும், 'அ, இவன் நம நண்பன்தானே, தவறாகவா எடுத்துக்கொள்வான்' என்று

தானே சில விஷயங்களை அனுமானித்து முடிவெடுப்பதும் (Taking things for granted with a friend), அளவுக்கு மீறின எதிர்பார்ப்புகளை வளர்த்துக்கொள்வதும், சுயநலத்தோடு செயல்படுவதும், எதிலும் அவநம்பிக்கையோடு இருப்பதும், பொறாமை கொள்வதும், காரணமின்றி எரிச்சல் அடைவதும் — முக்கியமான காரணங்களாகின்றன என்பது மனோதத்துவம் படித்தவர்களின் வாதம்.

போகட்டும்.

இனி, நிஜமான நட்பு என்ற பிரிவுக்கு வருவோம்.

**"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கு**

**இடுக்கண் களைவதாம் நட்பு."**

நான்குபேர் இருக்கும் சபையில் ஆடை, உடம்பை விட்டு அகலுமேயானால், அதைக் கண் பார்த்து, மூளைக்கு விவரம் சொல்லுமுன், கை தன்னிச்சையாக விலகின ஆடையை இழுத்துவிட ஓடுவதுபோல, அழைப்புக்காகக் காத்திராமல் சந்தர்ப்பம் அறிந்து, தேவைக்குத் தக்கபடி உதவ முன்வருவதுதான் சுத்தமான நட்பின் இலக்கணம் என்கிறார் திருவள்ளுவர்.

தன்னை அறியாமல், சொட்டுச் சொட்டாய் சேர்ந்து மிகப் பெரிய பிணைப்பை உண்டாக்குவதுதான் உயர்ந்த நட்பு என்கிறார் ஆங்கில மேதை ஜான்ஸன்.

இப்படி, படித்தவர்களும் அறிஞர்களும் போற்றிப் புகழும் 'நட்பு' என்னும் உறவுக்கென தனிப்பட்ட குணாதிசயங்கள் இருக்கின்றனவாமா?

ஏன் இல்லாமல்...?



கண்டதும் காதல் என்பதுபோலன்றி, சம்பந்தப்பட்ட இரண்டு நபர்களும் ஒரே வேகத்தில் ஒருவரை ஒருவர் நோக்கி நிதானமாய் பயணிப்பதும்,

துவக்கத்திலிருந்தே அடுத்தவரை நன்கு புரிந்துகொள்ள முயற்சிப்பதோடு, இன்னொரு கண்ணோட்டம் என்பதற்கு மதிப்பளிப்பதும்,

தான், தன் சுகம் பிரதானம் என்று இல்லாமல் இருப்பதும்,

வயசு, இனம், ஜாதி, அந்தஸ்து இவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்காததும்,

இக்கட்டான நிலையில் சொல்லாமல் கொள்ளாமல் உதவ கை நீளுவதும்,

மனசால் நினைத்த மாத்திரத்திலேயே பலம், தைரியம், நிதானத்தைக் கொடுப்பதும்,

குறை, நிறைகளால் பாதிக்கப்படாமல் நண்பரை அவருடைய அன்புக்காக மட்டுமே ஏற்பதும்—

நிஜமான நட்பின் சில குணங்களாகும்.

இந்த நட்பு படிப்படியாக எப்படி வேர்விட்டுக் கொள்ளும் என்பதையும் நிபுணர்கள் புள்ளிகுத்திக் காட்டவே செய்கிறார்கள்.

நிதானமாய், தன் சூழலை உணர்ந்து, இணைந்து, மெது மெதுவாய் அன்பின் அரவணைப்பில் வளர்ந்து, அதன் அதீத அன்பை நண்பருக்கு சுமை, விலங்காக, ஆக்காது, ஒதுங்கும்போது ஒதுங்கி, அவசியம் எழும்போது கூடவே

வரும் நிழலாக நின்று, ஆர்ப்பாட்டம் இல்லாமல், கொட்டி முழக்காமல், வாய் வார்த்தைகளால் பந்தல் போடாமல், கண்களும், மனமும் புன்னகையில் மலர, நேரில் இருக்கும் போது மட்டுமல்லாது கண்களிலிருந்து மறையும்போதும் நிஜமாய், சத்தியமாய் நினைப்பாலும் மனசாலும் ஒருவருக் கொருவர் நல்லதையே எண்ணும் நண்பர் மட்டும் வாய்த்து விட்டால், ஆஹா... அந்த சந்தோஷத்துக்கு, நிறைவுக்கு ஈடு இணை ஏது!

இப்படிப்பட்ட அருமையான நட்பைப் பெற்றிருக்கும் அம்பிகாவை உங்களுக்கு இந்தக் கட்டத்தில் அறிமுகம் செய்துவைக்க எனக்கு ஆசையாய் இருக்கிறது.

அம்பிகாவுக்கு பானு என்று ஒரு சிநேகிதி உண்டு. கிட்டத்தட்ட பள்ளிப்பருவத்து நாளாய் பழக்கம்.

"முப்பத்தைந்து வருஷ சிநேகம் எங்களுடையது! முதல் படிவத்தில் எங்கள் நட்புக்கு விதை ஊன்றப்பட்டபோது நான் நாளுக்கொரு காரில் பள்ளிக்குச் சென்று இறங்குவேன். பானுவின் தந்தை ஓய்வு பெற்ற க்ளார்க். இரண்டு பாவாடைகளை மாற்றிமாற்றித் தோய்த்து உடுத்தி வந்த பானுவுக்கும் எனக்கும் இடையில் அந்தஸ்தோ, வசதியோ, வேறு எதுவுமே குறுக்கிடாது நட்பு துளித்துளி யாய் வளரவே செய்தது. பிற்பாடு கல்லூரியிலும் ஒன்றாகப் படித்த நாட்களில், பல சந்தர்ப்பங்களில் என் கைகளைப் பற்றிக்கொண்டு, 'உன் வாழ்க்கை மேடு பள்ளம் காணாதது, அது என்றைக்கும் அப்படியே இருக்க வேண்டும். ஏதேனும் வரவேண்டுமென்றால் அது எனக்கு வரட்டும், அதை என்னால் தாங்க முடியும்' என்பாள் பானு. இன்றுவரைக் கும் எங்கள் நட்பு அன்று போலவே இருப்பதுடன், காலம் மாறி எத்தனையோ சுக துக்கங்களை இருவரும் அனுப வித்த பிறகும், ஒருவர் பற்றின நினைப்பு அடுத்தவருக்குள் சிலிர்ப்பை உண்டாக்குவதாக இருக்கிறது..."



கண்களில் நீர் கரைகட்டி நிற்க, பானுவுக்கும் தனக்கும் இடையில் ஜனித்திருக்கும் உண்மையான நட்பைப்பற்றி அம்பிகா என்னிடம் உருகிப்போய் பேசியபோதெல்லாம் அந்த நட்புக்காக நான் தலைவணங்கியிருக்கிறேன்.

முழுமையாய் புரிந்துகொள்வதும், விட்டுக்கொடுப்ப தும், அனுசரித்து நடப்பதும் கணவன் மனைவி இடையில் மட்டும் அவசியமான சமாச்சாரம் இல்லை; உத்தமமான எந்த ஒரு பிணைப்புக்கும், நட்புக்கும்கூட இந்தத் தன்னல மற்ற குணங்களே அழுத்தமான அஸ்திவாரம்... நம் குறை களைக் குறைத்து, நிறைகளை வளர்த்து விழிப்புடன் செயல் பட்டால் நம்மைச் சுற்றியும் வேஷம் போடாத, அன்பு நிறைந்த, தூண்களாகத் தாங்கக்கூடிய உயர்ந்த, சிறந்த நண்பர்கள் நின்று, எந்தச் சந்தர்ப்பத்திலும் நம்மைக் காத்து இதம் தருவார்கள்; இதில் ஐயமே வேண்டாம்.

# 49

“இன்றைக்கு உங்களால் இங்கு வர இயலுமா? எதிர் பாராமல் அட்மிட் ஆகியிருக்கும் இரண்டு கேஸ்களை நீங்கள் பார்க்கவேண்டுமென்று விரும்புகிறேன்.”

டாக்டரிடமிருந்து இப்படியொரு அழைப்பு வந்ததும், எதற்காகக் கூப்பிடுகிறார் என்பது புரியாவிட்டாலும், முக்கியமான சமாச்சாரமாகத்தான் இருக்கும் என்று போட்டது போட்டபடி கிளம்பிப் போனேன்.

முதலில் மேல்மாடிக்குச் சென்று வலது கோடியில் ஜெனரல் வார்டில் நுழைந்தோம்.

“நோயாளியின் தாய், தகப்பனிடம் எதுவுமே கேட்காதீர்கள், பிற்பாடு எல்லாவற்றையும் விளக்கமாகக் கூறுகிறேன்” என்று டாக்டர் சொல்லிவிட்டதால் வாயை மூடிக்கொண்டு பின்னோடு போனேன்.

ஆறு மாசம் என்று சொல்லக்கூடிய குழந்தை படுக்கையில் சுருண்டு படுத்திருந்தது. முகத்தில் அடி பலம் என்கிறதைப் புரியவைக்கும் பாண்டேஜ், வலது கால் ஒடிந்திருக்கிறது என்பதற்கு சாட்சியாய் மாவுக்கட்டு.

இத்தனூண்டு குழந்தைக்கு இப்படியொரு அவஸ்தையா? ஸ்கூட்டர் கிட்டர் மேலே ஏறிவிட்டதோ!

பக்கத்தில் அமர்ந்து, தலைப்பால் வாயைப் பொத்தி அழும் தாயைப் பார்க்க பாவமாக இருந்தாலும், அவளிடம் ஏதும் பேச்சுக்கொடுக்காமல் திரும்பினோம். அடுத்து கீழ்தளத்தில் இருந்த ஒரு தனி அறை.

இங்கும் நோயாளி ஒரு குழந்தைதான்.

சுமார் மூன்று வயது மதிக்கக்கூடிய பெண்ணின் இரண்டு கைகளிலும் பாண்டேஜ். முகத்தில் தீயினால் சுட்ட மாதிரி கொப்புளங்கள்.



என்ன ஆயிற்று?

தீ விபத்தில் மாட்டிக்கொண்டுவிட்டதா?

யோசனை மாறாமல் டாக்டருடன் நடந்து, அவர் அறைக்குச் சென்றேன்.

உட்காருவதற்குள் பொறுமை மறைந்துபோக, “அந்த இரண்டு குழந்தைகளுக்கும் என்ன கோளாறு, டாக்டர்? விபத்துக்களில் மாட்டிக்கொண்டனவா?” என, டாக்டர் இல்லை என்று தலையசைத்தார்.

“பாட்டர்ட் சைல்ட் ஸிண்ட்ரோம் (Battered child syndrome) கேள்விப்பட்டதில்லை?”

“ம்ஹூம்...”

“இதை டிஸ்ப்ளேஸ்மென்ட் ஆஃப் இமோஷன் (Displacement of Emotion) அல்லது ரியாக்ஷன் ஃபார்மேஷன் (Reaction Formation) என்றும் சொல்வோம். தமிழில் சரியாகச் சொல்லவேண்டுமென்றால் இடம் மாறிப்போன உணர்ச்சியின் வடிகால் எனலாம்...”

“புரியும்படி சொல்லுங்கள், டாக்டர்...”

“கோளாறாகிப்போன தாம்பத்தியம், விவாகரத்து, குடி, போதைமருந்துப் பழக்கம், மூளைக் கோளாறு, வேலை, பணமின்மை போன்ற சூழ்நிலைகளின் கனம் தாங்க மாட்டாமல் தவிக்கும் நபர், தன்னுடைய கோப, தாப, ஏக்க, விரக்தி, பொறாமை இத்யாதி உணர்வுகளுக்குச் சரியான வடிகால் இன்றி, எதிர்க்கமுடியாத, தன்னையும்விட எல்லாவற்றிலும் சிறிய, பாதுகாப்பு இல்லாத, தன்னை அண்டிய குழந்தைகளை அடித்து நொறுக்குவதன் மூலம் ஒருவித சமாதானம் அடைவது உண்டு... நீங்கள் பார்த்த இரண்டு குழந்தைகளும் அந்த வகையினால் பாதிக்கப்பட்டு இங்கு வந்தவர்கள்தாம்...”

நொறுங்கிக்கிடந்த அந்த இரண்டு பிஞ்சுகளும் விபத்தில் சிக்கவில்லையா? இந்த நிலைக்குப் பெற்றவர்கள் காரணமா? என்ன கொடுமை இது!

"முதலில் பார்த்த குழந்தை மோகனுக்கு இப்போது ஒன்பது மாசங்கள் ஆகின்றன. தகப்பன் மாரிசாமி குடி, ரேஸ் என்று எல்லாப் பழக்கத்துக்கும் அடிமை. பணத் தட்டுப்பாடு உண்டானால், மனைவி அமராவதியை அணுகுவான். அவள் இல்லை என்று மறுத்தால் போட்டுப் புரட்டியெடுத்துவிடுவான். இப்படி அடிக்கடி அடித்து நொறுக்கிவிட்டு புருஷன் அந்தப் பக்கம் போனதும், அவனைக் கண்டிக்க முடியாத இயலாமை, உடம்பின் நோவு, இரண்டும் ஏகத்துக்கு ஆத்திரத்தை உண்டாக்க, அதைக் குறைக்க அமராவதி வடிகால் தேடினபோது, கிடைத்தது சில மாசங்களே ஆகி, எந்தவிதத்திலும் எதிர்க்க முடியாத பச்சைக் குழந்தை. குழந்தை பசி என்றோ அல்லது தூக்கம் கலைந்தோ அழவேண்டியதுதான். அமராவதி பத்ரகாளியாக மாறிவிடுவாள். 'அழாதே, அழாதே' என்று கத்தியபடி விறகுக்கட்டை, விசிறிக் காம்பு என்று எது கிடைத்தாலும் அதை வைத்துக்கொண்டு குழந்தையைப் பந்தாடி விடுவாள். ஆனால் இத்தனையும் பத்து நிமிஷங்களுக்குத்தான். பின்னர் தன் தவறு உணர்ந்து விறகுக் கட்டையால் தன்னை நாலு சாத்து சாத்திக்கொண்டு, துவண்டு கிடக்கும் குழந்தையை மார்போடு அணைத்து, கதறுவாள். என்னிடம் ஓடிவந்து 'குழந்தை தவறி விழுந்து விட்டான்' என்று பொய்க் காரணம் சொல்லி வைத்தியம் செய்யவைப்பாள். மோகன் இங்கு வருவது இது மூன்றாம் தரம். போன முறையே இது விபத்து அல்ல என்று எனக்கு சந்தேகம்தான். இந்த முறை அடி பலம் என்பதால் அட்மிட் செய்தபின் அமராவதியிடம் மனம்விட்டுப் பேசினேன். உண்மையை ஒப்புக்கொண்டு கதறிவிட்டாள்..."



"இதுவும் ஒரு வகை ஸாடிஸமா, டாக்டர்? அடுத்தவர் துன்பத்தில் மகிழ்ச்சியுறும் குணமா?"

"கண்டிப்பாக இல்லை... இது ஒருவித மனக்கோளாறு. இதில் நிச்சயம் சந்தோஷம் இல்லை. கணவனைப் பழி தீர்க்க அமராவதிக்கு இது ஒரு வழி, அவ்வளவே..."

இன்னொரு குழந்தையின் கதையையும் டாக்டர் கூறியபோது மனசு ரொம்பவும் பரிதவித்துத்தான் போயிற்று.

சுமனாவுக்கு மூன்று வயசாகிறது. அப்பா சசிதரனுக்கு ஆபீஸில் ஓயாத பிரச்சினை! நோயாளி மனைவி வேறு. ஒவ்வொரு தரம் அலுவலகத்தில் மானேஜர் இவனைத் திட்டும்போதும் வீட்டில் சுமனாவுக்கு காரணமே இல்லாமல் எக்கச்சக்க உதை கிடைக்கும். நம்ப மாட்டீர்கள் - எரிச்சல் அதிகமானால், சிகரெட்டின் நுனியால் குழந்தையின் உள்ளங்கையை, கன்னத்தை சுடுவது சசிதரனின் சகஜமான பழக்கங்களில் ஒன்று.

இரண்டு நாட்களுக்கு முன் ரொம்ப ஆர்வமாக எதிர்பார்த்த பிரமோஷன் இவன் ஜூனியருக்குக் கிடைத்து விட்ட ஆத்திரம் தாளாமல் கொதிக்கும் வெந்நீரைக் கொஞ்சமும் தயங்காமல் குழந்தையின் முகம், கைகளில் ஊற்றியிருக்கிறான். சில நிமிஷங்களில் வெறி மறைந்து, சுமனா துடிப்பது புரிய, அவளை அள்ளிக்கொண்டு இங்கு ஓடிவந்து அட்மிட் பண்ணி, தானும் சுவரில் முட்டிக்கொண்டு கதறு கதறென்று கதறியிருக்கிறான்...

நிதானமாய் டாக்டர் இவற்றை விளக்க, என் முன் கையாலாகாத புருஷனுக்கு வாழ்க்கைப்பட்டு, ஒரு பைசாவுக்கு வழியில்லாமல் போய், திடும்திடுமென்று தன் அருமைப் பிள்ளையை, தவம் இருந்து பெற்ற ஒற்றைப் பையனைக் காரணமேயில்லாமல் உதைத்து, கிள்ளி சித்ரவதை பண்ணும் காமாட்சி மாமி; பணக்கார மாமனாரால் எந்நேரமும் சீந்தப்பட்டு பதிலுக்கு தன்

பெண்களைக் காட்டுமிராண்டித்தனமாய் நடத்தும் மாணிக்கம்; எரிந்துவிழும் எஜமானிக்குப் பதில் சொல்ல முடியாமல் வீட்டுக்கு வந்து குழந்தையை மொத்தும் ராஜாத்தி; தொல்லைப்படுத்தும் மாமியாரின் பேரில் எழும் கோபத்தை பிள்ளைக்கு சூடு போட்டு, கண்களில் எலுமிச்சம் சாறு பிழிந்து தீர்த்துக்கொள்ளும் அபிராமி— இன்னும் இதுபோன்ற பலர் மெள்ளமெள்ள தலைநீட்ட, நான் அதிர்ந்துபோனேன்.

ஆக,

இத்தனைக்கும் காரணம் கையாலாகாத்தனமும், வடிகால் தேடும் குணமும், ஆளை அமுக்கி ஒரு மன நோயாளியாக்குவதுதானா?

—அமெரிக்காவில் மட்டும், வருஷத்துக்குப் பத்து லட்சத்துக்கும் மேல் இப்படி பெற்றவரிடம் உதை வாங்கும் குழந்தைகள் இருக்கிறார்கள். இது வெளியில் வந்த புள்ளி விவரம்; வராதது இன்னும் எத்தனையோ!— என்று புலம்புகிறது அமெரிக்க ஹ்யூமன் அஸோஸியேஷன்.

டைம் பத்திரிகை வெளியிட்டிருக்கும் ஒரு சோகக் கதையைக் கேளுங்கள்.

மேரிக்கு நினைவு தெரிந்த நாளாய் அவளுடைய குடிகாரத் தாய் பெல்ட்டாலும், குதிகால் உயர்ந்த ஷூவாலும் அவளை விளாசி எடுப்பாளாம். 'அப்பாவை வெறுக்கிறேன் என்று சொல்' என்று வாய்விட்டுக் கூறச் சொல்வாளாம். இல்லாவிட்டால் உதைதானாம். இப்படியே உதைபட்டு, பயந்து வளர்ந்தவளுள், தாய்—சேய் பற்றின அசிங்கமான அபிப்ராயம் விழுந்துவிட, மேரிக்குத் திருமணமாகி குழந்தை பிறந்தபின், தன் தாயிடம் பட்ட கஷ்டங்களுக்குப் பழி தீர்க்கிற தினுசில் தன் பிள்ளையை அடிக்க முற்பட்டாளாம். 'பேசு' என்பாளாம்; பேசா விட்டால், 'ஏன் பேசவில்லை?' என்று தலையில் அழுந்த குட்டி கிள்ளுவாளாம். பேசினாலோ, 'எதிர்த்தா பேசுகிறாய்?' என்று வாயில் சூடு போடுவாளாம். ஆனால், தகதகக்கும் வெறி அடங்கினபின் பையனை மார்போடு கட்டிக் கொண்டு உடைந்துபோய் அழுவாளாம்.



யார் செய்த புண்ணியமோ இந்த மேரிக்கு தன் குணம் தவறானது என்பது ஒருநாள் புரிந்துபோக, இன்னும் மூடி மறைப்பது தவறு என்று தானே நலவாழ்வு சங்கத்தைத் தேடிச் சென்று 'என்னையும், என் பிள்ளையையும் காப்பாற்றுங்கள்' என்று சரணாகதி அடைந்திருக்கிறாள்.

இன்று மேரிக்கு வயது 34. சிகிச்சைக்குப் பின்னர் திருந்திவிட்டாள். அவளுடைய பையன் ஹைஸ்கூலில் படிக்கிறான். பேஸ் பால் குழுவில் இருக்கிறான்.

"சமுதாயம் எங்களை வெறுக்கத் தேவையில்லை. ஏனென்றால் பிரச்சினை காலகட்டத்தில் நாங்களே எங்களை வெறுக்கவே செய்தோம்! ஆனால், இன்று நான் மீண்டு விட்டேன். எங்கள் குடும்ப வாழ்க்கை அமைதியாக இருக்கிறது" என்று மேரி கூறுவதை சைக்கியாட்ரிஸ்ட்ஸ் ஆமோதிக்கின்றனர்.

"இந்த மாதிரி மனநிலை உள்ளவர்கள் அத்தனை பேருக்குமே தீவிர சிகிச்சை அவசியம் என்று அர்த்தம் இல்லை. தேவையில்லாத கோபம், எரிச்சல், ஆத்திரம் இவை காரணமாய் சம்பந்தமில்லாத அப்பாவி ஒருவரை தண்டிப்பதும் தவறானது என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்தால், தானே திருந்திவிடலாம். போனதை நினைத்து வருந்துவதையும், பழைய சண்டையை எண்ணிப் புதுசாய் ஆத்திரப்படுவதும் தவிர்க்கப்பட வேண்டும். மீறி, இக் குணங்கள் தலைவிரித்தாடி நம்மை மிருகமாக்குவதாக உணர்ந்தால் நெருங்கின பந்துக்கள், டாக்டரிடம் மனம்விட்டுப் பேசி தன்னைச் சரிசெய்துகொள்ள, தேவைப் பட்டால் சிகிச்சை எடுக்க முன்வர வேண்டும்..."

டாக்டரின் க்ளினிக்கை விட்டு வெளியேறும்போது புதுசாய் அறிந்துகொண்ட விவரங்களால் மனசு கனத்துப் போயிருப்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

இதுநாள்வரை, காமாட்சி மாமி, மாணிக்கம், ராஜாத்தி, அபிராமி இவர்களைச் சந்திக்கும்போதெல்லாம் 'மற்றவர் சொந்த வாழ்க்கையில் தலையிடுவது அநாகரிகமாயிற்றே' என்ற நினைப்புடன் ஒதுங்கினது இனி கூடாது; இது ஒரு வியாதி, முளையிலேயே கிள்ளப்பட வேண்டிய குணம் என்கிற விழிப்புணர்வும், அவசியமிருந்தால் சிகிச்சையும் செய்துகொள்ள வேண்டும் என்பதையும் அவர்களுக்குப் புரிய வைக்கவேண்டும்.

வைத்தியர் கூறின மாதிரி இந்தக் கேஸ்களுக்கு வென்டிலேஷன் 'மனம் திறந்து பேசுதல்' முக்கியம். Ventilation is a must.

சீழ் கோத்திருக்கும் புண்ணிலிருந்து சீழை வெளியேற்றி விட்டால், ரணம் ஆறுவது சுலபம்... மேரியின் 'கேஸ்' மாதிரி... இல்லையா?

# 50

**கோ**பம்.

வேத காலத்து முனிவர்களில் தொடங்கி இன்றுவரை நம் அனைவரையும் அடிக்கடியோ, அல்லது எப்போதாவதோ ஆக்ரமித்து, கண்மூடித்தனமான படபடப்புக்கு ஆளாக்கி, கொஞ்சமாகவோ அல்லது தலைகுப்புறவோ நிலைகுலைய வைக்கும் வேண்டாத குணத்தை, இந்த அத்தியாயத்தில தோலுரித்துப் பார்க்கலாம்.

கோபம்.

'இது, நச்நச்சென்று தோன்றி கணப்பொழுதில் மறையும் எரிச்சல், குபுக்கென்று முளைத்து உடனே அழியும் ஆத்திரம் இவற்றிலிருந்து கட்டாயம் வேறுபடும் சமாச்சாரம் என்பதோடு, ஏதோ ஒரு எதிர்பார்ப்புடன் செயல்பட்டு, நினைத்தது நடக்காமல் ஏமாற்றத்துக்கு உள்ளாகும்போது அதுவே ஒருவித எரிச்சலாக மாறி, கையாலாகாத் தனத்துடன் சேர்ந்து, சிந்திக்கும் திறன், நிதானம், பொறுமை, பண்பு, மனிதாபிமானம் இவற்றைத் தனக்குத் தீனியாக்கி ஒரே விழுங்காய் விழுங்கி, பாதிக்கப்பட்ட நபரை உடம்பாலும், மனசாலும் செயலிழக்க வைக்கும் அசுரத்தனமான சக்தி படைத்தது' என்கிறார் டாக்டர் டயர், அழுத்தம் திருத்தமாக!

மூக்குமேல் ஏறி உட்காரும் கோபம் மனசையும், உடம்பையும் எவ்வாறு செயலிழக்கச் செய்கிறது என்பதற்கு முதலில் சில உதாரணங்கள்...

ராமசாமி நல்லவர், கெட்டிக்காரர். சொன்ன வேலையைக் குறித்த நேரத்தில் கச்சிதமாய் முடிக்கும் சமர்த்தர். ஆனால், சடக்கென்று பொறுமையை இழந்து விடும்

சுபாவம் தூண்டிவிடும் கோபத்தால் இவர் அனுபவிக்கும் அவஸ்தை பரிதாபத்துக்குரியது.

காரில் போய்க்கொண்டிருக்கையில், சற்றும் எதிர் பாராத தினுசில் தவறான பக்கத்திலிருந்து வேறு கார்க்காரர் முந்திவிட்டாலோ அல்லது டிராஃபிக் ஜாமில் மாட்டிக் கொள்ள நேர்ந்தாலோ, போயிற்று... அரை நிமிஷம்கூடப் பொறுமையாக உட்கார முடியாமல், முந்தின கார்க்காரரின் செவிப்பறை கிழிந்துவிடுகிற மாதிரி 'பா...ஆம்...' என்று ஹாரனைத் தொடர்ந்து அழுத்துவார்; ஜன்னலுக்கு வெளியில் தலையை நீட்டி 'என்னய்யா பண்றே?' என்று விரட்டுவார்; இண்டு இடுக்கில் புக முயற்சித்து அடுத்தவனின் பகையைச் சம்பாதிப்பார். அவன் முறைத்தால் பதிலுக்கு 'ஓ'வென்று கத்துவார். நிலைமை முற்றிப்போய் காரை அப்படியே விட்டுவிட்டு இறங்கி சண்டை போட்ட பல சந்தர்ப்பங்களும் உண்டு! அப்புறம் அரை நாளுக்கு அந்த உணர்ச்சிக் கொந்தளிப்பிலிருந்து மீள முடியாமல், நடந்ததைப் பற்றியே பேசி, மருகி, புலம்பி, கத்தி, வேறு எதையும் சிந்திக்க, செய்யத் தெரியாமல் நேரத்தைக் கடத்தியதும் உண்டு...

அஜித்துக்கு இன்று வயசு இருபத்தியொன்பதுதான். நல்ல படிப்பு, உயர்ந்த வேலை. எக்கச்சக்க புத்தி! ஆனாலும், எப்போது எதற்குக் கோபம் வரும் என்று சொல்லமுடியாத ரகம். சீட்டு விளையாட உட்காருவான். கூட விளையாடுபவர் யோசிக்காமல் ஏதேனும் தப்பு பண்ணிவிட்டால், தொலைந்தார். கையிலிருக்கும் சீட்டை விசிறி அடிப்பான். 'நீயெல்லாம் ஏன்யா விளையாட வந்து கழுத்த அறுக்கறே?' என்று உறுமுவான். அடுத்தவர் கை சீட்டைப் பிடுங்கி கிழித்துப் போட்டு அவர் எரிச்சலைக் கிளப்பிவிட்டு, ஒன்றுமே இல்லாததை மஹா பெரிய சண்டையாக்குவான். இது மாமூல். கம்பெனி அதிகாரி ஒருவருடன் டென்னிஸ் விளையாடப் போய் ஒருதரம், இப்படி எதற்கோ கோபம்



மூண்டு என்ன செய்கிறோம் என்று புரியாமல் அதிகாரியின் ராக்கெட்டை இவன் இரண்டாக உடைத்துப் போட்டதில், வேலைக்கு வெடி வைக்கும் வரையில் விஷயம் போய்விட்டது!

வனஜா விஷயம் இன்னொரு தினுசு.

ரொம்ப சுத்தம். விதரணையாகக் காரியம் செய்யும் பழக்கமுள்ள இவளால் வாயை வைத்துக்கொண்டு சும்மா இருக்க முடிந்தால்தானே? அமெரிக்காவில் குடித்தனம் பண்ணிவிட்டு, சென்னைக்கு வந்து வருஷம் இரண்டாகப் போகிறது. இன்னும் நிரந்தரமாய் ஒரு வேலைக்காரி இவளுக்கு அமையவில்லை.

ஒருத்தி வருவாள். அவளை வீட்டுக்குள் நுழைய விடும் முன்னரே ஒருமணி நேரம் நிற்கவைத்து, அப்படிச் செய், இப்படிச் செய் என்று லெக்சர் அடித்து, கிட்டே நின்று ஒன்றரை சாமம் வேலையும் கற்றுக்கொடுப்பாள். ஆனால், எதிர்பார்த்த அளவுக்கு வேலைக்காரி காரியங்களை நறுவிசாகச் செய்யவில்லை என்றால், விருட்டென்று கோபம் தலைக்கு ஏற, வந்தவளை நாவால் பந்தாடி விடுவாள். விளைவு? 'யம்மாடி— உன்கிட்ட மனுஷி வேலை பார்க்க முடியுமா?' என்று பழித்தபடி அந்த வேலைக்காரி நின்றுவிட, ஒரு வாரம்போல யாரும் இல்லாமல் தவியோ தவி என்று தவித்துவிட்டு, இன்னொருத்தியைத் தேட... பழைய குருடி கதவைத் திறடி என்று மறுபடி மறுபடி நடந்ததே நடக்க...

அடுத்து, குஞ்சிதபாதம்.

ஆணி அடிக்கும்போது தவறுதலாய் சுத்தியால் கட்டை விரலை நசுக்கிக்கொண்டாலோ, நடக்கும்போது எசகு பிசகாய் மேஜையில் இடித்துக்கொண்டாலோ அவ்வளவுதான்... இவனுக்கு வரும் கோபம் இப்படி அப்படி என்றிருக்காது.

தன்னுடைய கவனக்குறைவே இப்படி நடக்கக் காரணம் என்று நினைக்க முற்படாமல், கண் மறைக்கும் கோபத்தால் சுத்தியலை மொக்மொக்கென்று தரையில் ஓங்கி அறைவான்; சுவரில் மொத்துவான்; விசிறி தூர எறிந்து கண்ணாடிக் கதவை உடைப்பான்; இடித்துக் கொண்ட மேஜையைக் காலால் எட்டி உதைப்பான்; தலை குப்புறக் கவிழ்ப்பான்; நாள் முழுவதும் ஆத்திரத்தோடு எதுவும் செய்யாமல் அறையைச் சுற்றிச்சுற்றி வருவான்...

கிட்டத்தட்ட மகேஷும் இவன் சாதிதான். மறதியின் காரணமாய் பர்ஸ், சாவியை எங்காவது வைத்துவிட்டு, தன் இயலாமை குறித்துக் கோபம் எழ, கன்னாபின்னா வென்று எதிரில் நிற்பவர், நிற்காதவர் என்று அத்தனை பேர்களையும் வைதுதீர்ப்பார். தப்பித்தவறி 'என்னாச்சு உங்களுக்கு?' என்று மனைவியோ, பிள்ளையோ கேட்டு விட்டால் ருத்ரதாண்டவம் அதிகமாகி, கை நீட்டும் வரைக் கும் சென்று, 'எழவெடுத்த வீட்டில் எவன் இருப்பான்?' என்று கத்தியபடி வெளியில் நடந்து, கோபம் தணியாமல் நேரம் காலமின்றி பார்க், பீச்சில் பழிகிடப்பார்...

மேலே சொன்னவர்களைத் தவிர, அரசாங்கம், அரசியல், பொருளாதாரம், வெயில், மழை, வேலை செய்யாத போன், எலக்ட்ரிஸிடி ஷட்டவுன்— என்று தங்கள் கையை மீறின விஷயங்களின் பொருட்டு ஆத்திரப்பட்டு, கோபத்தின் பிடியில் சிக்கி, மந்தித்து, செயலிழந்து, பொன்னான பொழுதை வெற்றாகக் கழிப்பதோடு, படபடப்பு, எரிச்சல், கத்தல் இத்யாதிகள் காரணமாய் உடம்பளவில் ரத்த அழுத்தம், அயர்ச்சி, மனச்சோர்வு, வயிற்றுப் புண்கள் இவற்றை வருமானமாகப் பெற்றும், மன அளவில் பந்தம், பாசம், உறவு, நட்பு ஆகியவற்றை இழந்தும் வாழும் நபர்கள்தாம் எத்தனை, எத்தனை...



இத்தனை பாதகங்களை விளைவிக்கும் ஒரு குணத் துக்கு நம்மிடம் இடம் கொடுப்பது அவசியம்தானா?

கோபம் இருக்கும் இடத்தில் குணம் இருக்கும், அடிக்கிற கைதான் அணைக்கும்— போன்ற சப்பைக்கட்டு வசனங்கள் நமக்கு விலங்காக மாறி இந்தக் கேவல குணத்துக்கு இடம் கொடுக்க வைப்பதை இனியாவது தவிர்த்து, கோபத்தை அடக்குவது, ஏன், விட்டொழிப்பதே சாத்தியமா என்று யோசிக்கலாமா?

முதலில், மனசில் ஆணி அடித்து செதுக்காத குறையாய் 'நான் மாற வேண்டும், என் கோபத்தைக் குறைத்து அடியோடு அடக்க வேண்டும்' என்று தீர்மானம் செய்துகொள்ளலாம்;

அப்புறம்—

கோபம் கொண்டு, அதன் விளைவாக ஏதேனும் பேசி, செய்ய முற்படுமுன் கஷ்டப்பட்டு மனசுக்குள் பத்துவரை எண்ணியோ, அந்த இடத்தைவிட்டு நகர்ந்தோ, நமக்கு மிகவும் பிரியமான பொருள் / நபர் / சம்பவம் பற்றி நினைத்தோ பார்க்க முற்படுவதன் மூலம் கோபத்தைக் கொஞ்சம் ஒத்திப்போட முயற்சிக்க வேண்டும்.

கூடவே, இதற்கு முன் கோபப் பேச்சு/செய்கையால் விளைந்த பாதகங்களை, விளைவுகளை, பிரயத்தனப்பட்டு ஞாபகத்துக்குக் கொண்டுவர வேண்டும்.

இப்படிச் செய்து, கோபத்தின் விளைவை ஒத்திப் போடுவது அதன் பாதிப்பின் கடுமையைக் கண்டிப்பாய் குறைக்கும் என்பதும், மரியாதைக்குரிய ஒருவரிடம் நம் கோபதாபங்களையும், அதன் விளைவுகளையும் பற்றி மனம்விட்டுப் பேசுவதும், கோபம் வருவதை அவ்வப்போது ஒரு புஸ்தகத்தில் விரிவாகக் குறித்துவைப்பதும்கூடக் காலப்போக்கில் கோபத்தை அடக்கக் கட்டாயம் உதவும் என்பது நிபுணர்களின் கருத்து.

இவற்றோடு—

எதிலும் அளவுக்கு மீறின எதிர்பார்ப்புகளை வளர்த்துக்கொள்ளாமல் இருப்பதும், முக்கியமாய் வேண்டாத குணங்களைக் குறைத்து, வேண்டியவற்றை வளர்த்து நம்மை இன்னும் இன்னும் சிறப்பான, பரிபூர்ணமான மனிதராக்கிக்கொள்ளும் வலிமை நம்மிடம், நம்மிடம் மட்டுமே இருக்கிறது என்கிற விழிப்புணர்வையும் பெற்றுவிட்டால், ஆஹா... அதைவிட அற்புத சமாச்சாரம் வேறு ஏதும் இருக்க முடியுமா என்ன?

# 51

"ஒரு சமயம் ஒரு பேட்டியில், 'நீங்கள் வெகு ஆர்வமாகச் சந்திக்க விரும்பும் நபர் யார்?' என்ற கேள்வி கேட்கப்பட்டதற்கு, 'இன்னும் ஐந்து வருஷங்கள் கழித்து இருக்கப்போகும் சிவசங்கரியை; இன்றைக்கு அவளிடம் இருக்கும் வேண்டாத குணங்கள், மன அழுக்குகள் போன்றவை குறைந்து, அழிந்து, நான் எதிர்பார்க்கும் வகையில் அவள் வளருவாளேயானால், அந்த சிவ சங்கரியை' என்று குறிப்பிட்டிருந்தீர்கள். தற்சமயம் அந்தப் பயணத்தில் நீங்கள் எந்த நிலையில் இருக்கிறீர்கள் என்று கூற முடியுமா?"

தஞ்சை வாசகர் கலாநிதி கேட்டிருக்கும் இந்தக் கேள்விக்கு பதிலளிப்பதன் மூலம், ரொம்ப நாட்களாகவே நான் எழுத நினைத்திருந்த the awareness to become a better person- தன்னைத்தானே இன்னும் இன்னும் மேம்படுத்திக் கொள்ள அவசியமான விழிப்புணர்வுபற்றி விளக்குவது இந்தக் கட்டுரைத் தொடருக்கு ஒரு நல்ல முத்தாய்ப்பாக அமையும் என்றே நம்புகிறேன்.

பூரணமான மனிதராக எவரும் மாறுவது, வளர்வது அசாத்தியமான சமாச்சாரமே என்றாலும், நம்முடைய குறைகளைக் குறைத்து, நிறைகளை வளர்த்து, துளித்துளியாக மனசால் உயர்ந்துகொண்டே போவது எவருக்கும் சாத்தியம்தான்.

உயரம், பருமன், அழகு, இளமை இத்யாதிகளின் வரம்புக்குட்பட்டது மனிதனின் உடம்பு மட்டுமே; மனசின் வளர்ச்சிக்கு உயரம் இல்லை, அழகுக்கு உச்சவரம்பு இல்லை, இளமைக்கு முதுமை இல்லை— இதை மறக்கக் கூடாது!

மனசை வளப்படுத்தும் முயற்சியின் முதல் படி சுய அலசல்.

இது எனக்கு சந்தோஷத்தைத் தருகிறது. இது என் கோபத்தைத் தூண்டுகிறது, இது என்னை நெகிழ வைக்கிறது. இது எனக்கு நிம்மதியைத் தருகிறது— என்று நம்முடைய சிந்தனை, செயல்களால் ஏற்படும் உணர்ச்சிகளை அடையாளம் காட்டி, கட்டம்கட்டத் தெரிவதுதான் சுயவிமர்சனம்.

அந்தந்த நிமிஷங்களில் உணர்ச்சிவசப்பட்டு செய்து விடும் எந்தச் செயலையும், அது பூரிக்க வைப்பதாக இருந்தாலும், கூம்பிப்போகச் செய்வதாக இருந்தாலும், அந்தச் செய்கையை உணர்ந்து உடனே மனசில் அழுத்த மாகக் குறித்து வைத்து, அடுத்த தரம் அப்படி நடக்கவோ, அல்லது நடக்காமலோ இருக்க உதவும் விழிப்புணர்வுதான் இந்த சுய அலசலும், சுயவிமர்சனமும்.

இந்த விழிப்புணர்வு ஒருவருள் ஜனித்துவிட்டால் பின்னர் தேக்கம் என்பது இல்லை, அழுக்கு, ஊனம் என்பதும் இல்லை என்பதோடு, கட்டாயம் கடுகு கடுகாக வாவது மனசு வளர்ந்து மெருகு பெறவே செய்யும்...

கண்ணைக் கட்டிவிட்ட குதிரையாய் வாழ்ந்த கண்ணோட்டம் குறைந்து, சுற்றிலும் பார்க்க கண், காது, வாய், புத்தி, இருதயம் என்று அத்தனையிலும் புது துடிப்பு உண்டாக, மனிதாபிமானம் என்றால் என்ன என்று உணர்ந்து, நெகிழ்ந்து, சிலிர்ப்பதும்; உலகத்தைப்பற்றி, சமுதாயத்தைப்பற்றி, நம்மைச் சுற்றியுள்ள ஜீவராசிகளைப் பற்றி, கவலை கொள்வதும், அக்கறை உண்டாவதும்; இன்னொரு கோணம் மட்டுமல்ல— இன்னும் பல நூறு கண்ணோட்டங்கள் உள்ளன என்கிற ஞானோதயம் ஜனிப்பதும் ஒருவர் வாஸ்தவமாக மனசால் வளர உதவும்.



இது உனக்குள் எந்தமட்டில் இருக்கிறது?— என்று கேட்டால், திட்டவட்டமாகப் பதில் கூறத் தெரியவில்லை. உதயத்தைப் புரிந்துகொள்ள முடிந்தாலும், போக வேண்டிய தூரம் எக்கச்சக்கம்; உணர்ந்து, புரிந்து, தெளிந்து செயலில் காட்டவேண்டியவை இன்னும் ஏராளம் ஏராளம் என்று மட்டுமே கூறத் தோன்றுகிறது...

சரியாக ஐம்பத்தியோரு வாரங்கள்...

கிட்டத்தட்ட ஒரு வருஷ காலத்திற்குப் பிறகு உங்களிடமிருந்து இந்த அத்தியாயத்தோடு விடைபெறும் முடிவுக்கு வந்துவிட்டதை நினைத்தால் வருத்தமாக இருக்கிறது. ஆனால் உரக்கச் சிந்தித்த விஷயங்களை, எழுத்தில் வடித்த எண்ணங்களை, தனித்து உட்கார்ந்து, மீண்டும் மீண்டும் ஞாபகத்துக்குக் கொண்டுவந்து, விதைக்கப்பட்டு விட்ட விழிப்புணர்வை ஊதிவிடுவது அவசியம் என்பதால்; இந்த விடைபெறுதலும் அவசியமாகிறது... சந்தர்ப்பம் கிடைக்கும்போது புல்லை ஏகமாய் தின்றுவிட்டு, பின்னர் தனித்து உட்கார்ந்து, விழுங்கியதை மீண்டும் வாய்க்குக் கொணர்ந்து, ஜீரணிக்க ஏதுவாக உணவை மாடு சாவகாசமாய் அசைபோடுவதைப் போல...

போன வருஷத்தின் துவக்கத்தில், ஒருநாள் ஆசிரியர் பாலன் அவர்களும், இணை ஆசிரியர் மதன் அவர்களும் 'வித்தியாசமான கட்டுரைத் தொடர் ஒன்றை ஜூனியர் விகடனில் நீங்கள் எழுதினால் என்ன? எவரும் தன்னைத் தானே மேம்படுத்திக்கொள்ள உதவும் சிந்தனைத் தொடர் ஒன்றை முயற்சித்தால் என்ன?' என்று கேட்டதையும், 'நானா? Self improvement கட்டுரைகளை எழுதுவதா?' என்று கண்ணகல வியந்ததையும் இன்று நினைத்துப் பார்த்து, அந்த ஆணித்தரமான நம்பிக்கைக்கும், அழுத்த மான தூண்டுகோலுக்கும் இப்போது நெகிழும் நெஞ்சோடு நன்றி கூறுகிறேன்.

உங்களுக்குத் தெரிந்ததை நீங்கள் சொல்லுங்கள், நான் உணர்ந்தவற்றை, நான் சொல்கிறேன்— என்கிற ஆர்வத்துடன், ஒருவர் நலனில், வளர்ச்சியில், மற்றவர் அக்கறை கொண்டு, வேண்டாத தளைகளை நூலிழைகளாக எண்ணி அறுத்து, கைகள் பிணைய நீங்களும், நானும் ஒன்றாக நடந்த, உரக்கச் சிந்தித்த இந்தப் பயணத்தினால் யாருக்கு என்ன ஆதாயம் இருந்ததோ தெரியாது, ஆனால் என் மனம் விசாலமாகியிருப்பதும் வளர்ந்திருப்பதும் தன்னம்பிக்கை பெற்றிருப்பதும் நிஜம்.

சற்றும் எதிர்பாராமல், இழக்கக்கூடாததை இழந்து, சாய்ந்துகொள்ள சாய்மானம் இல்லாமல், தாங்கிக்கொள்ளத் தூண் இல்லாமல், திடுமெனத் தோன்றிவிட்ட வெறுமையில் பற்றிக்கொள்ள ஒரு பிடிமானம் இல்லாமல், இடிந்து, கலங்கி, பரிதவித்து, உடைந்து, நொறுங்கி, ஏன், காலடியில் தரையே இல்லாத மாதிரியும், உடலை நிமிர்த்தி நிற்க வைக்கும் முதுகெலும்பு முறிந்துவிட்ட மாதிரியும்கூட, பிரமை பிடித்துப்போன நாழிகையில் இந்தக் கட்டுரைத் தொடரைத் தொடர்ந்து எழுதவேண்டிய நிர்ப்பந்தமும், அதற்காகச் சிந்திக்கத் தூண்டிய கட்டாயமும் எனக்குள் ஒருவிதத் தெளிவை உண்டாக்கி, புதுசாய் தைரியம், தன்னம்பிக்கையை ஊற்றெடுக்க வைத்து, மீண்டும் நான் தலைநிமிர, புன்னகைக்க உதவியது சத்தியம், சத்தியம், சத்தியம்.

யாருக்கும் வாழ்க்கை முழுமையாக அமைந்துவிட முடியாது. அப்படி ஒரு நிலை ஞானிகளுக்கு மட்டுமே சாத்தியம். குறை, நிறைகளில் சந்தோஷத்தோடு வாழப் பழகுவதுதான் உத்தமமான மனிதப் பிறவியின் லட்சணம்.

எல்லாம் நிறைந்த பூரணமான வாழ்க்கைக்கு மொத்தம் நூறு படிகள் என்று வைத்துக்கொண்டால், கட்டாயம் இதில் நான் தொண்ணூறாவது படியில் இருக்கிறேன் என்று



நம்புகிறேன். எனக்குமேல் இன்னும் முழுமையாக, அத்தனை சௌபாக்கியங்களும் பெற்று வாழும் பத்து பேரைப் பார்த்து 'ஐயோ, எனக்கு அது இல்லையா?' என்று ஏக்கப் பெருமூச்சு விடுவது புத்திசாலித்தனமா, அல்லது, எனக்குக் கீழே எண்பத்தொன்பது படிகளில் ஊனத்தோடும், புத்தி வளராமலும், சிறந்த நண்பர்கள், அன்பு உறவினர்கள் அமையாமலும் இன்னும் ஏதேதோ குறைகளுடன் வாழ்பவர்களைக் கண்டு 'ஆஹா, இவர்களைவிட நான் பாக்கியசாலி அல்லவா?' என்று மனம் தேறுவது புத்திசாலித்தனமா?

ஒருவன் எக்கச்சக்க பட்டங்கள் பெற்றிருக்கலாம்; படிப்பிலும், கணக்கிலும், விஞ்ஞானத்திலும், இதர பாடங்களிலும் புலியாக இருக்கலாம்; இருப்பினும் தனக்கு இது வேண்டும், வேண்டாம், இது என்னால் முடியும், முடியாது போன்ற சிந்தனைகள் இன்றி சொந்த வாழ்க்கையில் அமைதி இழப்பானேயானால், அத்தனை புத்திசாலித்தனம் அவனுக்கு இருந்தும் ஒன்றுதான்; இல்லாததும் ஒன்றுதான். எவனொருவன் வாழ்க்கையை அது வரும் விதத்தில் ஏற்று, குறை நிறைகளுடன் வாழக் கற்று, தன் நிம்மதி, சந்தோஷத்தைத் தக்கவைத்துக்கொள்கிறானோ, அவனே உண்மையில் சிறந்த அறிவுஜீவி, அதிபுத்திசாலி என்பது டாக்டர் டயரின் ஒரு விளக்கம்.

வாஸ்தவம்.

சத்தியமாய், வெளிச்சமும், இருளும், காற்றும், புழுக்கமும், தைரியமும், கோழைத்தனமும், தன்னம்பிக்கையும், மனச்சோர்வும், நிம்மதியும், உளைச்சலும் அவரவருக்குள்ளேயேதான் இருக்கின்றன.

இதை உணராமல், உணர முடியாமல், கோபமும், தாபமும், வேதனையும், வலியும், ஆங்காரமும், ஆத்தாமையும், அறிவீனமும், பலவீனமும், துவக்கத்தில் சன்னமான

நூல் இழைகளாய் நம்மைப் பின்னிப் பிணைக்கவும், பிற்பாடு அவையே நம்மை மண்ணோடு மண்ணாய் புதைக்கும் வலிமை பெற்ற கனமான இரும்புச் சங்கிலிகளாய் மாறவும் இடம் கொடுத்தால், நஷ்டம் யாருக்கு? வேதனை யாருக்கு? தேக்கம் யாருக்கு?

சின்ன நூல்கண்டா நம்மைச் சிறைப்படுத்துவது?

துணிந்துவிட்டால் எவையும் நூல் இழைகள்தாம்... கணப்பொழுதில் அவற்றை அறுத்துக்கொண்டு வெளியேறி, உயரே உயரே பறப்பது சாத்தியமே...

யோசிக்க வேண்டும்... நிறைய, நிறைய...

'இந்தப் பிரிவு தற்காலிகமானதுதான்— விரைவிலேயே மீண்டும் உங்களை வாசகர்கள் சந்திக்கப்போவது திண்ணம்' என்கிறார் ஆசிரியர். அந்தச் சந்திப்புக்காகக் காத்திருக்கும் சந்தோஷத்துடன் விடைபெறுகிறேன். வணக்கம்.

❖ ❖ ❖